மலர் - 3 இதழ் - 01

தமிழணங்கு

(தமிழராய் இணைவோம்)

இலக்கியம், சமயம், பண்பாட்டு ஆய்விதழ்
ஜூலை 2024
தனிச்சுற்றுக்கு மட்டும்
ஆசிரியர்: முனைவர் திருமதி செ. இராஜேஸ்வரி

நற்செய்தியாளர்களின் நகைச்சுவை சொல்லாடல்
முனைவர் ஆனந்த் அமலதாஸ்
முனைவர் செ.ரா.வின் மொழிபெயர்ப்பில் மதுரை
சு.சபாரத்தினம்
தமிழ்த் திரைப்படங்களில் படத்தொகுப்புத் திறன்
எடிட்டர் தேவராஜன்
நூலறி(வு)முகம் - கீழ்ப்படிய மறுக்கும் சொற்கள்
கவிஞர் வித்யா மனோகர்
புறநானூறு கூறும் இழிசினன் இழிமகனல்லன்
திருவள்ளுவன் இலக்குவனார்
நச்சினார்க்கினியர் குறிப்பிடும் நிழலற்ற நாள்
முனைவர் தேமொழி
ஆழ்வார்கள் அறிமுகம் - பொய்கையாழ்வார்.
ஜனக்புரி சீனிவாசன்
புரட்சியாளர் தந்தை பெரியார் - பகுதி 7
கவிஞர் வழக்கறிஞர் கனிமொழி, வெர்ஜினியா
எளிய முறையில் யாப்பறிவோம்! -20
நெருப்பலையார். இராம இளங்கோவன்
மகிழ் பேரின்பத்தின் கவியின்பம்
முனைவர் நா. இளங்கோவன்
வேதாந்தம் - ஒரு விளக்கம் - 2
முனைவர் சிவ இளங்கோ
கம்பரின் ஏரெழுபது - 3
வி. குணசேகரன்
சோழர் ஓவியங்கள் - 2
மா.மாரிராஜன்
அம்பலக் கொத்தனார்
சம்சுல் ஹுதா பானு
சீலைக்காரி அம்மன்
ம.மு.அறிவுசெல்வம்
பரமபதம் - 2
தமாம் பாலா

சிந்தாமணி
சிலப்பதிகாரம்
மணிமேகலை
வளையாபதி

தமிழணங்கு தேமொழி கட்டுரைகள்

உள்ளடக்கம்

1. 18 ஆம் நூற்றாண்டின் இந்திய வரலாற்றுப் பதிவுகள்
2. செய்க பொருளை
3. ஆய்ச்சியர் குரவை
4. தீபாவளி என்ற சொல் எப்பொழுது தோன்றியது?
5. இந்தியாவின் முதலை இனங்கள்
6. பெண்ணடிமை நிலை குறித்து பெரியாரின் பார்வை
7. அண்ணல் அம்பேத்கர் எழுத்தும் பேச்சும்
8. சிறு நல் வாழ்க்கை
9. நிழலற்ற நாள்தான் ஆண்டின் தொடக்கமா?
10. அறிஞர் அண்ணா எழுதிய "செவ்வாழை" - திறனாய்வு
11. ஆரை வேய்ந்த அறைவாய்ச் சகடம்
12. என்றென்றும் பெரியார்!
13. உணக்குதல்
14. நெஞ்சில் இட்ட கோலங்களின் தொகுப்பு
15. அடிமைப்படுத்தும் தளைகளை உடைத்தெறிய வேண்டும்
16. சுழற்சியாண்டு தொடராண்டுக் கணக்குகளின் நிறை குறைகள்
17. இளங்கோவடிகளின் பார்வையில் பருவங்கள் தோறும் மதுரை மாநகர்
18. நச்சினார்க்கினியர் குறிப்பிடும் நிழலற்ற நாள்
19. தமிழ் இலக்கிய இலக்கண நூல்களில் தமிழ் மாதங்கள்
20. தமிழ்ப் புத்தாண்டுப் புதிரை விடுவிக்கும் நச்சினார்க்கினியர்
21. ரிக் வேதம் கூறும் அகஸ்தியர்
22. தென்திசையின் அகஸ்தியன்
23. மனிதத்தின் பன்முகம்
24. அட்சய திருதியை
25. Ranking Thirukkural by Web Popularity: Analyzing Google Search Results
26. எது நடந்ததோ அது நன்றாகவே நடந்ததா ??!!!
27. சமணர்களுக்குரிய தீபாவளி
28. சித்தன்னவாசல் குகைக்கோயில் "அரசன் அரசி ஓவியம்"

தமிழணங்கு இயற்றமிழறிஞர் விருது-முனைவர் தேமொழி

18 ஆம் நூற்றாண்டின் இந்திய வரலாற்றுப் பதிவுகள்

-முனைவர் தேமொழி

தன் இந்தியப் பயணம் குறித்து ஓர் இந்தியப் பயணக் குறிப்பு எழுதுவது இந்தியாவில் கால் பதித்த அயல்நாட்டினர் பலரின் வழக்கமாகவே இருந்தது. அப்பயண வரலாறுகளின் மூலம் நாம் கடந்த கால இந்தியாவைப் பற்றியும், மக்களைப் பற்றியும், அவர்களின் வாழ்வு முறை பற்றியும் அயல்நாட்டவர் பார்வையில் அறிய முடிவது பயனுள்ளதாகவும் இருக்கிறது. வணிக நோக்கிலும், சமயம் பரப்பும் நோக்கிலும் 18 ஆம் நூற்றாண்டில் இந்தியாவிற்கு வந்த ஐரோப்பியர்களில் பலரும் தங்கள் வழக்கத்திற்கு முற்றிலும் மாறான பண்பாடு, சமயம், மொழி, வாழும்முறை, பழக்க வழக்கங்கள் கொண்ட இந்தியாவால் ஈர்க்கப்பட்டு தாங்கள் கண்டவற்றை நூலாக எழுதி ஆவணப்படுத்திச் சென்றார்கள். கேப்ரியல் டெல்லன், சார்லஸ் டெல்லன், ஜான் ஹென்றி குரோஸ், பாலினஸ் பார்த்தலோமியோ (Gabriel Dellon —1649, Charles Dellon —1698, John Henry Grose—1772, Paulinus S. Bartholomaeo—1796) போன்ற பலரும் 'கீழை இந்தியப் பயணம்' (A Voyage to the East Indies) என்ற தலைப்பில் இந்தியப் பயண நூல் எழுதியுள்ளார்கள்.

இந்தியாவிற்குப் பயணித்து, 1776 — 1789 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட கால கட்டத்தில் இந்தியாவில் வாழ்ந்த ஆஸ்திரிய நாட்டுச் சமயப்பணியாளரான 'பாலினஸ் பார்த்தலோமியோ' (Paulinus S. Bartholomaeo /Paulinus of St. Bartholomew/ Paolino Da San Bartolomeo) என்பவரும் அவர்களில் ஒருவர். இவர் பெயர் பல்வேறு வகைகளில் ஒவ்வொரு மொழியிலும் ஒவ்வொருவகையாக வெவ்வேறு முறையில் எழுதப்பட்டும் உச்சரிக்கப்பட்டும் வருகிறது. இவர் தமிழகத்தில் இருந்த காலம் தமிழகத்தில் புதுக்கோட்டையை இராயரகுநாத தொண்டைமான் ஆட்சி செய்து கொண்டிருந்த காலம்.

இவர் ஐரோப்பாவில் முதன்முதலில் வெளியான சமற்கிருத இலக்கண நூலின் (Sidharubam seu Grammatica Samscrdamica /சித்தரூபம் அல்லது சமற்கிருத இலக்கணம்) ஆசிரியர் என்ற சிறப்பிற்குரியவர். சமற்கிருதம் ஓர் இந்தோ-ஐரோப்பிய மொழி என்ற தொடர்பைக் காட்டிய ஆரம்பக் கால ஆய்வாளர்களில் ஒருவர் பாலினஸ் பார்த்தலோமியோ. அத்துடன் இந்தியா, இந்தியாவில் சமயம், பிராமணிய அமைப்பு என்ற பொருண்மைகளில் இலத்தீன் மொழியில் 20க்கும் மேற்பட்ட ஆய்வு நூல்களையும் எழுதிய இந்தியவியல் ஆய்வாளர் என்பதும் இவரது சிறப்பு.

இந்தியாவின் மலபார் பகுதி என்ற தமிழகப் பகுதிக்கு மறை பரப்பாளராக அனுப்பப்பட்டார். சென்னை, கொச்சி பகுதிகளில் இவர் பணிபுரிந்ததால் மலையாளம் தமிழ் ஆகிய மொழிகளையும் அறிந்து கொண்டார், "பவுலீனுஸ் பாதிரி" என்று தமிழக, மலையாள மக்கள் இவரைக் குறிப்பிட்டனர். பாலினஸ் பார்த்தலோமியோ தனது பதின்மூன்று ஆண்டுக்கால இந்திய வாழ்வில் கண்டவற்றை ஒரு நூலாக எழுதியுள்ளார். 'கீழை இந்தியப் பயண அனுபவங்கள்' என்ற பொருள் படும் வகையில், (Viaggio alle Indie Orientali) என்னும் தலைப்பில் 1796இல் இத்தாலிய மொழியில் வெளியிட்டார். புகழ் பெற்ற இந்த நூல் பிரெஞ்சு, ஜெர்மன் என பல ஐரோப்பிய மொழிகளிலும் மொழிபெயர்க்கப் பட்டு வெளியிடப்பட்டது. ஜெர்மன்

மொழியில் வெளியான நூலை வில்லியம் ஜான்ஸ்டன் (William Johnston) ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து 1800 ஆம் ஆண்டு வெளியிட்டார்.

இவருக்கு முன்னர் இந்தியாவிற்கு வருகை தந்தவர்கள் வணிகர்கள், கடலோடிகள், போர்வீரர்கள் போன்ற பின்னணியுடன் இருந்தவர்கள். கல்வியில், ஆய்வில் ஆளுமை அற்றவர்கள். எனவே அவர்கள் எதிர்கொண்ட ஊர்கள், இடங்கள் பெயர்களை தங்கள் காதில் ஒலித்தவண்ணம் எழுதிச் சென்றார்கள். எனவே ஒரு இடத்திற்கு வேறு வேறு பெயர்கள் அறியப்பட்டு குழப்பம் விளைவித்தது. பாலினஸ் பார்த்தலோமியோ இவற்றைத் திருத்தி வழங்க முயற்சி மேற்கொண்டார். கொரமண்டல் என்பது சோழமண்டலம், பாண்டிச்சேரி என்பது புதுச்சேரி, (கேப்) காமரின் என்பது குமரி என்று சரியான உச்சரிப்புகளைத் தந்து உதவினார். நூலை இரண்டு பாகங்களாகப் பிரித்து முதல் பாகத்தில் தமிழகப் பகுதி குறித்த பொதுவான செய்திகளை பத்து அத்தியாயங்களாகவும், நூலின் இரண்டாம் பாகத்தில் மக்களின் வாழ்வியலைக் குறித்த செய்திகளை 13 அத்தியாயங்களிலும் தந்துள்ளார்.

View of part of the ruins of Pondicherry in 1769, seen from the north. Le Gentil set up his observatory in the ruins of the former Governor's palace, the foreground structure (marked H, I) to the right of the flag pole (after en.wikipedia.org).

பாலினஸ் பார்த்தலோமியோ, மாலுமி பெர்டாட் (Berteaud) செலுத்திய எய்ம்மபில் நானெட் என்ற கப்பலில் ஆறு மாதங்கள் பயணித்து ஜூலை 26, 1776 இல் புதுச்சேரியில் கரை இறங்குகிறார். அந்த ஆண்டில் ஆங்கிலேயர்களின் கப்பல் படை புதுச்சேரியை குண்டு வீசித் தாக்கி அழித்திருந்தது. பாலினஸ் பார்த்தலோமியோ தங்கவிருந்த தேவாலயம் உட்பட அழிக்கப்பட்டிருந்தது. அவர்களுக்கு அது எதிரியின் தேவாலயம் என்ற எண்ணம் மட்டுமே, தங்கள் கிறிஸ்துவ சமய தேவாலயம் என்ற கருத்து இருந்திருக்கவில்லை. ஆகவே அங்கு தங்குவதற்கான போதிய இடம் இல்லாத நிலையில் தமிழர்கள் வாழும் பகுதியில் தங்குகிறார். இந்தியர்கள் போல கோவிலையும் வழிப்போக்கர் தங்கும் சத்திரத்தையும் அழிப்பது அறமல்ல என்பது ஆங்கிலேயர்களுக்குத் தெரிந்திருக்கவில்லை என்று குறிப்பிடுகிறார் பாலினஸ் பார்த்தலோமியோ. அந்நாளில் பிரெஞ்சு புதுச்சேரியின் ஆளுநராக இருந்தவர் 'லா டி லாரிஸ்டன்' (Marquis Law de Lauriston) என்பவர். பாலினஸ் பார்த்தலோமியோ புதுச்சேரியில் ஒன்றரை மாதம் தங்கிவிட்டு செப்டெம்பர் 8, 1776 தனது பயணத்தைத் தொடர்கிறார்.

அவர் வந்திறங்கிய கால கட்டத்தில் பத்து பிரெஞ்சு கப்பல்கள் புதுச்சேரியில் நங்கூரமிட்டு இருந்திருக்கிறது. மது வகைகள், இரும்பு, பிரெஞ்சு துணிவகைகள், துப்பாக்கிகள், பீரங்கிகள் அவற்றில் வந்து இறங்கியிருக்கின்றன.

ஆனால் இவை எவையுமே இந்தியர்களுக்கு தேவையாக இருந்திருக்கவில்லை. அவர்களுக்கு உள்ளூர் உடை வகைகள் இருந்திருக்கின்றன. பிரெஞ்சு கப்பல்களில் வந்த பொருட்களை சென்னை மற்றும் வங்கத்தில் வாழ்ந்த ஆங்கிலேயர்களிடம் விற்பனை செய்திருக்கிறார்கள். .

இவர்களிடம் இருந்து வாங்கப்பட்ட பீரங்கிகளையும் துப்பாக்கிகளையும் வைத்தே ஆங்கிலேயர்களும் பிரெஞ்சுக்காரர்களை எதிர்த்துள்ளார்கள்; சொந்தக் காசில் சூடு போட்டுக் கொள்ளும் படலம்!! அத்துடன் இவ்வாறு விற்பனை செய்த வருவாய் இந்தியாவிலேயே தங்கிவிட்டிருக்கிறது. இந்திய மஸ்லீன், பருத்தி ஆடைகள், காடா துணிகள், கைக்குட்டைகள், சர்க்கரை, மிளகு, பட்டை, ஏலக்காய், முத்துக்கள், மாணிக்கக் கற்கள், ஆண் பெண் அடிமைகள்(பக்கம் 11-12) என வாங்கி தங்கள் நாட்டிற்கு அனுப்பியிருக்கிறார்கள்.



அக்காலத்துப் புதுச்சேரியில் ஐரோப்பியர்களும், இஸ்லாமியரும், தமிழர்களும் தனித்தனியே வசித்தனர். மக்களைப் பொதுவாக குறிப்பிடும் பொழுது அவர்கள் தோன்றிய நாட்டின் அடிப்படையில் இந்தியர்கள் என்று குறிப்பிடுகிறார் பாலினஸ் பார்த்தலோமியோ. சமய அடிப்படையில் குறிப்பிடும் பொழுது உள்ளூர் மக்களை 'இந்துக்கள்' என்று குறிப்பிடவில்லை 'பேகன்'(pagan) என்று சுட்டுகிறார், அதாவது பல்வேறு சமய நம்பிக்கை வழிபாட்டு முறைகளைக் கொண்டவர் என்று குறிப்பிடுகிறார். இதை கிறிஸ்துவ, இஸ்லாமிய பிரிவில் அடங்காத தமிழர்கள் என்று நாம் எடுத்துக் கொள்ளலாம்.

அவர் இந்தியாவிற்கு வந்த 18 நூற்றாண்டின் இறுதிப்பகுதியானது சைவம் வைணவம் நாட்டார் வழிபாடு போன்ற பல பிரிவினரை இணைக்கும் 'இந்து' என்ற சொல் பயன்பாட்டிற்கு வராத ஒரு காலமாக இருந்திருக்கிறது என்பது அவரது குறிப்பினால் தெளிவாகிறது. தமிழர்களுக்குள் சாதி, இனம், குலம், சமய சண்டைகள் சச்சரவுகள் எழும்பாமல் இருக்கவும், சட்டத்தை மதிக்குமாறு மேற்பார்வை செய்யவும் அவர்களிலேயே ஒருவர் தலைவராகவும் நியமிக்கப்பட்டார், இவரது கடமை மக்களிடம் அமைதி நிலவுமாறு மேற்பார்வை செய்வது. இந்த வழக்கம் கேரளத்திலும் இருந்திருக்கிறது.

இவ்வாறு பல வேறுபாடுகளை கொண்ட பல்லாயிரக் கணக்கான மக்கள் அவரவர் வழியில் அமைதியாக வாழும் வழக்கம் இருக்கும் பொழுது எல்லோரையும் "ஒரே நாடு ஒரே சமயம்"

என்று இணைக்க வழியில்லை என்று 18 ஆம் நூற்றாண்டிலேயே சொல்லியுள்ளார் பாலினஸ் பார்த்தலோமியோ!

("இங்குள்ள ஒவ்வொருவரும் அவரவர் வழியில் வாழவும் , அவரவர் நம்பிக்கையை பின்பற்றவும் அனுமதிக்கப்படுகிறார்கள் ; அதனால் ஒரு பொது மத அமைப்பில் பல வகுப்புகளும், ஆயிரக்கணக்கான மக்களும் ஒன்றிணைவது சாத்தியமில்லை" /Every one here is allowed to live in his own manner, and to enjoy his own belief; as it is not possible that so many classes and so many thousands of people should ever unite in one common system of religion) — Page: 8).

மேற்காணும் பாலினஸ் பார்த்தலோமியோ எழுதிய வரிகளுக்கு விளக்கக் குறிப்பு எழுதிய யோஹன் ரெய்ன்ஹோல்ட் ஃபார்ஸ்டர் (Johann Reinhold Forster); தம் குறிப்பில் யாதும் ஊரே யாவரும் கேளிர் என்று கணியன் பூங்குன்றனார் எழுதிய பாடல் வரிகள் நமக்கு நினைவிற்கு வரும் வகையில், பல நாடுகளுக்குப் பயணம் செய்பவர்கள், பல்வேறு பழக்க வழக்கங்களை, வாழ்க்கை முறைகளை, சமயக் கருத்துகளை கொண்ட மக்களை எதிர்கொள்ளும் வாய்ப்பு இருப்பதால் பரந்த நோக்கு உள்ளவர்களாகவும் சகிப்புத் தன்மை கொண்டவர்களாகவும் இருப்பார்கள் என்ற உண்மையை நாம் கவனித்திருக்கலாம் என்று விளக்கம் தந்துள்ளார்.

புதுச்சேரி நகரின் மேற்கு வாயிலைக் காக்கும் பணியில் இருந்த இந்தியச் சிப்பாய்கள் எல்லா சமய சாதி பின்புலம் கொண்டவர்களாகவும் இருந்தனர் என்று குறிப்பிடுகிறார். புதுச்சேரி கோட்டையில் 4000 வீரர்கள் இருந்திருக்கிறார்கள். புதுச்சேரியோ அல்லது சென்னையோ கேரள துறைமுக நகர்களுடன் ஒப்பிடும் அளவிற்கு வளமை நிறைந்தவை அல்ல என்கிறார் பாலினஸ் பார்த்தலோமியோ. சோழமண்டலத்தில் கடற்கரை அடுத்த சமவெளியில் தென்னை மரங்களும் வயல்வெளிகளும் கொஞ்சம் தானியம் மூலிகைகள் என்ற அளவில் மட்டுமே வளர்வதுடன் வெப்பம் நிறைந்த மணல்வெளியாக இருந்திருக்கிறது.

அவர் புதுச்சேரியில் தங்கி இருக்கையில் அவரை வியப்பில் ஆழ்த்தியதாக சொல்வது, அவரது புத்தக அலமாரியைத் திறந்து ஒரு நூலைப் படிக்க எடுத்த பொழுது அதன் மேல் கறையான்கள் பல ஊர்ந்து கொண்டிருந்தது என்பதும் ஒன்று. அவரது நூல்களும் சட்டைகளும், அங்கிகளும், காலணிகளும் கறையான்களால் அரிக்கப்பட்டிருந்தன. ஆனால் மலிவான விலையில் புதுச்சேரியில் ஒரு ரூபாய்க்கு தரமான ஒரு பருத்தி சட்டையை அவரால் வாங்க

முடிந்திருக்கிறது. அதன் பிறகு அவர் தலை முதல் கால்வரை பருத்தி ஆடைகள் அணியும் வழக்கத்திற்கு மாறுவதற்கு இந்த நிகழ்ச்சி வழி வகுத்திருக்கிறது. மற்றொருமுறை தரையில் படுத்து தூங்கிக் கொண்டிருந்த ஊழியர் ஒருவரின் காதில் பூரான் சென்றுவிட, அவர் விழித்தெழுந்து வலியால் துடித்து அலற அவர் காதில் கசப்பான மருந்தை ஊற்றி, பூரானை வெளியே எடுத்து மருத்துவம் பார்த்துள்ளார்கள். அந்த மருந்தை தயாரிக்கும் முறையையும் விளக்குகிறார் பாலினஸ் பார்த்தலோமியோ.

அப்பகுதி மீனவர்களை 'முக்குவர்' என்கிறார். தமிழை தமுலிக் (Tamulic Language) என்று குறிப்பிடுகிறார். அவர் தமிழர்கள் பகுதியில் தங்கியிருந்த பொழுது இந்தியர்கள் சிலர் நன்கு பிரெஞ்சு மொழி பேசுவதையும், கிறித்துவ மறை பரப்பாளர்களுடன் தொடர்பில் இருந்தவர்கள் இலத்தீன் மொழி நன்கு பேசுவதையும் கவனித்துள்ளார். இயல்பாகவே ஐரோப்பிய மொழிகளை நன்கு கற்பவர்களாக இந்தியர்கள் இருப்பதை உணர்ந்து கொள்கிறார். அவர்களில் சிலர் சமஸ்கிருதம் பற்றி உயர்வாக அவருக்கு அறிமுகப் படுத்தும் பொழுது அந்த மொழியைக் கற்க இவர் விரும்புகிறார்.

இந்தியர் சிலர் கிறிஸ்துவமும் வைதீகமும் அடிப்படையில் சில ஒற்றுமையான கூறுகளைக் கொண்டிருப்பதாக எண்ணியிருப்பதையும், குறிப்பாக கிறிஸ்துவம் சொல்லும் டிரினிட்டி என்பது பிரம்மா, விஷ்ணு, சிவன் போன்ற வேறு வடிவ விளக்கக் கருத்துதான், அதனால் கிறித்துவ சமயத்திற்கு மாறத் தேவையில்லை என்ற எண்ணம் கொண்டிருந்ததாகவும் கூறுகிறார் .

இஸ்லாமியர், தமிழர், கிறிஸ்துவர் என இந்திய ஆண்கள் அனைவரும் ஒரே போன்ற பருத்தி ஆடை அணிவதால் அவர்கள் நெற்றியில் உள்ள சமயக்குறியை வைத்தோ அல்லது மார்பில் அணிந்திருக்கும் அணியின் மூலம் அடையாளம் காண வேண்டும் என்கிறார் (பக்கம் - 17). இதிலிருந்து அக்கால இஸ்லாமியரிடம் கைலி அணியும் வழக்கம் இல்லை என்று புரிந்து கொள்ள வேண்டி இருக்கிறது.

இவ்வாறாக பல சுவையான தகவல்கள் நிரம்பிய நூலாக, இயற்கை, பருவகால மாற்றங்கள், புவியமைப்பு, அரசியல், சமயம் என 18 ஆம் நூற்றாண்டில் இந்திய வாழ்வுமுறையை பாலினஸ் பார்த்தலோமியோ நூலின் மூலம் அறிய முடிக்கிறது.

A Voyage to the East Indies — (Containing an Account of the Manners, Customs, etc of the Natives, with a Geographical Description of the Country)

Author: Paulinus S. Bartholomaeo
Paulinus S. Bartholomaeo's book Translated by William Johnston, and Illustrated by Johann Reinhold Forster, Publication date *1800*
https://archive.org/details/b*22037202*/mode/*2*up

செய்க பொருளை.

- முனைவர் தேமொழி
சான் ஃபிரான்சிஸ்கோ, அமெரிக்கா

ஈராயிரம் ஆண்டிற்கு முன்னரே நளியிரு முந்நீர் நாவாய் ஓட்டி மக்கள் தேவைக்கு ஏற்ப வணிகம் செய்வது என்பது கடல் கடந்தும் உலகம் முழுவதும் பரவிவிட்டது. வணிகம் மூலம் தங்கள் பொருளாதாரத்தையும் அதன் மூலம் தங்கள் நாட்டையும் வளத்துக் கொண்ட நாடுகளுக்கு பண்டைய தமிழ்நாடு, ரோம் அரசு; பிந்தைய இங்கிலாந்து, ஜெர்மனி; இன்றைய அமெரிக்கா, ஜப்பான், சீனா ஆகியவை என வரலாறு முழுவதும் சான்றுகள் பல உண்டு. ஒரு நாடு வலிமை பெற, வல்லரசாக நாட்டின் பொருளாதார வளர்ச்சி முக்கியம். அதற்கு நாட்டு மக்களின் செல்வ நிலையும் உயர வேண்டும். இந்த விதி நாடுகளுக்கு மட்டுமல்ல தனிமனிதர், குடும்பம், குடிகளின் வளர்ச்சிகளுக்கும் கூட பொருந்தும்.

வரப்புயர நெல் உயரும் என்பது போலவே, தனிமனிதரின் செல்வ நிலை அவர் குடும்பத்தை உயர்த்தும், செல்வர்க்கு அழகு செழுங்கிளை தாங்குதல் என்ற கொள்கை வழி அவர் தான் ஈட்டிய பொருளைத் தக்க முறையில் செலவிடுவதே அவரது குடியை உயர்த்தும், அது தொடர்ச்சியாக அவர் வாழும் ஊர், நாடு என்று தொடர்ந்து அனைவரையும் உயர்த்தும்.



அக்காலம் முதல் இக்காலம் வரை ஒருவர் அதிக பொருளை ஈட்ட உதவுவது வணிகமே. சேர்த்த பொருளைக் கொடைகளாகக் கொடுத்து தம் சுற்றம் தம் மக்கள் என தமிழர்கள் வாழ்வு நிலையை உயர்த்தியவர் என அண்மைக்கால எடுத்துக் காட்டாக அழகப்பச் செட்டியார் அவர்களைக் கூறலாம்.

செல்வந்தர் ஒருவர் சேர்க்கும் செல்வத்தை அவர் மக்களைச் சுரண்டி சேர்த்தார், அறநெறி தவறிய வழியில் சேர்த்தார் என்று ஆராயாமல், உண்மை அறியாமல் கூறுவது அறியாமையாகும். இத்தகைய மனப்போக்கும் மக்களிடையே உள்ளது. செல்வம் சேர்ப்பவர் தன் தொழிற்திறமையால் சேர்ப்பதும் உண்டு. பிறரை ஏமாற்றாமல், சுரண்டாமல் உழைத்தால், ஒருவர் தேர்வு செய்யும் அவரது பணிமுறைக்கு ஏற்ப, அல்லது தொழில் முறைக்கு ஏற்ப அவரிடம் பொருள் குவியலாம். ஒரு சிலருக்குச் செல்வம் சேர்வது நல்வாய்ப்பாலும் கூட அமையலாம்.

அமெரிக்காவில் 90 ஆண்டுகளுக்கு முதன்மை நிலை ஊர்தி விற்பனை நிறுவனம் என்று அசைக்க முடியாத முன்னணி நிலையிலிருந்த ஜிஎம் நிறுவனம், இன்று அயல்நாட்டு டொயோட்டா நிறுவனத்தால் தங்கள் மண்ணிலேயே பின்னுக்குத் தள்ளப்பட்டுவிட்டதை எந்த வகையில் சேர்ப்பது. அது டொயோட்டாவின் ஏமாற்று வேலையா, சுரண்டலா, நல்வாய்ப்பா, வணிகத்திறமையா?



பட்டினத்தார்

மனிதர் வாழ்நாள் குறைவு. எனவே செல்வம் சேர்ப்பதை மட்டுமே நோக்கமாகக் கொண்டு அலையாமல் வாழ்க்கையின் நிலையாமை, கூடிவாழும் குறிக்கோளின் அடிப்படை ஆகியனவற்றைக் கருத்தில் கொள்ள வேண்டும். தன்னல நோக்கம் எல்லை மீறக்கூடாது. பயனுள்ள வகையில் வாழ்க்கையை அமைக்க வேண்டும்.

"காதற்ற ஊசியும் வாராது காண் கடைவழிக்கே" என்ற பட்டினத்தார் கூற்றும், அலெக்சாண்டர் வெறுமையான இரு கைகளும் வெளித்தெரியும்படி

சவப்பெட்டியில் கிடத்தக் கேட்டுக் கொண்டதும் யாரும் எதையும் இறந்த பின்னர் கொண்டு போகப் போவதில்லை என்பதைச் சுட்டித்தான். வாழ்வின் நிலையாமையை மறப்பவருக்கு வாழ்க்கை குறித்து அறிவுறுத்துவதற்காகவும், வாழ்க்கை நிலையாமையை நினைவூட்டுவதற்காகவும் இந்த அறிவுரைகளைச் சான்றோர் சொல்லிச் சென்றுள்ளார்கள். சொல்லப்பட்ட அறிவுரைகளின் நோக்கத்தை நாம் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

சேர்க்கும் அறிவும் திறமையும் மட்டும் ஒருவருக்கு இருந்தால் போதாது. தாம் சேர்த்தவற்றைப் பயன்தரக் கூடிய வகையில் முறையாகச் செலவழிக்கும் அறிவும் திறமையும் இருப்பதும் தேவை.

செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும்
எஃகதனிற் கூரிய தில்

காக்கை கரவா கரைந்துஉண்ணும் ஆக்கமும்
அன்னநீ ரார்க்கே உள

என்று வாழும் முறையை வள்ளுவம் அறிவுறுத்துவதில் இவை எல்லாம் அடங்கும். தீ, நீர், மின்சாரம், இயற்கை, இணையப் பயன்பாடு போன்றதே செல்வமும். சரியான முறையில் பயன்கொள்ளத் தவறுவது சீர்குலைவிற்கு வழிவகுக்கும்.

எங்களுக்கும் காலம் வரும்
காலம் வந்தால் வாழ்வு வரும்
வாழ்வு வந்தால் அனைவரையும்
வாழ வைப்போமே ...

என்பதுவே சரியான வழி. அந்தக் கால கார்னகி முதல் இந்தக் கால பில் கேட்ஸ், வாரன் பஃப்பெட் வரை அமெரிக்கத் தொழிலதிபர்கள் சிலரும் தங்கள் திறமையால் தானும் உயர்ந்து, பலரும் வாழ விரும்பி மானுட வளர்ச்சி நோக்கில் மக்களின் கல்வி, உடல்நலம் ஆகியவற்றுக்குக் கொடைகள் அளித்து மக்களின் வாழ்நிலையையும் நாட்டின் பொருளாதாரத்தையும் உயர்த்துவது பாராட்டத் தக்க வழிமுறையே.

பணக்காரர்கள் எல்லோரும் கெட்டவர்களும் அல்லர் கஞ்சர்களும் அல்லர். செல்வத்தைப் பயனுள்ள வகையில் செலவழிப்பது அறிவுடைமையில் அடங்கும்.

ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு

பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயனுடை யான்கண் படின்

அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி

இவை போல மனப்பாடப் பகுதி செய்யுள் படித்து மதிப்பெண் பெறுவதுடன் நின்றுவிடுகிறார்கள் நம் மக்கள்.

கோவிலில் போய் தங்கம் தங்கமாகக் கொட்டி வைத்து, அச்செல்வம் நாய் பெற்ற தெங்கம் பழம் போலப் பயனற்ற வகையில் அழிக்கப்படுவதே அறிவுடைமை அற்ற செயல். கிலோ கிலோவாகக் கோயிலின் தங்க நகைகளைக் கோவில் நிர்வாகத்தார் பதுக்கி வைக்க அதைக் காவல்துறை கைப்பற்றி வெளியிடும் புகைப்படங்களும் தொடர்ந்து வந்த வண்ணமே உள்ளன.

எனவே;
சேர்த்த செல்வத்தை முறையாகச் செலவழிக்கத் தெரியாததே குற்றம்,
அறநெறி மீறாத வகையில் செல்வம் சேர்க்கத் தெரிந்திருப்பது குற்றமே அல்ல.

ஆய்ச்சியர் குரவை

-- முனைவர் தேமொழி
சான் ஃபிரான்சிஸ்கோ, அமெரிக்கா

பொருளிழந்து, பெருமையிழந்து புகார் துறந்து மறுவாழ்வு தேடி மதுரையை நோக்கிச் செல்கிறார்கள் கோவலனும் கண்ணகியும். அவர்களுக்கு வழித்துணையாகச் செல்கிறார் சமணக் குரத்தி கவுந்தி அடிகள். மதுரை புறநகர்ப் பகுதியில் வாழும் இடையர் குலப் பெண்ணாகிய மாதரியிடம், கோவலனும் கண்ணகியும் தக்க இடம் கிடைத்து வாழ்வைத் தொடங்கும் வரை அவர்களைப் பாதுகாக்குமாறு அடைக்கலமாகக் கொடுத்துச் செல்கிறார் கவுந்தி அடிகள்.

அங்குக் கண்ணகி சமைத்துப் பரிமாறிய உணவை உண்ட பிறகு, கண்ணகியின் காற்சிலம்புகளில் ஒன்றைக் கடைவீதியில் விற்றுப் பொருளீட்ட மதுரை நகருக்குள் செல்கிறான் கோவலன். ஆனால், அச் சிலம்பு பாண்டிய அரசியின் களவு போன சிலம்பு என்று பொய்ப் பழி சுமத்தப்படுவதை எதிர்கொள்கிறான். வழக்கை ஆராய்ந்து பாராத பாண்டிய மன்னன், கள்வன் எனக் குற்றம் சாட்டப்பட்ட கோவலனைக் கொன்று அரசியின் சிலம்பை மீட்டு வருமாறு காவலர்களுக்கு ஆணையிடுகிறான். காவலர்களால் கொலைத் தண்டனைக்கு உள்ளாகி உயிரிழக்கிறான் கோவலன்.

மறுநாள் அதிகாலையில் பாண்டிய அரசனின் அரண்மனையில் காலை மணி ஒலிக்கிறது. ஆயர்கள் வாழும் புறநகரில் இடைக்குலத்து முதியளாகிய மாதரி அன்று கோயிலுக்கு நெய்யளக்கும் முறை தன்னுடையது என்று நினைவு வந்தவளாக தன் மகள் ஐயையை அழைத்துக் கொண்டு, கையில் மத்துடன் வெண்ணெய் கடைவதற்காகத் தயிர் வைக்கும் தாழியிடம் செல்கிறாள். பானையில் பால் உறைந்து தயிராக மாறியிருக்கவில்லை. முன்னர் உறியில் சேமித்த வெண்ணெய்யை எடுத்து உருக்குகிறாள், அதுவும் நெய்யாக உருகவில்லை. கொட்டிலில் எருது கண்ணீர் வடிக்கிறது, பசு அஞ்சுவது போல நடுங்குகிறது. அதன் கழுத்தணி தரையில் அறுந்து கிடக்கிறது. துள்ளியாடும் ஆடும் துடிப்பின்றி சோர்வாகப் படுத்திருக்கிறது. இவற்றை அடுத்தடுத்துக் காணும் மாதரி, இவை யாவற்றையும் தீய நிமித்தங்களாக உணர்கிறாள். தொழுவில் நிற்கும் ஆனிரைகளுக்கு எந்தத் துன்பமும் நேராமல் இருக்க மாயவனான மாலையும் அவனுக்கு மூத்தவனாகிய பலராமனையும் வாழ்த்தி குரவையாட்டம் நிகழ்த்த முடிவெடுக்கிறாள்.

தொழுவத்தில் நிற்கும் ஏழு காளைகளை ஏழு ஆயர்குல மகளிர் வளர்த்து வருகிறார்கள். அக் காளைகளை அடக்குபவரையே மணமுடிக்க வேண்டும் என்பது அவர்களது அவா. அந்த ஏழு பெண்களையும் அழைத்து அவர்களுக்குக் குரவைக்காகப் 'படைத்துக் கோள்' பெயர் இடுகிறாள் மாதரி. நிகழ்த்துக் கலைகளான நாட்டியம் நாடகம் போன்றவற்றில் கூறப்படும் கதையில் இடம் பெறும் பாத்திரங்களுக்கான பெயரை நடித்துக் காட்டுபவருக்குச் சூட்டுவது வழமை. அதாவது நடிப்பவருக்கு ஒரு புனைபெயர் இட்டுச் சொல்வது வழக்கம்(எ. காட்டு: பொன்னியின் செல்வன் திரைப்படத்தில், கார்த்தியின் படைத்துக் கோள் பெயர் வந்தியத்தேவன்).

ச	ரி	க	ம	ப	த	நி	ச
குரல்	துத்தம்	கைக்கிளை	உழை	இளி	விளரி	தாரம்	குரல்
மாயவன்	பிஞ்ஞை	கைக்கிளை	உழை	பலராமன்	விளரி	தாரம்	மாயவன்

ஆடுவோர் ஏழு பேரோ அல்லது ஒன்பது பேரோ கைகளைக் கோர்த்துக் கொண்டு ஆடும் நடன வகை குரவை எனப்படும். வரிசையில் நிற்போரில் இடமிருந்து வலமாக முறையே; குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்று இசைக்குரிய ஏழு சுரங்களின் பெயர்களை கைகோர்த்து ஆடவிருக்கும் ஆய்ச்சியர் எழுவருக்குப் பெயர்களாக மாதரி சூட்டுகிறாள்.

இக்காலத்தில் இசையில் சுரம் அல்லது சுவரம் (சமற்கிருதம்: ஸ்வரம்) எனக் கூறப்படும் ச, ரி, க, ம, ப, த, நி (அதாவது; சட்ஜம், ரிஷபம், காந்தாரம், மத்திமம், பஞ்சமம், தைவதம், நிஷாதம் என வழங்கப்பெறுபவை), அக்காலத்தில் தமிழில் 'குரல்', 'துத்தம்', 'கைக்கிளை', 'உழை', 'இளி', 'விளரி', 'தாரம்' என்னும் ஏழு பெயர்களாலும் அறியப்பட்டன. இந்த சுரங்களின் பலவேறு வகைக் கோர்வைகளின் அடிப்படையில் இசையின் பண் (அல்லது இராகம்) உருவாகிறது.

அவர்கள் சம நிலையாக வட்டவடிவில் நின்று, நண்டுகள் போல அடுத்து நிற்பவரின் கைகளுடன் தங்கள் கைகளைப் பிணைத்துக் கொண்டு, கண்ணனின் புகழை வாழ்த்திப் பாடி குரவை ஆட ஆயத்தம் ஆனார்கள். இந்தக் காட்சியைக் கூறும் சிலப்பதிகார வரிகள் இவை:

இடை முதுமகள் இவர்க்குப் (52)
படைத்துக் கோள் பெயர் இடுவாள்;
குடமுதல் இடமுறையா, குரல், துத்தம்,
கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம், என,
விரி தரு பூங் குழல் வேண்டிய பெயரே.

மாயவன் என்றாள் குரலை; விறல் வெள்ளை
ஆயவன் என்றாள் இளி தன்னை; ஆய் மகள்
பின்னை ஆம் என்றாள் ஓர் துத்தத்தை; மற்றையார்
முன்னை ஆம் என்றாள் முறை. (60)
மாயவன் சீர் உளார் பிஞ்ஞையும் தாரமும்;
வால் வெள்ளை சீரார் உழையும் விளரியும்;
கைக்கிளை பிஞ்ஞை இடத்தாள்; வலத்து உளாள்
முத்தைக்கு நல் விளரி தான்
அவருள்,
வண் துழாய் மாலையை மாயவன் மேல் இட்டு,
தண்டாக் குரவை-தான் உள்படுவாள், கொண்ட சீர்
வையம் அளந்தான்-தன் மார்பில் திரு நோக்காப்
பெய் வளைக் கையாள் நம் பின்னை-தான் ஆம் என்றே,
'ஐ!' என்றாள், ஆயர் மகள் (70)

அவர்-தாம்
செந்நிலை மண்டிலத்தான், கற்கடகக் கை கோஒத்து,
அந் நிலையே ஆடல் சீர் ஆய்ந்துளார் (73)

[சிலப்பதிகாரம்: மதுரைக் காண்டம், 7. ஆய்ச்சியர் குரவை, வரிகள் 52-73]

பாடல் கூறுவதன்படி குரவையாடுபவர் வரிசை,

குரல் = மாயவன்

துத்தம் = நப்பின்னை/பிஞ்ஞை

கைக்கிளை = ஆயமகள் ஒருத்தி

உழை = ஆயமகள் ஒருத்தி

இளி = பலராமன்

விளரி = ஆயமகள் ஒருத்தி

தாரம் = ஆயமகள் ஒருத்தி

மாயவன் சீர் வரிசையில் (அணியில்) பின்னையும் தாரமும் நின்றனர்.

பலராமன் சீர் வரிசையில் உழையும், விளரியும் நின்றனர்.

பிஞ்ஞையின் இடப்பக்கம் கைக்கிளை நிற்கிறாள்

முத்தைக்கு வலப்புறம் விளரி நிற்கிறாள்



இவ்வாறாகப் பாடல் தரும் குறிப்புகள் குரவை ஆடுபவர் நிற்கும் வரிசையைக் காட்டும்.

இதைக் கொடுக்கப்பட்டுள்ள படம் காட்சிப்படுத்துகிறது.

இளங்கோவடிகள் இப் பாடல் வரிகளில் பல இசை நுட்பங்களைப் பொதிந்து வைத்துள்ளார் எனலாம்.

ச	ரி1	ரி2	ரி3	க1	க2	க3	ம1	ம2	ப	த1	த2	த3	நி1	நி2	நி3	ச
--	சுத்த ரிஷபம்	சதுஸ்ருதி ரிஷபம்	ஷட்ஸ்ருதி ரிஷபம்	சாதாரண காந்தாரம்	அந்தர காந்தாரம்	சுத்த காந்தாரம்	சுத்த மத்யமம்	ப்ரதி மத்யமம்	--	சுத்த தைவதம்	சதுஸ்ருதி தைவதம்	ஷட்ஸ்ருதி தைவதம்	கைஷிகி நிஷாதம்	காகலி நிஷாதம்	சுத்த நிஷாதம்	--

இசையில் கருவிகளுக்கு முதல் முதல் சுருதி சேர்க்கும்பொழுது ச-ப-ச என்ற மூன்று சுரங்களுக்குப் பொருந்தச் சேர்த்துக் கொள்வார்கள். ச-ப-ச என்ற சுரங்கள் சட்சம-பஞ்சம முறைப்படி (ஓசை அளவீட்டில் 1, 1½, 2) அமையும். கீழ் 'ச' வின் இருமடங்கு ஓசையுடையது மேல் 'ச' வாக இருப்பதனாலும் இடைப்பட்ட நிலையில் பஞ்சமம் சேரும்பொழுது கேட்பதற்கு இசை ஒத்து இனிமை நிறைந்து நிற்கும். சட்சம-பஞ்சம முறைப்படி இசை கூட்டப்படுவதின் காரணம் சட்சமம் - பஞ்சமம் இரண்டும் ஒலி வேறுபாடற்றவை, ஒரே முறையில்தான் ஒலிக்கப்படும். ஆனால் ஏனைய ஐந்தும் (ரி, க, ம, த, நி) ஒலிப்பில் வேறுபாடுகள் கொண்டவை, அவற்றுக்குத் தனிப்பெயர்களும் உண்டு, குறியீடுகளும் உள்ளன.

('ரி' இல் 3, 'க' இல் 3, 'ம' இல் 2, 'த' இல் 3, மற்றும் 'நி' இல் 3 வேறுபாடுகள் உள்ளன).

இதைத் தமிழ்ப் பெயர்களில் குறிப்பிடுவோமென்றால், குரல் (ச) மற்றும் இளி (ப) ஆகிய இரண்டும் ஒலி வேறுபாடற்றவை. இவை முறையே மாயவனுக்கும், பலராமனுக்கும் எனக் குறிப்பிடுகிறாள் மாதரி. இத் தேர்வு மாயவன் பலராமன் ஆகிய இருவரின் சிறப்பை, தனித்தன்மையைக் காட்டுவதற்காக எனக் கொள்ளலாம். குரல், இளி ஆகிய இருவர் மட்டுமே ஆண் உருவாகப் பாவித்து ஆடுகிறார்கள். மற்ற ஐவரும் பெண் உருவாகவே குரவை ஆடுகிறார்கள்.

ச, ரி, க, ம, ப, த, நி என்ற சுரங்கள் வரிசையில் எட்டாவதாக மீண்டும் 'ச' வருகையில் (ச, ரி, க, ம, ப, த, நி, ச) 'ச' விற்கு முன்னதாக 'நி' இடம் பெறும்.

அதாவது, 'குரல்' மறுபடி வரும்பொழுது அதற்கு முன்னர் 'தாரம்' வரும். இங்கு குரவை ஆடுபவர்கள் வட்டவடிவில் நிற்கும் பொழுது குரலுக்கு முந்தையதாக (முன்னதாக) தாரம் நிற்கிறாள். முந்தை முத்தை எனப் பாடலில் விகாரம் அடைந்தது. இதை வலித்தல் விகாரம் என்று குறிப்பிட்டுச் சொல்லலாம்.

மாயவன் சீருளார் பிஞ்ஞையுந் தாரமும்
வால்வெள்ளை சீரார் உழையும் விளரியும்

என்று இணை சேர்த்துவிட்டு, கைக்கிளையை (இணையின்றி /ஒருதலைக் காதல்) தனித்து விட்டு விட்டதும் குறிப்பிடத்தக்கது.

மாயவன் கழுத்தில் நப்பின்னை துளசி மாலையைச் சூட்டி அவனோடு இணைந்து ஆட, வட்டவடிவில் கைகோர்த்து மற்றவரும் அவன் புகழ் பாடி குரவை ஆட்டத்தைத் தொடங்கினர்.

பார்வை நூல்கள்:

சிலப்பதிகாரம், நூலாசிரியர் இளங்கோவடிகள், ந.மு.வேங்கடசாமி நாட்டார் உரை

சிலம்பின் கதை, நூலாசிரியர் பேரா. டாக்டர். ரா. சீனிவாசன்

படம் உதவி:

நடனக் காட்சி படவுதவி: தமிழ் மரபு அறக்கட்டளை; தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பு மற்றும் ஜெர்மனி லிண்டன் அருங்காட்சியக ஏற்பாட்டில் நடக்கும் "அகம் புறம்" தமிழ்க் கண்காட்சியின் தொடக்கவிழாவின் கலைநிகழ்ச்சி.

தீபாவளி என்ற சொல் எப்பொழுது தோன்றியது?

-- முனைவர் தேமொழி
சான் ஃபிரான்சிஸ்கோ, அமெரிக்கா

தீபாவளி யாருடைய பண்டிகை? என்று இந்தியாவில் உள்ள சமயங்களிடையே எழும் சச்சரவு, மன்னன் சாலமன் அரசவையில், "இது என் குழந்தை" என்று முறையிட்ட இரு தாய்களின் கதையையே நினைவுபடுத்தும். தீபாவளி என்பது வாழ்ந்து மறைந்த சமண தீர்த்தங்கரர் மகாவீரரின் மறைவு நாளையொட்டி அவர் அளித்த அறிவொளியைப் பரப்பும் நாளாக சமணர்கள் தொன்று தொட்டுக் கொண்டாடுகின்றனர் என்ற 'வரலாற்று அடிப்படை' உள்ளதாக வரலாற்று ஆய்வாளர்கள் கருதுகிறார்கள்.

இதற்கு மாறாக, வைதீகச் சமயங்களின் தொன்மங்கள் கூறுபவை பெரும்பாலும் இயற்கைக்கு முரணான, நம்ப இயலாத கதைகள் போன்றவற்றின் அடிப்படையில் தீபாவளி நாளின் சிறப்பைக் கட்டமைக்கின்றன. இந்தியாவின் ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒரு தொன்மக் கதை என்ற அளவிற்குப் பல்வேறு தீபாவளிக் கதைகள் வைதீகப் பின்புலத்திற்கு அடிப்படையாக அமைந்துள்ளன.

இந்தியாவின் சமணம் மற்றும் வைதீகச் சமயங்கள் தவிர்த்து பௌத்தம், சீக்கியம், பழங்குடியினர் எனப் பல பிரிவினரும் தீபாவளி குறித்துத் தங்களுக்கு உள்ள தொடர்பு ஒன்றைக் காட்டிக் கொண்டாடி வரும் இந்தியப் பண்டிகைதான் தீபாவளி. பன்னாட்டு அரங்கில், "தீபாவளி என்பது தீமையை அழித்து நன்மை வெற்றி கொண்ட நாளை இந்தியர்கள் விளக்கேற்றிக் கொண்டாடுவார்கள்" என்ற ஒரு புரிதலே உள்ளது. அவர்களுக்கு இந்தியப் பண்பாடு குறித்தும், பல்வேறு சமயங்கள் குறித்தும் விரிவான அறிமுகமோ அவற்றுக்கான தேவையோ இல்லை. இந்தியாவில் எவர் கொண்டாடினாலும் தீபாவளி என்று விளக்கேற்றி வழிபடும் நாளின் அடிப்படையில் இருப்பது மறைந்த மூதாதையரை வழிபடுவது என்ற கருத்தே பொதுவாக உள்ளதாகவும் அறிய முடிகிறது.

தமிழரின் புத்தாண்டு எது என்பதற்கு இணையாக ஒவ்வொரு ஆண்டும் உயிர்த்தெழும் விவாதம், யாருடைய பண்டிகை தீபாவளி? என்ற விவாதச் சரவெடிகள். திருக்குறளை அனைவரும் தங்களுடையது என்று உரிமை கோருவதற்கு இணையானது என்றும் கூட இந்த விவாதங்களைச் சொல்லாம். தீபாவளி யார் பண்டிகை என்ற விவாதம் ஒரு பக்கமும், தீபாவளி வாழ்த்துகள் பரிமாறிக் கொள்வது மறுபக்கமும் என ஒவ்வொரு ஆண்டும் சமூக வலைத்தளங்களில் தீபாவளி கொண்டாட்டம் களை கட்டுவது வழக்கமாகிவிட்டது. இவ்விவாதங்களில் செப்பேடுகள், கல்வெட்டுகள் எனத்



தொல்லியல் தரவுகளும், இலக்கியக் குறிப்புகளும் மேற்கோள்களாகக் கொடுக்கப்படும்.

மேலும், தீபாவளி என்பதன் பெயருக்கு ஏற்ப சரவிளக்குகள் கொண்டு விளக்கேற்றுவது, கார்த்திகை என்ற மற்றொரு பண்டிகை நாளாகவும் அதற்கு அடுத்த மாதமே கொண்டாடப்படுவது வழக்கம். எனவே இந்த இருவேறு பண்டிகைகளும் வெவ்வேறு பெயரில் கொண்டாடப்படும் ஒரே பண்டிகையா? அல்லது தனித்தனியான இருவேறு பண்டிகைகளை ஒன்றுடன் ஒன்றை இணைக்கும் முயற்சியாக இந்த விளக்குகளின் அணிவகுப்பு விழா முயல்கிறதா என்ற ஐயங்களும் தானே எழும்புகின்றன. சரவிளக்குகளும், கார்கால மாதமும், முன்னோர் வழிபாடு ஆகிய மூன்றையும் அடிப்படையாகக் கொண்டது இருப்பது இந்த விளக்கேற்றும் பண்டிகை. இதில் அயல் நாட்டவர் கருதும் தீமை அழிந்து நன்மை வெற்றி பெற்ற நாள் என்ற புரிதல் ஒட்டாமல் விலகிவிடுகிறது. மறைந்தவர், கொடியவன் என்பன போன்றவை புராணக் கற்பிதங்கள் ஆகும்.

விளக்கைக் குறிக்கும் 'தீப' என்ற சமஸ்கிருதச் சொல்லின் அடிப்படையே இப் பண்டிகைக்கும் தமிழருக்கும் தொடர்பு இல்லை என்பதைக் காட்டும். விளக்கு, விளக்கேற்றுதல், சரவிளக்குகள் என்ற சொற்களின் [dipa(दीप), dipaka(दीपक), dipavali(दीपावलि) lamp, lightingup, row of lights] அடிப்படையும் தீபாவளி என்ற சொல்லின் தோற்றம் சமஸ்கிருத அடிப்படை கொண்டவை. ஆகவே தொன்று தொட்டுவரும் வழக்கத்தை உள்ளடக்கிய ஒளி தரும் விளக்குகள் அமைக்கும் விழா என்ற விரிவான பார்வையைப் பின்னுக்குத் தள்ளி "தீபாவளி" என்ற சொல்லின் தோற்றம் எப்பொழுது என்ற குறிப்பினை நோக்கி ஆராய்வது மேலும் தெளிவைக் கொடுக்கலாம்.

தமிழர்களால், தமிழகத்தில் கொண்டாடப்படும், தமிழகத்தின் தீபாவளி குறித்துக் கிடைக்கும் தகவல்கள் பிற்காலத்தவை. கி.பி 1542ஆம் ஆண்டின் திருமலை திருப்பதி கல்வெட்டைத் தீபாவளிக்கான பழைமையான ஆதாரமாக, கல்வெட்டு அறிஞரான குடவாயில் பாலசுப்பிரமணியன் அவர்கள் குறிப்பிடுவார். தீபாவளி நாயக்கர் காலத்தில்


உ
சிவமயம்
சரசோதிமாலை
தம்பைமாநகரத்தில் அரசுபுரிந்திருந்த
பராக்கிரமவாகுமகாராசன்
கேட்டுக்கொண்டபடி
பிரமகுல திலகராகிய
தேனுவரைப்பெருமாள் என்று வழங்கும்
போசராசபண்டிதர்
இயற்றியது.
இஃது
யாழ்ப்பாணம்
நல்லூரைச் சார்ந்த கொக்குவில்
சோதிடர்
சந். இரகுநாதையராலும்
ஷெ்யூர் சு. நடராசையராலும்
பல பிரதிருபங்களைக்கொண்டு பரிசோதித்தது.
ஷெ்யூர்
இ. வெங்கடேச ஐயரால்
சோதிடப்பிரகாசயந்திரசாலையில்
அச்சிற் பதிப்பிக்கப்பட்டது.
மூன்றும் பதிப்பு.
குரோதன ஞு சித்திரை மீ

அறிமுகப்படுத்தப்பட்ட பண்டிகை என்பதை இது போன்ற பிற்காலத் தரவுகளின் அடிப்படையில் வரலாற்று ஆய்வாளர்கள் குறிப்பிட்டு வருகிறார்கள்.

எழுநூறாண்டு பழைமையான ஈழத்துத் தமிழ் இலக்கியம் ஒன்று தீபாவளித் திருநாள் பற்றி குறிப்பிடுவதாக ஒரு கருத்தை நீர்வை. தி. மயூரகிரி சர்மா முன்வைக்கிறார். அதற்குச் சான்றாக, "சரசோதிமாலை" என்ற நூலில் உள்ள தமிழ்ப் பாடல் ஒன்றையும் காட்டுகிறார். இலங்கையின் தம்பை மாநகரத்தில் (தம்பதெனியா) அரசு புரிந்திருந்த நான்காம் பராக்கிரமவாகு அரசர் கேட்டுக்கொண்டபடி பிரமகுல திலகராகிய தேனுவரைப்பெருமாள் என்று வழங்கும் போசராச பண்டிதர் இயற்றிய நூல்தான் சரசோதிமாலை என்ற குறிப்பு இந் நூலில் உள்ளது.

இந்த நூலின் காலம் கி.பி. 1310 என்றும், இந்த நூல் சிங்கள மொழியிலும் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது என்ற குறிப்பும் அதே நூலில் உள்ளன. இப் பண்டிதர் சரசோதி என்பவரின் மைந்தன் ஆவார். அதனால் இந் நூல் இப்பெயர் பெற்றது என்ற வழக்கும், கோள்களின் தாக்கம் மனித வாழ்வில் விளைவிக்கும் மாறுதல்களைக் கூறும் சோதிட நூல் என்பதால் இப்பெயர் பெற்றது என்ற வழக்கும் நூலிலேயே கொடுக்கப் பட்டுள்ளது. இந்த நூலை 'நூலகம்' தளத்தில் *(https://noolaham.net/project/55/5404/5404.pdf)* படிக்கலாம். நூல் கொடுக்கும் காலகட்டம் குறித்து மேலும் ஆய்வது வரலாற்று ஆய்வாக மாறிவிடும் என்று நூல் முன்னுரையில் குறிப்பிடப்படுவதால், நூல் கொடுக்கும் தகவல் அடிப்படையில் 14 ஆம் நூற்றாண்டில், அதாவது இன்றைக்கு ஏழு நூற்றாண்டுகளுக்கு முன்னர் தீபாவளி/தீபாவலி என்ற சொல் வைதீகம் சார்ந்த ஒரு நூலில் தமிழில் பதிவாகி இருப்பதாகக் கொள்ளலாம்.

சரசோதிமாலை நூலின் ஏழாவது படலமான 'தெய்வ விரதப் படலம்' (பக்கம் 44, பாடல் 17)

"தீபாவலி"

இரவிநற்றுலைசேர்மாதமிராக்கதிர்குறையும் பக்கம்
வருபதினான்கு வந்தவைகறைப்பொழுதுதன்னி
லுரியநற்பிதிர்களின்பமுறு தீபாவலியாமெண்ணெய்
மருவிவெந்நீரின்மூழ்கிமகிழ்ந்துநற்றருமஞ்செய்யே.

தீபாவலி/தீபாவளி குறித்து தகவல் ஒன்றைச் சொல்கிறது.

இப்பாடலைச் சொல் பிரித்துப் படித்தால்;

இரவி நற்துலை சேர் மாதம் இராக்கதிர் குறையும் பக்கம்
வரும் பதினான்கு வந்த வைகறைப் பொழுது தன்னில்
உரிய நற்பிதிர்கள் இன்பமுறு தீபாவலியாம் எண்ணெய்
மருவி வெந்நீரின் மூழ்கி மகிழ்ந்து நல் தருமம் செய்யே.

கதிரவன் துலா மாதத்தில் இருக்கும் பொழுது, அதாவது ஐப்பசி மாதத்தில் இரவில் ஒளி குறைந்து வரும் காலமான தேய்பிறையில் (கிருஷ்ண பட்சம் என்ற குறைமதி காலத்தில்)
வருகின்ற பதினான்காம் நாளில் (சதுர்தசி நாளில்) வைகறை நேரத்தில் மூதாதையர் மகிழும் வண்ணம் தீபாவளி நாளில் எண்ணெய் தேய்த்து வெந்நீரில் மூழ்கிக் குளித்து
மகிழ்ச்சியுடன் அறச் செயல்கள் செய்வாயாக என்று பாடல் கூறுகிறது.

இதைத் தொடர்ந்து வரும் பாடல் இப்பண்டிகையைத் தொடர்ந்து அடுத்த மாதமான கார்த்திகையில் கொண்டாடப்படும் கார்த்திகை விழாவைக் குறிப்பிடுகிறது. ஆக இது ஐப்பசி அமாவாசை (புதுநிலவு அல்லது மறைமதி) நாளில் கொண்டாடப்படும் விளக்கேற்றும் நாளைக் குறிக்கிறது. கி.பி. 1310 காலத்தின் நூல் இவ்வாறாகக் குறிப்பிடுவதால் அக்காலத்தில் கொண்டாடாப் பட்டதற்கான எழுத்து வடிவில் உள்ள சான்று என்று இதைக் கொள்ளலாம்.

இருப்பினும், இவ்வாறு குறிப்பிடப்படும் தேய்பிறை 14 ஆம் நாளில்தான் கார்த்திகை மாதத்தில் சமண தீர்த்தங்கரர் மகாவீரர் இறந்தார் என்று குறிப்பிட்டு, அதனை

கத்திய-கிண்ஹே
சௌதஸிபச்சுஸே
ஸாதிணாமனக்கத்தே.
பவாஏ ணயரியே ஏக்கோ
விரேஸரோ ஸித்தோ ..

என்று 4 ஆம் நூற்றாண்டின் ஆச்சார்யா யதிவ்ருஷபா (Acharya Yativrshabha) என்ற


44 சரசோதிமாலை

விநாயக சதுர்த்தி
சிங்கமாமாதம்வந்ததெரிசத்தின்பின்புசேருந்
திங்களினலாம்பக்கஞ்சித்தரமுகனேன்பாரு
மங்கையேபூசைசெய்யின்மனநினைவாகுந்திங்க
டங்கியகிரணங்காணிற்றருந்துயர்சாற்றலாமோ. (10)

ஜயந்தி
வேறு
பேசுமாவணிப்பின்னிருநாலிலே, யோசைபெற்றவுரோகிணிகூடவே
தேசமெண்ணுஞ்செயந்தியாமாயனைப் பூசைசெய்திடிர்ப்பொன்ன
கர்கிட்டுமே.

அனந்தவிரதம்
புலனிறைந்தவர்பொற்புரட்டாதியி, னலமிகுந்தமுதற்பதினன்கிலே
குலவனந்தனன்னேன்பெனக்கூறுவர், பலமனந்தமதாகிப்பலிக்குமே.

மகாளய சிராத்தம்
வேறு
கன்னியிலாதவன்கருதிவந்தெழப்
பொன்னிகர்பூரணைபோனமற்றைநா
ளுன்னியதெரிசமீரெருபன்னைந்தினு
மன்னியமாளையம்பிதிரர்வாழ்வரே. (13)

கேதாரவிரதம்
பொங்கியபுகழ்புரட்டாதியாகிய திங்களிற்பிற்பதினலுசெய்யதாட்
சங்கரிநோற்றகேதாரநோன்பதா மங்கரன்பூசனையன்பிற்செய்மினே

நவராத்திரி
அரிவையிலிரவிசேர்ந்ததைப்பசிப்பிறை
வருபிரதமைமுதனவமியீறதாய்ப்
புரவலர்துர்க்கையைப்பூசைசெய்திடி
லிருநிதிக்கிழமைகள்யாவுமெய்துமே. (15)

கந்தஷஷ்டி
வேறு
நற்றுலைமாதந்தன்னினனிமதிவளருகின்ற
முற்பிரதமையோடாதிமூவிருதினமுமீசன்
சற்குருவானசெவ்வேடனதுநோன்பாகும்பூசை
யற்பினுற்செய்வாராயினவர்பலனறையொணாதே. (16)

தீபாவலி
இரவிநற்றுலைசேர்மாதமிராக்கதிர்குறையும்பக்கம்
வருபதினன்குவந்தவைகறைப்பொழுதுதன்னி
லுரியநற்பிதிர்களின்பமுறுதீபாவலியாமெண்ணெய்
மருவிவெந்நீரின்மூழ்கிமகிழ்ந்துநற்றருமஞ்செய்யே. (17)

கிருத்திகாதீபம்
வேறு
தேளாதவனிற்றிகழ்பூரணையி, னாளாரலிலேநலமாமதிதா
னீளேறுறவேநெறியேசுடர்தான், கேளேற்றிடவேகிளருந்நலமே.

சமணரால் பிராகிருத மொழியில் எழுதப்பட்ட 'திரிலோக் பிரஜாபதி' (Trilok Prajapati) என்ற நூலும்;

க்ரஷ்ண-கார்திக-பக்ஷஸ்ய சர்துதஷ்யம் நிஷாத்யயே.
ஸ்வதியோகே த்ரதியேஅத்த-ஷுக்லத்யான-பரயணஹ் ..



JNANAPITHA MURTIDEVI JAINA GRANTHAMALA SANSKRIT GRANTH No.27

HARIVAMŚA PURĀṆA
of
JINASENA
WITH
HINDI TRANSLATION
INTRODUCTION & APPENDICES

EDITOR
Pt. PANNA LAL JAIN, SAHITYACHARYA

BHĀRATĪYA JÑĀNAPĪTHA KĀSHĪ

VIRA SAMVAT 2488
V. S. 2019, 1962 A. D.

Price
Rs. 16/-

என்று 9 நூற்றாண்டின் ஆச்சார்யா குணபத்ரர் (Acharya Gunabhadra) என்பவரால் எழுதப்பட்ட உத்தர புராணம் (Uttarapurana) என்ற சமண நூலும் சொல்கின்றன.

மௌரிய அரசர் சந்திரகுப்தரின் குருவாக விளங்கியவர் பத்திரபாகு (கி.மு.317-கி.மு.297) என்ற சமண முனிவர். இவர் தமிழ்நாட்டில் சைன சமயம் அறிமுகமாக முக்கிய காரணமாக இருந்தவராக அறியப்படுகிறார். கர்நாடகத்தின் சிரவண பெலகோலாவில் குரு பத்திரபாகுவின் வழிகாட்டுதலின் கீழ் மௌரிய அரசர் சந்திரகுப்தர் துறவு வாழ்க்கை வாழ்ந்தார். இறுதியில் சைன சமயக் கொள்கைப்படி வடக்கிருந்து உயிர்நீத்தார். சமண முனிவர் குரு பத்திரபாகுவினால் எழுதப்பட்ட கல்ப சூத்திரம் என்ற நூல் மகாவீரர் மறைந்த நாளை முதலில் பதிவு செய்துள்ளது.

மகாவீரர் பரிநிர்வாணம் அடைந்த கிமு 527ஆம் ஆண்டிலிருந்தே சமணர்களிடம் தீபாவளிப் பண்டிகை ஒரு அறிவொளி நாளாக விளக்கேற்றும் முறை வழக்கத்தில் இருப்பதாகக் கூறப்பட்டாலும், 'தீபாவளி' என்பது முதன் முதலில் எழுத்து வடிவில் கிடைப்பது சமண நூலான ஹரிவம்ச புராணத்தில்தான். சற்றொப்ப 12 நூற்றாண்டுகளுக்கு முன்னர், கிபி 783-இல் சமஸ்கிருத மொழியில் சமண சமய திகம்பர ஆச்சாரியர் ஜினசேனர் (Acharya Jinasena) இயற்றிய நூல் 'ஹரிவம்ச புராணம்'(Harivamsa Purana) ஆகும்.

ததஸ்துஹ் லோகஹ் ப்ரதிவர்ஷம்-ஆதரத்
ப்ரஸித்த-தீபலிகய-ஆத்ர பரதே .
ஸமுத்யதஹ் பூஜயிதும் ஜினேஷ்வரம்
ஜினேந்த்ர-நிர்வன விபுதி-பக்திபக்

என்ற வரிகளில் மகாவீரர் மறைந்த நாளில் பவபுரியில் 'திபாலிகாயா' (dipalikaya) என விளக்குகள் ஏற்றப்பட்டதாக ஆச்சாரியர் ஜினசேனர் தான் எழுதிய ஹரிவம்ச புராணம் நூலில் குறிப்பிடுகிறார்.

இந்த நூலில்தான் சமணர்கள் தீபாவளி கொண்டாடியதாக 'தீவாளி' அல்லது 'தீபாவளி' என்ற சொல் முதன் முதலாக இடம் பெறுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. தீபாவளி என்ற குறிப்பு முதல் இலக்கியத் தடயமாகச் சமண சமயத்திற்கு எட்டாம் நூற்றாண்டிலேயே கிடைக்கிறது. வைதீக தமிழ் நூல் தீபாவலி என்று எழுத்தில் கொடுக்கும் சான்றுக்கும் 500 ஆண்டுகளுக்கும் முன்னர் சமண சமஸ்கிருத நூல் தீபாவளி என்று குறிப்பிட்டுள்ளது என்பது கவனத்தில் கொள்ள வேண்டிய ஒன்று.

பிறகு 10 ஆம் நூற்றாண்டில், ஜினேந்திரர் (மகாவீரர்) நாளின் தீப உற்சவத்திற்காக எண்ணெய் கொடையாகக் கொடுக்கப்பட்டதை சௌந்தட்டி (Saundatti/ கன்னட மொழியில் சவதட்டி) கல்வெட்டு குறிப்பிடுகிறது. இது கர்நாடகாவிலுள்ள பெல்காம் மாவட்டத்தில் உள்ள பகுதி. கல்வெட்டு குறிக்கும் காலத்தில் பெல்காம் பகுதி குஜராத்தின் இராஷ்டிரகூட அரசர்களின் ஆட்சியின் கீழ் இருந்தது. அவர்கள் சமண சயத்தின் புரவலர்களாகவும் இருந்தனர். இவர்களின் கிருஷ்ணா, பிருத்விராமன், இலட்சுமி தேவன், கோவிந்தா போன்ற பெயர்கள் யாவும் சமணர்களைக் குறிக்கும். நேமிநாதரின் நெருங்கிய உறவினர் கிருஷ்ணர் என்பது சமண ஹரிவம்ச புராணம் கூறும் செய்தி.

சௌந்தட்டி (Saundatti) கல்வெட்டு
Copyright © The British Library Board
https://www.bl.uk/onlinegallery/onlineex/apac/photocoll/s/largeimage62711.html

இச்சான்றுகள் பாரசீக பயணியும் வரலாற்று அறிஞருமான அல்-பிருனி (Al Biruni) எழுதிய 11ஆம் நூற்றாண்டு இந்திய வரலாற்று நூல் தரும் தீபாவளி குறிப்பிற்கும் முற்பட்டது. தனது 1017-1030 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்து இந்தியப் பயணத்தில் தான் கண்டதாக, 'தாரிக் அல்-இந்த்' (Tarikh Al-Hind / History of India) என்ற இந்திய வரலாற்று நூலில் அல்-பிருனி குறிப்பிட்ட இந்திய 'தீபாலி' ("Dibali") என்ற பண்டிகை கேரளத்தின் மாபலி மன்னருடன் தொடர்பு கொண்டது. மாபலி மன்னர் பாதாள உலகிலிருந்து பூவுலகம் வருவதற்கு

இலக்குமி உதவும் நாளைக் கொண்டாடிடும் முகமாக தீபாலி கொண்டாடப்படுவதாக அவர் பதிவு செய்துள்ளார்.

கார்த்திகை தேய்பிறையின் இறுதிநாள், அமாவாசை அதிகாலையில் மறைந்த மகாவீரர் நினைவு போற்றும் சரவிளக்கேற்றும் விழா ஐப்பசியிலும் இன்று கொண்டாடப்படுவதன் காரணம் வெவ்வேறு வகையில் காலத்தைக் கணக்கிடும் வழக்கம் இருந்து வந்ததால் ஏற்பட்ட மாற்றமாகவும் வேறுபாடாகவும் இருக்கக்கூடும். இன்றைய அளவில் எழுத்து வடிவில் கிடைக்கும் தீபாவளி என்ற சொல்லின் முதல் தோற்றத்தை ஆச்சாரியர் ஜினசேனர் எழுதிய ஹரிவம்ச புராணத்தில் காணமுடிகிறது. இருப்பினும், தீபாவளி என்ற சொல்லுடன் கூடிய சான்று இதற்கும் முற்பட்ட இலக்கியத்திலோ அல்லது கல்வெட்டு போன்ற தொல்லியல் தடயங்களாகக் கிடைக்கையில் தீபாவளி என்பதன் தோற்றம் மேலும் தெளிவு பெறலாம்.

உதவிய தளங்கள்:
Lord Mahavira's Nirvana: Diwali
https://www.cs.colostate.edu/~malaiya/diwali.html

JAINA : Federation of Jain Associations in North America
https://www.jaina.org/page/10_19_2017_Newslette

Sonduttee Stone with inscription [Saundatti]
The Sanskrit and Kanarese inscription slab of Krishna Rastrakuta, Shaka 797 (c. 875), and Vikramaditya, Shaka 1017 (c. 1095 A.D)
https://www.bl.uk/onlinegallery/onlineex/apac/photocoll/s/largeimage62711.html

Ain- I- Akbari. Vol- Iii, Page 352.
https://archive.org/details/in.ernet.dli.2015.274807/page/n361/mode/2up

போசராச பண்டிதர் இயற்றிய 'சரசோதிமாலை'
https://noolaham.net/project/55/5404/5404.pdf

எழுநூறாண்டு பழைய ஈழத்துத் தமிழ் இலக்கியம் பேசும் தீபாவளித் திருநாள். நீர்வை. தி.மயூரகிரி சர்மா, அக்டோபர் 23, 2022. (https://www.tamilhindu.com/2022/10/எழுநூறாண்டு-பழைய-ஈழத்துத/)

இந்தியாவின் முதலை இனங்கள்

முனைவர் தேமொழி
சான் ஃபிரான்சிஸ்கோ, அமெரிக்கா

இன்றிலிருந்து சற்றேறக்குறைய 3000 முதல் 1500 ஆண்டுகளுக்கு முற்பட்டது எனக் கணிக்கப்படும் தூத்துக்குடி மாவட்டம் - ஆதிச்சநல்லூர் பகுதி பழந்தமிழர் நாகரிகத்திற்குச் சான்றாக அகழாய்வில் கிடைத்துள்ள பெருங்கற்காலத்துத் தொல்லியல் தடயங்களுள் ஒன்று புடைப்பு உருவங்கள் உள்ள பானையோடு. அதில், ஒரு பெண்ணுருவமும், கொக்கு அமர்ந்துள்ள தாழை மரம் ஒன்று அவளுக்கு வலப்புறத்திலும், ஆண் மரைமான் ஒன்று அவளுக்கு இடப்புறத்திலும், அவளது காலருகில் முதலை ஒன்றும் இருக்கும் காட்சி ஒட்டுருவமாக (applique) பானையோட்டில் காணப்படுகின்றது[1].

இது போன்ற ஒரு காட்சி, இயற்கையையும் அது சார்ந்த செய்திகளையும் மிக நுணுக்கமாகப் பதிவு செய்யும் பழந்தொகை நூல்களில், குறிப்பாக நற்றிணை, குறுந்தொகை ஆகியவற்றில் இடம் பெறும் 'நெய்தல்' நிலக் காட்சியே. கருமையான கால்களைக் கொண்ட வெண்கொக்கு தாழை மரத்தில் அமர்ந்திருப்பதையும், கழிகளில் இருக்கும் முதலைகள் குறித்தும் பாடல் வரிகளில் இடம் பெறுவது வழக்கமே.

> "கொடும் தாள் முதலை கோள் வல் ஏற்றை
>
> வழி வழக்கு அறுக்கும் கானல் அம் பெரும் துறை"
>
> - குறுந்தொகை, நெய்தல், பாடல்: 324

வளைந்த கால்களையுடைய, கொல்லுதலில் வல்ல ஆண் முதலை வழியில் பிறர் செல்வதை இல்லாமற்செய்யும் கடற்கரைச் சோலையுள்ள அழகிய பெரிய துறை என்பது பாடல் விவரிக்கும் நெய்தல் நிலத்தின் கடற்கரை சோலை ஒன்றின் காட்சி.

முதலைகளை இடங்கர், கராம், முதலை என்று பல பெயர்களில் இலக்கியப் பாடல் வரிகள் குறிப்பிடுகின்றன. இந்தியாவில் தொன்று தொட்டுக் காணப்படும் முதலை வகைகள் மூன்றாகும். அவை முதலை, கராம் அல்லது கராஅம், இடங்கர் ஆகியன. முதலையைக் குறிக்கும் பல சொற்கள் (ஒருபொருட் பன்மொழி) என்ற புரிதலில் இருக்கும் ஒரு சொல்லுக்கு, அச்சொற்கள் அடுத்தடுத்து தொடர்ந்து ஒரு

சொற்றொடரில் வருகையில் அவை வெவ்வேறு தனிச் சிறப்பு கொண்டவையாக இருக்கக்கூடும் என்பதை நாம் உணரலாம்.

"கொடும் தாள் முதலையும் இடங்கரும் கராமும்"

(குறிஞ்சிப்பாட்டு-257)

என்று வளைந்த கால் முதலைகளும், இடங்கர் இன முதலைகளும், கராம் இன முதலைகளும் என்று குறிஞ்சிப்பாட்டு தெளிவாகப் பிரித்துக் காட்டுகிறது. ஆகவே அனைத்தும் முதலை அல்ல. இன்று பொதுவாக முதலை என அறியப்பட்டாலும் இவை வெவ்வேறு முதலை இனத்தைக் குறிக்கும் கலைச்சொற்கள். எடுத்துக்காட்டாக, 'கராம்' என்றால் இது எங்கெங்கு காணப்படும் முதலைகள், அவற்றின் பண்புகள் என்ன, தோற்றம் எவ்வாறு இருக்கும் என்ற குறிப்புகளை கராம் என்ற சொல்லே தெளிவாக அறியத் தரும்.

புடைப்பு உருவங்கள் கொண்ட ஆதிச்சநல்லூர் பானையோடு

இவற்றுக்கான வேறுபாட்டைத் தெளிவு படுத்த விரும்பி பாவாணர் அவர்களும் தமது சொல்லாராய்ச்சிக் கட்டுரை ஒன்றில் முதலை — *gavial/gharial*, கராஅம் — *alligator*, இடங்கர் — *crocodile* என்று விளக்கியுள்ளார் *[2]*. முதல் பார்வையிலேயே இவ்விளக்கம் முற்றிலும் பிழையானது என்பது தெரிந்துவிடுகிறது.

அலிகேட்டர் *(alligator)* முதலை இனங்கள் இந்தியாவில் கிடையாது. இவ்வகை முதலை இனங்கள் பெரும்பான்மையும் அமெரிக்கப் பகுதியில் காணப்படுபவை. இடங்கர் என்பதும் குரோக்கோடைல் *(crocodile)* என அறியப்படுபவை அல்ல. ஆண் முதலையை கராம் என்று அழைத்ததாகவும் ஒரு தவறான குறிப்பும் இருக்கிறது. ஆகவே, இந்தியாவில் காணப்படும் முதலை வகைகளைத் தெளிவாக அறிந்து கொள்வதற்கும் அடையாளப்படுத்துவதற்குமான தேவை இருப்பது தெரிகிறது.

இலக்கியம் தரும் முதலை குறித்த தரவுகளை மீள் பார்வை செய்ததில், முதலை என்பதை பொதுவான சொல்லாக ஏற்கும் முறை காலம் செல்லச் செல்ல பிற்காலத்தில் அதிகரித்துள்ளது தெரிகிறது. கடற்கரையோரமும், கழிமுகப் பகுதிகளிலும் உப்புநீர் பகுதிகளில் வாழ்வனவற்றை முதலை என்றும்,

ஆறு குளம் போன்ற நன்னீர் பகுதிகளில் வாழ்வன கராம் அல்லது மகரம் இன முதலைகள் என்றும்,

நன்னீர் பகுதிகளில் வாழும் நீண்ட கூம்பு போன்ற முகம் கொண்ட முதலை இனம் இடங்கர் என்றும் குறிப்பிடும் வழக்கம் இருந்ததை இலக்கியம் மூலம் அறியலாம்.



இந்தியாவின் முதலை இனங்கள்:

1. கராம் முதலை — Marsh or Mugger Crocodile (Crocodylus palustris)

2. முதலை — Estuarine or Saltwater Crocodile (Crocodylus porosus)

3. இடங்கர் — Gharial (Gavialis gangeticus)

இந்தியாவில் இந்த மூன்று இன முதலைகள் மட்டுமே வாழ்கின்றன *[3, 4]*.

1. கராம் முதலை — Marsh or Mugger Crocodile (Crocodylus palustris):

இந்தியாவின் முதலை என்று பொதுவாகக் குறிப்பிடப்பட்டால் அது சதுப்புநிலத்தில் *(Wetlands/Marsh)* வாழும் இந்த முதலைதான். இது இந்தியாவில் மட்டுமே அதிக எண்ணிக்கையில் காணப்படும் இனமும் கூட. இது நன்னீரில் வாழும் முதலை இனம். இந்தியாவில் சதுப்புநிலங்களும் அதிகம். இயற்கைக்கு அரணாக இருப்பதால் 'நகரங்களின் நுரையீரல்கள்' என்று சதுப்புநிலங்கள் அழைக்கப்படுகின்றன. கடல் மட்டத்தைவிடக் குறைவான ஆழம் கொண்ட நீர்நிலையாகக் காணப்படும் சதுப்புநிலங்களின் எண்ணிக்கை இந்தியாவில் *27,403 [5]*. நாட்டிலேயே அதிக எண்ணிக்கையில் தமிழகத்தில்தான் சதுப்புநிலக் காடுகள் உள்ளன. ஆண்டு முழுவதும் ஈரப்பதத்துடன் இருக்கும் சதுப்புநிலப் பகுதிகள் தமிழ்நாட்டில் மன்னார் வளைகுடா பகுதி, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி, திருவாரூர், நாகப்பட்டினம், ஈரோடு, செங்கல்பட்டு, கடலூர், சென்னை போன்ற மாவட்டங்களில் உள்ளன.

தமிழகத்திற்கு அடுத்து, உத்தரப் பிரதேசம், ஒடிசா, ஜம்மு-காஷ்மீர், மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரம் போன்ற மாநிலங்களிலும் சதுப்புநிலங்கள் அதிகம். தொடர்ந்து நடந்த சதுப்புநில வாழிடங்கள் அழிப்பினால் இந்த முதலை இனம் எண்ணிக்கையில் குறைவுற்று அழிவை நோக்கிச் செல்லும் இனம் *(Vulnerable Species)* என்று இன்றைய கவனிப்பில் உள்ளது.



இந்தியாவின் சதுப்பு நிலங்கள்

இந்த முதலை இனத்தை மகரம் என்று அழைப்பதால் இந்த முதலைக்கு *Mugger Crocodile* என்ற பெயர் ஏற்பட்டது. ஆனால் காலப்போக்கில் மகரம் என்றால் தொன்மக் கதையில் வரும் விலங்கினம் என்ற நிலை உருவானது மட்டுமின்றி, மகரம் என்பது மகர மீன் வகையைக் குறிப்பதாகவும் மாறிவிட்டது. மகரம் என்பது கராம் என்றோ அல்லது கராம் என்பது மகரம் என்றோ மாறியிருக்கலாம். இவை நன்னீரில் வாழும் என்பதால் கராம் இன முதலை பொய்கை, அகழி, ஏரி, குளம், ஆறு, மடு, குண்டு, வாவி, கடற்கரைப் பகுதி சதுப்புநிலங்கள், கழிகள் எனப் பல இடங்களில் வாழ்ந்ததாக இலக்கியப் பதிவுகளும் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. இவை பெரியதும் இன்றி சிறியதும் அன்றி இடைப்பட்ட அளவில் 4 அல்லது 5 மீட்டர் நீளம் கொண்டதாக இருக்கும். முதலை இனங்களிலேயே மிகவும் அகண்ட வாயமைப்பு உடையதாக இந்த முதலை அறியப் படுகிறது. இவற்றில் ஆண் பெண் என்று பாலினம் பிரித்து அறிவது கடினம். இவற்றின் மேல் தோல் சதுப்புநில சேற்றுடன் ஒத்துப் போக்கும் வகையில் அடர்த்தியான சாம்பல் கருப்பு நிறத்திலும் மரப்பட்டைகள் செடிகொடிகளுடன் மறைத்துவாழும் வகையில் தகவமைப்பைக் கொண்டிருக்கும்.

2. முதலை — *Estuarine or Saltwater Crocodile (Crocodylus porosus):*

கடற்கரையை ஒட்டிய உப்புநீர்க் கழிகளில், கழிமுகப் பகுதிகளில் வாழ்பவைதான் முதலை என்று அழைக்கப் படுபவை. இவை உப்பு நீரில் மட்டும் வாழும் தகவமைப்பு கொண்டவை. இந்தியாவின் கிழக்குக் கரையோரங்களில் மேற்கு வங்கம், ஒரிசா, ஆந்திரா, தமிழ்நாடு கடற்கரைப் பகுதிகளில் அதிக அளவில் இந்த இன முதலைகள் வாழ்கின்றன, இவை அழியக் கூடும் என்ற எச்சரிக்கை இல்லாத நிலையிலும் உள்ளவை. ஊர்வனவற்றிலேயே உலக அளவில் மிகப் பெரிய விலங்காக இருப்பது உப்புநீரில் வாழும் முதலைதான், இதன் எடையும் அதிகம், உடலின் நீளமும் 7 மீட்டர் வரையிலும் கூட இருக்கும்.

இம்முதலைகள் கடல் நீரில் வாழும் சில உயிரினங்கள் போல உடலில் அதிக அளவில் சேரும் உப்பை வெளியேற்றும் சுரப்பிகள் கொண்டவை. இச்சுரப்பிகள் பெரும்பாலும் வாய்ப்ப குதியில் நாக்கின் அடியே இருப்பது வழக்கம். சில வகை முதலைகளுக்குக் கண்கள் பகுதியிலிருந்து சுரப்பி சுரக்கும் உப்பு நிறைந்த நீர் வெளியாகும். பொய் அழுகையை 'முதலைக் கண்ணீர்' (மெய்யான கண்ணீர் அல்ல) என்று குறிப்பிடக் காரணமும் இதுவே. ஆனால், முதலையைப் பொருத்தவரை அதிக அளவு உப்பைச் சுரப்பிகளின் மூலம் வெளியேற்றி, உடலின் உப்பு அளவை சீரான நிலையில் வைத்திருக்க உதவும் ஒரு தகவமைப்பு இது [6].

3. இடங்கர் — *Gharial (Gavialis gangeticus):*

இந்திய முதலைகளில் மிக நீண்ட கூம்பு போன்ற முகம் கொண்ட முதலை இனம் இது. ஒருகாலத்தில் இந்திய நிலப்பரப்பில் பரவலாக வாழ்ந்தாலும் காலப்போக்கில் கங்கைச் சமவெளிப் பகுதியுடன் இடங்கர் இனத்தின் வாழ்விடம் குறுகிவிட்டதாகத் தெரிகிறது. இன்றைய நாட்களில் ஒரிசா

மாநிலத்திற்கு தெற்கே, கோதாவரி ஆற்றுக்குத் தெற்கே இந்த இனத்தைப் பார்க்க இயலாது என்பது தெரிகிறது. இதில் ஆண் பெண் பாலின வேறுபாட்டைத் தெளிவாகக் காண இயலும், வளர்ந்த ஆண் முதலையின் முகத்தின் நுனிப்பக்கம் குடுவை போன்ற தோற்றத்தைக் கொண்டிருக்கும். இவ்வாறான அடியில் பருத்தும், இடுங்கிய அல்லது குறுகிய நீண்ட கழுத்து கொண்ட குடுவை போன்ற முக அமைப்பின் தோற்றத்தினால் இதற்கு 'காரியல்' (*Gharial - ghara, an Indian word for pot because of a bulbous knob,* ஜாடி வகை) என்ற பெயர் வந்தது. தமிழிலும் 'இடங்கர்' என்பதற்கு 'நீர்மிடா' என்ற பொருள் உண்டு. ஆக, இம்முதலைகளின் முகம் மற்றும் வாய் அமைப்பின் தோற்றம் காரணமாக இவை தமிழிலோ அல்லது வடமொழியிலோ அதற்கானப் பெயரைப் பெற்றுள்ளன என்பது தெரிகிறது. இடங்கர் இன முதலைகள் நன்னீரில் வாழ்வன. மீன்களை அதிகம் உண்ணும், வட இந்தியக் கங்கைச் சமவெளி முதலை இனம் இது, இதன் நீளம் 6 மீட்டர் வரை இருக்கும். இந்த இனம் அழிவை நோக்கி விரையும் இனம் என்பதால் பாதுகாக்கப் படவேண்டிய இனம் என்ற எச்சரிக்கை நிலையின் கீழ் உள்ளது.

374 Yusuke Fukuda & Nam Chul Jang

Figure 1. A large, male saltwater crocodile (*Crocodylus porosus*) a) before, b) during, and c) after closing the outer eye-lids to secrete orbital fluid. Photos by Yusuke Fukuda and Nam Chul Jang.

எனவே, இந்தியாவில் காணப்படும் முதலை வகைகள் 'முதலை' எனப் பொதுவாகக் குறிப்பிடப்பட்டாலும், அவை கராம் (*Crocodylus palustris*), முதலை (*Crocodylus porosus*), இடங்கர் (*Gavialis gangeticus*) இனங்கள் என்பதையும், அத்துடன் தோற்றத்தாலும், வாழும் இடத்தாலும் வேறுபட்ட முதலை இனங்கள் என்பதையும் அறியலாம். கராம் இன முதலைகளை இடங்கர் வாழும் இடங்களிலும் முதலை வாழும் பகுதிகளிலும் காண இயலும். இன்றைய நாட்களில் இந்த மூன்று இன முதலைகளும் வாழ்வது ஒரிசா மாநிலத்தில் மட்டுமே. கராம், முதலை, இடங்கர் குறித்து இலக்கியம் வழியாக மேலும் தெளிவாக அறிய இயலும். ஆனால் சான்றுகளுடன் அவற்றை விரிக்கின் பெருகும் நிலை உள்ளதால் இலக்கிய ஆய்வு முடிவுகள் தனியாகக் காட்டப்படுதல் நலம்.

IUCN Red List of threatened species status:

Crocodylus palustris (mugger) vulnerable, Crocodylus porosus (saltwater crocodile) least concern and Gavialis gangeticus (Gharial) Critically Endangered as per IUCN Red List of threatened species.

மேலதிகத் தகவலுக்கு:

[1] ஆதிச்சநல்லூர், தமிழிணையம் - தகவலாற்றுப்படை
https://www.tagavalaatruppadai.in/excavations-details?id=jZY9lup2kZl6TuXGlZQdjZt6

[2] பாவாணர்: சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள்: பக்கம் 38.

[3] Types of Crocodiles & Differences Between Crocodiles and Alligators and Gharials – Bio Explorer.
https://www.bioexplorer.net/animals/reptiles/crocodiles/

[4] The Crocodiles Of India
https://www.natureinfocus.in/animals/the-crocodiles-of-india

[5] சதுப்பு நிலங்களைக் காப்போம்! பாறப்புறத் இராதாகிருஷ்ணன், தினமணி, செப்டெம்பர் 2022.
https://www.dinamani.com/editorial-articles/center-page-articles/2022/sep/02/lets-save-the-wetlands-3908920.html

[6] Crocodile tears: secretion of orbital fluid in a large, saltwater crocodile Crocodylus porosus Schneider, *1801*, Herpetology Notes, volume *11: 373-374 (2018) (*published online on *02* May *2018)*
https://www.biotaxa.org/hn/article/view/34573/3299

பெண்ணடிமை நிலை குறித்து பெரியாரின் பார்வை

முனைவர் தேமொழி

சான் ஃபிரான்சிஸ்கோ, அமெரிக்கா

பெண்களின் பாலின சமத்துவம் மற்றும் பெண்களின் அதிகாரம் ஆகியவற்றை மேம்படுத்தும் நோக்கில் பல நடவடிக்கைகளை ஐக்கிய நாடுகள் நிறுவனம் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் அறிக்கை ஒன்று பெண்களின் தற்போதைய முன்னேற்ற நிலையைக் கருத்தில் கொண்டால், ஆண்களுக்கு நிகரான சட்ட உரிமைகளும் பாதுகாப்புகளும் பெண்களுக்குக் கிடைக்க இன்னும் 286 ஆண்டுகள் ஆகலாம் என்று குறிப்பிட்டுள்ளது.

பெண்மையைப் போற்றுகிறோம் என்று உலக மகளிர் நாளைக் கொண்டாடும் தமிழர் எவரும், ஓர் ஆணுக்கு என்ன உரிமை இருக்கிறதோ அது பெண்ணுக்கும் இருக்கிறது என்று சென்ற நூற்றாண்டிலேயே பெண்ணுரிமை பேசியவரும், பெண்ணுக்கு எதிரான சமூக அடக்குமுறைகளை ஒழிக்கப் போர்க்கொடி உயர்த்தியவருமான தந்தை பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்களை நினைவு கூராமல் இருக்க முடியாது.

விற்பனையில் சாதனை படைத்துக் கொண்டிருக்கும் 'பெண் ஏன் அடிமையானாள்?' என்ற பெரியாரின் நூல் 1942-இல் வெளியானது. இந்த 79 பக்கங்கள் கொண்ட சிறு நூலில் 1. கற்பு, 2. வள்ளுவரும் கற்பும், 3. காதல், 4. கல்யாண விடுதலை, 5. மறுமணம் தவறல்ல, 6. விபச்சாரம், 7. விதவைகள் நிலைமை, 8. சொத்துரிமை, 9. கர்ப்பத்தடை, 10. பெண்கள் விடுதலைக்கு "ஆண்மை" அழிய வேண்டும் என்ற 10 தலைப்புகளின் கீழ் பெண் ஏன் அடிமையானாள் என்று ஆராய்கிறார் பெரியார்.

கற்பு என்ற சொல்லின் பொருள் ஆராய்ச்சியில் துவங்கும் முதல் அத்தியாயத்தில், "கல்வி, நேர்மை போன்றவற்றைக் குறித்த கற்பு என்ற சொல் எவ்வாறு மகளிர் நிறை என்பதைக் குறிக்கும் பெண்களின் பாலினக் கலவி ஒழுக்கத்திற்கான ஒரு சொல்லாக மாறியது என்று விளங்கவில்லை" என்று அதிரடியாகத் துவக்குகிறார் பெரியார். ஒழுக்கம் என்பது மற்றவர்களிடமிருந்து நாம் எதை எதிர்பார்க்கிறோமோ, மற்றவர் நமக்கு என்ன செய்ய வேண்டும் என்று கருதுகிறோமோ, மற்றவர் நம்மிடம் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்று நினைக்கிறோமோ, அப்படியே நாம் மற்றவர்களிடத்தில் நடந்துகொள்ள

வேண்டும்; அதுதான் ஒழுக்கம் என்று ஆணித்தரமாகக் கூறியவர் பெரியார் (விடுதலை, 7.2.1961).

ஒழுக்கம் என்பதற்கு ஒரு வரையறைதான் இருக்க இயலும். ஆணுக்கு ஒரு ஒழுக்க வரையறை என்றும் பெண்ணுக்கு ஒரு ஒழுக்க வரையறை என்றும் இருக்க வாய்ப்பில்லை. கற்பு, விபச்சாரம், மறுமணம், மணவிலக்கு, சொத்துரிமை போன்றவற்றில் பாலினத்திற்கு ஒரு விதி என்று வகுத்து வைப்பது நீதி அல்ல. ஆணுக்கென்று ஒரு நீதியும் பெண்ணுக்கென்று ஒரு நீதியும் இருந்தால் அது அநீதி என்று சொல்லத் தேவையில்லை. இது போன்ற தன்னல நோக்கம் கொண்ட

சூழ்ச்சி, பெண்ணின் வாழ்வுரிமையை, அடிப்படைத் தேவைகளை முடக்கும் நோக்கில் பெண்ணை அடிமைப்படுத்த வடிவமைக்கப்பட்டவை. வாழும் சமுதாயத்தில் சரிபாதியினரான பெண்களின் தனிமனித உரிமைகளை மதிக்காத நிலை மனித சமுதாயத்திற்குத் தேவை இல்லை. அப்படிப்பட்ட ஒரு சமுதாயத்தில் எந்த மேன்மையும் இருக்காது.

அடுத்து, குறளில் "வாழ்க்கைத் துணைநலம்", "பெண் வழிச் சேரல்" அதிகாரங்களின் குறள்கள் பெண்ணடிமைக் கருத்துகளைக் கொண்டவையாக இருக்கின்றன என்று வள்ளுவரையும் குற்றவாளிக் கூண்டில் நிறுத்துகிறார். வள்ளுவர் ஒரு பெண்ணாயிருந்து எழுதி இருந்தால் இது போன்ற கருத்துகளில் எழுதி இருக்கமாட்டார். தன்னல நோக்குடன் வலிய நிலையில் ஆதிக்க மனப்பான்மையிலிருந்த ஆண்களால் பெண்களைக் கட்டுப்படுத்தும் விதிகள் சமைக்கப்பட்டு பெண்கள் வாழ்வில் அவை திணிக்கப்பட்டு அவை பெண்களை அடிமைத் தளையில் சிக்க வைத்துள்ளது. எதிர்க்கேள்வி எழுப்பாமல் இதனைப் பெண்களும் ஏற்றுக் கொண்டு வாழத் தொடங்கியதுதான் அவர்களின் அடிமை நிலைக்குக் காரணம். கீழ் சாதி என்பவர்கள் எவ்வாறு தங்களுக்கு விதிக்கப்பட்ட அந்த நிலையை மறுக்காமல் ஏற்றுக் கொண்டு அதன் படி வாழ்கிறார்களோ அது போன்றே பெண்ணடிமை நிலையும் உருவாகிவிட்டது என்கிறார் பெரியார்.

ஆண் உரிமைக்கும் பெண் உரிமைக்கும் ஏன் வேறுபாடு இருக்க வேண்டும் என்ற அவருடைய கேள்வி எவரையும் சிந்திக்க வைக்கும். பெண்களுக்கு விடுதலை என்ற நிலை உருவாக, கற்பு என்பதை இரு பாலருக்கும் பொதுவாக்கி, ஆணைப் போலவே பெண்ணுக்கும் அனைத்து உரிமைகளும் கொடுக்கப்படுதல் வேண்டும் என்பது அவரது முடிபு. நாட்டில் இருக்கும் 99.80% பெண்களுக்கு

நமக்கு ஏன் இந்த அடிமை நிலை என்ற எண்ணம் கூட வருவதில்லை என்கிறார் பெரியார்.

காதலுக்கு என்று எந்த சிறப்புத் தன்மையும் இல்லை. இயல்பாக ஆணுக்கும் பெண்ணுக்கும் இனப்பெருக்கப் பருவத்தில் ஏற்படும் சேர்க்கை ஆசையைவிட, அன்பைவிட, நட்பைவிட, காதல் என்பது தனித்துவம் கொண்ட வேறு சிறப்புப் பெற்றது அல்ல. இந்தியாவைப் பொறுத்தமட்டில் பெண்களை ஆண்கள் அடிமையாகக் கொள்வது என்ற அடிப்படை நோக்கம் கொண்டதாகத் திருமணம் என்ற இல்லற உறவு மாற்றப்பட்டுள்ளது. பெண்களை ஏமாற்றும் நோக்கில் இயற்கைக்கு மாறாக, மணவுறவிற்கு ஒரு தெய்வீகத் தன்மை கற்பிக்கப்பட்டு சடங்குகள் மூலம் பெண்களை அடிமைப் படுத்துவதை மறைத்துப் பெண்கள் வஞ்சிக்கப் படுகிறார்கள் என்கிறார் பெரியார்.

விருப்பமில்லாத மணவாழ்க்கையைத் தொடர வேண்டும் என்று ஆணையோ அல்லது பெண்ணையோ கட்டாயப்படுத்துதல் சரியல்ல. மணவுறவில் இருந்து விலக விரும்புவோருக்கு மனித உணர்வுகளுக்கு முதன்மை நிலையும் மதிப்பும் அளித்து மணவிலக்கு கொடுக்கப்படவேண்டும். விருப்பமில்லாத நிலையில் வாழும் பெண்களுக்கும், ஆண்களுக்கும் மணமுறிவு செய்துகொள்ளவும் தங்கள் விருப்பப்படி வாழ்வை அமைத்துக் கொள்ளவும் உரிமையிருக்கவேண்டும் என்பது பெரியாரின் கருத்து. மணம் என்பது மணமக்கள் தங்கள் வாழ்க்கைச் சவுகரியத்திற்காகச் செய்துகொள்ளப்படும் ஒரு ஒப்பந்த ஏற்பாடு. ஆணுக்கு மனைவி இறந்த பிறகு அல்லது கணவன் மனைவிக்குள் இணக்கமான நிலை இல்லாத நிலையில் அல்லது மணவாழ்க்கை சரியாக அமையாத வேறு பல சூழல்களில் ஆண் மற்றொரு பெண்ணை மணம் செய்வது ஏற்கப்படுகிறது. பெண்களுக்கோ வாழாவெட்டி என்ற பட்டம் கிடைக்கிறது.

அன்பும், ஆசையும் இல்லாத அல்லது அவை தனக்கு ஏற்படாத ஒரு இடத்தில் ஒருவர் எப்படி வாழ்வது? மணம் செய்து கொண்டாகிவிட்டதே என்று அன்பையும், ஆசையையும், இன்பத்தையும், திருப்தியையும் தியாகம் செய்து மணவாழ்க்கையைத் தொடர்வது சரியான முறையா? என்ற கேள்விகளை எழுப்புகிறார். ஆகவே, மணம் செய்து கொண்ட மணமக்கள் (கணவன் மனைவியையோ, மனைவி கணவனையோ) மணவுறவில் இருந்து விடுவித்துக்கொண்டு மற்றொருவரை மறுமணம் செய்து

கொள்வதில் தவறில்லை என்ற கருத்தின் அடிப்படையில் செங்கல்பட்டு மாநாட்டில் ஒரு தீர்மானம் நிறைவேற்றி, தொடர்ந்து ஈரோடு மாநாட்டில் அதற்காக ஒரு சட்டம் செய்ய வேண்டுமென்ற தீர்மானத்தையும் நிறைவேற்றச் செய்திருக்கிறார் பெரியார். இது சென்ற நூற்றாண்டில் அவர் காலத்தில் மணவிலக்கு என்ற உரிமை எந்த அளவிலிருந்தது என்பதைக் காண்பிக்கிறது.

பொதுவாகப் பெண்கள் நிலைமை மாறியாக வேண்டும் என்கிறார் பெரியார். எந்தெந்தக் காரணத்தால் கணவனுக்கு மனைவியைப் பிடிக்கவில்லையோ, ஒத்துவரவில்லையோ அந்தந்தக் காரணங்களால் மனைவிக்கும் கணவனைப் பிடிக்காதபோது, மறுமணம் செய்து கொள்ள ஆணுக்கு இருக்கும் அதே உரிமைகள் பெண்களுக்கும் இருக்க வேண்டும். மறுமணம் செய்து கொள்ளும் ஆணுக்கு இருக்கும் அதே உரிமைகள் பெண்களுக்கும் பொருந்தும் என்றும், உலக வாழ்விலும், சமுதாயத்திலும், சட்டத்திலும், மதத்திலும் ஆண்களுக்குள்ள சவுகரியங்களும், உரிமைகளும் பெண்களுக்கும் இருக்கவேண்டுமென்றும் தீர்மானமாகக் கூறுகிறார்.

விபச்சாரம் செய்கிறாள் என்று பெண்ணைத்தான் உலகோர் வசை கூறிக் குற்றம் சொல்லுகின்றார்களே தவிர, அவளின் அப்படிப்பட்ட நிலைக்கு ஆணைக் குற்றம் சொல்லுவதில்லை. இது போன்ற ஒழுக்கக் குறைவு என்ற பழிச் சொற்களும் ஆண்களுக்குக் கிடையாது. "விபச்சாரம்" என்பது பெண்கள் அடிமைகள் என்பதைக் காட்டும் ஒரு குறிப்பு வார்த்தை என்றுதான் சொல்ல வேண்டும். பெண்களை ஆண்களின் அடிமைகள் என்றும், விலைக்கு வாங்கவும் விற்கவும் வாடகைக்கு விடவும் கூடியவர்கள் என்றும் கருதும் நிலையின் வெளிப்பாடுதான் விபச்சாரம். கற்பு என்பது போல விபச்சாரம் என்பதும் பெண்கள் மீது மாத்திரம் சுமத்தப்பட்டு ஆண்களின்மீது சுமத்தப்படாமலும், ஆண்கள் அதற்காகப் பயப்படவோ அவமானப்படவோ கட்டுப்பட்டிருக்கவோ தேவையில்லை என்று இருக்கும் சமுதாயப் போக்கு பெண்ணடிமைத்தனத்தின் வெளிப்பாடு. கற்பு, விபச்சாரம் என்னும் வார்த்தைகள் வெறும் புரட்டு மட்டுமின்றி அவை பெண்களை அடிமையாக்கவும், கட்டுப்படுத்தவும் உண்டாக்கப்பட்ட சுயநலச் சூழ்ச்சி நிறைந்த தன்மை கொண்டது என்கிறார் பெரியார்.

நாட்டுக்கும் சமூகத்திற்கும் உரிமை கேட்டு உரிமைக்குரல் எழுப்பும் எவரும் சமூகத்தின் ஒரு பகுதியாக உள்ள பெண்கள் உரிமையின்றி முடக்கப்பட்டுக் கிடப்பதில் கவலை கொள்வதில்லை என்று சமூக அக்கறை கொண்டவர்கள் பெண்களின் நிலையில் அக்கறை கொள்ளாததைச் சாடுகிறார் பெரியார். இந்து மதத்தில் மனைவியை இழந்தாலும் வயதான ஆண்கள் மறுமணம் செய்து கொள்கிறார்கள், ஆனால் இல்லறத்தை மேற்கொள்ளாத பதின்ம வயது பெண்ணாக இருந்தாலும் கணவனை இழந்தால் காலம் முழுவதும்

வாழ்க்கைத்துணை இன்றி வாழக் கட்டாயப்படுத்தப் படுகிறார்கள், இறந்த கணவனுடன் உடன்கட்டை ஏற்றப்பட்ட கொடிய இரக்கமற்ற நிலையும் உண்டு. உடன்கட்டை ஏறுவது ஒருநாள் துன்பம் என்றால், கைம்பெண்ணாக வாழ்வதோ வாழ்நாள் முழுதும் தாங்க முடியாச் சித்திரவதைக் கொப்பான துன்பம் என்று பெண்கள் நிலையிலிருந்து சிந்தித்துள்ளார் பெரியார்.

திருமணம் என்ற உறவுக்குள் நுழையும் ஆணுக்கும் பெண்ணுக்கும் ஒவ்வொரு நிலையிலும் வேறுபாடு காட்டப்பட்டு பெண்களின் உரிமைகள் முடக்கப்பட்டே வந்துள்ள நிலையைக் காண முடிகிறது. மனித சமூகத்தில் சரிபாதியான எண்ணிக்கை கொண்ட பெண்களுக்குப் பிறப்பிலேயே உரிமைகள் மறுக்கப்படுவது தொடங்கிவிடுகிறது. இயற்கைக்கு மாறான வாழ்வியலை மேற்கொள்ளக் கட்டாயப்படுத்தப் படுகிறார்கள். விதவைகளுக்கு மறுமணம் செய்துகொள்ள உரிமை ஏற்படுத்துவதும் பெண்ணடிமை நிலை நீக்குவதில் ஒரு பகுதி. பெண்ணடிமை நிலை ஒழிய வேண்டும் என்றால் பெண்களை அடிமையாக நடத்தும் அகம்பாவமும் கொடுமையும் அழியவேண்டும் என்கிறார் பெரியார்.

இந்தியாவில் தனி மனிதர்க்கு எதிரான கொடுமைகள் பல இருந்து வந்தாலும், அவற்றுள் அவசரமாய் ஒழிக்கப்பட வேண்டியவை தீண்டாமையும், பெண்ணடிமை நிலையும் என்கிறார் பெரியார். ஆண்களைப்போன்ற சட்டப்படி சொத்துரிமை பெறுவதற்குப் பெண்கள் களத்தில் இறங்க வேண்டும், கிளர்ச்சி செய்ய வேண்டும். பெண்களுக்குச் சொத்துரிமை இருந்துவிட்டால், அவர்களுக்கு இருக்கும் எல்லாவிதமான அசவுகரியங்களும் ஒழிந்துபோகும். பெண்களுக்குப் படிப்பு, தொழில் ஆகிய இரண்டும் கிடைத்துவிட்டால் தானே பொருளீட்டவும், தங்கள் வாழ்க்கைத்துணையைத் தாங்களே தேர்ந்து எடுத்து அவர்களுடன் மகிழ்ச்சியான இல்லறம் நடத்தும் வாய்ப்பும் ஏற்படும். பெண் அடிமை நிலைக்கான பல காரணங்களில் சொத்துரிமை இல்லாதது என்பதே மிகவும் முக்கியமான காரணம் என்பது பெரியாரின் கருத்து.

கர்ப்பத் தடையின் தேவை குறித்து அனைவரும், அக்காலத்தில் கொண்டிருந்த, இக்காலத்திலும் கொண்டிருக்கும் கருத்திலிருந்து முற்றிலும் மாறுபட்டது பெரியாரின் கருத்து. பெண்களின் உடல்நலம், நாட்டின் பொருளாதார நிலை, குடும்பச் சொத்து பிரிவடையாமல் இருக்க என்று பற்பல காரணங்களை முன்வைத்து மற்றவர்கள் கர்ப்பத்தடை தேவை என்று கூறுவார்கள். மாறாக, பெண்ணடிமை நிலையிலிருந்து பெண்கள் விடுதலையடையவும், தற்சார்புடன் வாழவும் கர்ப்பத்தடையை பெரியார் வலியுறுத்துகிறார். இதற்காகப் பெண்கள் பிள்ளைகளைப் பெறுவது என்பதை அடியோடு நிறுத்திவிடுவதையும் பெரியார் வரவேற்கிறார். பெண்கள் மட்டுமல்ல, பிள்ளைகள் பலரைப் பெற்ற ஆண்களும் வாழ்வில் இடர்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. அதிலும் சொத்து,

தொழில், வருவாய் போன்றவை இல்லாத பெண்கள் தங்கள் பிள்ளைகளின் நலம் கருதி பிறரைச் சார்ந்து வாழ வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகிறார்கள். இதை முன்னிறுத்தி பெண்கள் பிள்ளை பெறுவதை நிறுத்தி விட வேண்டும் என்று கூறுகிறார். ஆண்களுக்கு வாய்ப்பிருப்பது போல பெண்களுக்கும் பிரம்மச்சாரிய வாழ்க்கை முறை அமைவது அவர்களுக்கு விடுதலை தரும் என்றும் கூறுகிறார்.

உலகில் எந்தச் சமயமும் பெண்களை அறத்துடன் நடத்தியதில்லை. சமய விதிகளை அமைத்து பெண்களைக் கட்டுப்படுத்தின; கட்டுப்படுத்துகின்றன என்பது உலகறிந்த உண்மை. இந்தியப் பெண்களின் அடிமைநிலை பற்றிக் குறிப்பிடுகையில் பெண் என்றும் எந்த வயதிலும் தந்தை, கணவன், பிள்ளைகள் என்று எவருடைய கட்டுப்பாட்டிலாவது இருக்க வேண்டும் என்று இந்துமத சாஸ்திரங்களும், புராணங்களும் சொல்லுகின்றன. மத சாஸ்திரங்களின் விதிகள் ஆண்களுக்குப் பெண்ணை அடிமையாக்க வேண்டுமென்பதல்லாமல் வேறில்லை என்று உறுதிப்படக் கூறுகிறார். இவ்வாறு தங்கள் மீது திணிக்கப்படும் கருத்துகளைப் பெண்களும் ஏற்றுக் கொண்டு வாழ்வதால் பரம்பரை பரம்பரையாக அடிமை வாழ்வு வாழ்கிறார்கள் என்கிறார். அத்துடன், இன்னமும் பெண்களுக்கு, தாங்கள் ஆண்களைப்போல முழு விடுதலைக்கு உரியவர்கள் என்கின்ற எண்ணமே தோன்றவில்லை. ஆண் இல்லாமல் பெண்ணால் வாழ முடியாது என்று ஒவ்வொரு பெண்ணும் கருதுவதற்கு அவர்களுக்குப் பிள்ளைகள் பெறும் நிலையும் அதையொட்டிய கடமைகளும் இருப்பதானால்தான். அதனால் அடுத்தவர் ஆதிக்கத்திற்கு இடமேற்படுகிறது. அதனால் பெண்கள் விடுதலைக்குப் பிள்ளை பெறும் நிலை இடையூறாக அமைகிறது. பெண்கள் பிள்ளை பெறுவதை நிறுத்திவிட்டால், உலகம்

விருத்தியாகாவிட்டால் பெண்களுக்கு அதனால் என்ன இழப்பு ஏற்பட்டுவிடும் என்ற கேள்வியைப் பெரியார் முன் வைக்கிறார்.

பெண்கள் விடுதலைக்கு ஆதிக்க மனப்பான்மை கொண்ட "ஆண்மை" அழியவேண்டும். ஆண்கள் முயற்சியால் பெண்களுக்கு என செய்யப்படும் எவ்வித முயற்சியும் விடுதலை இயக்கமும் எவ்வழியிலும் பெண்களுக்கு உண்மையான விடுதலையை அளிக்க முடியாது. பெண்களுக்கு மதிப்புக் கொடுப்பதாகவும், பெண்கள் விடுதலைக்காகப் பாடுபடுவதாகவும் ஆண்கள் காட்டிக்கொள்வதெல்லாம் பெண்களை ஏமாற்றுவதற்குச் செய்யும் சூழ்ச்சியே ஒழிய வேறல்ல. எங்காவது பூனைகளால் எலிகளுக்கு விடுதலை உண்டாகுமா? ஆண்களால் பெண்களுக்கு விடுதலை கிடைக்கவே கிடைக்காது. பெண்களால் "ஆண்மை" என்ற தத்துவம் அழிக்கப்பட்டால் அல்லாது பெண்களுக்கு விடுதலை இல்லை என்பது உறுதி என்று தீர்மானமாகக் கூறுகிறார் பெரியார்.

பெரியாரால் இந்த நூலில் சுட்டப்படுவனவற்றில் விடுதலை பெற்ற இந்தியாவில் இன்று சட்டப்படி மாற்றங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. ஆனால், ஆண் உரிமைக்கும் பெண் உரிமைக்கும் ஏன் வேறுபாடு இருக்க வேண்டும் என்று சென்ற நூற்றாண்டிலேயே கேள்வி எழுப்பிய பெரியார், ஆண்களுக்கு இருக்கும் அனைத்து உரிமைகளும் பெண்களுக்கும் கொடுக்கப்பட வேண்டும் என்ற உறுதியான கருத்தை முன்வைத்து பெண்களின் நிலையை மாற்றப் போராடினார். ஆனால் இந்த நூற்றாண்டிலும் பலருக்குப் பெண்களுக்கு சமவுரிமை கொடுக்கப்பட வேண்டும் என்ற கருத்தை ஏற்கும் மனநிலை வரவில்லை என்பது வியக்கவைக்கும் உண்மை.

சமூக நலமா அல்லது தனிமனித நலமா என்று வரும் போது தனிமனித நலத்தை விட சமூக நலனுக்கே முன்னுரிமை வழங்க வேண்டும் என்பவர்கள் அந்தப் பொறுப்பு பெண்களுக்கு மட்டுமே உள்ளதாக எண்ணுகிறார்கள். ஆகவே, பெண்களின் அடிப்படை உரிமைகளைப் பறித்துவிட்டால் பெண்கள் வேறுவழியின்றி காலம் முழுவதும் பிறரைச் சார்ந்து வாழும் வாழ்க்கைக்குத் தள்ளப்படுவார்கள் என்ற தன்னல நோக்கில் ஆண்களுக்கு வாய்ப்பாக உருவாக்கப்பட்ட விதிமுறைகள் பெண்கள் முன்னேற்றத்தை வெகுவாகத் தடுத்துவிட்டது. ஆதிக்க நிலையில் இருப்போர் திட்டமிட்டவாறே பெண்களை அடிமை நிலைக்குத் தள்ளிவிட்டது. சமூகக் கட்டமைப்பைக் கட்டிக் காக்க, தங்கள் ஆதிக்க நிலையைத் தக்க வைத்துக் கொள்வதற்காகப் பெண்களையும் சிலரையும் அடிமைப்படுத்தி வைக்கும் நிலை இக்காலத்திற்குப் பொருந்தாத ஒரு நிலைப்பாடு. இதனை ஏற்காமல் பெண்ணுரிமை பேசுபவர்களையும் கேட்பவர்களையும் ஒழுக்கக் குறைவானவர்கள் என்றும், கட்டற்ற பாலின சுதந்திரத்திற்கு அடிபோடுபவர்கள் என்றும் குடும்ப அமைப்பைச் சீர் குலைப்பவர்கள் என்று கொச்சைப்படுத்தி, கூசாமல் குற்றம் சாட்டிப்

பழிபோடும் பிற்போக்குவாதிகளின் தாக்குதல்கள் தொடர்ந்துதான் வருகின்றன. ஒருவருடைய உரிமையைப் பறித்து அடிமையாக்கி வாழ்வதில் சமூக மேன்மை இருக்க வழியில்லை.

இந்தியாவில் மட்டும் இல்லை, உலகம் முழுவதும் பெண்கள் இருக்கிறார்கள், குடும்பங்களும் இருக்கின்றன. உலகில் மகிழ்ச்சியான நாடுகள் என்ற தரவரிசைப் படுத்துதலையும், பெண்கள் வாழ மிகச் சிறந்த நாடுகள் என்று தரவரிசைப் படுத்துதலையும் ஆண்டுதோறும் சில நிறுவனங்கள் தொடர்ந்து செய்து வருகின்றன. இந்த இரண்டு பட்டியல்களிலும் முதல் பத்து இடங்களுக்குள் தங்கள் இருப்பை தக்க வைத்துக் கொண்டிருப்பவை நார்வே, ஸ்வீடன், பின்லாந்து, டென்மார்க், சுவிட்சர்லாந்து, நியூசிலாந்து, நெதர்லாந்து ஆகிய நாடுகள். அங்கும் குடும்பங்கள் இருக்கின்றன என்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை. பெண்கள் வாழ்வதற்கு ஏற்ற நாடாக வரிசைப்படுத்தப் படும் நாடுகள் உலகின் மகிழ்ச்சியான நாடுகளாகவும் இருப்பது குறிப்பிடத்தக்கது. இந்த தரவரிசைப்படுத்துதலில் இந்தியாவின் நிலை மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கும் ஆப்பிரிக்க நாடுகளுடன் போட்டிப் போட்டுக் கொண்டிருக்கும் நிலையில் இருக்கிறது.



விடுதலை பெற்ற இந்தியாவில் சட்டங்களால் சீர்படுத்தப்பட்டு, அடுத்தடுத்த தலைமுறையினரால் விரிவான சமூகப் பார்வையும் விழிப்புணர்வும் ஏற்பட்டுவிட்ட நிலையில், தகவல் பரிமாற்ற புரட்சியால் சுருங்கிவிட்ட உலகில் மணவிலக்கு, கைம்பெண் மறுமணம், கல்வியுரிமை, சொத்துரிமையும், குடும்பக் கட்டுப்பாடு முறைகள் ஆகியவற்றுக்குத் தடையில்லை என்பது மகிழ்ச்சிக்குரியதே. சமயக் கட்டுப்பாடு என்ற விதிகளால் பெண்களுக்குப் பல உரிமைகள் பறிக்கப்பட்டிருந்த ஒரு காலத்தில், பெண்களே தங்களுக்கு இழைக்கப்பட்டிருந்த அநீதியை இப்படி வாழ்வதுதான் நமக்கு விதிக்கப்பட்டது என்று ஏற்றுக் கொண்டு வாழ்ந்த சென்ற நூற்றாண்டில், பெண்களுக்கு ஏன் இந்த நிலை என்று சிந்திக்கவும் அதை எதிர்க்கவும் துணிந்தவர்கள் வெகு சிலரே. பெண்களின் வாழ்வு நிலையை உயர்த்த, போராட்டங்களும் பரப்புரைகளும் செய்த பெரியாரையும், சமத்துவ சட்ட விதிகள் அவற்றின் மூலம் பெண்விடுதலையை உறுதிப்படுத்திய அம்பேத்கரையும் பெண்கள் என்றும் நன்றியுடன் நினைக்க வேண்டும்.

பெண்ணோடு தோன்றி பெண்ணோடு வாழ்ந்தும் பெண் மனது என்னவென்று புரியவில்லையோ என்றார் கண்ணதாசன். தாய் என்ற பெண்ணின் கருவறையிலிருந்து பிறக்கும் ஆண்கள், தனது தலைமுறையைத் தொடர தனது பிள்ளைகளை ஈன்று வளர்த்தெடுக்கும் துணைவியைக் கொண்ட ஆண்கள் பெண்களின் உரிமைகளையும் உணர்வுகளையும் பொருட்படுத்தாது குடும்ப வன்முறைகளையும், பாலின வன்முறைகளையும் செய்வதையும், பெண்களின் உரிமைகளை மறுத்து அடிமைகளாகக் கருதும் மனப்பான்மையையும் விட்டொழிப்பது நாட்டிற்கு முன்னேற்றம் தரும்.

"எவ்வழி நல்லவர் ஆடவர், அவ்வழி நல்லை; வாழிய நிலனே! (புறநானூறு:187)

என்ற பாடலில் நிலத்தைப் பொறுத்ததன்று வாழ்வும் தாழ்வும், அந்தந்த நிலத்தில் வாழும் ஆடவரைப் பொறுத்தது அது என உரைக்கிறார் ஔவையார்.

பார்வை நூல்:

“பெண் ஏன் அடிமையானாள்?”
தந்தை பெரியார்
பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவன வெளியீடு
பக்கங்கள்:79

சான்றாதாரங்கள்:

Best Countries for Women
Scandinavian countries dominate this 2022 list of the Best Countries for Women.
https://www.usnews.com/news/best-countries/best-countries-for-women

Discover the 10 Happiest Countries in the World
https://www.plumguide.com/journal/happiest-countries-in-the-world

---

திருக்குறள்

துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்

துப்பாய தூஉம் மழை ***(குறள் எண்.12)***

குறள் விளக்கம்: *தானும் உணவாதலாவது, தண்ணீராய் உண்ணப்படுதல். சிறப்பு உடைய உயர்திணைமேல் வைத்துக் கூறினமையின், அஃறிணைக்கும் இஃது ஒக்கும். இவ்வாறு உயிர்களது பசியையும் நீர்வேட்கையையும் நீக்குதலின், அவை வழங்கி வருதலுடையவாயின என்பதாம்.*

அண்ணல் அம்பேத்கர் எழுத்தும் பேச்சும்

முனைவர் தேமொழி
சான் ஃபிரான்சிஸ்கோ, அமெரிக்கா

இந்திய அரசியலமைப்பின் சிற்பி டாக்டர். பி.ஆர். அம்பேத்கர் (ஏப்ரல் 14, 1891 - டிசம்பர் 6, 1956) அவர்களை இந்தியாவின் சமூகச் சீர்திருத்தவாதி, இந்திய சுதந்திர இயக்கத்தின் முன்னணிப் போராளிகளில் ஒருவர், முற்போக்குச் சிந்தனை கொண்டவர், தொலைநோக்கு கொண்ட ஒரு அரசியல்வாதி, வழக்கறிஞர் மற்றும் சட்ட அமைச்சர், இந்தியப் பொருளாதார கட்டமைப்பை உருவாக்கிய நிபுணர், தொழிலாளர் உரிமைகளுக்குச் சட்டங்கள் மூலம் பாதுகாப்பு கொடுத்தவர், பெண்கள் உட்பட ஒடுக்கப்பட்ட சமூக மக்களின் உரிமைகளுக்காகப் போராடுவதற்காகத் தன் வாழ்நாளை அர்ப்பணித்தவர் என்று அவரது பற்பல செயற்பாடுகளின் அடிப்படையில், பல கோணங்களில் அவரை நினைவு கூர்கிறோம். தாழ்த்தப்பட்ட ஒரு குடும்பத்தில் பிறந்து அதனால் அவரது வாழ்நாள் முழுவதும் பாகுபாடுகளை எதிர்கொண்ட அம்பேத்கர், பாலின வேறுபாடின்றி அனைத்து குடிமக்களுக்கும் சமத்துவத்தை உறுதி செய்யும் இந்திய அரசியலமைப்பை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகித்தார்.

அம்பேத்கரின் எழுத்துகள் இந்தியாவின் சமூக முன்னேற்றத்திற்கான விடியலைத் தோற்றுவித்தன. அம்பேத்கர் எழுத்துகளின் தொகுப்பு முதன் முதலில் பகவான்தாஸ் அவர்களால் தொகுக்கப்பட்டது. மகாராஷ்டிரா அரசு அம்பேத்கர் எழுத்துக்களை 2 தொகுதிகளாக வெளியிட்டது. அம்பேத்கரின் எழுத்துகளைத் தொகுத்த வசந்த் மூன் அவற்றை 21 நூல்களாக வெளியிட்டார். இடையில் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கால் இடையூறுகள் எதிர்கொள்ளப்பட்டன. வழக்கு முடிந்த பிறகு அம்பேத்கர் எழுதியவை, அவரது எழுத்துகள் கிடைக்கக் கிடைக்க அவை தொகுதிகளாகத் தொகுக்கப்பட்டு வந்தன. இந்த தொகுதிகளில் அம்பேத்கர் எழுதியவை பொருண்மை அடிப்படையிலோ, அவருடைய சிந்தனை அடிப்படையிலோ, ஆண்டுவாரியாகவோ தொகுக்கப்படவில்லை என்பது ஒரு குறை. அதனால் அம்பேத்கர் ஒரு பொருண்மையில் சொல்லிய கருத்துகள் பல தொகுதிகளில் இடம் பெறுவதால் ஒருங்கிணைத்துப் புரிந்து கொள்வது சற்றுக் கடினமான செயலாக இருக்கிறது.

இக் குறையைக் களையும் பொருட்டு அம்பேத்கர் எழுத்துகளில் ஒரு குறிப்பிட்ட பொருண்மையில் உள்ளவற்றை, அதாவது ... சாதி-சாதிய ஒடுக்குமுறை, இந்தியப் பொருளாதாரம், பெண்விடுதலை, இந்தியச் சுதந்திரம், காங்கிரஸ் நடவடிக்கைகள் என்பது போன்ற ஒவ்வொரு பொருண்மையின் கீழும் பொருத்தமான அம்பேத்கரின் எழுத்துகள் தொகுக்கப்பட்டு, அத்துடன் அவை கால வரிசையாகவும் ஒவ்வொரு தொகுதியிலும் வரிசைப்படுத்தி வழங்கும் நோக்கில் ஜெய்பீம் ஃபவுண்ட்டேஷன் ஒரு திட்டத்தைத் தொடங்கியது. ஜெய்பீம் ஃபவுண்ட்டேஷன் நிறுவனர் திரு. கௌதம சன்னா அவர்களால், ஊர்தோறும் அம்பேத்கர் படிப்பகம், ஊன்றுவோம் அம்பேத்கர் அறிவியம், விளங்க வைப்போம் விலங்கறுப்போம் என்ற கொள்கையுடன் 'அம்பேத்கரியம் 50' என்ற தலைப்பில் ஜெய்பீம் பதிப்பகம் வழியாக அம்பேத்கர் அவர்களின் எழுத்தும் பேச்சும் தொகுக்கப்படுகிறது. தமிழில் வெளிவரும் இத்தொகுதிகள் பின்னர் ஆங்கிலத்திலும் வெளிவர இருக்கிறது. இந்தத் தொகுதிகள் தமிழ் நாட்டில் உள்ள நூலகங்கள் அனைத்திலும், குறிப்பாகத் தமிழ் நாட்டில் உள்ள அனைத்துக் கிராமங்களிலும் உள்ள நூலகங்களிலும் இடம் பெற வேண்டும் என்ற குறிக்கோளுடன் அம்பேத்கரியம், அம்பேத்கர் எழுத்தும் பேச்சும் என 50 தொகுதிகளாக வெளிவருகிறது.

இந்தத் தொகுப்பில் அம்பேத்கர் கடிதங்கள் சிலவற்றை மொழிபெயர்க்கும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. அவற்றில் குறிப்பாக இந்திய விடுதலைக்குப் பிறகு, பாகிஸ்தான்- இந்தியா பிரிவினை காலத்தில், பாகிஸ்தான் பகுதியில் சிக்கிக் கொண்ட பட்டியலின மக்கள் அங்கிருந்து வெளியேறுவது தடுக்கப்படுகிறது. இது அண்ணல் அம்பேத்கர் கவனத்திற்கு வருகிறது. அவர் இந்தியப் பிரதமர் ஜவஹர்லால் நேரு அவர்களின் கவனத்திற்குப் பட்டியலின மக்கள் நிலைமையைக் கொண்டுசென்று தக்க நடவடிக்கை எடுக்குமாறு கடிதம் மூலம் கோரிக்கை வைக்கிறார். அதற்குப் பிரதமர் ஜவஹர்லால் நேரு அவர்களும் தக்க நடவடிக்கைகள் எடுத்து ஆவன செய்வதாகக் கூறி பதிலளிக்கிறார். தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட இந்த இரண்டு கடிதங்களும் இங்கே கொடுக்கப்படுகிறன.

~~~~~~

புது தில்லி, டிசம்பர் 18, 1947.
~~~~~~

பாகிஸ்தானில் இருந்து வெளியேறி இந்தியாவுக்கு வரும் பட்டியலின சாதியினரிடமிருந்தும், அவ்வாறு இந்தியாவுக்கு வரவிடாமல் பாகிஸ்தான் அரசால் அடைத்து வைக்கப்பட்டு தடுக்கப்பட்டவர்களிடம் இருந்தும் எனக்குப் புகார்கள் பல வந்துள்ளன. அதனால் அவர்களின் துன்பங்களை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரவேண்டிய நேரம் வந்துவிட்டதை உணர்கிறேன். அங்கு என்ன நடக்கிறது அடுத்து என்ன செய்யலாம் என்பது குறித்து உங்களுக்கு ஆலோசனை வழங்கும் நோக்கில், அவர்களின் துன்பங்களுக்கான காரணங்களையும் அவற்றை நீக்குவதற்காக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளையும் கீழே குறிப்பிடுகிறேன்.

I.

(1) பட்டியலின மக்கள் தங்கள் பகுதியில் இருந்து வெளியேறுவதை பாகிஸ்தான் அரசு எல்லா வழிகளிலும் தடுத்து வருகிறது. பட்டியலினத்தவர் குற்றேவலர்களாக பாகிஸ்தானில் தங்கியிருந்து, நிலமற்ற உழைப்பாளர்களாகிய அவர்கள் அங்குள்ள நில உடைமையாளர் களுக்குப் பணிசெய்து கொண்டிருக்க வேண்டும் என்று அவர்கள் விரும்புவதே இதன் பின்னணியில் உள்ள காரணமென எனக்குத் தோன்றுகிறது.

குறிப்பாக அவர்களின் வெளியேற்றத்தைத் தடுப்பதில் தீவிரமாக உள்ள பாகிஸ்தான் அரசு, துப்புரவுத் தொழிலாளர்களை இன்றியமையாத பணி செய்வோர் என்று அறிவித்து, அவர்கள் ஒருமாத முன்னறிவிப்புத் தராமல் பணியில் இருந்து அவர்களை விடுவிக்கத் தயாராக இல்லாத நிலைப்பாட்டை எடுத்துள்ளது.

(2) இராணுவ வெளியேற்றும் அமைப்பு என அறியப்படும் எம். இ. ஓ. அமைப்பு சிறிது பயன் தரும் வகையில் வெளியேற விரும்பும் பட்டியலின மக்களுக்கு ஓரளவு உதவி வருகிறது. இருப்பினும் பாகிஸ்தான் அரசு, வெளியேற விரும்பும் பட்டியலின மக்களுடன் எம். இ. ஓ. அமைப்பு நேரடித் தொடர்பில் இருப்பதை அனுமதிக்கவில்லை என்றும் நான் அறிகிறேன். இதன் விளைவாக, பட்டியலின மக்களை வெளியேற்றும் பணி மிகத் தொய்வடைந்த நிலையிலும், சில இடங்களில் முற்றிலும் தடைப்பட்டும் உள்ளது. மேலும், எம். இ. ஓ. அமைப்பும் விரைவில் மூடப்படவிருப்பதாகவும் எனக்குத் தெரியப்படுத்தப் பட்டுள்ளது. இது மட்டும் நேர்ந்தால், பட்டியலின மக்களை பாகிஸ்தானில் இருந்து வெளியேற்றுவது முற்றிலும் நடக்க இயலாமல் போகும்.

(3) தேவையான செயல்பாடுகள்:

(i) வெளியேற விரும்பும் பட்டியலின மக்களுக்கு எவ்விதத் தடையையும் ஏற்படுத்த வேண்டாம் என்று பாகிஸ்தான் அரசைக் கேட்டுக் கொள்ள வேண்டும்;

(ii) எம்.இ.ஒ. அமைப்பினர் வெளியேற விரும்பும் பட்டியலின மக்களுடன் நேரடித் தொடர்பில் இருப்பதை அனுமதிக்க வேண்டும்;

(iii) அனைத்துப் பட்டியலின மக்களும் வெளியேறும் வரை எம்.இ.ஒ. செயல்பட வேண்டும்.

(4) இதுவரை, மேற்கு பஞ்சாப் பகுதிக்குப் பட்டியலினப் பிரிவில் இருந்து ஒரே ஒரு ஒரு அதிகாரியை மட்டுமே நிவாரணம் மற்றும் மறுவாழ்வு அமைச்சகம் நியமித்துள்ளது. ஆனால், பாகிஸ்தானின் மற்ற மாகாணங்களான வடமேற்கு எல்லைப்புற மாகாணம், சிந்து மற்றும் பவல்பூர் போன்ற எஞ்சியுள்ள பகுதிகளுக்கு அவற்றுக்கென எந்த அதிகாரியும் நியமிக்கப்படவில்லை. இப்பகுதிகளுக்கு விரைவில் அதிகாரிகள் நியமிக்கப்பட அமைச்சரகம் உத்தரவிட்டு, சிறப்பு அதிகாரிகளைப் பாகிஸ்தான் பகுதியில் களப் பயணம் மேற்கொள்ளச் செய்து அதன் மூலம் வெளியேற விரும்பும் பட்டியலின மக்களுக்குத் தடை செய்யப்படும் பகுதிகள் கண்டறியப்பட வேண்டும்.

II.

பாகிஸ்தானில் இருந்து வெளியேறி கிழக்குப் பஞ்சாப் பகுதிக்கு வந்துள்ள பட்டியலின மக்கள் குறித்து, அவர்களிடம் இருந்தும் புகார்கள் கிடைத்துள்ளன. அவை பாகிஸ்தானில் இருந்து வெளியேறத் தடை செய்யப்பட்டுள்ள பட்டியலின மக்கள் அனுப்பிய புகார்களையும்விட அதிக எண்ணிக்கையில் உள்ளன. அவற்றை நான் கீழே பட்டியலிட்டுள்ளேன்:

(i)

(1) கிழக்குப் பஞ்சாப் பகுதிக்கு வந்துள்ள பட்டியலினப் பிரிவு அகதிகள் இந்திய அரசு ஏற்படுத்தியுள்ள அகதிகள் முகாம்களில் குடியிருக்கவில்லை.

அகதிகள் முகாமிற்குப் பொறுப்பேற்றுள்ள அதிகாரிகள் சாதி இந்து அகதிகளுக்கும் பட்டியலின அகதிகளுக்கும் இடையில் பேதம் காட்டுவதே இதற்குக் காரணம்.

(2) அகதிகள் முகாம்களில் தங்கியிருப்பவர்கள் மட்டுமே உணவு, உடை போன்ற நிவாரணங்களைப் பெறலாம் என்று நிவாரண மற்றும் மறுவாழ்வுத் துறை ஒரு விதி ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிகிறது. மேற்கூறப்பட்ட காரணத்திற்காக, பட்டியலின மக்கள் அகதிகள் முகாமில் தங்காத காரணத்தால், அந்த அகதிகளுக்கு எந்த நிவாரணமும் கிடைப்பதில்லை. இது மிகத் துயரமானது.

(3) இந்தப் பாகுபாட்டைத் தடுக்க இயலாது என்பதால், முகாம்களில் வாழும் அகதிகளுக்கு இணையாக அவர்களுக்கு வழங்கப்படும் நிவாரணங்களைப் போன்று அதே அளவு நிவாரணங்களை அகதி முகாமில் குடியிருக்காத பட்டியலின அகதிகளும் அவர்களுக்குரிய உதவிகளைப் பெறும் வகையில் விதியில் மாற்றம் செய்யப்பட வேண்டிய தேவையுள்ளது.

(ii)

(1) கிழக்குப் பஞ்சாப் அரசு நிலங்களை ஒதுக்குவதில் பட்டியலின மக்களின் நலன்கள் முற்றிலும் புறக்கணிக்கப்பட்டுள்ளது. முற்றிலுமாக சாதி இந்துக்களின் கைகளில் கிழக்கு பஞ்சாப்பின் நிர்வாகம் இருப்பதால், பட்டியலின அகதிகளின் மறுவாழ்வில் தனிப்பட்ட அக்கறை செலுத்துவோரும் எவருமில்லை, அதற்குப் பொறுப்பேற்கும் வகையில் இந்திய அரசு ஏற்படுத்திய நிறுவனங்களும் ஏதுமில்லை, குறிப்பாக இக்கடமையை கிழக்குப் பஞ்சாப் அரசாங்கத்தின் கவனத்திற்குப் பட்டியலின மக்களின் நலன்கள் குறித்து, கொண்டு செல்வதும் புறக்கணிக்கப் பட்டுள்ளது.

(2) ஆகவே, இந்திய அரசு கிழக்குப் பஞ்சாபில் ஏராளமான அதிகாரிகளை நியமித்து அவர்களின் சிறப்புப் பொறுப்பாக, நில ஒதுக்கீடு நியாயமான முறையில் செய்யப்படுவதையும், பட்டியலின அகதிகள் அவர்களுக்குரிய முறையான பங்கைப் பெறுவதையும் மேற்பார்வை செய்வது இன்றியமையாதது.

(3) இதற்காக நியமிக்கப்பட்ட நபர்களின் நான் பட்டியலை மாண்புமிகு திரு. நியோகி அவர்களிடம் வழங்கியுள்ளேன், நான் அறிந்தவரை, இவர்கள் இந்தப் பணியைச் செய்வதற்கு மிகவும் தகுதியானவர்கள்.

(4) (அ) கிழக்குப் பஞ்சாபில் வாழும் பட்டியல் இனத்தவர்களை அவர்களின் சொந்த வீடுகளில் இருந்து வெளியேறுமாறு அங்கு ஆதிக்க நிலையில் இருக்கும் சீக்கியர்களும் ஜாட்களும் கட்டாயப்படுத்தி அவர்களின் வீடு அல்லது நிலங்கள் போன்ற சொத்துக்களை தங்கள் உடைமையாக்கிக் கொள்கிறார்கள் என்பது ஒரு கொடுமையான உண்மை. கிழக்குப் பஞ்சாபின் நீதித்துறையிலும் காவல்துறையிலும் சீக்கியர்களும் ஜாட்களும் நிறைந்திருக்கிறார்கள் என்ற எளிய காரணத்தால் பட்டியலின மக்கள் மீது நிகழ்த்தப்படும் கொடிய அடக்குமுறையில் இருந்து அவர்களுக்குத் தீர்வு கிடைப்பதில்லை. சீக்கியர்களும் ஜாட்களும் செய்யும் குற்றங்களை இயற்கையாகவே அவர்களது உறவும் சுற்றமும் பொருட்படுத்தாது அவர்களைப் பாதுகாப்பதால் பாதிக்கப்பட்ட பட்டியலின மக்களின் புகார்கள் கவனிக்கப்படுவதில்லை.

(ஆ) எனவே, கிழக்குப் பஞ்சாப் அரசு, பட்டியலினப் பிரிவில் இருந்து குறைந்தது 300 நபர்களை தங்களின் காவல் துறையின் ஊர்க்காவல் பணிக்கு அமர்த்துவதற்கு கட்டாயப்படுத்தப்பட வேண்டும் என்பது முற்றிலும் இன்றியமையாததாகும். அண்மைய நாளிதழ்களில் கிழக்குப் பஞ்சாப் அரசு, பட்டியலினத்தைச் சேர்ந்த 300 பேரைத் தங்கள் காவல் துறையில் பணிக்கமர்த்தியதாகச் செய்தி வெளியானது. விசாரித்துப் பார்த்ததில் அவர்கள் எல்லையோரக் காவல் பொறுப்பில் நியமிக்கப் பட்டுள்ளார்கள் என்றும் ஊர்க்காவல் பணிக்காக அல்லவென்றும் தெரிய வந்தது. பட்டியலின மக்களின் பாதுகாப்பிற்கு அவர்கள் பிரிவினரை கிழக்குப் பஞ்சாப் ஊர்க்காவல் படையில் பணிக்கமர்த்த வேண்டும். கிழக்குப் பஞ்சாபின் ஊர்க்காவல் பணியில் பட்டியலினத்தைச் சேர்ந்த ஒருவர் கூட இல்லை என்பது எனக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(5) (அ) கிழக்குப் பஞ்சாபின் நில வருவாய் அமைப்பு கிராமத்தில் வசிப்பவர்களை ஜமீன்தார்கள் மற்றும் கமினாக்கள் இரண்டு வகுப்புகளாகப் பிரித்துள்ளது. கிராம எல்லைக்குள் சொந்தமாக நிலம் வைத்திருக்கக் கூடிய நிலவுடைமை உரிமை பெற்றுள்ள குடும்பங்கள் ஜமீன்தார் பிரிவில்

சேர்க்கப்படுகிறார்கள். தாங்கள் வாழும் ஊரில் சொந்தமாக நிலத்தை வாங்கவோ வைத்திருக்கவோ உரிமையற்றவர்கள் கமினாக்கள் பிரிவினர். அவர்கள் வீடுகளும் ஜமீன்தார்களின் நிலத்தில் அமைந்தவை. அதனால் ஜமீன்தார்கள் ஒன்றிணைந்தால் கமினாக்களை அவர்கள் வாழும் வீட்டை விட்டும் கிராமத்தை விட்டும் கட்டாயப்படுத்தி வெளியேற்ற முடியும். இந்த நடைமுறை ஒவ்வொரு கிராமத்திலும் கமினாக்களை ஜமீன்தார்கள் தயவில் வாழ வைக்கிறது. கிழக்குப் பஞ்சாபின் அனைத்து கிராமங்களிலும் வாழும் பட்டியலின மக்கள் கமினாக்கள் பிரிவில் அடங்குவர். ஆகவே, அவர்கள் கிராமத்தின் ஜமீன்தார்களின் அடிமையாக வாழ்கின்றனர்.

(ஆ) எனவே, கிழக்குப் பஞ்சாப் அரசு அவர்களின் நில வருவாய் முறையை மாற்றுவதன் மூலம், ரயத்துவாரி முறைபோன்ற ஒரு முறையை நடைமுறைப் படுத்துவதன் மூலம் இந்த பேதத்தை முடிவுக்குக் கொண்டுவர வேண்டிய தேவையுள்ளது. அந்த நிலை ஏற்படுமானால் நிலவுடைமையைப் பொறுத்த அளவில் அனைத்து கிராம மக்களும் சமமான நிலை ஏற்படும்.

(6) (அ) விவசாயிகளை பணக் கடன் கொடுப்பவரிடம் இருந்து காப்பாற்றும் நோக்கில் நில உரிமை மாற்றச் சட்டம் கிழக்குப் பஞ்சாப் மாகாணத்தில் நடைமுறையில் உள்ளது. ஆனால், ஒரு விவசாயி என்பவர் குலம் சார்ந்தவர்; தொழில் சார்ந்தவர் அல்ல என்ற வரையறை கொண்டுள்ள இந்தச் சட்டம் தீமை நிறைந்த ஒரு சட்டம் என்பதில் சிறிதும் ஐயம் இருக்க வழியில்லை. இந்தச் சட்டத்தின்படி, விவசாயச் சமூகமாக அரசால் அறிவிக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த ஒருவர் மட்டுமே விவசாயியாக கருதப்படுவார். எந்த ஒரு பட்டியலினத்தவரும் நிலத்தில் உழவு செய்பவராகவும், விவசாயத் தொழிலாளியாக இருந்தாலும், பழங்காலப் பஞ்சாப் அரசு, பட்டியலினப் பிரிவு மக்களை விவசாயச் சமூகமாக அறிவிக்கக் கூடாது என்பதில் மிகக் கவனமாக இருந்தது. இதன் விளைவாக, கிழக்கு பஞ்சாபில்

உள்ள பட்டியலின மக்களுக்கு நிலத்தை வாங்கவோ, உடைமையாகச் சொந்தங்கொள்ளவோ வழியின்றி நிலமற்ற உழைப்பாளர்களாக இந்து, சீக்கிய மற்றும் ஜாட் நிலவுடைமையாளர்களை வாழ்வாதாரத்திற்கு நம்பியிருக்கும் நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். இது ஒரு கொடூரமான சட்டம், இச்சட்டம் சட்டப் புத்தகத்தில் தொடர்ந்து இருக்க அனுமதிக்கப்படக்கூடாது என்று நான் நினைக்கிறேன்.

(ஆ) கிழக்குப் பஞ்சாப் அரசிடம் 'விவசாயி' என்ற சொல்லின் வரையறையை திருத்தம் செய்து அதை ஒரு தொழிலாக மாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்பட வேண்டும், இதனால் விவசாயத்தை வாழ்வாதாரமாகக் கொண்டிருக்கும் எவர் ஒருவரும் சாதி இன வேறுபாடின்றி நிலத்தை வாங்கவும் உடைமையாகக் கொள்ளவும் உரிமை உள்ள விவசாயியாக மாற வழி ஏற்படும்.

பட்டியலின மக்கள் எதிர்கொள்ளும் துன்பங்களாக எனது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்ட எல்லாவற்றையும், அவற்றைக் களையும் முறைகளையும், அவை ஏற்றுக் கொள்ளப்பட்டால், தீர்வாக அமையும் என நான் கருதுவனவற்றையும் விவரித்துள்ளேன். இந்திய அரசின் கைகளில் சில தீர்வுகளும் மற்றும் சில கிழக்குப் பஞ்சாப் அரசின் கைகளிலும் உள்ளன. இந்திய அரசு விரும்பினால், அத்தகைய தீர்வுகளுக்கான முயற்சியை முன்னெடுப்பதில் எந்தக் கேள்வியும் இருக்க வழியில்லை. கிழக்குப் பஞ்சாப் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இருக்கும் தீர்வுகள் குறித்து நடவடிக்கை எடுக்க இயலாத கையறு நிலையில் இருப்பதாக இந்திய அரசாங்கம் கருத வேண்டியதில்லை. ஏனெனில், இந்திய அரசு நிவாரணம் மற்றும் மறுவாழ்வுக்கான செலவுப் பொறுப்பை ஏற்பதால், அனைத்து வகுப்பு மக்களையும் நியாயமான மற்றும் சமமாக நடத்துவதற்கு இந்திய அரசு தேவையானதாகக் கருதும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கிழக்குப் பஞ்சாப் அரசை நிர்ப்பந்திக்க அதற்குத் தார்மீக உரிமை உள்ளது. அதனால்தான், நான் இந்திய அரசின் நடவடிக்கைக்காகப் பரிந்துரை வழங்குகையில் கிழக்குப் பஞ்சாப் அரசாங்கத்தின் கைகளில் உள்ள தீர்வுகள் குறித்தும் குறிப்பிடத் தயங்கவில்லை. இதுவரை, முஸ்லிம்களின் பிரச்சனையில் இந்திய அரசு அனைத்து கவனத்தையும் அக்கறையையும் செலுத்தி வந்துள்ளது. பட்டியலின மக்களுக்கு எந்தப் பிரச்சனையும் இல்லை என்பதாகவோ அல்லது சிறப்புக் கவனம் தேவைப்படாத அளவுக்கு அவை மிகவும் சிறியதாகவோ கருதப்படுகிறது. பட்டியலினப் பிரிவினரின் பிரச்சனையைச் சிலர் குறிப்பிட விரும்பாமலிருக்கலாம், பட்டியலின மக்கள் குறித்து அக்கறையுள்ள எங்களுக்கு அந்தப் பிரச்சனை உள்ளது என்பதும், அது முஸ்லிம்களின் பிரச்சனையை விட மிகவும் தீவிரமானது என்பதும் தெரியும்.

பாகிஸ்தானிலும் இந்தியாவிலும் பட்டியலின அகதிகள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளை இந்திய அரசு புறக்கணித்து வருவதை பொதுமக்களின் கவனத்திற்குக் கொண்டு செல்ல பலமுறை நான் நினைத்ததுண்டு. வெளிப்படையான சில காரணங்களுக்காக நான் அவ்வாறு செய்வதைத் தவிர்த்து வந்தேன். மற்ற பிரச்சனைகளில் உங்கள் கவனம் ஆழ்ந்திருந்ததன் காரணமாக, இந்தப் பிரச்சனையில் உங்கள் மௌனம் குறித்து நான் எந்தப் புகாரும் செய்யவில்லை. ஆனால், இந்தப் பிரச்சனையில் உங்களின் தனிப்பட்ட கவனத்தைச் செலுத்தி, நிவாரணம் மற்றும் மறுவாழ்வுத்துறை அமைச்சரிடமும், இலாகா ஒதுக்கப்படாத அமைச்சரிடமும் இக்கடிதத்தில் நான் குறிப்பிட்டுள்ள என் பரிந்துரைகளையோ அல்லது இவற்றிலும் மேம்பட்ட நல்ல தீர்வுகளையோ முன்னெடுக்க ஆணையிட்டு, பட்டியலின மக்களின் துன்பங்களில் இருந்து அவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்த வேண்டிய நேரம் வந்துவிட்டதாக நான் அஞ்சுகிறேன். இந்த விஷயத்தில் நீங்கள் உடனடியாக கவனம் செலுத்தினால் நான் நன்றியுள்ளவனாக இருப்பேன்.

தங்கள் உண்மையுள்ள,
(கையொப்பம்)-பி.ஆர். அம்பேத்கர்.

பெறுநர்

மாண்புமிகு பண்டித ஜவஹர்லால் நேரு,
இந்தியப் பிரதமர்,
புது தில்லி.

```````````````

*பிரதம மந்திரி*
*இந்தியா*

*பிரதமர்*
*புது தில்லி,*
*டிசம்பர் 25, 1947.*

*என் அன்பான டாக்டர் அம்பேத்கர்,*
```````````````

பாக்கிஸ்தானில் இருந்து இந்தியாவிற்குப் பட்டியலின மக்களை வெளியேற்றுவது குறித்த உங்கள் டிசம்பர் 18 ஆம் தேதியிட்ட கடிதம் எனக்குக் கிடைத்தது.

பாக்கிஸ்தானில் இருந்து அவர்களின் இடம்பெயர்வுக்காக நாங்கள் எங்களால் இயன்றவரை அவர்களுக்கு உதவி வருகிறோம். அவர்கள் வெளியேறுவது, குறிப்பாக சிந்துவில் இருந்து, வெளியேறுவது தடுக்கப்படுகிறது. அங்குள்ள நம் உயரதிகாரி தொடர்ந்து இப்பிரச்சனையை எதிர் கொள்கிறார்.

நீங்கள் குறிப்பிட்ட மற்ற பிரச்சனைகளை கிழக்குப் பஞ்சாப் அரசுதான் தீர்க்க வேண்டும். பட்டியலின மக்கள் வெளியேறுவது குறித்து நாங்கள் நிச்சயமாக அவர்களுக்கு ஆலோசனை வழங்குவோம், மேலும் வெளியேறும் பட்டியலின மக்களுக்கு அனைத்து உதவியும் வழங்கிட ஏற்பாடு செய்வோம்.

மிக முக்கியமாக கிழக்குப் பஞ்சாப் அரசாங்கம் இது குறித்துப் பல தொல்லைகளை எதிர்கொண்டு திணறிவருவதால் நமக்கு கிழக்குப் பஞ்சாப் அரசாங்கத்துடன் இணைந்து செயலாற்றுவதில் சற்று சிரமங்கள் நேர்கின்றன. இதுகுறித்து எனது தனிக் கவனத்தைச் செலுத்துவதை நான் மகிழ்ச்சியுடன் செய்வேன், அத்துடன் சிறப்பு இலாகா ஒதுக்கப்படாத அமைச்சர் ஒருவரிடம் இப்பொறுப்பை ஒப்படைத்து அக்கறையுடன் கையாள கேட்டுக் கொள்வேன்.

தங்கள் உண்மையுள்ள,
கையொப்பம்/- ஜவஹர்லால் நேரு

பெறுநர்
மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர்.

```````````````

```````````````

சிறு நல் வாழ்க்கை

முனைவர் தேமொழி
சான் ஃபிரான்சிஸ்கோ, அமெரிக்கா

வாழ்க்கை வாழ்வதற்கே என்று கூறினாலும் வாழும் ஒவ்வொரு மணித்துளியும் நாம் அதைப் பற்றிய நினைவின்றியே வாழ்கிறோம். வாழ, வாழ், வாழ்வு, வாழ்க, வாழிய, வாழ்த்து என்ற சொற்களின் வரிசையில் வாழ்க்கையும் இடம்பெறுகிறது. வாழ்க்கை என்பது ஒரு பழந்தமிழ்ச் சொல். சான்றுகளுடன் பார்க்கையில் குறைந்தது ஒரு 2500 ஆண்டுகளாக நம் புழக்கத்தில் வாழ்க்கை என்ற சொல் அவ்வாறே, அதே பொருளில் தொடர்ந்து வழக்கத்தில் இருப்பதை தமிழின் தொன்மையான முதல் நூலாகிய தொல்காப்பியம் மூலம் அறிய முடிகிறது.

புல்லா வாழ்க்கை வல்லாண் பக்கமும் - தொல்காப்பியம்-பொருள். புறத்:21/9

வறுமையிலும் செம்மையுடையவராக வாழும் வெற்றித் திறத்தினை புல்லா வாழ்க்கை வல்லாண் பக்கமும் என்பது இப்புறத் துறைச் சொற்றொடரின் பொருள் என இளம்பூரணர் விளக்கம் தருகிறார்.

தமிழின் செவ்வியல் இலக்கியமான சங்கப் பாடல்கள் என்ற பத்துப்பாட்டு எட்டுத்தொகை ஆகிய தொகை இலக்கியங்களில் வாழ்க்கை என்ற சொல் 62 முறை இடம் பெறுகிறது. அக்கால மக்களின் வாழ்க்கை முறை பற்றி பல செய்திகளையும் தருகிறது. உப்பு விற்கும் உமணர், பாடிப் பரிசில் பெறும் பாணர், வில் கொண்டு பகை ஒழிக்கும் மறவர் என பலரின் வாழ்க்கை குறித்த பாடல்களில் இடம் பெறுகிறது. அது மட்டுமின்றி விலங்குகள்,பறவைகள், தேனி வாழ்க்கை குறித்தும் பாடல்களில் இடம் பெறுகின்றது. தமிழர் அனைவரும் நன்கு அறிந்த "கொங்கு தேர் வாழ்க்கை அம் சிறை தும்பி" என்று மலர்கள் எல்லாம் சென்று தேன் உண்ணும் தேனீயின் வாழ்க்கையைக் குறிக்கும் குறுந்தொகைப் பாடலும் இந்த வரிசையில் அடங்கும்.

வாழப்படும் வாழ்க்கையின் தன்மை குறித்த சிந்தனையைத் தூண்டும் பல கருத்துகளும் இடம் பெறுகின்றன.

அவற்றுள்;

"ஒக்கல் வாழ்க்கை தட்கும் மா காலே" (புறநானூறு: 193/4)

சுற்றத்தோடு கூடி வாழும் இல்வாழ்க்கை தப்பவிடாமல் காலைத் தடுக்கும், கட்டுப்படுத்தும் தன்மை கொண்டது

"கவறு பெயர்த்து அன்ன நில்லா வாழ்க்கை" (நற்றிணை: 243/5)

சூதாடுகருவியை உருட்டிவிட்டாற்போன்ற நிலையற்ற வாழ்க்கை

"பொழில் வதி வேனில் பேர் எழில் வாழ்க்கை" (பதிற்றுப்பத்து: 48/15,16)

சோலைகளில் தங்கியிருந்து செய்யும் வேனில் விழாவும் கொண்ட பெரிய அழகிய வாழ்க்கை .

"பெருநீர் விளையுள் எம் சிறு நல் வாழ்க்கை" (நற்றிணை: 45/9,10)

கடலுள் விளையும் பொருள்களை வைத்து வாழும் எம் சிறிய நல்ல வாழ்க்கை

போன்ற பாடல் வரிகள் வாழ்க்கை பற்றிய பல வேறு கோணங்களைக் காட்டுகின்றன.

பேர் எழில் வாழ்க்கை:

பதிற்றுப்பத்தின் ஐந்தாம் பத்து புலவர் பரணர் சேர அரசன் கடல் பிறக்கு ஓட்டிய செங்குட்டுவன் மீது பாடிய பாடல்களின் தொகுப்பு. அடிதொகுப்பின் 48 ஆவது பாடலில் பரணர் சேர மன்னனை நீடு வாழ்க என வாழ்த்துகிறார்.

"பல் பொறி மார்ப நின் பெயர் வாழியரோ

நின் மலை பிறந்து நின் கடல் மண்டும்

மலி புனல் நிகழ்தரும் தீம் நீர் விழவின்

பொழில் வதி வேனில் பேர் எழில் வாழ்க்கை

மேவரு சுற்றமோடு உண்டு இனிது நுகரும்

தீம் புனல் ஆயம் ஆடும்

காஞ்சி அம் பெரும் துறை மணலினும் பலவே"

(பதிற்றுப்பத்து: 4, பரணர்)

மன்னா, உன்னை நாடிப் பாடிப் பரிசில் பெற வரும் பாணர்களும் விறலியர்களுக்கும் பொன்னால் செய்த தாமரைப் பூக்களையும், மாலைகளையும் சூட்டி அவர்களை மகிழவித்து, உன் புகழை நிலைநாட்ட கடலில் பகைவரோடு போரிட்டு வெற்றிபெற்ற, குளிர்ந்த துறைகளைக் கொண்ட பரதவனே! அவ்வாறு வென்று கொணர்ந்த பொருட்களை தனக்கென வைத்துக் கொள்ளாது புலவர்களின் ஒப்பற்றப் பாடல்களுக்குப் பரிசாக அளிப்பதால் கொடுப்பதை அன்றி தனக்கென வைத்துக்கொள்ளும் பண்பை அறியாதவன் இவன் என்று அவர்கள் போற்றிப் பாட, வேண்டியவர்க்கு மென்மையானவனாகவும், பகைவர்களுக்கு வன்மையானவாகவும் விளங்குபவனே. அவ்வாறு நீ போரில் பகைவரின் ஊர்களைச் சுடுகின்ற நெருப்பின் வெப்பத்தால் உன் மார்பில் சூடிய மாலையின் மலர்களும், பூசிய சந்தனமும் காய்ந்து போன புள்ளிகளைக் கொண்ட மார்பைக் கொண்டவனே உன் பெயர் நீடு வாழ்க.

உனது மலையில் பிறந்து, உனது கடலில் சென்று கலக்கும் மிகுந்த நீர் நிறைந்த ஆற்றில் நிகழ்த்தப்பெறும் இனிய நீராட்டு விழாவும்,

சோலைகளில் தங்கியிருந்து செய்யும் வேனில் விழாவும் கொண்ட உன் பெரிய அழகிய வாழ்க்கையில் உன்னை விரும்பிச் சூழ்ந்திருக்கும் சுற்றத்தாரோடு உண்டு, இனிமையாகத் துய்த்து, இனிய வெள்ளத்தில், மக்கள் கூட்டம் நீர்விளையாட்டு ஆடுகின்ற காஞ்சி என்னும் ஆற்றின் அழகிய, பெரிய துறையிலிருக்கும் மணலைக் காட்டிலும் பல ஆண்டுகள் நீ நீடூழி வாழ்வாயாக என்று பரணர் கடல் பிறக்கு ஓட்டிய செங்குட்டுவனை வாழ்த்திப் பாடுகிறார். இவ்வரிகள் மூலம் 'பேர் எழில் வாழ்க்கை' எத்தகையது என்பது புலனாகிறது. பலரும் போற்றும் வண்ணம் புகழ் பெற்று, எதிரிகளை வென்று, தன் உறவுடனும் நட்புடனும் விழாக்கள் கொண்டாடி வாழும் அரசரின் வாழ்வு ஒரு 'பேர் எழில் வாழ்க்கை' என்று காட்டப்படுகிறது.

சிறு நல் வாழ்க்கை:

அவ்வாறே சங்கப்பாடலில் 'சிறு நல் வாழ்க்கை' குறித்த ஒரு குறிப்பும் காணப்படுகிறது. இந்த வாழ்க்கை நெய்தல் நிலத்தின் சிறு குடியில் வாழும் பரதவர்களின் வாழ்க்கை. பழம்பெரும் நகரின் பெருஞ் செல்வந்தரின் மகன் ஒருவன், மீனவர் குடியில் வாழும் பெண் ஒருத்தி மேல் மையல் கொண்டு அவளை நாடி வருகிறான். அவனை இடைமறித்து அறிவுரை கூறுகிறாள் மீனவப் பெண்ணின் தோழி. அப்பொழுது தங்களின் எளிய சிறு நல் வாழ்க்கை அவனுக்கு ஒத்துவராதது என உணர்த்துகிறாள்.

"இவளே கானல் நண்ணிய காமர் சிறுகுடி

நீல் நிற பெரும் கடல் கலங்க உள் புக்கு

மீன் எறி பரதவர் மகளே நீயே

நெடும் கொடி நுடங்கும் நியம மூதூர்

கடும் தேர் செல்வன் காதல் மகனே

நிண சுறா அறுத்த உணக்கல் வேண்டி

இன புள் ஓப்பும் எமக்கு நலன் எவனோ

புலவு நாறுதும் செல நின்றீமோ

பெருநீர் விளையுள் எம் சிறு நல் வாழ்க்கை

நும்மொடு புரைவதோ அன்றே

எம்மனோரில் செம்மலும் உடைத்தே"

(நற்றிணை: 45, நெய்தல் பாடல் - ஆசிரியர் பெயர் தெரியவில்லை)

இவளோ, கடற்கரைச் சோலையை அடுத்துள்ள மீனவர்களின் அழகிய சிறுகுடியில் வாழ்பவள். நீல நிறப் பெருங்கடல் கலங்குமாறு அதன் உள்ளே புகுந்து மீனைப் பிடிக்கும் பரதவர் மகள் இவள்! நீயோ, உயர்ந்த கொடிகள் அசையும் கடைத் தெருக்களைக் கொண்ட பழைய ஊரில் வாழும், விரைந்து செல்லும் தேர்களையுடைய ஒரு செல்வந்தரின் அன்புக்குரிய மகன் ஆவீர்! கொழுப்பு மிகுந்த சுறாமீனை அறுத்த துண்டங்களை உலர்த்தும் பொழுது கூட்டமாக வரும் பறவைகளை விரட்டும் எமக்கு உம் உயர்ந்த நலன்கள் என்ன வேண்டியுள்ளது? புலால் நாற்றம் வீசும் எம்மிடம் இருந்து தள்ளி நிற்பீர். பெரிய கடல் நீரில் விளையும் பொருட்களை வைத்து வாழும் எங்களின் சிறிய நல்ல வாழ்க்கை உங்களுக்குப் பொருத்தமற்றது.

எங்கள் பரதவர் குலத்திலும் இவளுக்குப் பொருத்தமான பண்பு நிறைந்த ஆண்மக்கள் உள்ளனர் என்று பரதவர் குலப் பெண்ணின் தோழி மூதூரில் வாழும் செல்வந்தனுக்கு நிலைமையைத் தெளிவாகக் கூறி அறிவுறுத்துகிறாள்.

இந்த இருவேறு பாடல்களையும் ஒப்பிடுவதன் மூலம் இருவேறு வாழ்க்கை முறையின் வேறுபாட்டைத் தெளிவாக அறிய முடியும். ஆரவாரத்துடன் வாழும் மன்னர்களின் பேர் எழில் வாழ்க்கையைப் போலன்றி, இப்பரதவர் வாழ்க்கை வறுமையிலும் செம்மையுடையதாக, தங்கள் எளிய வாழ்விலும் மனநிறைவு கொண்டு அமைதியுடன் வாழும் சிறுநல் வாழ்க்கையாக அமைந்துள்ளதைக் காணமுடிகிறது.

உதவிய தளம்:

சங்கச் சோலை, முனைவர்.ப.பாண்டியராஜா - http://sangacholai.in/index.html

நிழலற்ற நாள்தான் ஆண்டின் தொடக்கமா?

முனைவர் தேமொழி
சான் ஃபிரான்சிஸ்கோ, அமெரிக்கா

'எது தமிழ்ப் புத்தாண்டு?' 1971ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசால் அதிகாரப்பூர்வமான முறையில் பின்பற்றப்படும் தைத் திங்களின் முதல் நாளா அல்லது அதுநாள் வரையில் வழக்கத்தில் இருந்துவந்த சித்திரைத் திங்களின் முதல் நாளா என்ற புத்தாண்டு குறித்த சர்ச்சைகள் தமிழகத்தில் ஒரு தொடர்கதை. ஆனால், இந்த இருநாட்களும் அல்ல, தொல் தமிழ் நாட்டில் ஆண்டின் தொடக்கமாக இருந்தது ஆவணித் திங்கள் முதல் நாள்தான் என்பதற்கு அசைக்கமுடியாத சான்றுகள் உள்ளன.

எனவே சித்திரை முதல் நாள் ஆண்டின் தொடக்கமாகவும், அதன் வியாழவட்ட 60 ஆண்டுகள் சுழற்சி முறைக் கணக்கிடலில் பயன் கொள்ளப்பட்ட 'வடமொழி ஆண்டுப் பெயர்கள்' கொண்ட காலக்கணிப்பு முறை வழக்கத்திற்கு வந்தது பிற்காலத்தில் நிகழ்ந்த ஒரு மாற்றம் என்பதை எளிதில் புரிந்து கொள்ள முடியும். வைதீகத்தின் தாக்கம் கொண்டுவந்த விளைவே இடையில் தொடங்கிய சித்திரைத் திங்கள் புத்தாண்டு வழக்கமாகும். அந்நாட்களில் அக்காலத்தில் ஆட்சியிலிருந்த அரச ஆதரவுடன் சித்திரைத் திங்கள் புத்தாண்டு வழக்கம் தமிழகத்தில் நடைமுறைக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டது எனலாம்.

தைத்திங்கள் புத்தாண்டு விரும்பிகளோ அல்லது சித்திரைத்திங்கள் புத்தாண்டு விரும்பிகளோ தங்கள் வாதத்தை ஆணித்தரமாக நிறுவுவதற்கென இரு பிரிவினருமே 'தைதான் தமிழ்ப் புத்தாண்டின் தொடக்கம்' என்பதற்கோ, அல்லது 'சித்திரைதான் தமிழ்ப் புத்தாண்டின் தொடக்கம்' என்பதற்கோ உறுதியான சான்றுகள் எதுவுமே அளித்தது இல்லை. இந்த மாதம்தான் தமிழ்ப்புத்தாண்டின் தொடக்கம் என்று "உறுதியாக அறுதியிட்டு நேரடியாகக் கூறாத" கல்வெட்டுப் பதிவுகள், இலக்கிய வரிகள் போன்றவற்றை எல்லாம் இயன்றவரை மேற்கோள் கொடுத்து வாதிடுவார்கள்.

சித்திரை என்பதற்கு அறிவியல் மற்றும் வானியல் அடிப்படையில் சான்று கொடுக்க முற்படுகையில், தஞ்சை தமிழ்ச் சங்கத்தின் சார்பில் சித்திரையில் தமிழர் புத்தாண்டு என்ற உரையை பேராசிரியர் முனைவர் சி.கோ.தெய்வநாயகம் வழங்கினார். இவ்வுரையில் நிழலற்ற நாள்தான்

ஆண்டின் தொடக்கமாக அமைகிறது, தமிழர் புத்தாண்டின் தொடக்கம் அறிவியல் அடிப்படையில் வானியல் நிகழ்வை அடியொற்றி அமைகிறது என்று கூறுகிறார். அந்த உரையில் நிழலற்ற நாளில் ஆண்டின் தொடக்கம் என்று



அவர் விளக்கும் பகுதியின் சுருக்கம் அடுத்து கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

புத்தாண்டு என்பது தமிழர்களுக்கு எப்பொழுது தொடங்குகிறது என்றால், வானியல் நிகழ்வுகளின்படி, அறிவியல் அடிப்படையில் வலசை போகும் சூரியனின் வடபுல நகர்வில் சித்திரை திங்களில் மேஷ ராசியில் சூரியன் நுழையும் பொழுது, அரைநாள் நண்பகல் பொழுதில் இரு குச்சிகளை வைத்து அவற்றின் நிழல் மூலம் காலத்தை அளவிட்ட பண்டைய நாட்களில், சூரியன் மிகச் செங்குத்தாக வான் உச்சியில் வரும்பொழுது கோலின் நிழல் சாய் கோண நிலையில் விழாமல், கோலின் அடியிலேயே விழும் நாள்தான் ஆண்டின் தொடக்கம் எனக் கொள்ளப்பட்டது. எனவே சித்திரைத் திங்களின் நிழலற்ற நாளில் இளவேனில் பருவத்துடன் தமிழர் புத்தாண்டு தொடங்குகிறது என விளக்குகிறார் (https://www.youtube.com/watch?v=idthwuXDA1s&t=382s).

நிழலற்ற நாள் என்பது பண்டைய நாட்களில் பருவ கால அளவீட்டின் பகுதியாக இருந்திருக்கக் கூடும். அதற்கான வாய்ப்புண்டு. இருப்பினும் இது ஓர் அறிவார்ந்த கணிப்பு (educated guess). இது மிகப் பொருந்தக்கூடிய ஒன்று என்றாலும், சான்றுக் குறிப்புகள் அற்ற ஒரு யூகம் என்பதில் ஐயமில்லை.
இதில் முக்கியமாக கவனிக்கப்பட வேண்டிய ஒன்று என்னவெனில்; நிழலற்ற நாள் என்ற வானியல் நிகழ்வு ஆண்டில் இருமுறை நிகழ்கிறது. புவிநடுக்கோட்டிற்கு (Equator) அருகில், கடக ராசிக்கும் (tropic of cancer) மகர ராசிக்கும் (tropic of Capricorn) இடையே உள்ள வெப்ப மண்டலப் பகுதியில் (tropical region) உள்ள இடங்கள் ஆண்டிற்கு இருமுறை நிழலற்ற நாட்களை எதிர்கொள்ளும்.

1. சூரியனின் வடதிசைச் செலவில் சித்திரையில் ஒருமுறை நிழலற்ற நாளும், 2. சூரியனின் தென்திசைச் செலவில் ஆவணியில் ஒருமுறையும் நிழலற்ற நாள் நிகழ்கிறது. மக்கள் சித்திரையில் வரும் நிழலற்ற நாளைப் பேசுவதைப் போல ஆவணியில் வரும் நிழலற்ற நாளுக்கு முக்கியத்துவம் தருவதாகத் தெரியவில்லை. சித்திரை புத்தாண்டு நிழலற்ற நாளில் என்ற கோட்பாடு ஆவணி நிழலற்ற நாளுக்கும் பொருந்துமன்றோ ?

நிழலற்ற நாள் (Zero Shadow Day) என்ற வானியல் நிகழ்வின் அறிவியல் பின்னணி:

தன்னைத்தானே சுற்றிக்கொண்டு, சூரியனை நீள்வட்டப்பாதையில் சுற்றி வரும் புவி தன் அச்சில் தோராயமாக 23.5° சாய்வாகச் சுற்றுகிறது. துருவங்கள் மாறி மாறி சூரியனை அணுகியும் விலகியும் சாய்கோணத்தில் சுற்றுவதால் புவியில் பருவநிலை மாறுதல்கள் ஏற்படுகிறது. வானில் சூரியனின் நகர்வு நாள்தோறும் மாறும். சூரியனுடைய நகர்வின் அடிப்படையில் (சூரியனைச் சுற்றிய பூமியின் சுழற்சியின் அடிப்படையில்) பருவங்கள் இயற்கையாக அமையும். புவியின் தென் துருவம் சூரியனை நோக்கிச் சாய்ந்து சுற்றுகையில் வடதுருவப் பகுதியில் நீண்ட இரவும், புவியின் வட துருவம் சூரியனை நோக்கிச் சாய்ந்து சுற்றுகையில் தென் துருவப் பகுதியில் நீண்ட இரவும் ஏற்படும்.



https://en.wikipedia.org/

புவியின் நிலநடுக்கோட்டிலிருந்து கிடைக்கோடு (Latitude) - மகரரேகை 23.5° அளவில் உள்ள தென் மண்டலப் பகுதியும், நிலநடுக்கோட்டிலிருந்து கிடைக்கோடு - கடக ரேகை 23.5° அளவில் உள்ள வட மண்டலப்பகுதியும் உள்ள புவியின் வெப்ப மண்டலப் பகுதியில் உள்ள இடங்கள் ஆண்டிற்கு இரண்டு நாட்களில் சூரியனை மிகச் சரியாக அதன் வான் உச்சியில் கொண்டிருக்கும், அந்நாட்களில் அப்பகுதியில் நிழலற்ற நாள் ஏற்பாடும். கடகரேகை மகரரேகைகளுக்கு அப்பால் உள்ள வட துருவ தென் துருவப்

பகுதிகளில் சூரியன் வான் உச்சியை அடையாது என்பதால் அப்பகுதிகளில் நிழலற்ற நாட்கள் ஏற்பட வாய்ப்பில்லை.

டிசம்பர் 22 குளிர்காலக் கதிர்த்திருப்ப நாள் (solstice), ஜூன் 21 கோடைக்கால கதிர்த்திருப்ப நாள். இவ்வாறு சூரியன் வட தென் திசைகளை நோக்கி மாறி மாறி நகர்வது சூரியனின் தென்திசைச் செலவு என்றும் சூரியனின் வடதிசைச் செலவு என்றும் அழைக்கப்படுகிறது.



சூரியனின் தென்திசைச் செலவு/தட்சிணாயனம் (ஜூன் 21 — டிசம்பர் 22);
சூரியன் வடக்கிலிருந்து தெற்கு நோக்கிச் செல்லும் காலத்தினை தென்திசைச் செலவு என்று கூறுகின்றனர். இக்காலம் ஆடி, ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி என ஆண்டின் ஆறு மாதங்களாகும். தென்திசைச் செலவு ஆடித் திங்களில் தொடங்கி மார்கழியில் முடிகிறது.

சூரியனின் வடதிசைச் செலவு/உத்தராயணம் (டிசம்பர் 22 — ஜூன் 21);
சூரியன் தெற்கிலிருந்து வடக்கு நோக்கிச் செல்லும் காலத்தினை வடதிசைச் செலவு என்று கூறுகின்றனர். இக்காலம் தை, மாசி, பங்குனி, சித்திரை, வைகாசி, ஆனி என ஆண்டின் ஆறு மாதங்களாகும். வடதிசைச் செலவு தைத்திங்களில் தொடங்கி ஆனியில் முடிகிறது. சூரியனின் வடதிசைச் செலவு தொடக்க நாளில் தமிழகத்தில் தைப்பொங்கல் கொண்டாடப்படுகிறது.

நிழலற்ற நாள் என்பது நிழல் காண இயலா நாள் ஆகும். அது சூரியன் நாம் இருக்கும் பகுதிக்கு மேல் நேர் செங்குத்தாக வான் உச்சியில் உள்ள நாள். அன்று நண்பகலில் நம் நிழல் நாம் பார்க்க இயலாதவாறு நம் காலடியிலேயே விழுவதால் நிழலற்ற நாள் என்ற பெயர் பெற்றது. சூரிய நகர்வினால் பிற நாட்களின் நண்பகலில் நம் நிழல் சாய்கோணத்தில் விழுவதால் நண்பகலில் நம்மால் நம் நிழலைக் காண இயலும். நிழலற்ற நாள் என்ற வானியல் நிகழ்வு

புவியின் வெப்பமண்டலப் பகுதியில் ஆண்டுக்கு இருமுறை நிகழ்வதன் காரணம் சூரியன் வடக்கிலிருந்து தெற்கிலும், தெற்கிலிருந்து வடக்கிற்கும் வலசை போவதால்தான். புவியின் நிலநடுக்கோட்டில் இருந்து துருவங்களுக்கு உள்ள சூரியனின் சாய்வுக் கோணம் அளவிடப்படும். இந்த சாய்வுக் கோணத்தின் பாகை அளவும், நாம் இருக்கும் பகுதியின் கிடைக்கோடு இருக்கும் பாகை அளவும் சமமாக இருக்கும் நாளில் சூரியன் நம் தலைக்கு மேல் வான் உச்சியில் இருக்கும்.



இந்தியாவின் நிழலற்ற நாட்கள்

இந்த ஆண்டின் முதல் நிழலற்றநாளாக, ஏப்ரல் 25, 2023ஆம் நாள் அதிகாரப்பூர்வமாகக் கொண்டாடப்பட்டது. ஏப்ரல் 25ம் நாளில் ஆண்டின் முதல் நிழலற்ற நாளை எதிர்கொண்ட இதே பகுதிகளில் அடுத்த நிழலற்ற நாள் ஆகஸ்ட் 17 ஆம் நாள் ஏற்படும். இந்த ஏப்ரல் 25 மற்றும் ஆகஸ்ட் 17, 2023 நிழலற்ற நாட்கள் சென்னை, பெங்களூரு, மங்களூரு பகுதிகளை ஒட்டி அவற்றுக்கு அருகில் நிகழும் நிழலற்ற நாட்கள். இப்பகுதிகள் சற்றொப்ப ஒரே கிடைக்கோட்டில் அமைந்துள்ள இடங்கள். சூரியனின் தொடர்ச்சியான நகர்வினால் நிழலற்ற நாட்கள் என்பது இந்தியாவின் வெவ்வேறு பகுதிக்கும் மாறுபடும் என்பதைக் கொடுக்கப்பட்டுள்ள படங்கள் தெளிவாக விளக்கும். எடுத்துக் காட்டாக; மதுரையில் - ஏப்ரல் 15, ஆகஸ்ட் 27 ஆகிய நாட்களிலும்; கோயம்புத்தூரில் - ஏப்ரல் 18, ஆகஸ்ட் 24 ஆகிய நாட்களிலும் நிழலற்ற நாட்கள் ஏற்படும்.

இந்தியத் துணைக்கண்ட நிலப்பரப்பில் நிழலற்ற நாட்கள் சூரியன் அப்பகுதிகளின் உச்சிக்கு வரும் நாளுக்கேற்ற வகையில் மாறுபடும். இவ்வாறு நிழலற்ற நாட்கள் தமிழகப் பகுதியில் நிகழும் நாட்கள் ஏப்ரல் 10 முதல் ஏப்ரல் 26 வரை ; ஆகஸ்ட் 16 முதல் செப்டெம்பர் 1 வரை.
தமிழ்நாடு, கேரளா பகுதிகளின் நிழலற்ற நாள்கள்:
10 ஏப்ரல் & 1 செப்டம்பர்— கன்னியாகுமரி, நாகர்கோவில், கூடங்குளம்

11 ஏப்ரல் & 31 ஆகஸ்ட்— கோவளம், திருவனந்தபுரம், திருச்செந்தூர்

12 ஏப்ரல் & 30 ஆகஸ்ட்— கொல்லம், தென்காசி, திருநெல்வேலி, தூத்துக்குடி

13 ஏப்ரல் & 29 ஆகஸ்ட்— கோவில்பட்டி, ராமேஸ்வரம், ராமநாதபுரம்

14 ஏப்ரல் & 28 ஆகஸ்ட்— ஆலப்புழா, சிவகாசி, விருதுநகர், பரமக்குடி

15 ஏப்ரல் & 27 ஆகஸ்ட்— கொச்சி, மதுரை, சிவகங்கை, காரைக்குடி

16 ஏப்ரல் & 26 ஆகஸ்ட்— கொடைக்கானல், திண்டுக்கல், வேதாரண்யம்

17 ஏப்ரல் & 25 ஆகஸ்ட்— திருச்சூர், பாலக்காடு, திருச்சி, நாகப்பட்டினம்

18 ஏப்ரல் & 24 ஆகஸ்ட்— கோயம்புத்தூர், கரூர், காரைக்கால், பூம்புகார்

19 ஏப்ரல் & 23 ஆகஸ்ட்— கோழிக்கோடு, ஊட்டி, ஈரோடு, சீர்காழி, சிதம்பரம்

20 ஏப்ரல் & 22 ஆகஸ்ட்— வயநாடு, முதுமலை, சேலம், நெய்வேலி, கடலூர்

21 ஏப்ரல் & 21 ஆகஸ்ட்— தர்மபுரி, விழுப்புரம், பாண்டிச்சேரி

22 ஏப்ரல் & 20 ஆகஸ்ட்— மைசூர், திருவண்ணாமலை, திண்டிவனம்

23 ஏப்ரல் & 19 ஆகஸ்ட்— ஓசூர், கிருஷ்ணகிரி, காஞ்சிபுரம், செங்கல்பட்டு

24 ஏப்ரல் & 18 ஆகஸ்ட்— மங்களூர், பெங்களூரு, வேலூர், ஆற்காடு, திருவள்ளூர்

25 ஏப்ரல் & 17 ஆகஸ்ட்— உடுப்பி, சித்தூர், திருத்தணி, மீஞ்சூர், புலிகாட்

26 ஏப்ரல் & 16 ஆகஸ்ட்— திருப்பதி, ஸ்ரீகாளஹஸ்தி, ஸ்ரீஹரிகோட்டா

இதில் நாம் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது என்னவெனில் சித்திரை ஆண்டு தொடக்கம் நிழலற்ற நாளில் ஏற்படுகிறது என்ற கூற்று ஆவணியில் புத்தாண்டு தொடக்கம் என்பதற்கும் மாறுபாடின்றி அப்படியே பொருந்தும்.

பழந்தமிழர்கள் ஆவணியில்தான் ஆண்டைத் தொடங்கினார்கள். இன்றும் பண்டைய தமிழகத்தின் ஒரு பகுதியாக அன்றைய சேரநாடாக இருந்த இன்றைய கேரளாவில் ஆவணியின் முதல்நாள்தான் புத்தாண்டு தொடங்குகிறது.

இன்றைய 1. வழக்காறுகள், 2. இலக்கண, 3. இலக்கிய, 4. நிகண்டுகள் மற்றும் 5. கல்வெட்டுகள் தரும் காலக்குறிப்புகள் அடிப்படையில் ஆவணியே தமிழ்ப் புத்தாண்டின் தொடக்கம் என்பதற்கான சான்றுகள் ‘ஆவணியே தமிழ்ப் புத்தாண்டின் தொடக்கம்’ என்ற கட்டுரையில் கீழ் வருமாறு காட்டப்பட்டுள்ளது.

(1) வழக்காறு: தமிழரிடம் இருந்து பிரிந்த சென்ற பழந்தமிழ் மலையாள உறவுகள் தங்களுக்கென பொ.ஆ. 825ஆம் ஆண்டு முதல் புதியதாகக் கட்டமைத்துக்கொண்ட 'கொல்லம் ஆண்டு' என்ற வளர்ச்சி முறைக் காலக் கணக்கிடல் முறையில் ஆண்டின் தொடக்கம் ஆவணியைத் தொடக்கமாகக் கொண்டிருக்கும் வழக்கம் ஒரு சான்று. இவ்வழக்கம் பழந்தமிழர் பண்பாட்டின் எச்சம் எனலாம். கேரளத்தில் ஆகஸ்ட் 17ஆம் நாள், ஆவணித் திங்கள் முதல் நாளில்தான் புத்தாண்டு தொடங்குகிறது. இது வழக்கில் உள்ள சான்று.

(2) இலக்கணம்: தொன்மையான தமிழ் நூலான தொல்காப்பியத்தின் பொருளதிகாரம் நூற்பா (அகத்திணையியல்: 6 — 10) அகத்திணை இயலில் ஐவகை நிலங்களுக்குரிய பொழுதுகளை வகுத்துரைக்கும் பொழுது; “காரும் மாலையும் முல்லை; குறிஞ்சி கூதிர் யாமம் என்மனார் புலவர்” என்று கார் காலத்தினைத் தொடக்கமாகக் கொண்டு கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என்னும் பெரும் பொழுதுகளைக் குறிப்பிட்டுள்ளார் தொல்காப்பியர். இத் தொல்காப்பிய நூற்பாவிற்கு உரை எழுதிய 14-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த நச்சினார்க்கினியரும் இதன் பொருளைத் தெளிவாக விளக்கி "காலவுரிமை எய்திய ஞாயிற்றுக்கு உரிய சிங்கவோரை முதலாகத் தண்மதிக்கு உரிய கற்கடகவோரை யீறாக வந்து முடியுந்துணை ஓர் யாண்டுமாதலின் அதனை இம்முறையானே அறுவகைப்படுத்து இரண்டு திங்கள் ஒரு காலமாக்கினார்" என்று விளக்கம் தருகிறார். அதாவது ஆவணி முதலாக ஆடி இறுதியாக உள்ள காலம் ஓர் ஆண்டாகும் என்று தெளிவு படுத்துகிறார். இது எழுத்தில் ஆவணப்படுத்தப்பட்ட சான்று.

(3) இலக்கியம்: தொல்காப்பிய நூற்பா சொல்வது போலவே சிலப்பதிகாரம், மதுரைக் காண்டம் (14. ஊர் காண் காதை: 86 — 125), 'கார்' அரசாளன் வாடையொடு வரூஉம் காலம் அன்றியும் (96) என்று தொடங்கும் பாடல் பகுதியில் இளங்கோவடிகள் கார் முதலிய ஆறு வகைப் பருவங்களையும் அதே முறையில் வரிசைப்படுத்தி எழுதியுள்ளார். மதுரை மாநகரத்து மகளிர் இளநிலா முற்றத்தில் தம் காதலருடன் படுக்கையில் கிடந்து பழைய நினைவுகளில் மனம் செலுத்தினராம். தங்களின் நினைவோட்டத்தில் அப்பெண்கள் கார்காலம், கூதிர்

காலம், முன்பனிக் காலம், பின்பனிக் காலம், இளவேனிற் காலம், முதுவேனிற் காலம் என வரிசையாக ஒவ்வொரு கால நிகழ்வுகளையும் நினைவு கூர்வதாக இளங்கோவடிகள் சொல்லிச் செல்கிறார்.

(4) நிகண்டுகள் (அகராதி நூல்கள்): ஆவணியே தமிழ்ப் புத்தாண்டின் தொடக்கம் என்பதற்கு மற்றொரு உறுதியான, எழுத்தில் ஆவணப்படுத்தப்பட்ட சான்றை முதல் நிகண்டான, 10 ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்ட சேந்தன் திவாகரம் என்னும் 'திவாகர நிகண்டு' கொடுக்கிறது.

"அறு வகைப் பருவமாவன
காரே, கூதிர், முன் பனி, பின் பனி,
(சீர்) இள வேனில், முது வேனில் (என்று ஆங்கு)
இரு மூன்று வகைப் பருவம்; (அவை தாம்
'ஆவணி முதலா' இரண்டு இரண்டாக
மேவின திங்கள் எண்ணினர் கொளலே)."



தமிழ்நாட்டுப் பகுதியில் நிழலற்ற நாட்கள்

— (6 பெயர்கள்) [சேந்தன் திவாகரம்-தெய்வப் பெயர் தொகுதி-134]

இருதிங்கள் சேர்ந்த காலப்பகுதி பருவம் எனப்படும். ஆவணி தொடங்கி இரண்டிரண்டு மாதங்களாக முறையே கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என ஆறு பருவங்களைக் கொண்டது ஓர் ஆண்டு என்பதாகவும், கார் பருவத்தை முதன்மையாக வைத்து அது தொடங்கும்

ஆவணி முதலாக வைத்துப் பிற மாதங்களை எண்ணியுள்ளனர் என்பதை இப்பாடல் கூறுகிறது. எனவே இந்த நூல் 10 ஆம் நூற்றாண்டிற்கும் முற்பட்ட தமிழக இலக்கிய வழக்காறுகளைப் பதிவு செய்யும் ஆவணமாக இது திகழ்கிறது என்பதை மறுக்க இயலாது. இதுவும் ஆண்டின் தொடக்கத்தைக் கார்ப்பருவத்தினை முதலாகக் கொண்டு, ஆவணி மாதத்திலிருந்து தொடங்கினர் பழந்தமிழர் என்ற தொல்காப்பிய நூற்பாவை அடியொட்டியே அமைந்துள்ளதைக் காணலாம். ஒவ்வொரு பருவத்திற்கும் இரண்டிரண்டு திங்களாகக் காலத்தைப் பகுத்த முறையை "ஆவணி முதலா இரண்டிரண்டாக மேவின திங்கள் எண்ணினர் கொளலே" என்றுதான் திவாகரப் பாடல் குறிப்பிடுகிறது.



திவாகரா நிகண்டைத் தொடர்ந்து, அதையொட்டி விரித்து எழுதப்பட்ட பிங்கலநிகண்டும் "ஆவணி முதலா இரண்டு இரண்டாக மேவிய திங்கள் எண்ணினர் கொளலே. (வான்வகை சூத்திரம் 210) " என்ற ஆண்டுப் பிறப்பு ஆவணி முதலாகத் தொடங்குகிறது என்றே கூறுவதுடன் சித்திரையில், வசந்தத்தில் ஆண்டு தொடங்குவது ஆரிய சமஸ்கிருத வழக்கம் என்றும் கூறுகிறது. இந்த வரிசையில் காலத்தால் பிற்பட்ட, 16 ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட சூடாமணி நிகண்டு ஆண்டின் தொடக்கம் என்பதை, "ஆவணியே ஆதி" மற்று இரண்டு இரண்டு மாதம் பருவம் மூவிரண்டும் ஆய்ந்து பார்த்திடின் வாய்த்த பேராம். (சூத்திரம் 6 பெயர்கள்-95) என்று அறுதியிட்டுக் கூறுகிறது. எனவே 16 ஆம் நூற்றாண்டு வரை தமிழர்களுக்கான

ஆண்டின் தொடக்கம் ஆவணியில் தொடங்குகிறது என்பதற்கு உறுதியான, எழுத்தில் ஆவணப்படுத்தப்பட்ட சான்றுகள் நிகண்டுகளிலும் இருக்கின்றன.

(5) கோயில் கல்வெட்டுகள்: திருவல்லிக்கேணி கோயிலில் கிடைக்கும் கல்வெட்டுகளை அவை வெட்டப்பட்ட காலமான 9ஆம் நூற்றாண்டு முதல் 19ஆம் நூற்றாண்டுவரை காலக்கோட்டில் வரிசைப்படுத்தி ஆராய்ந்ததில்; பிரபவ முதல் அட்சய என்று வடமொழியில் பெயரிடப்பட்டுள்ள "அறுபது வியாழ வட்ட ஆண்டுகள்" கொண்ட கணக்கு விஜயநகர மன்னர்கள் ஆட்சியில்தான் தொடங்குகிறது என்பதைத் தெரிந்து கொள்ள முடிந்தது. இந்தக் காலக் குறிப்பு மாற்றம் விஜயநகர ஆட்சிக் காலக் கல்வெட்டுகள் தொடங்கித்தான் திருவல்லிக்கேணி கோயிலில் கிடைக்கிறது. விஜயநகர ஆட்சிக் காலத்திற்கு முன்னர், இந்தப் பேரரசின், இந்த மன்னரின், இத்தனையாவது ஆட்சிக் காலத்தில் வெட்டப்பட்ட கல்வெட்டு இது என்று குறிப்பிடும் முறைதான் கல்வெட்டுகளில் முன்னர் வழக்கமாக இருந்திருப்பது தெரிகிறது.

ஆகவே மேற்குறிப்பிட்ட,

(1) பழந்தமிழர் காலக் கணக்கீட்டின் தொடர்ச்சியாக பண்டையத் தமிழ் உறவுகளான கேரள நாட்டில் வழக்கில் இருக்கும் கொல்லம் ஆண்டு கணக்கிடல் முறை,

(2) தொல்காப்பியரின் பொருளதிகாரம் (அகத்திணையியல்: 6 — 10),

(3) சிலப்பதிகாரம், மதுரைக் காண்டம் (14. ஊர் காண் காதை: 86 — 125),

(4) திவாகர, பிங்கல, சூடாமணி நிகண்டுகள் தரும் செய்திகளின் ஒப்பீடு,

(5) திருவல்லிக்கேணி கோயிலின் கல்வெட்டுத் தொடர் வரிசை அறியத் தரும் செய்திகள் மூலம் ஆவணியே தமிழர்களுக்கான ஆண்டின் தொடக்கமாக இருந்திருக்கிறது என்பது தெளிவாகிறது.

இப்பொழுது இந்த வரிசையில் . . .
முன்னர் கொடுக்கப்பட்ட நிழலற்ற நாள் ஆண்டின் தொடக்கம் என்ற வானியல் மற்றும் அறிவியல் அடிப்படை விளக்கமும் பொருந்துவதைக் காணலாம்.

பிற்காலத்தில் தமிழகத்தில் ஏற்பட்ட நிகழ்வுகளால் ஆட்சிகளும் சமயக் காட்சிகளும் மாறியதும், அவற்றின் எதிரொலியாகத் தமிழரின் காலக்கணக்கிடலில் மாற்றம் நிகழ்ந்துள்ளதும் சான்றுகள் மூலம் தெளிவாகிறது.

தமிழ் நாட்டை ஆண்ட அந்நியர்களான நாயக்கர்கள் ஆட்சிக் கால கட்டத்தில் ஆரூடம் பார்க்க வழக்கிலிருந்த ஆரிய வைதீகப் பண்பாட்டின் சித்திரைத் திங்களைத் தொடக்கமாகக் கொண்ட காலக் கணக்கிடும் முறை தமிழகத்தின் கோயில் வளாக எல்லையைக் கடந்து பொதுமக்களின் வாழ்வுமுறையில் நுழைந்துள்ளது. இம்மாற்றம் சோதிட நாட்காட்டியின் அடிப்படையில் அக்கால அரச ஆதரவுடன் ஏற்படுத்திக் கொண்ட மாற்றம் என்பதும் தெளிவாகிறது. தமிழகத்தில் அதுவரை வழக்கத்திலிருந்த ஆவணிப் புத்தாண்டு முறை நீக்கப்பட்டு வைதீக சித்திரைப் புத்தாண்டு வழக்க முறைக்கு புத்தாண்டு மாற்றப்பட்டது என்றுதான் தரவுகள் மூலம் முடிவெடுக்க இயலும். ஆகவே தரவுகளின் அடிப்படையில் பழந்தமிழர் ஆவணித் திங்களையே ஆண்டின் தொடக்கமாகக் கொண்டிருந்தனர். ஆவணியே தமிழ்ப் புத்தாண்டின் தொடக்கம் என்று உறுதியாகக் கூறலாம்.

கட்டுரைக்கு உதவியவை:

நிழல் இல்லா நாள்
https://astron-soc.in/outreach/wp-content/uploads/2023/04/ZSD_Tamil.pdf

தமிழ்நாடு-கேரளா நிழல் இல்லா நாள்
https://astron-soc.in/outreach/wp-content/uploads/2017/04/zsd_kerala_tn.jpg

நிழல் இல்லா நாள் - ஆண்ட்ராய்ட் கைபேசி செயலி
https://play.google.com/store/apps/details?id=com.alokm.zsd

The Public Outreach & Education Committee of the Astronomical Society of India (ASI - POEC)
https://astron-soc.in/outreach/activities/zero-shadow-day/

India Sunrise and Sunset Times
https://www.sunrisesunsettime.org/asia/india/

சித்திரை தமிழர் புத்தாண்டு -பேராசிரியர் முனைவர் சி.கோ.தெய்வநாயகம்
https://www.youtube.com/watch?v=idthwuXDA1s&t=380s

ஆவணியே தமிழ்ப் புத்தாண்டின் தொடக்கம், தேமொழி, இலக்கிய மீளாய்வு, பக்கம் 97- 112, தமிழ் மரபு அறக்கட்டளை பதிப்பகம், 2023.

நன்றி: படங்கள் உதவி — விக்கிப்பீடியா மற்றும் இந்திய வானியல் கழகத்தின் கல்வி, பொதுமக்கள் தொடர்பு குழு
https://astron-soc.in/outreach/activities/zero-shadow-day/

2. அறிஞர் அண்ணா எழுதிய "செவ்வாழை" - சிறுகதைத் திறனாய்வு

முனைவர் தேமொழி,
சான் ஃபிரான்சிஸ்கோ, யு.எஸ்.ஏ.

தன் மனதின் உணர்வுகளை வெளியில் கொட்டுவதற்காகக் கதைகள் எழுதுவோர் ஒருவகை; அவ்வாறு தன் உணர்வைக் கதைகளாக எழுதும் பொழுது அவற்றால் இச் சமுதாயத்தில் மாற்றம் வர வேண்டும் என்று எழுதுவோர் மற்றொரு வகை. "புத்தகங்கள் மூலமே பழங்கருத்துகளை நீக்கி, பாசி படிந்த எண்ணங்களைப் போக்கி, நல் வாழ்வுக்கான நல்லறிவுக் கருத்துகளை, புதுமை எண்ணங்களை ஏற்படுத்த முடியும்" என்ற கொள்கை கொண்ட அறிஞர் அண்ணாவின் எழுத்து இரண்டாவது வகை. 'செவ்வாழை' என்னும் சிறுகதையின் குறிக்கோளும் அதுவே.

"செங்கோடன், அந்தச் செவ்வாழைக் கன்றைத் தன் செல்லப் பிள்ளை போல் வளர்த்து வந்தான்" என்ற வரி அந்த ஏழை விவசாயி, தனது உழைப்பில் வளரும் தனது வீட்டுத் தோட்டத்துச் செவ்வாழையை எத்தகைய கருவூலமாகக் கருதினான் என்று காட்டுகிறது. பண்ணை மருமகளின் பிறந்தநாளுக்காகச் சிறப்புக் கோயில் ஆராதனைக்குக் கணக்குப்பிள்ளை சுந்தரம், "கடையில் நல்ல பழங்கள் இல்லை. நம் செங்கோடனின் கொல்லையில் தரமாக ஒரு செவ்வாழைக் குலை இருக்கு" என்று கூறி அதைக் கொண்டுவர ஏற்பாடு செய்கிறான். அதில்

நான்கு சீப்பு வாழைப் பழங்களைக் கடையில் விற்று வரும்படியும் பார்த்துவிடுகிறான் அந்த இடைத்தரகன். ஓர் ஏழை உழவனின் உழைப்பு அவனுக்கோ அவன் குடும்பத்திற்கோ கிடைக்காமல் செய்கிறான் அக்கயவன் கணக்குப்பிள்ளை.



தன் வீட்டுப் பழமே கடையில் விற்பனைக்கு இருக்கும் பொழுது கையில் இருக்கும் காலணாவுக்குச் செங்கோடனின் மகன் கரியனால் அதை வாங்க முடியாமல் “பழம், ஒரு அணாடா பயலே. காலணாவுக்குச் செவ்வாழை கிடைக்குமா... போடா” என்று கடைக்காரனால் அவன் விரட்டப்படும் பொழுது அந்தச் சிறுவனின் ஏக்கமும், குலை வெட்டப்பட்டச் செவ்வாழை, இறந்துவிட்ட தன் பாட்டியின் பாடையில் கட்டப்படும் பொழுது பாடையைக் காட்டி, “எங்க வீட்டுச் செவ்வாழைடா” என்று அவன் பெருமை பேசும் பொழுதும் எவருக்கும் மனதில் கழிவிரக்கம் தோன்றும்.

சமூகச் சீர்திருத்தம் நோக்கி மக்களைச் சிந்திக்க வைக்கவேண்டியது எழுத்தாளரின் நோக்கம் என்றால் அது நிறைவேறிவிட்டது. கதையின் கரு அக்காலத்தில் மட்டுமல்ல, இன்றும் பொருந்தும். உழைக்கும் வர்க்கத்தின்

வறிய நிலையையும், முதலாளி வர்க்கம் அவர்கள் உழைப்பை மதிக்காமல் உறிஞ்சி வாழும் வளர்ச்சியையும் பார்க்கையில் இது போன்று வஞ்சிக்கப் படும் தொழிலாளர்களின் நிலையை எடுத்துரைக்க, பலர் சமூகச் சீர்திருத்த நோக்கில் கதைகள் எழுதவேண்டியது தேவையாகிறது. அண்ணாவின் கேள்வியே படித்துமுடித்தபின் மனதில் எதிரொலித்துக் கொண்டிருக்கிறது. “உழைப்பவனுக்குத்தான் நிலம் சொந்தம், பாடுபடாதவன் பண்ணையாராக இருக்கக் கூடாது என்று சொல்லும் காலம் எப்போதாவது வருமா”. செங்கொடிப் பொதுவுடைமைக் கருத்து கொண்ட கதையின் நாயகனுக்குச் செங்கோடன் என்று பெயர் சூட்டி, வாழையையும் செவ்வாழையாகக் காட்டிய அண்ணாவின் உள்நோக்கத்தைப் பாராட்டாமல் இருக்க முடிய வில்லை.

1. ஆரை வேய்ந்த அறைவாய்ச் சகடம்

முனைவர் தேமொழி

சான் ஃப்ரான்சிஸ்கோ, அமெரிக்கா

தலைவனைப் பிரிந்து வாடும் தலைவியின் பொலிவிழந்த நிலை தோழியை வருத்துகிறது. தலைவிக்கு ஆறுதல் சொல்கிறாள். அப்பொழுது தலைவி தோழியிடம் தங்களுக்கென நிலையான ஒரு இருப்பிடம் இன்றி ஊர் ஊராகச் சென்று கூத்து நடத்துபவர்கள் மூதூர் ஒன்றில் கூத்து நிகழ்த்திவிட்டு வேறு ஊருக்குச் சென்றுவிடுவார்கள். அவர்கள் இருந்தபொழுது ஆரவாரமாக இருந்த மன்றம் பொலிவிழந்த நிலையில் இருப்பதைப் பார்க்கும் ஊர் மக்கள் வருந்துவார்கள். அது போன்று தலைவன் இருந்த பொழுது மகிழ்ச்சியுடன் பொலிவுடன் இருந்த என் வாழ்க்கை அவன் பிரிவுக்குப் பின் வறண்டு போயுள்ளது, அதைக் காணச் சகியாது நீ வருந்துகிறாய் என்று கூறுவதாக அதியன் விண்ணத்தனார் எழுதிய ஒரு அகநானூற்றுப் பாடலில் கூறுவார். இப்பாடல் கூத்தர்களின் கவலையற்ற மகிழ்ச்சியான வாழ்க்கைமுறையை விரிவாகக் கூறும் பாடலாக அமைந்திருக்கும். இப்பாடலில் கூத்தர்கள் தங்கள் வண்டியில் செல்லும் நிலை விவரிக்கப்பட்டிருக்கும்.

நீர் வாழ் முதலை ஆவித்தன்ன
‘ஆரை வேய்ந்த அறைவாய்ச் சகடத்து’,
ஊர் இஃது என்னாஅர் ஊறு இல் வாழ்க்கை

[அகநானூறு *301*, அதியன் விண்ணத்தனார், வரிகள் *6-8*]

இந்த வரிகள் கூறுவது; நீரில் வாழும் முதலை அகல வாய்திறந்து கொட்டாவி விட்டால் எப்படி இருக்குமோ அவ்வாறு அந்த வண்டியின் அமைப்பு இருக்கும். பனையோலைப் பாய் கூரையாக வேயப்பட்டிருக்கும் அந்தக் கூண்டு வண்டியின் சக்கரங்கள் தரையை அறைத்து ஒலியெழுப்பிச் செல்லும். இவ்வாறாக தங்கள் ஊர் இது என்ற கூற வழியின்றி தடையற்ற வாழ்வைக் கொண்டவர்கள் கூத்தர்கள் என்று விவரிக்கப்பட்டிருக்கும்.

நீரில் வாழும் முதலை அகல வாய்திறந்து கொட்டாவி விடும் அமைப்பில் வண்டியா? என்று வியப்பாக இன்று இருக்கலாம். ஆனால் அத்தகைய வண்டிகள் சங்க காலம் முதல் 19 நூற்றாண்டு வரையிலும், ஏன் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதி வரை கூட மக்கள் பயன்பாட்டில் இருந்துள்ளது. புகைப்பட தொழில் நுட்பம் கண்டுபிடிக்கப்பட்ட பிறகு புகைப்படங்களில் இத்தகைய வண்டிகள் ஆவணப்படுத்தப் பட்டுள்ளன. குறிப்பாக இலங்கை தேயிலைத் தோட்டப் பகுதியில் எடுக்கப்பட்ட படங்களில் இந்த வகை வண்டிகள் பதிவாகியுள்ளன.

அகநானூறு காட்டும் கூத்தர் வண்டி போன்றே கடியலூர் உருத்திரங் கண்ணனார் எழுதிய பெரும்பாணாற்றுப்படை பாடல் ஒன்று உமணர்(உப்பு விற்பவர்) வண்டி ஒன்றை விவரிக்கும். அவ்வண்டியும் 'ஆரை வேய்ந்த அறைவாய்ச் சகடம்' என்றே கூறப்பட்டிருக்கும். பாதை வழியே ஊடறுத்துச் செல்லும் இந்த ஆரை வேய்ந்த அறைவாய்ச் சகடத்தை ஓட்டுபவள் மடியில் குழந்தையை வைத்திருக்கும் ஒரு பெண், அவள் மாட்டை அடித்து விரட்டி ஓட்டுகிறாள்.

மாரிக் குன்றம் மழை சுமந்தன்ன

'ஆரை வேய்ந்த அறைவாய்ச் சகடம்'

வேழம் காவலர் குரம்பை ஏய்ப்பக்

கோழி சேக்கும் கூடுடைப் புதவின்

[பெரும்பாணாற்றுப்படை, வரிகள் 49-52]

இந்த வரிகள் கூறுவது; மழைக்காலத்தில் தனது முகட்டில் மேகத்தைச் சுமந்து நின்ற மலையைப் போல, பனையோலைப் பாய் கூரையாக வேயப்பட்டிருக்கும் அந்தக் கூண்டு வண்டியின் கூரைமீது வைக்கப்பட்டிருக்கும் கோழிக்கூட்டைக் கொண்ட அந்த உமணர்க் கூண்டு வண்டியின் சக்கரங்கள் தரையை அறைத்து ஒலியெழுப்பிச் செல்லும். கானவர்கள் பயிரிட்டுள்ள தினையை அழிக்க வரும் யானைகளிடம் இருந்து காப்பதற்காக அவர்கள் புனங்களின் இடையில் அமைத்திருக்கும் நிழல் தரும் குடில் கொண்ட பரணைப் போலக் காட்சி அளிக்கிறதாம் வண்டிக் கூரைமீது வைக்கப்பட்டிருக்கும் அந்தக் கோழிக்கூடு. (பெரும்பாணாற்றுப்படை - விளக்கவுரை: புலவர் கா. கோவிந்தன். 1996, பக்கம் -50)

இன்றைய நாளில் ஊர்திகளின் மேல் நாம் சரக்கு ஏற்றிச் செல்வது போல (Carrier/Roof rack) அக்காலத்தின் கூண்டு வண்டியின் கூண்டின் மேலும் சரக்கு ஏற்றிச் சென்றுள்ளது இதனால் தெரிகிறது.

Bullock carts for transporting tea, Ceylon, (Sri Lanka) c.1890

Double Bullock Carts – Ceylon (Sri Lanka) c1890's



Bullock cart, India. People with a bullock cart, India. c1890



1877-COVERED BULLOCK CART



Man with ox-drawn cart, India. Date: circa 1920s

ஆரை வேய்ந்த அறைவாய்ச் சகடம் என்பது பனையோலைப் பாய் வேய்ந்த, செல்லும் வழியை ஒலியுடன் அறுக்கும் கூண்டு வண்டி என்பதையும், அந்தக் கூண்டின் அமைப்பு வாய்திறந்து கொட்டாவி விடும் முதலையின் வாய் போன்ற அமைப்பில் இருக்கும் என்பதையும், அதன்மேல் சரக்கு வைக்கும் கூடு மலையின் மேல் மழைமேகம் தங்கி இருப்பது போல இருக்கும் என்றும் தொகை இலக்கியப் பாடல் வரிகளின் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது. அந்த அமைப்பில் உள்ள மாட்டு வண்டிகள் சென்ற நூற்றாண்டு வரை பயன்பாட்டில் இருந்தும் உள்ளன என்பதை ஒளிப்படங்கள் மூலம் அறியவும் முடிகிறது.

3. என்றென்றும் பெரியார்!

முனைவர் தேமொழி
சான் ஃபிரான்சிஸ்கோ, யு.எஸ்.ஏ.

ஆயிற்று; பெரியார் ஈரோடு வெ.ராமசாமி அவர்கள் மறைந்த டிசம்பர் 24, 1973 நாள் முதல், இந்த டிசம்பர் 24, 2023 வரை அவர் மறைந்து 50 ஆண்டுகள் முற்றிலும் நிறைவு பெற்றுவிட்டது!!! இருப்பினும் தமிழ் நாட்டில் அவரது தாக்கம் குறைந்ததாகத் தெரியவில்லை! அவர் மறைந்து அரை நூற்றாண்டுக்குப் பிறகும் மறுக்கமுடியாத வகையில் பெரியாரின் தாக்கம் இன்றும் தொடர்கிறது. பெரியார் யார்? என்ற கேள்விக்கு விடையளிக்கும் வண்ணம் திரைப்படம் உட்பட, எண்ணற்ற நூல்களும், கட்டுரைகளும், கவிதைகளும், காணொளிகளும் வெளியாகி தமிழக வரலாற்றில் பெரியார் ஈ.வெ.ராமசாமி அவர்களின் பங்களிப்பை விவரித்துள்ளன. அவரது பிறந்த நாள், மறைந்த நாள் ஆகிய நாட்களில் அவரை நினைவு கூர்வது மட்டுமின்றி, இந்த ஆண்டின் பிற நாட்களிலும் அவர் ஒரு பேசு பொருளாகத்தான் இருக்கிறார் என்பதற்குப் பல நிகழ்ச்சிகளைக் குறிப்பிடலாம். இந்த ஆண்டு மட்டுமன்று, கடந்த ஆண்டுகளிலும் இதே கதைதான்.

இன்றிலிருந்து ஆறு ஆண்டுகளுக்கு முன்னர், 2017 ஆம் ஆண்டில், சென்னை 40வது புத்தகக் காட்சியில் அதிகம் விற்பனையாகி சாதனை படைத்த நூல் ‘பெரியார் இன்றும் என்றும்’ என்ற தலைப்பில் விடியல் பதிப்பகம் வெளியிட்ட, சற்றொப்ப 1000 பக்கங்களைக் கொண்ட ஒரு பெரிய நூல். சமுதாயம், மதம், கலைகள், சாதி, தேசியம் என 21 தலைப்புகளில் பெரியாரின் எழுத்தும்

பேச்சும் வகை பிரிக்கப்பட்டுத் தொகுக்கப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பாக இந்த நூல் அமைந்திருந்தது. இது அதிகம் விற்ற நூல் என்பது மட்டுமல்ல, ஒரே புத்தகக்காட்சியில் முதல் பதிப்பு உடனே விற்றுத் தீர்ந்துவிட, இரண்டாம் பதிப்பும் உடனே வெளியிடப்பட்டு அதுவும் விற்பனையில் சாதனை படைத்தது. ஆம், அதிக எண்ணிக்கை என்பது மட்டுமல்ல, ஒரே புத்தகக்காட்சியில் உடனுக்குடன் இரண்டு பதிப்புகளும் விற்று சாதனை படைத்த நூல் என்ற பெருமைக்கு உரியது `பெரியார் குறித்த நூல்தான். பெரியாரின் சீர்திருத்தக் கருத்துகளுக்கு என்றைக்கும் மக்களிடம் வரவேற்பு உண்டு என்பதையே இது காட்டுகிறது என்று செய்தித்தாள்கள் செய்திகள் வெளியிட்டன [1].

பெரியார் மறைந்த இந்த 50 ஆம் ஆண்டு, வைக்கம் போராட்ட நூற்றாண்டும் கூட. வைக்கம் போராட்டம் இந்தியாவின் சமூகநீதிக்கான ஒரு வரலாற்றுத் திருப்புமுனை. கோட்டயம் மாவட்டத்தில் உள்ள வைக்கம் என்ற ஊரிலிருந்த மகாதேவர் கோயிலைச் சுற்றியிருந்த தெருக்களில், தாழ்த்தப்பட்டவர்கள், ஈழவர்கள், தீயர்கள், புலையர்கள் என்று சொல்லக்கூடியவர்கள் நடமாடக் கூடாது என்றிருந்த தடையை நீக்க, சென்ற நூற்றாண்டில் வைக்கம் போராட்டம் நடத்தப்பட்டது. பிரித்தானிய இந்தியாவின் திருவாங்கூர் சமஸ்தானத்தில் தீண்டாமைக்கு எதிராக நடைபெற்ற இப்போராட்டம் 1924 மார்ச் 30 முதல், 1925 நவம்பர் 23ஆம் தேதி வரை தொடர்ந்து நடைபெற்றது. போராட்டத்தை வழிநடத்திய கேரள போராட்டத் தலைவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டு அரசால் சிறையில் அடைக்கப்பட்டதும் இடையில் இப்போராட்டம் தொய் வடைந்தது. இந்த நிலையில் கேரள போராட்டக் குழுவினரின் அழைப்பை ஏற்று வைக்கம் போராட்டத்தில் பெரியார் ஈ.வெ.ரா. பங்கேற்றார். இப்போராட்டத்தில் பெரியார் ஈ.வெ.ரா. அவர்களின் பங்களிப்பு மிகவும் குறிப்பிடத்தக்கது. இப்போராட்டத்தில் தடையை மீறிப் போராடினார் என்று பெரியார் இருமுறை கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். முதல் முறை கைதாகி சிறைத்தண்டனை முடிந்து விடுவிக்கப்பட்ட பிறகு, ஊரை விட்டு வெளியேறாமல் தடை ஆணையை மீறி மீண்டும் போராட்டத்திற்குச் சென்றதால் மீண்டும் சிறையில் அடைக்கப்பட்டார். பெரியார் ஓர் அரசியல் கைதி என்ற தகுதியும் அவருக்கு மறுக்கப்பட்டு சிறையில் கடுங்காவல் தண்டனைக்கு உள்ளாக்கப் பட்டார் [2].

கேரளாவின் சனாதன ஆதிக்க சக்திகளால் அடக்குமுறைக்கு ஆளான ஒடுக்கப்பட்டவர்களின் போராட்டமாகத் தொடங்கிய வைக்கம் போராட்டம், இந்திய அளவில் கவனத்தை ஈர்த்த ஓர் உரிமைப் போராட்ட நிகழ்வாக வரலாற்றில் பதிவாகியுள்ளது. பின்னாளில் இந்தியாவில் நிகழ்ந்த பல கோவில் நுழைவுப் போராட்டங்களின் துவக்கப்புள்ளி தான் இந்த வைக்கம் போராட்டம். அண்ணல் அம்பேத்கர் 3.3.1930 அன்று முன்னெடுத்த, நாசிக் நகரில் உள்ள காலாராம் கோயில் நுழைவுப் போராட்டமும், வைக்கம் போராட்டம் தந்த தாக்கமே. திரு.வி.க. அவர்கள் நடத்திய நவசக்தி இதழில் பெரியாரை வைக்கம் வீரர் என்று புகழ்ந்து பாராட்டினார். "வைக்கம் வீரர் சொற்பொழிவு" என்ற தலைப்பில் பெரியாரின் போராட்டக் காலச் சொற்பொழிவை 'நவசக்தி' 1924ஆம் ஆண்டு இதழில் திரு. வி. க. வெளியிட்டார் [3]. வைக்கம் போராட்டத்தில் பெரியாரின் பெரும் பங்களிப்பைப் போற்றி, கேரள அரசும் தமிழ்நாடு அரசும் இணைந்து வைக்கம் போராட்ட நூற்றாண்டை ஏப்ரல் மாதம் 1, 2023-ஆம்தேதி அன்று நடந்த நிகழ்ச்சியில் நினைவு கூர்ந்தன. பெரியார் தொண்டினைப் போற்றி இரு மாநில அரசுகளின் சார்பிலும் வைக்கம் வீரருக்குப் புகழ் வணக்கம் செலுத்தப் பட்டது. வரலாற்றுச் சிறப்புமிக்க இப்போராட்டத்தின் நூற்றாண்டு விழாவினை ஏப்ரல் மாதம் 1-ஆம்தேதி முதல் 603 நாட்கள் மிகச்சிறப்பாகக் கொண்டாட கேரள அரசும் முடிவு செய்துள்ளது [4].

அண்டை மாநிலத்தில் மட்டும் அல்ல, அயல் நாட்டிலும் பெரியாரின் புகழ்க்கொடி உயரப் பறக்கிறது. அண்மையில் நவம்பர் 5, 2023 அன்று சிங்கப்பூர் பெரியார் சமூக சேவை மன்ற ஏற்பாட்டில் “பெரியார் விழா 2023” நடைபெற்றது. இவ்விழாவில் பங்கேற்று இஸ்ரோ முன்னாள் திட்ட இயக்குநர் அறிவியலாளர் மயில்சாமி அண்ணாதுரை அவர்கள் “பெரியாரும் அறிவியலும்” என்ற தலைப்பில் உரையாற்றினார் (https://www.youtube.com/watch?v=01sP83hB3kY). சமூக ஊடகங்களில் உள்ளவர்களால் பெரியார் குறித்த இவ்வுரை பரபரப்பாக விவாதிக்கும் நிலையையும் எட்டியது [5].

மறைந்து 50 ஆண்டுகளுக்குப் பிறகும் இத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும் பெரியார் ஈ.வெ.ரா.வின் கொள்கைகள்தான் என்ன? என்ற வியப்பு எழாமல் இருக்காது. பெரியார் முன்னெடுத்த போராட்டங்களுக்கும் புரட்சிகளுக்கும் அடிப்படையாக அமைந்தது அனைவரும் சமம் என்ற சமத்துவ அடிப்படையிலான அவரது சமூக நீதிக் கொள்கைதான். மக்கள் அனைவருக்கும் பொதுவானவை அவர் மொழிந்த சுயமரியாதை, பகுத்தறிவு, சமத்துவம், மனித நேயம், பெண்கள்

முன்னேற்றம், சமய சார்பற்ற அரசியல், அறிவியல் மனப்பான்மை ஆகியவை. இவையாவும் பெரியாரியத்தின் அடிப்படைக் கூறுகள். ஆதிக்கங்களுக்கும் அடக்குமுறைக்கு எதிரானவர் பெரியார். அவரின் கொள்கைப்படி பேதம் கூறும் சாதியை எது, அல்லது எவர் முன்னிறுத்தினாலும் அவர் எதிர்ப்பார். அது யாராக இருந்தாலும் சரி, எதுவாக இருந்தாலும் சரி. நலிந்தவர் நலன் அவருக்கு முக்கியம். இதுதான் பெரியார் தம் சொற்பொழிவுகள் மூலமும் எழுத்துக்கள் மூலமும் மக்களுக்கு ஊட்டிய விழிப்புணர்வு, தமிழ் நாட்டிற்கு அவர் அளித்த மறுமலர்ச்சி.

"உலகில் சமதர்ம உணர்ச்சிக்கு விரோதமான தன்மைகளில் மற்ற தேசத்திற்கும் இந்தியாவுக்கும் ஒரு முக்கியமான வித்தியாசம் இருந்து வருகிறது. அதென்ன வென்றால், மற்ற நாடுகளில் ஒரு விஷயந்தான் முக்கியமாய்க் கருதப்படுகின்றது. அதாவது முதலாளி (பணக்காரன்), வேலையாள் (ஏழை) என்பதுவேயாகும். ஆனால் இந்தியாவிலோ மேல் ஜாதியார் - கீழ் ஜாதியார் என்பது ஒன்று அதிகமாகவும், முதன்மையாகவும் இருப்பதால் அது பணக்காரன் - ஏழை தத்துவத்திற்கு ஒரு கோட்டையாக இருந்து காப்பாற்றிக் கொண்டு வருகிறது" [6] என்று மிகச் சரியாக இந்தியாவின் சமத்துவமின்மை எவ்வாறு பிற உலக நாடுகளில் இருக்கும் சமத்துவமின்மையில் இருந்து வேறுபட்டது என்று அதன் அடிப்படையை இனங்கண்டார். நோய் நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும் வாய் நாடி வாய்ப்பச் செயல் [குறள் -48] என்பதற்கு இணங்க இந்தியாவின் சாதிபேதம் கூறும் நோய்க்குப் பல நூறு ஆண்டுகளாக அதைக் கட்டிக் காக்கும் வைதீக சமயத்தின் பிறப்பு அடிப்படையிலான பேதம் கூறும் சனாதனக் கருத்துகள்தான் ஆணிவேர் என்பதையும் இனங்கண்டு கொண்டார். அந்த நச்சு மரத்தை அழிக்க வேருடன் நீக்க நாத்திக வழியில் தாக்குதல் தொடுத்தார். சுருக்கமாக, பெரியாரின் கொள்கை, பெரியாரின் சமூக பங்களிப்பு என்பன, மனிதநேயமற்ற நடவடிக்கைகளைக் கண்டித்ததும், அந்த மனிதநேயமற்ற நடவடிக்கைக்கு மூலகாரணத்தைக் குறிவைத்துத் தாக்கி ஆட்டம் காண வைத்ததும் ஆகும்.

பெரியார் நடத்திய போராட்டங்களின் பட்டியல் நெடியது. அத்தனை போராட்டங்களின் மையக் கருத்து எதுவென நோக்கினால், அவை அனைத்திற்கும் அடிப்படை நோக்கம் ஏதோ ஒரு அடக்குமுறையை எதிர்த்துச் செய்யப்பட்ட ஆர்ப்பாட்டங்களாகவே அவை இருக்கும். மனிதநேயம், சமத்துவம், சமூகநீதி ஆகியன எவருக்கோ எந்தவகையிலோ மறுக்கப்பட்டுள்ளது என்று போராட்டக் களம் இறங்கியிருக்கிறார் பெரியார்.

ஒரு பெரிய நாடு இன்னொரு சிறிய நாட்டின் மீது ஆதிக்கம் செலுத்தினால் நான் சிறிய நாட்டின் பக்கம் நிற்பேன். அந்த சிறிய நாட்டில் ஒரு பெரிய மதம் இருந்து மற்ற சிறுபான்மை மதத்தை ஒடுக்கினால் நான் சிறுபான்மை மதத்தின் பக்கமே நிற்பேன். அந்த சிறுபான்மை மதத்தில் சாதி இருந்து, இன்னொரு சாதியின் மீது தாக்குதல் நடத்தினால் நான் தாக்குதலுக்குள்ளான அந்த சாதியின் பக்கமே நிற்பேன். அந்த ஒடுக்கப்பட்ட சாதியிலிருக்கும் ஒரு முதலாளி இன்னொரு தொழிலாளியை வஞ்சிப்பானேயானால் நான் தொழிலாளியின் பக்கமே நிற்பேன். அந்த தொழிலாளி வீட்டிற்குப் போய் அவன் மனைவியிடம் ஆதிக்கம் செலுத்தினால் அந்த பெண்ணிற்காக நான் நிற்பேன்.மொத்தத்தில் ஆதிக்கம்தான் என் எதிரி என்று தனது நிலைப்பாட்டை விளக்கியவர் பெரியார்.

"நாதியிலார் நாதிபெற நாப்படைத்தார்
நாற்பத்தி அய்ங்கோடி மக்களுக்கும்
பேதமிலா வாழ்வுதரப் பிறந்து வந்தார்
பிறக்கையிலே பெரியாராய்த் தான் பிறந்தார்"

என்று கவிஞர் கண்ணதாசன் பெரியாரைப் பாராட்டி கவிதை வடித்துள்ளார் [7].

பெரியார் மண் என்று பெருமிதத்துடன் இன்று அறிவித்துக் கொள்ளும் தமிழ் நாட்டின் வரலாற்றிலிருந்தோ, இந்திய அரசின் வரலாற்றிலிருந்தோ அவரின் பங்களிப்பை எவராலும் மறுக்கவோ மறைக்கவோ முடியாதபடி ஆழமான சுவடுகளைப் பல துறைகளில் பதித்துவிட்டுச் சென்றுள்ளார் பெரியார்; அவற்றில் குறிப்பிடத்தக்க சில:

இந்திய மற்றும் தமிழக சட்ட மாற்றங்களில் பெரியாரின் பங்களிப்பு:

இந்தியாவின் புதிய அரசியல் சட்டம் 1950 ஜனவரி 26 இல் நடைமுறைக்கு வந்தபிறகு, குமாரசாமி ராஜா ஆட்சியில் நாட்டின் புதிய அரசியல் சட்டத்தின் துணையுடன் தமிழ்நாட்டில் நடைமுறையிலிருந்த கம்யூனல் ஜி.ஓ. வை (1920களில் நீதிக்கட்சி உருவாக்கிய வகுப்புவாரி இட ஒதுக்கீடு ஆணையை) முறியடிக்கும் நோக்கில் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு ஒன்று தொடுக்கப்பட்டது. செண்பகம் துரைசாமி என்பவரும், சீனிவாசன் என்பவரும் தொழிற்கல்வி மாணவர் சேர்ப்பில் கம்யூனல் ஜி.ஓ. குறுக்கீடு இருக்கக் கூடாது என்று வழக்குத் தொடுத்தனர். தமிழக அரசின் கம்யூனல் ஜி.ஓ. என்ற

வகுப்புவாரி இட ஒதுக்கீடு ஆணை இந்திய அரசின் சட்டப்படி செல்லாது என்று தலைமை நீதிபதி பி.வி. இராசமன்னார் அவர்களால் தீர்ப்பு வழங்கப் பட்டது. அதுவரை இடவொதுக்கீடு, சமூகநீதி என்று போராடிப் பெற்ற தமிழக அரசின் அத்தனை முயற்சியும் தீர்ப்பால் செயலற்றுப் போனது. அரசியல் சட்டத்தினாலேயே மக்களின் உரிமை பறிக்கப்பட்ட அவலநிலை அது. இந்தியாவின் சட்டவரைவை உருவாக்கும் குழுவில் இடம் பெற்றிருந்த அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர் இடவொதுக்கீட்டுக்கு ஊறு விளைவிக்கும் ஒரு சட்டத்தையும் சட்டவரைவில் இடம்பெறச் செய்து, பார்ப்பன மாணவர்கள் சார்பில் ஒரு வழக்கையும் தொடுத்து, அவரே வாதாடி சட்ட வரையறையைக் கொண்டே இடவொதுக்கீட்டு ஆணையை முறியடித்தும் காட்டினார் என்பது அன்று தமிழகத்தின் முதுகில் குத்தப்பட்ட நிகழ்வு [8].

ஒரு தீர்ப்பு சட்டப்படி சரி, ஆனால் அறத்தின் அடிப்படையில் பிழை என்றால் சட்டத் திருத்தம் ஒன்றுதான் மீண்டும் அறத்தை நிலை நிறுத்தும். ஆகவே, தீர்ப்பையடுத்து ஈ.வெ.ரா. பெரியாரின் தலைமையில், திருச்சியில் நடந்த இடவொதுக்கீடு குறித்த மாநாட்டில் இந்த தீர்ப்பினை எதிர்த்து இட ஒதுக்கீட்டு முறைக்காகச் சட்டத்திருத்தம் செய்யப்பட வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தொடர்ந்து தமிழகம் முழுவதும் போராட்டங்கள் நடைபெற்றது. இங்குதான் இட ஒதுக்கீட்டில் பெரியாரின் பங்களிப்பின் முக்கியத்துவம் புரிந்து கொள்ளப்பட வேண்டும். இன்றும் இடவொதுக்கீட்டின் தேவையையும் அதன் வரலாற்றையும் அறியாதவர் எண்ணற்றவர் என்பது ஒரு பெரிய குறைபாடு. கட்சி வேறுபாடு இன்றி தமிழகத்தில் அனைத்துக் கட்சி யினரும் பெரியாரின் கீழ் ஒன்று திரண்டனர். காங்கிரஸ் கட்சியின் தலைவர் காமராஜரும் ஆதரவு அளித்தார். பெரியாரின் தலைமையில் எடுக்கப்பட்ட போராட்ட நடவடிக்கை 'இந்தியாவின் முதல் சட்டத்திருத்தத்திற்கு அடி கோலியது', அனைவருக்கும் இடவொதுக்கீட்டு உரிமையை மீட்டுக் கொடுத்தது. தமிழகத்தில் ஏற்பட்ட கொந்தளிப்பு நேரு தலைமையிலிருந்த ஒன்றிய அரசை உலுக்கியது. போராட்டத்திலிருந்த நியாயம் உணரப்பட்டது. இந்தியா அரசின் முதல் சட்டத்திருத்தம் கொண்டுவரப்பட்டது. அம்பேத்கர் சட்ட அமைச்சராக இருந்த காலத்திலேயே இட ஒதுக்கீடு அளிக்கப்பட அரசியல் சட்டத்தில் 15(4) பிரிவு (ஆர்ட்டிக்கில் – 15(4)) என்ற சட்டத்திருத்தம் கொண்டு வரப்பட்டது. கல்வி மற்றும் சமூகரீதியாகப் பிற்படுத்தப்பட்டவர்கள் தான் பிற்படுத்தப் பட்டவர்கள் என்ற வரையறை உறுதி செய்யப்பட்டது. கல்வி மற்றும் சமூக

வாழ்வில் முன்னேற வேண்டிய எந்த ஒரு வகுப்பினருக்கான திட்டங்களில் அரசின் எந்த ஒரு சட்டமும் தடை செய்ய முடியாத வகையில் திருத்தம் கொண்டுவரப்பட்டது. இதன் மூலம் பெரியாரின் போராட்ட நடவடிக்கை இந்தியாவின் முதல் சட்டத்திருத்தத்திற்கு அடிகோலியது என்பதும் இந்திய அரசியல் வரலாற்றில் நிலை பெற்றுவிட்டது. இன்றைய ஒன்றிய அரசின் ‘அரியவகை ஏழைப் பிரிவு’ என்ற உயர் சாதி ஏழைகளுக்கு 10 சதவீத இட ஒதுக்கீடு அளிக்க எடுத்த முடிவு இந்த சட்டத்திற்குப் புறம்பானது என்பதைச் சொல்லத் தேவையில்லை.

அனைத்துப் பிரிவினரும் அர்ச்சகர் என்ற சமூக மாற்றத்திற்காக மரணத்திற்கு முன்னர் அவர் அளித்த இறுதி உரை வரை போராடியவர் பெரியார். சென்னை தியாகராயர் நகரில், டிசம்பர் 19, 1973 அன்று, தந்தை பெரியார் அவர்கள் ஆற்றிய இறுதிப் பேருரை இரவு 10 மணிக்கும் மேல் தொடர்ந்தது. தொடர்ந்து ஒரு மணி நேரத்திற்கும் மேலாக, வரும் அடுத்த ஆண்டு 1974 ஜனவரியில் நடத்தத் திட்டமிட்ட “சமுதாய இழிவு ஒழிப்பு” என்ற கிளர்ச்சியின் நோக்கம் மற்றும் தேவை என்ன என்பதை விளக்கி, அதில் மக்களின் கடமை என்ன என்று சிந்திக்கச் சொல்லி சமுதாய இழிவு ஒழிப்பு கிளர்ச்சியில் பங்கேற்க அவரது தொண்டர்களை(தோழர்களை) ஆயத்தமாக்குகிறார். தந்தை பெரியாரின் இந்த இறுதிப் பேருரையை, ‘மரண சாசனமாகவே அமைந்துவிட்ட தந்தை பெரியாரின் இறுதிப் பேருரை’ என்றே பலரும் குறிப்பிடுவதை அறிய முடிகிறது [9].

அவரது இந்தப் போராட்டத்தின் துவக்கம் 1920 களிலேயே தொடங்கியது என்பது கவனத்தில் கொள்ளவேண்டிய ஒன்று. "ஆலயங்களில் பூசை செய்யும் உரிமையை சிலர் கைப்பற்றி எல்லா ஜனங்களுக்கும் அவ்விஷயத்திலுள்ள பிறப்புரிமையைப் பிடுங்கிக்கொண்டதினால் இந்த அக்கிரமத்தை நிறுத்தவும் ஆலயத்தில் பூஜை செய்யவும் அதற்காகக் கோயிலுக்குள் போகவும் ஒவ்வொரு இந்துவும் உரிமை பெறச்செய்யவும் இந்துத் தலைவர்கள் முயற்சி செய்ய வேண்டுமென்று இந்த மகாநாடு தீர்மானிக்கிறது" என 1927 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 5, 6 தேதிகளில் திருவாளர் வ.உ.சிதம்பரம் பிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெற்ற சேலம் 3-ஆவது அரசியல் மகாநாட்டில் தீர்மானம் கொண்டுவரப்பட்டது [10]. இவ்வாறாக ஒரு தீர்மானம் முன்மொழியப்பட்டு சுமார் 93 ஆண்டுகள் கழிந்த பிறகு இத்தீர்மானம் பல போராட்டங்கள் மற்றும் சட்டச் சிக்கல்களுக்குப் பிறகு நிறைவேறியுள்ளது. தந்தை 'பெரியாரின் நெஞ்சில் தைத்த முள்' இதனால் அகற்றப்பட்டது [11].

சாதி மறுப்பு திருமணங்களும், சீர்திருத்த முறைப்படி வைதீக சடங்குகள் இன்றி நடை பெறும் திருமணங்கள் சட்ட அங்கீகாரம் பெற்றதிலும் பெரியாரின் பங்களிப்பை எவராலும் மறுக்க இயலாது. சாதிக்கான கட்டமைப்பு, சொந்த சாதி திருமண முறையால் வலுவடைகிறது என்பதால் பெரியார் காதல் திருமணங்களையும் கலப்பு திருமணங்களையும் ஆதரித்துச் சாதிக் கட்டமைப்பை ஒழிக்கப் பாடுபட்டார். வைதீக முறையில் நடக்காத சீர்திருத்தத் திருமண முறையைச் சமுதாய முன்னேற்றத்திற்கான வழியாகக் கண்டார். அதற்கான சட்ட வடிவம் தான் சுயமரியாதைத் திருமணச் சட்டமாக அவரது கொள்கையைப் பின்பற்றிய அன்றைய தமிழ்நாட்டு முதல்வர் அண்ணாதுரையால் நடைமுறைப் படுத்தப்பட்டது. நவம்பர் 28, 1967 ஆம் ஆண்டு சுயமரியாதைத் திருமணச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட நாள். [12].

சமூக மாற்றங்களில் பெரியாரின் பங்களிப்பு:

ஐம்பது அகவையை எட்டிவிடும் பொழுதில், சமூகத் தொண்டின் மூலம் மக்களிடம் நன்மதிப்பைப் பெற்றிருந்த பெரியார், 1927ம் ஆண்டில் தனது பெயருக்குப் பின்னொட்டாக இருந்து வந்த 'நாயக்கர்' என்ற சாதிப்பட்டத்தை நீக்கிவிடுகிறார். தமது "குடிஅரசு" 25-12-1927 இதழ் முதற்கொண்டு 'ஆசிரியர் ஈ.வெ.ராமசாமி' என்று அறிவித்து சாதிப்பெயரைத் தவிர்த்துவிடுகிறார். பிறகு, 1929இல் பெரியார் சுயமரியாதையை வலியுறுத்தும் விதமாக, செங்கல்பட்டு

சுயமரியாதை மாநாட்டில், தன் பெயரின் பின்வரும் சாதிப்பெயரை நீக்கி, 'ஈ.வெ.ராமசாமி நாயக்கர்' எனும் நான் இன்றுமுதல் 'ஈ.வெ.ராமசாமி' என அழைக்கப்படுவேன்" என்று அறிவித்து அனைவரின் பெயருக்குப் பின்னால் வரும் சாதிப் பெயரை நீக்க முன்னுதாரணமாக விளங்கினார். அதே மாநாட்டில் பெரியாரோடு இணைந்து சௌந்தரபாண்டிய நாடார், விருதுநகர் ராமசாமி நாடார் உள்ளிட்ட பல தலைவர்களும் பெரியாரின் தொண்டர்கள் பலரும் தங்களின் பெயருக்குப் பின்னால் இருந்த சாதிப் பெயரை நீக்கிக் கொண்டனர்[13]. இந்தியாவின் பிற மாநிலங்களிலிருந்து முற்றிலும் வேறுபட்டு பெரியாரின் தூண்டுதல் காரணமாகச் சாதிப்பெயரை தங்கள் பெயருடன் இணைப்பதைக் கைவிட்டனர் தமிழர். ஒருவரின் சாதிப் பின்னணியை வெளிப்படையாகக் கேட்பது தவறான பண்பாடு என்று கூசும் அளவிற்கு இன்று நிலைமை மாறியுள்ளது, அவ்வாறு மாற்றியவர் பெரியார்.



பெண்ணுரிமைக்கு என்று உரத்துக் குரல் கொடுத்தவர் பெரியார். ஓர் ஆணுக்கு என்ன உரிமை இருக்கிறதோ அது பெண்ணுக்கும் இருக்கிறது என்று சென்ற நூற்றாண்டிலேயே பெண்ணுரிமை பேசியவரும், பெண்ணுக்கு எதிரான சமூக அடக்குமுறைகளை ஒழிக்கப் போர்க்கொடி உயர்த்தியவர் அவர். 'பெண் ஏன்

அடிமையானாள்?' என்ற பெரியாரின் நூல் 1942-இல் வெளியான 79 பக்கங்கள் மட்டுமே கொண்ட ஒரு சிறு நூல். இந்த நூல் பெண் ஏன் அடிமையானாள் என்று பல கோணங்களில் பெண்களின் நிலையை அணுகி, பெண்ணுரிமை அற்ற நிலையை விளக்கிக் கூறி விழிப்புணர்வை ஏற்படுத்தியது[14]. ஆண் உரிமைக்கும் பெண் உரிமைக்கும் ஏன் வேறுபாடு இருக்க வேண்டும் என்று சென்ற நூற்றாண்டிலேயே கேள்வி எழுப்பிய பெரியார், ஆண்களுக்கு இருக்கும் அனைத்து உரிமைகளும் பெண்களுக்கும் கொடுக்கப்பட வேண்டும் என்ற உறுதியான கருத்தை முன்வைத்து பெண்களின் நிலையை மாற்றப் போராடினார். பெண் ஏன் அடிமையானாள் நூல் இன்றும் விற்பனையில் சாதனை படைத்துக் கொண்டிருக் கொண்டிருக்கிறது. தங்களுக்காக உரிமைக்குரல் எழுப்பிப் போராடிய ஈ.வெ.ரா. அவர்களைப் பெண்கள் பெரிதும் மதித்தனர். இந்தி எதிர்ப்பையொட்டி சென்னையில் 13.11.1938-ல் நடைபெற்ற தமிழ்ப் பெண்கள் மாநாட்டில் தந்தை ஈ. வெ. ரா. அவர்களுக்கு "பெரியார்" எனும் பட்டம் பெண்கள் சார்பாக அன்னை மீனாம்பாள் சிவராஜ் அவர்களால் வழங்கப்பட்டது[15].

குடிஅரசு 20.1.1935 தேதியிட்ட இதழிலிருந்து எழுத்துச் சீர்திருத்தத்தைப் பெரியார் நடைமுறைப்படுத்தினார். பெரியார் நூற்றாண்டு விழாவையொட்டி 1978-79 ல் எம்.ஜி.ஆர். தலைமையிலான அன்றைய தமிழ்நாடு அரசு, 1935 பெரியார் இயக்கம் பயன்படுத்தி வந்த வரி வடிவத்தில் (அய், அவ் மாற்றங்களைத் தவிர்த்து) தவிர மற்ற மற்ற மாற்றங்களை ஏற்றுச் செயற்படுத்தியது[16]. இவ்வாறாக, தமிழ் மொழி வரலாற்றிலும் பெரியார் எழுத்து சீர் திருத்தம் என்ற முறையும் நிலைத்துவிட்டது.

தமிழக வரலாற்றில், இந்திய அரசியலில், இந்திய மற்றும் தமிழ் நாட்டுச் சட்ட வரையறைகளில், தமிழ்மொழி வளர்ச்சியில், மனிதநேய சமத்துவ மாற்றங்களில் என நிலையாக இடம் பிடித்தவர் பெரியார். மறைக்கவோ மறுக்கவோ முடியாதபடி தன் தடத்தைப் பதித்துச் சென்றவர் பெரியார். சாதி ஒழிப்பு, சாதிப் பெயர் மறுப்பு, எழுத்துச் சீர்திருத்தம், சுயமரியாதை, பகுத்தறிவு, கருத்துரிமை, பெண்ணுரிமை, சட்ட வரையறை திருத்தம் என்று எந்த ஒரு துறையிலும் அவர் பங்களிப்பை நினைவுகூரும் வகையில் தடம் பதித்துச் சென்றுள்ளார் என்பதை அவர் மறைந்து 50 ஆண்டுகள் கழித்தும் அவர் பேசு பொருளாக இருப்பது நிரூபிக்கிறது. அவர் மறைவிற்குப் பிறகு பிறந்த தலைமுறையினர் இடையில் பெரியாரின் புரட்சிக் கருத்துகள் போற்றப்படுகிறது.

பெரியார் பிறந்தநாளை சமூக நீதி நாள் என்று செப்டம்பர் 06, 2021 முதல் தமிழகம் கொண்டாடி வருகிறது. பெரியார் என்றென்றும் நினைவு கூரப் படுவார். பெரியாரின் தாக்கம் என்றென்றும் தொடரும்.

வாழ்க பெரியார் !! பெரியார் புகழ் ஓங்குக!!

உதவிய நூல்களும் செய்திக் குறிப்புகளும்:

1. சென்னை புத்தகக் கண்காட்சியில் அதிகம் விற்ற புத்தகம்

   http://www.noolulagam.com/2017/01/31/168797/

2. வைக்கம் போராட்டம்: சமூகநீதிக்கான வரலாற்றுத் திருப்புமுனை, முனைவர். தேமொழி. திராவிடப் பொழில்— திராவிட ஆய்விதழ், தொகுதி: 3, இதழ்: 2, ஏப்ரல் - ஜூன் 2023. பக்கம் 69-75.

   https://dravidapozhil.pmu.edu/pdf/Vaikom-Poraattam.pdf

3. வைக்கம் வீரர் சொற்பொழிவு - திரு. வி. கலியாணசுந்தரனாரின் 'நவசக்தி' 1924 இதழ்.

4. வைக்கம் போராட்டம் நூற்றாண்டு விழா - முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு கேரள முதல்-மந்திரி அழைப்பு.

   https://www.dailythanthi.com/News/State/vaikam-protest-centenary-kerala-chief-minister-calls-on-chief-minister-mk-stalin-925668

5. விதைத்தவர் பெரியார் : விளைந்தது சந்திரயான் ..., ச.பிரின்சு என்னாரெசு பெரியார், நவம்பர் 9, 2023

   https://minnambalam.com/featured-article/periyar-and-science-mylswamy-annadurai-speech-in-singapore/

6. பெரியார், 14.12.1931 திராவிட இயக்க இதழ்கள்: தொகுதி 2

7. "பிறப்பினிலே பெரியாராய்த் தான்பிறந்தார்!", கவிஞர் கண்ணதாசன். பெரியார் ஒரு சகாப்தம் ஏன்?எப்படி? அறிஞர் பதில் -கி.வீரமணி நூலிலிருந்து.

8. வகுப்புரிமைப் போராட்டம், க. அன்பழகன், 1951; மக்கள் மன்றம், பவழக்காரத் தெரு, சென்னை.

9. தந்தை பெரியாரின் இறுதிப் பேருரை: மரண சாசனம், தந்தை பெரியார், பெரியார் சுயமரியாதை பிரச்சார நிறுவன வெளியீடு, கிண்டில் பதிப்பு, 2017.

10. சேலம் 3-வது அரசியல் மகாநாடு. குடி அரசு. 13-11-1927 இதழ். பக்கம் - 13

11. அனைத்து ஜாதி அர்ச்சகர் வழக்கு: நீதிமன்ற தீர்ப்பு என்ன தாக்கத்தை ஏற்படுத்தலாம்?, முரளிதரன் காசி விஸ்வநாதன், பிபிசி தமிழ், 22 ஆகஸ்ட் 2022. https://www.bbc.com/tamil/india-62633574

12. சுயமரியாதை திருமணம் சட்டம் - ஓர் பார்வை!, ரமணி மோகன கிருஷ்ணன், நவம்பர் 29, 2015.

https://www.vikatan.com/literature/arts/55766-

13. "முதல் தமிழ் மாகாண சுயமரியாதை மாநாடு", 1929 டிசம்பர், 'குடிஅரசு' இதழ்கள்

14. பெண் ஏன் அடிமையானாள்?, தந்தை பெரியார் பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவன வெளியீடு. பக்கங்கள்:79 1942.

15. 'தமிழ் நாட்டுப் பெண்கள் மாநாடு', 20.11. 1938, 'குடிஅரசு' இதழின் தலைப்புச் செய்தி.

16. பெரியார் ஈ. வெ. ரா. சிந்தனைகள், வே. ஆனைமுத்து, முதல் தொகுதி, சிந்தனையாளர் கழகம், 1974 – http://dvkperiyar.com/wp-content/uploads/2015/11/EVRT-VOL-1-part-1.pdf

5. உணக்குதல்

முனைவர் தேமொழி

சான் ஃபிரான்சிஸ்கோ, யு.எஸ்.ஏ.

கரிகால் சோழன் ஆண்ட சோழப் பேரரசின் தலைநகரமாக விளங்கிய காவிரிப் பூம்பட்டினத்தின்சிறப்பைப்பாராட்டும்வகையில்கடியலூர்உருத்திரங்கண்ணனார் இயற்றிய நூல் பட்டினப்பாலை ஆகும். அந்நூலில்,

அகல் நகர் வியல் முற்றத்து
சுடர் நுதல் மட நோக்கின்
நேர் இழை மகளிர் உணங்கு உணா கவரும்
கோழி எறிந்த கொடும் கால் கனம் குழை

– கடியலூர் உருத்திரங்கண்ணனார், பட்டினப்பாலை–20–24

என்று இடம் பெறும் வரிகளில், அகன்ற மனையின் பரந்த முற்றத்தில், ஒளிபொருந்திய நெற்றியையும், கபடமற்ற பார்வையையும், நேர்த்தியான அழகிய நகைகளையும் அணிந்த பெண்கள், வெய்யிலில் உலருகின்ற உணவைத் தின்னவரும் கோழியை விரட்டுவதற்காக, வளைவான அடிப் பகுதியையுடைய பொன்னாற்செய்த காதணிகளை வீசி எறிந்ததாகக் காவிரிப்பூம்பட்டினத்தின் செல்வச் செழுமை காட்டப் பட்டிருக்கிறது. முற்றத்தில் காயவைக்கப்பட்ட, கோழி உண்ண விரும்பிய உணவு ஏதேனும் கூலமாக இருக்கலாம், பெரும்பாலும் நெல்லாகவும் இருக்கக் கூடும். ஆனால் அந்த உணவு எது என்று குறிப்பிடப்படவில்லை.

மல்கு சுனை உலர்ந்த நல்கூர் சுர முதல் – குறுந்தொகை–347//

என்பது போன்று; ஒரு பொருளின் ஈரப்பதத்தை நீக்கும், புலரச் செய்யும், வற்றச் செய்யும் முறைக்கு இன்று நாம் பரவலாகப் பயன் கொள்ளும் உலர்தல்,

உலர்கின்ற, உலரும் என்பன போன்ற சொற்கள் தொகை இலக்கியங்களில் அதிகம் கையாளப்படவில்லை.

வெய்யிலில் காய வைப்பதை, உலர்த்துவதை உணக்குதல் தொடர்பான சொற்களான; உணக்கல் (காயவைத்தல்), உணக்கிய (காயவைத்த), உணக்கும் (காயவைக்கும்), உணங்க (காயவைக்க), உணங்கும் (காயும்), உணங்கல் (காயவைக்கப்பட்ட ஒரு பொருள்) ஆகியன பயன் கொள்ளப்பட்டுள்ளது.

குறளில் இச்சொல் இடம் பெறுகையில்;

தொடிப்புழுதி கஃசா உணக்கின் பிடித்தெருவும்
வேண்டாது சாலப் படும் ***(அதிகாரம்:உழவு, குறள் எண்:1037)***

என்ற குறளுக்கு, ஒரு பலம் புழுதி கால்பலம் ஆகும்படி உழுது காயவிட்டால், ஒருபிடி எருவும் இட வேண்டாமல் அந்நிலத்தில் பயிர் செழித்து விளையும் என்று மு. வரதராசன் விளக்கம் தருகிறார்.

உணக்குதல் = வாட்டுதல், உலர்த்துதல்

உணங்கல் = உலர்தல், வற்றல், காய்தல், உலர்ந்த மலர், வாடல், உலர்ந்த தானியம், காய்ந்த தசை, உணவு

என்று பாலூர் கண்ணப்ப முதலியார் யாத்த தமிழ் இலக்கிய அகராதி (பக்கம் -61) பொருள் தருகிறது.

உணக்கல் தொடர்பாகத் தொகை இலக்கியங்களில் இடம்பெறும் வரிகள் சிலவற்றை அடுத்துப் பார்க்கலாம்;

உணக்கல் (காயவைத்தல்)

நிண சுறா அறுத்த உணக்கல் வேண்டி – நற். 45/6

சுறாமீனை அறுத்திட்ட தசைகளைக் காயவைத்தல் வேண்டி.

உணக்கிய (காயவைத்த)

மிகு மீன் உணக்கிய புது மணல் ஆங்கண் – நற். 63/2

மிக்க மீன்களைக் காயப் போட்ட புதிய மணற் பரப்பில்.

உணக்கும் (காயவைக்கும்)

அம் கண் அரில் வலை உணக்கும் துறைவனொடு – நற். 4/4

அழகிய கண்களையுடைய முறுக்கேறிய வலைகளைக் காயவைக்கும் துறையைச் சேர்ந்தவனிடம் சென்று.

உணங்க (காயவைக்க)

நுணங்கு மணல் ஆங்கண் உணங்க பெய்ம்–மார் – அகம். 300/2

நுண்ணிய மணலிடத்தே மீன்களைப் புலரும்படிப் பெய்வாராய்.

மல்கு நீர் வரைப்பில் கயம் பல உணங்க – புறம். 174/25

மிக்க நீர் உள்ள எல்லைகளில் உள்ள பல குளங்கள் வற்றிப்போக.

உணங்கும் (காயும்)

வலை உணங்கும் மணல் முன்றில் – பட்டினப்பாலை–83

வலைகிடந்து உலரும் மணலையுடைய முற்றத்தைக்கொண்ட இல்லங்களில்,

உணங்கல் (தினை/மீன்/இறைச்சி ஆகியவற்றின் உணங்கல்)

செந்தினை உணங்கல் தொகுக்கும் – நற். 344/11

சிவந்த தினை புலருமாறு போடப் பட்டவற்றைக் கூட்டிக் குவிக்கின்.

செந்தினை உணங்கல் – நற். 344/11

பைந்தினை உணங்கல் – ஐங். 469/1

சிறுதினை உணங்கல் – புறம். 319/5

புலவு மீன் உணங்கல் – நற். 331/4

கொழு மீன் உணங்கல் – அகம் 20/2

பல் மீன் உணங்கல் – அகம் 80/6

இரும் புலி துறந்த ஏற்று மான் உணங்கல் – அகம். 107/5

பெரிய புலி உண்ட மிச்சம் வைத்துப் போன மானேற்றின் காய்ந்த தசை.

வெண்ணெய் உணங்கல் போல – குறு. 58/5

காய்ந்து உருகும் வெண்ணெயைப் போல.

சுளகு இடை உணங்கல் செவ்வி கொண்டு – புறம். 321/3

முறத்தில் வைத்து உலர்த்தப்பட்ட காய்ச்சலைத் தக்க சமயம் பார்த்துக் கவர்ந்து.

வெய்யிலில் காய்கின்றவை, உலரவைக்கப்பட்டவை எனப் பலவற்றை இங்கே காணமுடிகிறது. உணவுப் பொருட்கள் 'மட்டுமே' வெய்யிலில் காய்ந்ததாகப் பாடல்களின் வரிகளில் குறிப்பிடப்படவில்லை. கடல் சார்ந்த நிலப்பகுதியைக் குறிக்கும் நெய்தல் திணைப் பாடல்களில் கடல் மணலில் மீன்கள் மட்டும் காயவைக்கப்பட்டு கருவாடு செய்யப்படவில்லை; மீனவர்கள் மீன்பிடிக்கும் வலைகளையும் வெய்யிலில் உலர்த்துகிறார்கள்.

உணவுப் பொருட்களில், மீன்கள் மட்டுமன்று; தினைகளும் காயவைக்கப் படுவதைக் காண முடிகிறது. பாலை நிலத்தில் புலி உண்ட பிறகு மீதம் விட்டுச் சென்ற மான், வெய்யிலில் உலர்வதாக அகநானூற்றுப் பாடலில் காட்டப் படுகிறது. புறப்பாடல் ஒன்று முறத்தில் காயவைக்கப்பட்ட ஏதோ ஒரு உணவுப் பொருளைக் குறிப்பிடுகிறது.

மற்றொரு புறப்பாடல், குளத்து நீர் வற்றிப் போவதை உணங்குவதாகக் குறிப்பிடுகிறது.

வெய்யில் கொளுத்தும் நேரத்தில் சூடாகிப்போன பாறையின் மீதுள்ள வெண்ணெய்யைக் கை இல்லாத ஊமையன் தன் கண்ணினாலே பாதுகாக்க முயலுகின்ற நிலையில், வெண்ணெய் உருகுவதைத் தடுக்க முடியாது மன உளைச்சல் கொள்வது போல, தன் காதலை வெளிப்படுத்த இயலாத கையறு நிலையைப் பாங்கனிடம் கூறுகிறான் தலைவன் ஒருவன் என்று குறுந்தொகைப் பாடல் ஒன்று கூறுகிறது. இங்கு வெய்யிலில் காய்வது வெண்ணெய்.

ஆக, இன்றைய நாளில் உலரவைக்கப்பட்ட உணவுப் பொருட்களான கருவாடு, உப்புக்கண்டம், வற்றல், வடவம் என எல்லாமே உணங்கல்தான்.

இவ்வாறாகத் தொகை இலக்கியங்களில் கூறப்படும் ‘உணக்கும்’ (உலரவைக்கும்) என்ற சொல் இன்றைய வழக்கிலும் உள்ளது. ஆனால் இவை மறைவை நோக்கிச் செல்கின்றன எனலாம். குளித்த ஈரக் கூந்தலைக் காயவைப்பதற்கு முடியை ‘உணர்த்து’ அல்லது ‘உணத்து’ என்ற சொல், சென்ற நூற்றாண்டு வரை வழக்கிலிருந்தது. இன்றோ, 'ஹேர் ரொம்ப வெட்டா இருக்கு; ட்ரை பண்ணு' என்று தமிழ் மாறிவிட்டது.

உயிர் உணக்கும் என்பது உயிரை வாடச் செய்யும் என்ற பொருளிலும்

‘அணங்கு அரும் பறந்தலை உணங்கப் பண்ணி’ (புறம் 25/6),
‘முழூஉ வள்ளூரம் உணக்கும் மள்ள!‘ (புறம் 219/2)

என்று புறப்பாடல்களில் இடம் பெறுகின்றன..

பல தூய தமிழ்ச் சொற்கள் இன்றைய நாளில் தமிழகத்தில் பயன்பாட்டில் இல்லையெனினும் கேரள மக்களின் மலையாள மொழியில் பயன்பாட்டில் உள்ளன என்பதை நாமறிவோம். 'உணக்குதல்' 'உணக்க வேண்டும்', 'உணங்கவில்லை' என்று சொல்வது மலையாளத்தில் இன்றும் வழக்கம் என்பது தெரிகிறது.

நாட்டுப்புறப் பாடலாக “முதல் மரியாதை” (1985) படத்தின் திரையிசையில் இடம்பெற்ற வைரமுத்துவின்,

அடி மாங்குளத்துக் கர மேல... ஏ...
மயிருணத்தும் சின்னவளே... மயிருணத்தும் சின்னவளே...
பாறையில நானிருந்து...
பாடும் குரல் கேக்கலையா... பாடும் குரல் கேக்கலையா...
பாட்டுச் சத்தம் கேக்கலையா... பாட்டுச் சத்தம் கேக்கலையா...

என்ற பாடல் வரிகளில் (https://youtu.be/M8CzmWnC9uA?si=iWteaaQbU-jWlzcmR&t=69) காதலியைக் காண விரும்பிய காதலனின் பாடல் மயிர் உணத்தும் சின்னவளைத் தேடி ஏங்குகிறது.

இக்கட்டுரை எழுதுவதற்கு உதவிய இன்றியமையாத தளம்:

முனைவர்.ப.பாண்டியராஜா உருவாக்கிய தமிழ் இலக்கியத் தொடரடைவு தளம்

http://tamilconcordance.in/index.html

3. நெஞ்சில் இட்ட கோலங்களின் தொகுப்பு

முனைவர் தேமொழி

சான் ஃபிரான்சிஸ்கோ, யு.எஸ்.ஏ.

அடுக்குப் பானை கவிதைகள் இனிமையான மெல்லிய இசையாய் நெஞ்சத்தை மீட்டிச் செல்லும் கவிதைகளின் ஓர் தொகுப்பு.

கருவறை முதல் கல்லறை வரைக்கும் இமையாய் காத்து வளர்த்த தன் பெற்றோருக்கு இந்நூலைச் சமர்ப்பணம் செய்யும் கவிதையுடன் தொடங்கும் இக்கவிதைத் தொகுப்பு, உணர்வோடு கலந்த கவிதைகளின் ஒரு தொகுப்பு.



நூலின் பெயர்: அடுக்குப் பானை

ஆசிரியர்: சுகந்தி அன்னத்தாய்

நூல் வகை: கவிதை

பதிப்பகம்: காவியா பதிப்பகம்

இலக்கிய வெளியில் எதையும் அழகுணர்வோடு வெளிப்படுத்த உதவுவது கவிதை மொழி என்பதற்கு மீண்டும் ஒருமுறை இந்த நூல் சான்று கூறி நிற்கிறது. காவ்யா பதிப்பகத்தின் வெளியீடான இந்த நூலில் தன் நெஞ்சில் இட்ட அழியாத கோலங்களைப் படம் பிடித்து வழங்கியுள்ளார் கவிஞர் சுகந்தி அன்னத்தாய்,

தனது தாய்மொழி, பெற்றோர், ஆசிரியர், உற்றார், உறவினர், சுற்றம், நட்பு, இயற்கை, அன்புக்குரிய தலைவர்கள் என அனைவர் மீதும் கவிஞர் சுகந்தி அன்னத்தாய் அவர்கள் கொண்டுள்ள அன்பும் மதிப்பும் கவிதைகளாக வெளிப்பட்டு படிப்பவரைப் பரவசமூட்டுகிறது. தன்னுடன் படிப்பவரையும் அவரது சிறுவயது நாட்களுக்குக் கடத்திச் செல்லும் வித்தையைக் கற்றுள்ளார் கவிஞர். கவிதைகள் சிலவற்றில் புது முயற்சிகளையும் புகுத்தியுள்ளார்.

திருக்குறள் அடியொட்டி 'ஆசிரியர் மாட்சி' என்ற 10 குறட் பாக்களை உடைய அதிகாரம் குறள் நூலிலிருந்து தப்பி வந்த அதிகாரம் போல சிறப்புடன் ஆசிரியப் பணியின் சிறப்பைப் போற்றுகிறது, ஆசிரியரின் கடமையைக் கூறுகிறது.

குறைகளைந்து கற்பிக்கும் ஆசான் மாணவர்க்கு

இறையென்று போற்றப் படும்.

மாலையாகி பூஜைக்குச் செல்லும் மலர்களுடன் ஒப்பிட்டு, மலர்போன்ற தமிழ்மொழி செம்மொழித் தகுதி பெறும் சிறப்பை இணைத்துக் காட்டும் பாங்கும் சிறப்பு. தமிழைத் தன் நட்பாக, ஆசிரியராக உருவகிக்கும் முறையும் சிறப்பு. உருவகங்கள் மிக எளிதாகக் கவிஞருக்குக் கைவருகின்றது! சுகம்தேடா சுமைதாங்கி என்கிறார் அம்மாவை. அவ்வாறே அன்னையும் ஆசானும் இணைந்து மனிதரை உயர்த்துவார்கள் என்ற கருத்தும் சிறப்பு.

குழந்தைகள்தானே என நாம் எளிதாகக் கடந்துவிடும் மழலைகளை, அவர்களை முன்மாதிரியாகக் கொண்டு நாம் அவர்களிடம் கற்க வேண்டிய பல நற்குணங்கள் உள்ளன, அதனால் குழந்தைகள் கொண்டாடப்பட வேண்டியவர்கள்

என நினைவூட்டுகிறார். அது போன்றே முதியோரின் முக்கியத்துவத்தையும் முன்வைக்கிறார். ‘தலைமுறை இடைவெளி’யென பாரா முகமாய் நடத்திடாமல் பாசத்துடன் பண்பாய் நடத்திட வேண்டும் என்று அறிவுறுத்துகிறார்.

ஊரின் அடையாளமாக இருந்த மரங்கள் பலவும், வயல்கள் பலவும் நகரமயமாக்கலில் மறைந்து போனதை மனம் உலுக்கும் வண்ணம் கூறுகிறார். ஆண்டுகள் பல கழிந்து சொந்த ஊருக்குப் பசுமையான நினைவுகளோடு திரும்பியவர், ஊரின் புதிய கான்கிரீட் கட்டிடப் பரவலைக் கண்டு மலைப்பவர், தனது இளமைக்கால நினைவுகள் கருகிப்போன அதிர்ச்சியை அனுபவித்தவர் எவரும் இந்த வரிகளுடன் உணர்ச்சிப் பூர்வமாகக் கலந்து போவார்கள்.

மரங்கள் என்று மட்டுமல்ல, "பொருநை நதியெனும் பெயர் பெற்றவள்- இன்று கருணையில்லா மனித செயலால் துயரில் மூழ்கினாள்!" என்று மணற் கொள்ளையால் பொலிவிழந்த தாமிரபரணியைக் கண்டும் கலங்குகிறார்.

நாளைய வாழ்வின்

நிழலைத் தேடலில்

இன்றைய வாழ்வின்

நிஜங்கள் தொலைத்தோம்!

என்ற வரிகள் இக் கையறு நிலையின் எதிரொலி.

அவரது இளம்பருவத்து நாட்களின் கவிதைகள் மூலம் நம் பள்ளி நாட்களையும் விடுமுறை நாட்களையும் நெஞ்சில் அசைபோட வைக்கிறார் . மகிழ்வின் நாட்களில் அவருடன் நாமும் இணைந்து மகிழ்ந்து களிக்கலாம். நினைக்கையில் நெஞ்சமெல்லாம் நிறையத்தான் செய்கிறது.

ஆழம் காண இயலா பெண்மனம் பிறப்பு முதல் இறப்பு வரை ஒவ்வொரு பருவத்திலும் ஒவ்வொருவகை சிந்தனைகளுடன் போர்க்களமாவதைச் சித்தரிக்கும் முறை அழகிய கவிதையாக உருவெடுத்துள்ளது. வெற்றியின் வித்து, வாழ்க்கை ஒரு வரம் கவிதைகள் எளிய சொற்களில் அமைந்த தன்னம்பிக்கை ஊட்டும் கவிதைகள்.

நூலறி(வு)முகம்

12. அடிமைப்படுத்தும் தளைகளை உடைத்தெறிய பெண்கள் உறுதி பூண வேண்டும்

முனைவர் தேமொழி

சான் ஃபிரான்சிஸ்கோ, யு.எஸ்.ஏ.

பெண்ணியம், சமூகம், சுற்றுச் சூழல் சார்ந்து கதை, கவிதை, கட்டுரைகள், புதினங்கள் எழுதிவரும் முனைவர் த.ஜான்சி பால்ராஜ் அவர்களின் நூல் "ஆணின் அழகும் ஆளுமையும்". அனைத்துலக மகளிர் நாள் கொண்டாடப்படும் மார்ச் மாதம் பெண்களின் உரிமையை வலியுறுத்தி ஒரு வித்தியாசமான தலைப்பின் மூலம் பெண்ணியக் கருத்தை முன்வைத்துள்ள முனைவர் ஜான்சி பால்ராஜ் அவர்களின் நூலின் கருத்துகளைப் பார்ப்பது பெண்ணுரிமை குறித்த சிந்தனையைப் புதுப்பித்துக் கொள்ளவும் உதவும் என்பதில் ஐயமில்லை.

பெண்களின் உரிமைகள் குறித்தும் பன்னெடுங்காலமாக ஒடுக்கப் பட்டு, வாய்ப்புகள் பல மறுக்கப்பட்டு அடிமைத்தளையில் சிக்குண் டிருந்த, இன்றும் சிக்குண்டிருக்கும் மகளிர் நலம் மேம்பட வேண்டும் என்ற அக்கறையில் சமூகப் பொறுப்புடன் முனைவர் ஜான்சி பால்ராஜ் எழுதியுள்ள பல கட்டுரைகளின் தொகுப்பு இந்த நூல். இந்நூலைப் பெண்கள் எந்த அளவு படிக்க வேண்டியது முக்கியமோ, அதே அளவு ஆண்களும் படிக்க வேண்டிய முக்கியத்துவம் வாய்ந்தது. பெண்களுக்குக் கொடுக்க வேண்டிய சமத்துவம் குறித்து இருபாலரும் அறிந்து கொள்ள வேண்டிய விழிப்புணர்வு தரும் நூல் இது.

பாரதி பாடிய புரட்சிப் பெண்ணாகப் பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்; எட்டு மறிவினில் ஆணுக்கிங்கே பெண் இளைப்பில்லை என்று பல துறைகளில் இன்று பெண்கள் சாதனை செய்வது பாராட்டிற்கு உரிய

முன்னேற்றம். இருப்பினும், இன்றும் சமூக வாழ்வில் தன்னைக் கட்டுப்படுத்தும், பல உரிமைகளை மட்டுப்படுத்தும் சூழ்நிலையில் பெண்கள் சிக்கித்தான் இருக்கிறார்கள்.

கடந்த பல நூற்றாண்டுகளுடன் ஒப்பிடுகையில் பெண்களின் கல்வி வளர்ச்சி முன்னேறியுள்ளது என்பதை மறுப்பதற்கில்லை. இருப்பினும் வளர்க்கப்பட்ட முறையும், வளர்ந்த சூழ்நிலையின் தாக்கமும் இன்றும் பெண்களுக்குப் பல மனத்தடைகளை அவர்களின் ஆழ்மனதில் நிரந்தரமாகப் பதியவைத்துவிட்டது. கூண்டுக்கிளிகளின் கூட்டைத் திறந்து விட்டாலும் வெளியேறத் தயங்கும் பறவைகளாக முடங்கியே உள்ளனர் பலர். அதற்குக் காரணம் பெண்கள் என்றால் பண்பு அச்சம், மடம், நாணம் ஆகியவற்றுடன் அவர்கள் இருக்க வேண்டும் என்ற சமூகத்தின் எதிர்பார்ப்பிற்கு இசைந்து சச்சரவு இல்லாத வாழ்க்கையை வாழ்ந்துவிடலாமே என்ற எண்ணம்தான். பெண் என்றால் அழகு, சகிப்புத்தன்மை, பொறுமையின் நிறைகுடம், அர்ப்பணிப்பு மனப்பான்மை என்று சமூகம் காலம்

"ஆணின் அழகும் ஆளுமையும்"

ஆசிரியர்: முனைவர் த.ஜான்சி பால்ராஜ்

நூலின் விலை: ₹ 200

வெளியீடு: எழிலினி பதிப்பகம்

காலமாகப் பெண்களின் வாழ்வில் செய்த கருத்துத் திணிப்புகளை அப்படியே தங்கள் வாழ்க்கையில் பிரதிபலித்து விட வேண்டும் என்ற முனைப்பும் பெண்களிடத்தில் மாறாமல் நிரந்தரமாக உள்ளது.

தான் யார்? தன் திறமைகள் என்ன? வாழ்வில் தன் எதிர்பார்ப்புகள் என்ன? என்று தன்னைக் குறித்து உள்நோக்கி ஆராய மறந்து, அடுத்தவர் குறிக்கோளுக்கு ஏற்ப அவர்கள் வகுத்துக் கொடுத்த வாழ்க்கைப் பாதையில் பயணம் செய்யத் தீர்மானித்துவிட்ட நிலைதான் பெண்களின் வாழ்வை இன்று வரை நிர்ணயித்து வருகிறது. பெண்கள் பலருக்குத் தங்களின் மீது சுமத்தப்பட்டுள்ள கட்டுப்பாடுகளைக் கேள்வி கேட்கும் மனப்பான்மையும் இல்லை. பெண்களின் வாழ்வைக் கட்டுப்படுத்தி உள்ள எவரும் அதைப் பெண்களின் நன்மைக்காகச் செய்ததில்லை. தங்களின் வசதிக்காக விதிகளைச் செய்து வைத்தார்கள் என்பதுதான் மறுக்க முடியாத உண்மை. மறுக்கப்பட்ட உரிமைகள் குறித்துக் கேள்வி கேட்கவும், அவற்றுக்காகப் போராடவும் தேவையான அறிவு வளர்ச்சியைத் தரும் கல்வியும், தற்சார்புடன் வாழ உதவும் சொத்தும், ஊதியமும் மறுக்கப்பட்ட நிலையில், தன் வாழ்வாதாரம், தன் பிள்ளைகளின் எதிர்காலம் இவற்றைத் தக்க வைத்துக் கொள்ள வேறு வழியின்றிப் பெண்களும் சமூகம் தங்களிடம் இருந்து பறித்த உரிமைகளை ஒப்புக் கொண்டு, அது வகுத்த வழியில் வாழ முற்பட்டுவிட்டார்கள்.

பெண்களின் இந்த அடிமை நிலை குறித்து கேள்வி கேட்ட சில நல்ல உள்ளங்களும் நம்முடன் வாழ்ந்து உள்ளார்கள். அவர்கள் பெண்கள் சார்பில் சமூகத்தைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தி கேள்வி கேட்டுள்ளார்கள். அதனால் ஏற்பட்ட எதிர்ப்புகளைக்கண்டு அவர்கள் அஞ்சியதும் இல்லை, பின் வாங்கியதும் இல்லை. அத்தகையரில் பெண் நலத்திற்காகப் பாடுபட்ட ஆண்களும் உள்ளனர். சென்ற நூற்றாண்டில் தமிழ் நாட்டில் தேவதாசி முறையை ஒழிக்கும் சட்டம் உருவாகக் காரணமாக இருந்த டாக்டர் முத்துலட்சுமி, மூவலூர் ராமாமிர்தம் போன்ற முன்னோடி மகளிர் பெயர்களை நினைவு கூராமல் தமிழகப் பெண்களின் வரலாற்றை எழுத இயலாது.

அவ்வாறே பெண்களால் தந்தை பெரியார் என்று பாராட்டப் பட்ட பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்களையும் போற்றாமல் இருக்க முடியாது. ஆண் உரிமைக்கும் பெண் உரிமைக்கும் ஏன் வேறுபாடு இருக்க வேண்டும் என்பது அவருடைய கேள்வி.

பெண்களுக்கு விடுதலை என்ற நிலை உருவாக, கற்பு என்பது இரு பாலருக்கும் பொதுவாகி, ஆணைப் போலவே பெண்ணுக்கும் அனைத்து உரிமைகளும் கொடுக்கப்படுதல் வேண்டும் என்பது அவரது உறுதியான கொள்கை. 99.80% பெண்களுக்கு நமக்கு ஏன் இந்த அடிமை நிலை என்ற எண்ணம் கூட வருவதில்லை என்றார் பெரியார். கற்பு, தெய்வீகக் காதல், புனிதத் திருமணம், கைம்பெண் நிலை, விபச்சாரம் என்று சமூகம் வகுத்துள்ள விதிகள் ஆண்களைக்



கட்டுப்படுத்தாமல் பெண்களை மட்டுமே குறிவைத்ததைப் பெண்களுக்கு விளங்க வைக்க முற்பட்டார், அவற்றைக் குறித்து கேள்விகள் எழுப்பி விழிப்புணர்வை ஊட்டினார்.

தன்னல நோக்குடன் வலிய நிலையில் ஆதிக்க மனப் பான்மையிலிருந்த ஆண்களால் பெண்களைக் கட்டுப்படுத்தும் விதிகள் சமைக்கப்பட்டு பெண்கள் வாழ்வில் அவை திணிக்கப்பட்டு பெண்களை அடிமை தளையில் சிக்க வைக்கப்பட்டுள்ளார்கள். எதிர்க்கேள்வி எழுப்பாமல் இதனைப் பெண்களும் ஏற்றுக் கொண்டு வாழத் தொடங்கியதுதான் அவர்களின் அடிமை நிலைக்குக் காரணம். கீழ் சாதி என்பவர்கள் எவ்வாறு தங்களுக்கு விதிக்கப்பட்ட அந்த நிலையை மறுக்காமல் ஏற்றுக் கொண்டு அதன் படி வாழ்கிறார்களோ அது போன்றே பெண்ணடிமை நிலையும் உருவாகிவிட்டது என்று பெரியார் பரப்புரை செய்து பெண்களின் நிலைக்காகச் சென்ற நூற்றாண்டிலேயே வாதாடினாலும் இன்றும்

கூட ஆணைப் போலவே பெண்ணுக்கும் அனைத்து உரிமைகளும் உண்டு என்பதைப் பெரும்பாலோர், குறிப்பாக பெண்களிலும் ஒரு சிலர் உட்பட ஏற்போர் இல்லை என்பதுதான் கசப்பான உண்மை.

பெண்களுக்கான சமவுரிமை என்ற கருத்தில் பெரியார் போன்றே கொள்கைகள் கொண்டிருந்தவர் இந்திய அரசியலமைப்பின் தந்தை டாக்டர் பி. ஆர். அம்பேத்கர். பெண்கள் அடைந்துள்ள முன்னேற்றத்தின் அளவைக் கொண்டு ஒரு சமூகத்தின் முன் னேற்றத்தை நான் அளவிடுகிறேன் என்று கூறியவர் அண்ணல் அம்பேத்கர். அவருக்குச் சட்டமுறையில் பெண்களின் முன்னேற்றத் திற்கான வழிவகைகளை உருவாக்கும் வாய்ப்பு கிடைத்த பொழுது அவற்றைச்செவ்வனேபயன்படுத்திப்பெண்களின்பலஉரிமைகளுக்கு வழி வகுத்தார். அவர் சட்ட அமைச்சராக இருந்தபோது, பெண்களின் சமத்துவத்துக்காக, இந்து நெறிமுறை மசோதாவை (Hindu Code Bill) நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தினார். ஆதிக்கச்சாதி இந்துக்களின் எதிர்ப்பால் பெண்கள் முன்னேற்றத்திற்கான அவரது

புரட்சிகர மசோதா நிறைவேற்றப் படாத பொழுது அண்ணல் அம்பேத்கர் தன் சட்ட அமைச்சர் பதவியையும் துறந்து தன் எதிர்ப்பைப் பதிவு செய்தார்.

பெண்களின் பாலினச் சமத்துவம் மற்றும் பெண்களின் அதிகாரம் ஆகியவற்றை மேம்படுத்தும் நோக்கில் பல நடவடிக்கைகளை ஐக்கிய நாடுகள் நிறுவனம் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் அண்மைய அறிக்கை ஒன்று உலகில் பெண்களின் தற்போதைய முன்னேற்ற நிலையைக் கருத்தில் கொண்டால், ஆண்களுக்கு நிகரான சட்ட உரிமைகளும் பாதுகாப்புகளும் பெண்களுக்குக் கிடைக்க இன்னும் 286 ஆண்டுகள் ஆகலாம் என்று குறிப்பிட்டுள்ளது. எனவே தொடர்ந்த

பெண் சமத்துவப் பரப்புரையும் விழிப்புணர்வும் தேவை என்பதை மறுப்பதற்கில்லை. அந்தக் குறிக்கோளில் அனைவரும் தொடர்ந்து செயல்படுவதும் தேவையாகிறது.

முனைவர். ஜான்சி பால்ராஜ் அவர்களும் தன் பங்கிற்குப் பெண் சமத்துவ விழிப்புணர்விற்கு இந்த நூலில் கட்டுரைகள் பல வடித்துள்ளார். மனித இனத்தின் சரிபாதியரான பெண்களை மதிக்காமல் அடிமைப்படுத்தும் நிலை உருவான வரலாற்றையும், பெண்களைப் பண்பாட்டுக் குறியீடாக மாற்றி அவர்களது அடிப்படை மனித உரிமைகளைப் பறித்து வாழ்வெல்லையைச் சுருக்கி கட்டுப்படுத்திய சமூக வரையறைகளையும் தெளிவாக விளக்கும் கட்டுரைகள் இவை. சமூகத்தில் பெண்கள் குறித்து இருக்கும் பல பிற்போக்கான சூழல்களை நூலில் எடுத்துக் காட்டியுள்ளார். அத்துடன் சிந்தனையைத் தூண்டும் கேள்விகள் பலவற்றையும் முன்வைக்கின்றார். அது மட்டுமின்றி பெண் சமத்துவ இலக்கு என்ற மாறுதலை நோக்கி நடை போடச் சிறந்த வழிமுறைகளையும் காட்டியுள்ளார்.

இந்த நூலில்; சமத்துவத்தைத் தங்களது வாழ்வியல் முறையாகக் கொண்டிருக்கும் மக்களே உயர்ந்த பண்பாட்டின் குறியீடு என்று வரையறுத்து, பெண் தன்னைப் பண்பாட்டின் குறியீடாகக் காட்டும் சமூக அமைப்பிலிருந்து வெளிவர வேண்டும் என்று தெளிவாக வழிகாட்டுகிறார் நூலாசிரியர். அற்பத்தனமான ஆதிக்க ஆசையால் தன் இனத்தின் சரி பாதியான பெண்ணினத்தின் அறிவிற்கு விலங்கிட்ட மனிதர்களது செயலை அவர்களது அறிவின்மைக்குள் அடக்குவதா இயலாமையில் இணைப்பதா என்ற வினாவையும் எழுப்புகிறார்.

பெண்ணின் நல்லொழுக்க அடையாளமாக இச்சமூகம் வரை யறுத்து வைத்திருக்கும் மாயத்தைத் தோலுரிக்கும் அறிவுசார் சிந்தனை மாற்றம் வரவேண்டும் என்கிறார் முனைவர் ஜான்சி பால்ராஜ். பெண்களுக்கு அவர்களது வலிமையை உணரவைக்கும் ஒரே ஆயுதம் கல்விதான் என்று ஆணித்தரமாகக் கூறும் முனைவர் ஜான்சி பால்ராஜ், குடும்பமே பெண்களுக்கு முதல் எதிரியாக அமைந்துவிடுகிறது. குடும்பத்தின் உயர்ந்த கௌரவத்திற்கு என்று பெண்ணின் சுதந்திரப் பறிப்பும் அவள் மீதான அடக்கு முறைகளும் மறைமுகமாகப் பயன்படுத்தப் படுகின்றன என்று பெண் இனத்திற்கு எதிரான பாகுபாட்டின் 'கிரவுண்ட் சீரோ' (ground zero) எது என்பதைத் துல்லியமாகக் குறிப்பிடுகிறார்.

எந்த ஒரு சரியான சமூக மாற்றமும் சமூகத்தின் அடிப்படை அலகான குடும்பத்திலிருந்துதான் தொடங்கியாக வேண்டும். அவ்வாறே பெண்கள் நிலையில் மாற்றம் கொண்டுவர வேண்டும் என்றால் அதைச் சமூகத்தின் அலகான குடும்பத்தில் தொடங்க வேண்டும். ஆண் குழந்தையும் பெண் குழந்தையும் சமம் என்ற சமத்துவக் கருத்தை இருபாலினப் பிள்ளைகளும் உணரும் வண்ணம் அவர்கள் வளர்க்கப் பட வேண்டும். கல்வி நிலையங்களும் இதை வளரும் பிள்ளைகளிடம் வலியுறுத்த வேண்டும். ஆண் குழந்தைகளும் பெண் குழந்தைகளும் வளர்க்கப்படும் விதம் ஒரே விதமாக இருந்தால் பெண்கள் நிலை விரைவில் தானே மாறும் என்பது நூலாசிரியர் முடிபு.

பெற்றோர்களும் ஆசிரியர்களும் வளரிளம் பருவத்தினரைத் தக்க வழியில் நெறிப்படுத்தும் போது பாலின வன்முறைகள் போன்ற மிகப் பெரிய சமூகப் பிழைகளிலிருந்து திசைதிருப்பி சமூகத்தின் எதிர்கால, அறிவார்ந்த சிற்பிகளாக அவர்களை மாற்ற முடியும் என்ற வழிமுறையையும் கூறுகிறார். இது குறிப்பாக அடுத்த தலைமுறையை வளர்த்தெடுப்பதில் பெரும் பங்கு வகிக்கும் பெண்கள் கையில்தான் உள்ளது. குடும்பத்தில் பெண் குழந்தைகளின் வளர்ப்பு முறை ஆண் குழந்தைக்கு இணையானதாக இயல்பான பராமரிப்பாக இருக்க வேண்டும்.பாலினச் சமத்துவத்தைக் காட்ட பெற்றோர் தங்கள் குழந்தைகளுக்குமுன் மாதிரியாக வாழ்ந்து காட்ட வேண்டும் என்றும் அறிவுறுத்துகிறார் நூலாசிரியர்.

குடும்ப அளவில் பெண்களைக் கீழமைப் படுத்தாமல் மதிப் பளிக்கும் முறையில் ஒவ்வொரு செயலிலும் தங்கள் செயல் பாடுகளைப் பெற்றவர்கள் மாற்றியமைத்துக் கொள்ள வேண்டும். குடும்ப வேலைகளில் ஆண் வேலை இது, பெண்ணின் பொறுப்பு இது என்ற பாலினப் பாகுபாடு காட்டுவது இருவரும் உழைத்து ஊதியம் ஈட்டும் காலத்திற்குப் பொருத்தமற்ற நடைமுறை. பெண்களின் உழைப்பை இரு மடங்கு உறிஞ்சும் நிலையில், உழைப்புச் சுரண்டலுக்கு உள்ளாகும் நிலை பெண்களின் உடல் நலத்தையும் மனநலத்தையும் பாதிப்பதுடன் அவர்களுக்கான ஓய்வு, பொழுதுபோக்கு என்பனவற்றை இல்லாமல் செய்கிறது என்பதையும் சுட்டிக் காட்டுகிறார்.

பெண்களும் தாங்கள் ஒரு பாலினப் போகப் பொருள் என்ற பழமையான கருத்துகளைக் கைவிட்டு, ஆண்களை ஈர்ப்பதுதான்

பெண்ணுக்குரிய இலக்கணம் என்ற எண்ணத்துடன் தங்களின் மதிப்பைத் தாங்களே குறைத்துக் கொள்ளும் வகையில் அமையக் கூடிய நடை உடை பாவனைகளைத் தவிர்க்க வேண்டும். பெண்கள் தங்களுக்குச் சட்டம் மூலம் கொடுக்கப்படும் உரிமைகளைத் தக்கவைத்துக் கொள்ள, தங்களுக்கு உள்ள வாக்குரிமையைத் திறமையாகப் பயன்படுத்தி தங்கள் உரிமைகளை நிலைநாட்டும்

வாய்ப்புகளைத் தவறவிடக்கூடாது, தங்கள் உரிமையை வலியுறுத்த வேண்டும் என்று பெண்களுக்கு நேரடியாக நல்ல பல ஆலோசனைகளையும் கூறுகிறார்.

புகழ்பெற்ற அமெரிக்கப் பெண் கவிஞரும் சமூக ஆர்வலருமான மாயா ஆஞ்சலூ தனது 'நான் எழுவேன்' (Still I Rise) கவிதையில்...

நிலவினைப் போலக் கதிரவனைப் போல

நிரந்தரமான அலைகளைப்போல

மேலெழும் நம்பிக்கை போல

நானும் மேலெழுவேன்...

என்று குறிப்பிட்டவாறு பெண்கள் தங்களை அடிமைப்படுத்தும் தளைகளை உடைத்து மேலே உயர இந்த நூல் உதவும்.

பெண்கள் சமத்துவத்திற்காகத் தன் எழுத்து மூலம் விழிப்புணர்வு கொண்டு வர இந்த நூல் மூலம் முயலும் முனைவர். ஜான்சி பால்ராஜ் பாராட்டிற்குரியவர். உயர்நிலைப்பள்ளி பதின்மவயது மாணவர்களுக்குத் துணைப்பாட நூலாக இந்த நூல் அறிமுகப் படுத்தப் பட்டால் தமிழ் இளைஞர் மனதில் தேவையான மாற்றத்தைக் கொண்டுவர உதவும்.

பெண்ணியத்தை வலியுறுத்தும் நூலைப் படைத்த முனைவர் ஜான்சி பால்ராஜ் அவர்களுக்குப் பாராட்டுகளும் வாழ்த்துகளும்.

9. சுழற்சியாண்டு தொடராண்டுக் கணக்குகளின் நிறை குறைகள்

முனைவர் தேமொழி
சான் ஃபிரான்சிஸ்கோ, யு.எஸ்.ஏ.

இன்றைய நாட்களில், வைதீக சமயத்தினர் (அல்லது இந்து சமயத்தினர்) பின்பற்றும் நாட்காட்டிக் காலக் கணக்கு (அல்லது பஞ்சாங்கம்) சக ஆண்டின் அடிப்படையில் அமைவது. சக ஆண்டுக் கணக்கு முறையானது அதைத் தோற்றுவித்தவராகக் கருதப்படும் சாலிவாகனரின் பெயரினை ஒட்டி சாலிவாகன சகாப்தம் (சக + அப்தம்) / சக ஆண்டு என்றும் குறிப்பிடப்படும். 'சாலிவாகனன்' என்பவர் பண்டைய இந்திய நிலத்தில் தக்காணப் பகுதியில் ஆட்சி புரிந்த 'சாதவாகனர்' என்ற அரச மரபின் (தொன்மங்களில் இவர்கள் ஆந்திரர் எனவும் அழைக்கப்பட்டவர்) புகழ் பெற்ற மன்னர்களுள் ஒருவர். இன்றும் தக்காணப் பகுதியில் ஆந்திரம், கர்நாடகம், மராட்டிய மாநிலங்களில் வழக்கில் உள்ள இந்த 'சக சம்வத்' தொடராண்டு முறையில் 60 ஆண்டுகள் சுழற்சி அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டுக்கும் ஒரு பெயரும் உண்டு.

தமிழர்களின் புத்தாண்டு என்று கொண்டாடப்படும் ஆண்டுகள் (சித்திரையில் தொடங்கி பங்குனியில் முடியும் ஓராண்டுக் காலம்) ஒவ்வொன்றிற்கும் ஒரு பெயர் என்று அறுபது ஆண்டுகளின் வட மொழிப் பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளது. இவை அறுபது ஆண்டுகள் வட்டம் அல்லது சம்வத்சரம் என்று குறிப்பிடப்படும். இதுவும் சாலிவாகன சக ஆண்டுகளின் முறையைப் பின்பற்றி அமையும் அதே சுழற்சி முறைக் கணக்குதான். இது வியாழன் கோளின் நகர்வின் அடிப்படையில் அமைவதால் வியாழ வட்டம் என்றும் குறிப்பிடப்படும். வியாழவட்டம் (60 year Jovian Cycle) சனிக் கோளுடன் இணைத்தவகையில் கணக்கிடப்படும். ஒரு முழு வியாழவட்டமானது வியாழன் கோளின் ஐந்து சுற்றுகளைக் கணக்கில் கொண்டது. வியாழன் 12 ஓரைகள் கொண்ட ஒரு கனலி வட்டத்தை (இராசிச் சக்கரத்தின் 12 இராசிகளை) கடந்து முடிக்க, அதாவது



கதிரவனை முழுச் சுற்று சுற்றி முடிக்க 12 ஆண்டுகள் எடுக்கும். இதுபோன்று வியாழன் சூரியனை ஐந்து முழுச்சுற்றுகளைச் சுற்றி முடிக்கும் காலம் வியாழ வட்டக் கணக்கில் 60 ஆண்டுகள் கால அளவு கொண்டது (5 × 12).

சாலிவாகன சக ஆண்டு முறைக் கணக்கிடல் நர்மதை தப்தி ஆறுகள், விந்திய சாத்பூரா மலைகளுக்குத் தெற்கில் உள்ள தக்காணப் பகுதியில் சுமார் 2000 ஆண்டுகளாக வழக்கத்தில் பின்பற்றப்படுவது. இந்தக் காலக் கணக்கிடல் முறையில் கதிர் வழி நாட்காட்டியையும் மதிவழி நாட்காட்டியையும் இணைத்து கதிர்-மதி வழி முறையில் (lunisolar calendar) காலம் கணக்கிடுகிறார்கள். ஆதலால் சூரியன் மேஷ ஓரையில் நுழையும் காலத்தில் அமாவாசை புதுநிலவு நாளில் ஆண்டுக் கணக்கைத் தொடங்குவார்கள்.

இவர்களுக்குத் தெற்கே உள்ள தமிழக மலையாள மக்கள் சூரிய நாட்காட்டியை (solar calendar) மட்டுமே கணக்கில் கொள்வதால் மேஷ ஓரையில் சூரியன் நுழையும் நாளை மட்டுமே புத்தாண்டு எனக் கணக்கிடுவார். ஆகவே சூரிய நாட்காட்டி கணக்கிடும் முறை கொண்ட தமிழ் மக்களுக்கு பொங்கல், ஆடி புதுவெள்ளம், பொங்கல் போன்ற பண்டிகை நாட்கள் மாறவே மாறாமல் எல்லா ஆண்டுகளும் தமிழ் மாதங்களின் அதே நாட்களில்தான் வரும். இடைக்காலத்தில் தமிழுடனும் தமிழகத்துடனும் கொண்டிருந்த உறவைத் துண்டித்துக் கொண்டு சேர நாடு மலையாள மொழியுடன் கேரளப் பகுதியாகத் தனித்து இயங்கும் பொழுது அவர்களும் கொல்லம் ஆண்டு என்ற தொடராண்டு முறைக்கு மாறிவிட்டனர்.

ஆனால் சோதனையாகத் தமிழ் மக்கள் தொடராண்டுக் கணக்கு முறையைப் பரவலாகப் பயன்படுத்தும் வழக்கமே இல்லாது இருந்தார்கள். தமிழகத்தின் கல்வெட்டுகள் ஒரு சில 'கலியாண்டு' (இந்த நடப்பு ஆண்டு- கலி 5125 ஆம் ஆண்டு) என்ற தொடராண்டு காலக் கணக்கைப் பின்பற்றி இருந்தாலும், ஏனோ இந்தத் தொடராண்டு முறை கணக்கிடல் தமிழகப் பகுதியில் பரவலாக இல்லாது போயிற்று. தமிழக மன்னர்கள் சோழர்களும் பாண்டியர்களும் பெரும்பாலும் தாங்கள் வெட்டும் கல்வெட்டுகளில் உள்ள காலக் கணக்குச் செய்தியை இந்த மன்னனின் இத்தனையாவது ஆட்சி ஆண்டு என்று குறிப்பிடும் முறையைப் பின்பற்றினர்.

ஒரு காலத்தில் மேற்குலகிலும் ஐரோப்பாவில் இது போன்ற ஆட்சி முறைக் குறிப்பிடும் வழக்கம் ஜூலியன் காலக் கணக்கில் இருந்தாலும், அவர்கள் வெகு விரைவில் அம்முறையைக் கைவிட்டு, கிபி 525 ஆம் ஆண்டு முதல், கிறிஸ்துவுக்கு முன் கிறிஸ்துவுக்குப் பின் என்ற ஒரு முறையான தொடராண்டுக் கணக்கினை ஏற்றுக் கொண்டனர். இதற்குக் காரணம், ஆள்பவரின் ஆட்சி ஆண்டைக் கொண்டு கணக்கிடும் முறையில், ஒரே ஆண்டில் ஒரு மன்னரின் ஆட்சி முடிந்து மற்றொருவர் ஆட்சி தொடங்கினால் கணக்கில் குழப்பம் ஏற்படுவது காரணமாக இருந்ததுதான். எனவே காலக்கோட்டில் அமையும் தொடராண்டு முறை உலகில் பல பகுதிகளில் வழக்கத்தில் ஏற்றுக் கொள்ளப் பட்டது.

இந்தியாவிலும் விக்கிரம ஆண்டு தொடராண்டு முறை வட இந்தியாவிலும், முன்னர் குறிப்பிட்ட சக ஆண்டு தொடராண்டு முறை தக்காணப் பகுதியிலும், ஏறத்தாழ 2000 ஆண்டுகளுக்கு முன்னர் வந்துவிட்டது. நடக்கும் இந்த ஆண்டில் விக்கிரம ஆண்டு-2081, சக ஆண்டு-1946 என்ற ஆண்டுகளின் கணக்கு எண்ணிக்கை இதைத்தான் காட்டுகிறது. சூரிய நகர்வுகளைக் கொண்டு காலம் கணிக்கும் கதிர்வழி நாட்காட்டி முறை கொண்ட ஒரிசா (1431), வங்காளம் (1431), அஸ்ஸாம் (1431), மலையாளம் (கொல்லம் -1199) ஆகிய பகுதிகளும் இடையில் தொடராண்டு முறையில் காலத்தைக் கணக்கிடத் தொடங்கி விட்டனர்.

இன்றைய தமிழ் மக்கள் தமிழ் ஆண்டுகள் என்ற பெயருடன் வழக்கத்தில் வைத்திருக்கும் இந்த 60 ஆண்டுக் கணக்கு முறையில் ஆண்டுகள் பிரபவ, விபவ, சுக்ல... என்று தொடங்கி... ரக்தாட்சி,

குரோதன, அட்சய என்று முடியும். அறுபது ஆண்டுகள் நிறைவுற்று ஒரு முழுச் சுழற்சி முடிந்தவுடன் மீண்டும் பிரபவ, விபவ, சுக்ல... என்று கணக்கிடப்படும். வராகமிகிரர் (பொ.ஆண்டு 505 - 587) இயற்றிய பிருகத் சங்கிதையில் குறிக்கப்பட்ட ஒழுங்கிலேயே இன்றுள்ள அறுபதாண்டுப் பட்டியல் கடைப்பிடிக்கப்படுகின்றது.

இந்த 60 தமிழ் ஆண்டுகளின் பெயர்களில் குறிப்பிடப்படுப வற்றில் எதுவுமே தமிழ்ப் பெயர்கள் அல்ல என்பதையும் தமிழர் களும் ஒப்புக் கொள்கிறார்கள். அதனால் இந்த 60 வடமொழிப் பெயர்களையும் கைவிடாமல், தமிழ்ப்படுத்தியாவது தங்கள் வாழ்வில் இணைத்து தமிழாண்டுகள் என்று கூறிவிட உறுதி பூண்டுள்ளார்கள் என்பது எந்த அளவில் தமிழ் மக்கள் சமயத்திற்கு முதன்மை நிலை அளித்து, தாய்மொழிக்கு அதற்கு அடுத்த நிலை கொடுத்துள்ளார்கள் என்பதைப் புரிந்து கொள்ள உதவும். கோவிலில் தங்களுக்குப் புரியாத வடமொழியில் வழிபாட்டினை மேற்கொள்வதற்கும், திருமணங்களில் வடமொழி மந்திரங்கள் கூறி வாழ்க்கையைத் தொடங்குவதற்கு இணையானது இம்முறை என்பதால் இது குறித்து ஆராய்வது எந்த ஒரு ஆக்கப்பூர்வமான விளைவையும் கொண்டுவரப் போவதில்லை என்பது மட்டும் உறுதி.

எவ்வாறு இந்த வடமொழித் தழுவல் காலக் கணக்கீட்டு முறை தமிழக மக்களின் வாழ்வில் நுழைந்தது என்பது மிக எளிதில் புரிந்து கொள்ளக் கூடிய ஒன்று. 14 அல்லது 15 ஆம் நூற்றாண்டுக் கால கட்டத்தில் தமிழக மன்னர்கள் ஆட்சிக் காலம் தமிழகத்தில் மறைந்த பிறகு, தமிழகப் பகுதியை ஆட்சி செய்தவர்கள் விஜய நகர நாயக்க மன்னர்களும், பின்னர் தஞ்சைப் பகுதியில் மராட்டிய மன்னர்களும் ஆவார்கள். இவர்கள் சக ஆண்டு கணக்கு முறையைப் பின்பற்றிய தக்காணப் பகுதியிலிருந்து வந்தவர்கள். தங்களின் இந்த முறையைத் தமிழகத்தை ஆட்சி செய்த பொழுதும் தொடர்ந்தார்கள்.

நடப்பில் உள்ள 2024 ஆம் ஆண்டை தக்காணப் பகுதியினர் கீழ்க் காணுமாறு தான் இன்றும் குறிப்பிடுகிறார்கள்.

சக சம்வதா 1946 - குரோதி (தெலுங்கு ஆண்டுக் கணக்கு)
சக சம்வதா 1946 - குரோதி (கன்னட ஆண்டுக் கணக்கு)
சக சம்வதா 1946 - குரோதி (மராத்தி ஆண்டுக் கணக்கு)
(https://www.drikpanchang.com/panchang/hindu-panchangs.html)

ஏற்கனவே எந்த தொடராண்டு முறையும் பயன் கொள்ளாத தமிழ் மக்களின் இடையில் அரச நடவடிக்கைகளில் அந்நிய மன்னர்கள் கையாண்ட நாட்கணக்கு எளிதில் உள்வாங்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டுக் கோவில்களில் விஜயநகர மன்னர் ஆட்சிக் காலங் களில்தான் பிரபவ, விபவ, சுக்ல... என்று காலம் குறிக்கும் முறை கல் வெட்டுகளில் தோன்றத் தொடங்குகிறது. தஞ்சாவூர் மாவட்டம், மயிலாடுதுறை வட்டத்தில் உள்ள திருக்கடையூர் அமிர்தகடேஸ்வரர் கோயிலின் மூன்றாவது கோபுரத்தின் சுவரில் உள்ள பொ. ஆ. 1500 களில் வெட்டப்பட்ட விஜயநகரப் பேரரசர் கிருஷ்ணதேவராயர் காலத்துக் கல்வெட்டு, திருவல்லிக்கேணி கோயில் கல்வெட்டுகள் இந்த நாட்காட்டி கணக்குமுறை ஊடுருவலுக்குச் சான்றுகளாக அமைகின்றன.

இந்த அறுபதாண்டு சுழற்சிமுறைக் கணக்கை மகிழ்வுடன் ஏற்றுப் பின்பற்றத் தொடங்கிய தமிழ் மக்கள் ஏனோ அதனுடன் இணைந்து வந்த சக ஆண்டு என்ற தொடராண்டுக் கணக்கைப் பின்பற்றவில்லை. இந்த முடிவை அந்நிய மன்னர்களே நடைமுறைப்படுத்த விரும்பாமல் தங்களைத் தமிழ் மக்களுடன் இணைத்துக் கொள்ளும் விருப்பத்தால் செய்த மாற்றமா, அல்லது தமிழ் மக்கள் தவிர்த்ததா என்பது மேலும் ஆய்வுக்கு உரிய ஒன்று. அதனால் 15 ஆம் நூற்றாண்டு போல சித்திரையை முதல் மாதமாகக் கொண்டு தொடங்கும் அறுபது வியாழவட்ட ஆண்டு பெயர்கள் கொண்ட காலக் கணக்கிடும் முறை தமிழகத்தில் நிலைத்துவிட்டது. ஆனால் இந்த வரலாற்று உண்மையைத் தமிழர்கள் ஏற்கும் மனநிலையில் இல்லாததால், மறுதலித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதற்குத் தமிழர்கள் வாழ்வில் வைதீக சமயம் கொண்டிருக்கும் தாக்கமே காரணம்.

ஒரு நிகழ்வை வரலாற்றில் பதிய வேண்டும் என்றால், இன்றும் நாம் வழக்கில் பின்பற்றும் நிலை போலவே குறைந்தது 3 குறிப்புகள் வேண்டும், அவை; நாள், மாதம், ஆண்டு. மேற்கொண்டு கிழமை சொல்வதோ கால மாலை என நேரம் சொல்வதெல்லாம் மேலதிகத் தகவல். காலப் போக்கில் இக்குறிப்புகள் முக்கியத்துவம் இல்லாமல் ஒரு நிலையைச் சென்றடையும். ஆனால் இந்த ஆண்டு, இந்த மாதம், இந்த நாளில் என்பது மிக அடிப்படையான காலக்குறிப்பு. இவையே கூட தேவை கருதிச் சுருக்கப்படுவதும் உண்டு. இந்தியா விடுதலை என்றால் ஆகஸ்ட் 15 என்ற அளவில் நின்று விடலாம்.

அமெரிக்கா சுதந்திரம் ஜூலை 4 என்று மட்டும் சொல்வது இதற்கு ஓர் எடுத்துக் காட்டு. மாறாக ஆண்டை மட்டும் குறிப்பிட்டுக் கடக்கும் நிலையும் இருக்கலாம், 2004 ஆண்டு சுனாமி வந்தது என்பது போல. ஆனால் காலக் கோட்டில் நிகழ்வை அறிந்து கொள்ள, அதன் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ள, தொடரான ஆண்டுக் கணக்கில் ஆண்டைக் குறிப்பிடுவது மிக மிக இன்றி அமையாதது. இல்லாவிட்டால் நிகழ்வின் முக்கியத்துவம் மதிப்பிழந்து போகும். அத்துடன், ஒரு நிகழ்வைக் காலக் கோட்டிலும் புரிந்து கொள்ள இயலாது.

பிற்காலத்தில் அந்நியர் ஆட்சியில் சக தொடராண்டுக் கணக்குடன் அவர்கள் இணைத்துப் பயன்படுத்திய சுழற்சி ஆண்டையும் ஏற்றுக் கொண்டிருந்தாலாவது வரவேற்கத் தக்கதாக இருந்திருக்கும். ஆண்டு குறித்து இரண்டு குறிப்புகளை (ஆண்டு எண் + ஆண்டின் பெயர்) இணைத்துப் பயன்படுத்துவது துல்லியத்தை மேம்படுத்தும் ஓர் உத்தியாக இருந்திருக்கக் கூடும் (*Cross checking of data validation method*). ஆனால் தொடராண்டு பகுதியைக் கைவிட்டு வெறும் சுழற்சியாண்டு முறையை மட்டும் பின்பற்றியது மெச்சத் தகுந்த முறை அல்ல. அந்நியர் காலக் கணக்குமுறையைத் தத்து எடுத்தவர்கள் அதை முழுமையாக சக தொடராண்டு கணக்குடனாவது தத்து எடுத்திருக்கலாம். அவ்வாறு செய்யாதது கிடைக்கும் சில வரலாற்றுக் குறிப்புகளை கிரிகோரியன் ஆண்டுக் கணக்கிற்கு மாற்றுவதில்

கிரிகோரியன் நாட்காட்டி

சிக்கலானதாக, சுற்றுவழிக் கணக்காக அமைந்துள்ளதால் கணக்கிடும் பிழைகளுடன் சிலர் கணக்கிடும் நிலையில் கொண்டு விடலாம். இதை எடுத்துக் காட்டுடன் விளக்கினால் இம்முறையில் உள்ள குறைபாடு புரியும்.

எடுத்துக் காட்டாக, நீங்கள் பிறந்தது நள ஆண்டு உங்கள் சகோதரி பிறந்தது ஆனந்த ஆண்டு என்றால் எது முன்னர் எது பின்னர்? அவர் உங்கள் அக்காவா தங்கையா? இருவருக்கும் என்ன வயது வேறுபாடு, உங்கள் வயதுதான் என்ன என்று இந்தத் தகவலைக் கேட்பவரால் புரிந்து கொள்ள முடியாது. இதையே நான் பிறந்தது 1976 என் சகோதரி பிறந்தது 1974 என்றால் எல்லா விவரமும் தானே தெரியும். இதே போல ஓர் ஓலைச்சுவடி ஒன்று 'விளம்பி' ஆண்டு என்று குறிப்பிட்டு உங்களுக்குக் கிடைக்கிறது என்று வைத்துக் கொள்வோம். இந்தத் தகவல் மட்டுமே அது நடப்பில் நாம் பயன்படுத்தும் கிரிகோரியன் ஆண்டில் பின் வரும் 1478, 1538, 1598, 1658, 1718, 1778, 1838, 1898 ஆண்டுகளில் எந்த ஆண்டில் எழுதப்பட்ட ஓலை என்று கணிக்கவே வழி வகுக்காது. மேற்கொண்டும் சில தகவல்கள் தேவை. விளம்பி ஆண்டு ஆடி மாதம் 15 ஆம் தேதி என்று மாதத்தின் எந்த நாள் என்ற தகவல் குறிப்பிட்டாலும் கூட ஒரு பயனும் இல்லை. இதுவும் உதவாது. மேற் குறிப்பிட்ட விளம்பி ஆண்டுகளில் அதுவும் ஏதோ ஓர் ஆடி மாதம் 15 ஆம் நாள் அவ்வளவுதான். இதற்கும் மேலாக, கிழமையோ அல்லது அமாவாசை, பௌர்ணமி, வளர் பிறை தேய்பிறை நாட்கள் அன்றைய நட்சத்திரம் போன்ற ஏதாவது ஒரு தகவல் இருந்தாலே அது எந்த ஆண்டுடன் பொருந்துகிறது என்று கணக்கிட உதவும். இவ்வாறு கொடுக்கும் தகவலையும் சரியாகக் கணக்கிட்டுச் சரியான கிரிகோரியன் நாளைக் கண்டுபிடிப்பார்கள் என்பதற்கு உத்தரவாதமும் இல்லை என்பதை அண்மைய நிகழ்ச்சி ஒன்று காட்டியுள்ளது.

"பழமையான திருக்குறள் ஓலைச்சுவடி கண்டுபிடிப்பு" என்று ஏப்ரல் 19, 2024 அன்று வெளியான நாளிதழ் செய்தி மூலம் இதை அறிய முடியும். நாளிதழ் செய்தியில் தன் முன்னோர்களால் பாதுகாக்கப்பட்டு வந்த ஒரு திருக்குறள் ஓலைச்சுவடியைக் கண்டெடுத்த ஆய்வாளர் அச்சுவடி எழுதப்பட்ட காலம் விளம்பி ஆண்டு ஆடி மாதம் 15 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை என்ற குறிப்பும் அதில் இருப்பதைக்

கண்டார். இனி பழைய விளம்பி ஆண்டு பஞ்சாங்கங்களில் (1478, 1538, 1598, 1658, 1718, 1778, 1838, 1898 ஆண்டுகளில் உள்ள விளம்பி ஆண்டுகளில்) எந்த ஆண்டின் ஆடி மாதத்தின் 15 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமையில் வருகிறது என்று பொருத்திப் பார்த்தால் போதும். ஆனால் அது எளிதான முறையாக இருக்காது. இதை எதிர் கொண்ட ஆய்வாளர் கணக்கிட்டு அவர் கண்டெடுத்த ஓலைச் சுவடியின் காலம் 1718ம் ஆண்டு ஜூலை 31 என்றும், தற்போதைய நிலையில் 306 ஆண்டு பழமையான ஓலைச் சுவடி என்றும் கூறுகிறார்.

ஆனால், 1718 ஆம் ஆண்டு விளம்பி வருடம் ஆடி மாதம் 15 ஆம் தேதி வருவது ஒரு "புதன் கிழமையில்" என்பதை இணையவழிப் பெறக்கூடிய பஞ்சாங்கம் காட்டுகிறது (https://www.drikpanchang.com/tamil/tamil-month-panchangam.html?date=27/07/1718). மாறாக, விளம்பி ஆண்டு - ஆடி மாதம் - 15 ஆம் தேதி - ஞாயிற்றுக்கிழமை என்று ஓலைச்சுவடி கூறும் நாள் பொருந்திப் போவது 1838 ஆம் ஆண்டாக அறியப்படும் விளம்பி ஆண்டின் தகவலோடுதான் (https://www.drikpanchang.com/tamil/tamil-month-panchangam.html?date=29/07/1838). 1838ஆம் ஆண்டு ஜூலை 29 ஆம் நாள்தான் ஞாயிற்றுக் கிழமை ஆடி 15 ஆம் நாள். அதாவது அந்த ஓலைச்சுவடி 185 ஆண்டுகள் பழமையானது. ஆய்வாளர் குறிப்பிடுவது போல 306 ஆண்டு பழமையான ஓலைச் சுவடி அல்ல.

Case study method என்று ஆய்வுலகம் பின்பற்றும் ஓர் ஆய்வுமுறையின் அடிப்படையில் இந்த நிகழ்வை விளக்கலாம். எடுத்துக் கொண்ட ஒரு விளம்பி வருடக் குறிப்பு, அதைத் துல்லியமாக கிரிகோரியன் கணக்கில் மாற்றி சரியான காலம் காட்ட எத்தனை இடர்ப்பாடுகளைக் கொடுக்கிறது என்பதை இச்செய்தி காட்டுகிறது. வெறும் விளம்பி ஆண்டு, விகாரி ஆண்டு என்ற குறிப்புகள் அரைகுறையான காலக் குறிப்புகள், அவை காலத்தைத் துல்லியமாக காலக்கோட்டில் அறிய உதவுவதில்லை. காலக் கணக்கீடும் எளிதல்ல, அவற்றால் எந்த ஒரு பயனும் இல்லை. மேற்கொண்டு அதிகப்படியாகக் கிடைக்கும் தகவல் இருந்தால் அதையும் பல பஞ்சாங்கங்களுடன் பொருத்திப் பார்த்தே குறிப்பு கொடுக்கும் காலத்தை அறிய முடியும். சுழற்சியாண்டு காட்டும் அரைகுறை காலக் குறிப்பையும் சரியாகக் கணக்கிடுவதும் எளிதாக இல்லை என்பதும் இச்செய்தி மூலம் நிருபிக்கப் பட்டுள்ளது.

இருப்பினும், இன்னமும் ஏன் தமிழர்கள் இந்தத் தமிழ்ப் பின்புலம் இல்லாத வடமொழிப் பெயர் கொண்ட, பயனற்ற ஆண்டுக் கணக்கைத் தமிழாண்டுகள் என்று கூறி பெருமிதம் கொள்கிறார்கள்? தமிழுக்குத் தலைக்குனிவான நிலையை ஏற்படுத்துகிறோம் என்பதைப் புரியாதவர்களாக இருக்கிறார்கள்? என்று சிந்தித்தால்; மனிதர்கள் பழக்கத்திற்கு அடிமையாகும் இயல்பையும், 'மதம் ஒரு போதைப்பொருள்' (“Religion is the opium of the people") என்று பொருளாதார மேதை கார்ல்மார்க்ஸ் கூறியதையும் ஒருங்கே இணைத்துப் பார்த்தால் தமிழர்கள் பயனற்ற அறுபது ஆண்டுக் கணக்கைக் கைவிட முடியாத, மீள முடியாத மனநிலையில் இருப்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது.

தமிழர்கள் தொடக்கத்தில் இருந்தே இதில் தெளிவற்ற குறிப்புகளைப் பின்பற்றியவர்களாக வரலாற்றுக் காலக் கணிப்பில் பின்தங்கிய நிலையில் இருப்பது நம் வரலாற்றை நாம் சரியாக அறிய முடியாத நிலையில் நம்மை வைத்திருக்கிறது. காலத்தின் முக்கியத்துவம் ஏன் தமிழ்ப் பண்பாட்டில் இத்தகைய முக்கியமற்ற ஒரு நிலையில் இருந்திருக்கிறது என்பது வியப்பளிக்கும் கேள்வி. இறுதியாக 1971ஆம் ஆண்டில் திருவள்ளுவர் ஆண்டு என்ற தொடராண்டு முறை ஒன்று தமிழக அரசால் முன்மொழியப்பட்டு,

1972இல் நடைமுறைக்கும் வந்தது. தொடர்ந்து 1981இல் அரச ஆவணங்களிலும் அலுவல் முறையில் பயன்படுத்தும் அரசாணையும் வெளியானது. திருவள்ளுவர் ஆண்டு தமிழகத்தில் அதிகாரப்பூர்வமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட தொடராண்டு நாட்காட்டி முறைமை என்ற தகுதியும் பெற்றது. இருப்பினும் குதிரை ஓடிய பின்னர் இலாயம் பூட்டப் பட்டது போன்ற நிலையில், பழங்காலத்து வரலாறுகளை எல்லாம் தொலைத்த பிறகு, அத்துடன் இன்று உலகம் முழுவதும் பொது வழக்கத்தில் வந்துவிட்ட கிரிகோரியன் காலக்கணிப்பு பயன்பாட்டில் இருக்கும் காலத்தில் அது ஒரு பொருளற்ற முயற்சியாக அமைந்தது.

சான்றாதாரங்கள்:

- ★ அறுபது ஆண்டுகள்
- ★ https://ta.wikipedia.org/s/73v3

  கல்வெட்டுப் பாடல்கள். மா. இலாவண்யா, வரலாறு இதழ் 87 [மார்ச் 16 - ஏப்ரல் 15, 2012]
- ★ http://www.varalaaru.com/design/article.aspx?ArticleID=1104
- ★ திருவல்லிக்கேணி கோயில் கல்வெட்டுகள் அறியத் தரும் செய்திகள், தேமொழி, ஜூன் 12, 2021 - சிறகு.
- ★ http://siragu.com/திருவல்லிக்கேணி-கோயில்-க/
- ★ திருக்கணித முறை தமிழ்ப் பஞ்சாங்கம்
- ★ https://www.drikpanchang.com/tamil/tamil-month-panchangam.html
- ★ 306 ஆண்டுகள் பழமையான திருக்குறள் ஓலைச்சுவடி கண்டுபிடிப்பு தொல்லியல் ஆய்வாளர் தகவல், வெள்ளி, ஏப்ரல் 19, 2024, தினமலர்
- ★ https://www.dinamalar.com/news/tamil-nadu-district-news-theni/-306-year-old-tirukkural-footprints-discovered-by-archeologist---/3602345

3. இளங்கோவடிகளின் பார்வையில் பருவங்கள் தோறும் மதுரை மாநகர்

முனைவர் தேமொழி
சான் ஃபிரான்சிஸ்கோ, யு.எஸ்.ஏ.

பழந்தமிழகத்தில் பருவகால மாற்றங்கள் எவ்வாறு இருந்தன என்பதை இலக்கியங்கள் மூலம் நம்மால் அறியமுடியும். குறிப்பாக ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றான சிலப்பதி காரத்தில் இளங்கோவடிகள் கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் ஆகிய ஆறு வகைப் பருவங்களில் மதுரை மாநகரில் வாழ்ந்த இளம்பெண்கள் செயல்பாடுகளை விவரிக்கின்றார்.

மதுரை மாநகரத்து மகளிர் இளநிலா முற்றத்தில் தம் காதலருடன் படுக்கையில் கிடந்து பழைய நினைவுகளில் மனம் செலுத்தினராம். தங்களின் நினைவோட்டத்தில் அப்பெண்கள் கார்காலம், கூதிர் காலம், முன்பனிக் காலம், பின்பனிக் காலம், இளவேனிற் காலம், முதுவேனிற் காலம் என வரிசையாக ஒவ்வொரு கால நிகழ்வுகளையும் நினைவு கூர்வதாக சிலப்பதிகாரத்தின் மதுரைக் காண்டம் (14. ஊர் காண் காதை: 86 - 125), பகுதியில் காட்டப்பட்டுள்ளது.

அந்தி சாயும் வேளையில், மென்மையான மயக்கும் மாலை ஒளியில், மதுரை மகளிர் தங்களது அன்புக்குரியவர் பாராட்டும் வகையில் ஒப்பனை செய்து கொண்டு நிலாமுற்றத்தின் பூப் பஞ்சணை இருக்கைகளில் அவர்களுடன் இனிமையுடன் அமர்ந் திருப்பர்.

"கார்காலம்" (ஆவணி புரட்டாசி மாதங்களில்) ...

மகளிர் இடையில் பூப்போட்ட செந்நிறப் பட்டாடை அணிந்து, கூந்தலை முடித்து அதைக் குடச மலரால் அலங்கரித்து, சிறுமலைக்காட்டில் மலர்ந்த செங்கூதாளப் பூ, மணம் வீசும் அன்றலர்ந்த குறிஞ்சி மலர் ஆகியவற்றால் அலங்கரித்திருப்பர். செஞ்சாந்து பூசிய மார்பில் செங்கோட்டு வேரிப் பூச்சரம் அணிந்து, சிந்தூர மணப்பொடி பூசி நறுமண மூட்டிய உடலில் பவளக் கோவை அணிகலன் பூட்டியிருப்பர். மழைதரும் மேகத்திற்கு அரசனான, வச்சிரப் படையினைக் கொண்ட இந்திரனுக்கு ஆரவாரம் மிக்க மதுரையின் செவ்வணியை விளக்கமாகக் காட்டுமாறு, கார்காலத்தை ஆளும் அரசன் வாடைக் காற்றோடு வரும் கார்காலத்தில் மட்டுமின்றி;

"கூதிர் காலம்" (ஐப்பசி கார்த்திகை மாதங்களில்) ...

கட்டிடக்கலை பயின்ற வல்லுநர்களால் சிறப்பாகக் கட்டப் பட்ட, மேகம் தவழும் வகையில் உயர்ந்து நிற்கும் மாடத்தில், அழகிய மகளிர், அகிற் புகை தரும் விறகில் தீமூட்டிக் குளிர்

காய்ந்தவாறு, மணக்கும் சந்தனம் பூசிய மார்பினையுடைய காதலரோடு இணைந்து இருக்கும் பொழுது, அவர்கள் குளிர் காற்றைத் தவிர்க்க சாளரங்களை அடைக்கும் கூதிர் காலமும்;

"முன்பனிக் காலம்" (மார்கழி தை மாதங்களில்) ...

செல்வச் சிறப்பு மிக்க இல்லங்களின் நிலா முற்றங்களில் மகளிரும் ஆடவரும் இளம் வெய்யிலில் வெயில் காய விரும்புவர், தெற்கில் மகர ரேகையில் இருந்து வடதிசைச் செலவாக ஞாயிறு வடதிசை நோக்கி நகரத் தொடங்கும் அக்காலத்தில், வானில் வெண்மேகங்கள் மிகக் குறைவாகக் காணப்படும் முன்பனிக் காலத்தில் மட்டுமின்றி ;

"பின்பனிக் காலம்" (மாசி பங்குனி மாதங்களில்) ...

மிகப் பெரிய கடலின் வழியே கப்பல் கூட்டத்தால் தொண்டி துறைமுகம் வழியாகக் கொண்டுவரப்பட்ட அகிலும் பட்டுத் துகிலும் சந்தனமும் வாசம் மிக்க பொருட்களும் கருப்பூரமும் சுமந்து வந்த கொண்டல் என்னும் கீழ் காற்றோடு பாண்டிய மன்னனின் கூடல் நகரில் நுழைந்து, காமனது விழாவினைக் கொண்டாடும் பின்பனிக் காலமாகிய பங்குனித் திங்கள் நாட் களில்;

"இளவேனில் காலம்" (சித்திரை வைகாசி மாதங்களில்) . . .

குருக்கத்தி கொடிகளில் மலர்கள் மாலை போன்று மலரும் வகையில் அக்கொடிகள் வளரவும், காடுகளிலும் பூங்காக் களிலும் நறுமணமிக்க மலர்கள் பூக்கவும், பாண்டிய மன்னனின் பொதிகை மலையின் தென்றல் மதுரை மாநகர் நுழையவும், தன் துணையைக் கூடி மகிழவும் செய்யும் இனிமையான இளவேனில் அரசன் எங்குள்ளான் என்று வியக்க நேரும். பூங்கொடி போன்ற மகளிர், தம்மையுடைய காதலர்களோடு இளவேனில் பருவ காலத்தின் வரவை விரும்பி மகிழ்ந்து அதனால் வருத்தம் நீங்கிய காலத்தே;

"முதுவேனில் காலம்" (ஆனி ஆடி மாதங்களில்) . . .

கன்றுகள் விரும்பிய பிடியின் கூட்டத்தோடு அவற்றைக் காக்கும் களிறுகள் நடுங்கும்படி, வெயில் நிலைபெற்ற மலை சார்ந்த இடங்களில் காட்டுத்தீ தோன்றி பரவச் செய்த மேற்கி லிருந்து வீசிய காற்று கோடைக் காலத்தில் புகும் பொழுது மதுரை மாநகரை ஆட்சி செய்து கொண்டிருந்த வேனில் அரசன், தென்திசைச் செலவாக மகர ரேகையை நோக்கி முன்னேறி மதுரையை விட்டு வேறிடம் செல்ல நகர்ந்து கொண்டிருக்கும் வெயிலின் கடைசி நாள் அது.

இவ்வாறு ஆண்டின் தொடக்கத்திலிருந்து ஒவ்வொரு பருவ காலத்திலும் மக்கள் மகிழ்ச்சியில் திளைத்து வாழ்ந்து கொண்டிருக்கும் மதுரை மாநகரில் ஆடிமாத இறுதியில், கோடைக் காலம் முடியும் தறுவாயில், புறஞ்சேரியில் மாதவியின் இல்லத்தில் கண்ணகியை விட்டுவிட்டு கோவலன் மதுரை மாநகருக்குள் நுழைகிறான்.

சான்றாதாரம்:

சிலப்பதிகாரம், மதுரைக் காண்டம்: 4. ஊர் காண் காதை

https://www.tamilvu.org/library/l3100/html/l3100016.htm

12. நச்சினார்க்கினியர் குறிப்பிடும் நிழலற்ற நாள்

முனைவர் தேமொழி
சான் ஃபிரான்சிஸ்கோ, யு.எஸ்.ஏ.

தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் இருந்து நாடாளும், அரண்மனையும் பெருங்கோட்டையும் எவ்வாறு கட்டப்பட்டது என்று விளக்கும் பாடல் வரிகள் நக்கீரர் எழுதிய நெடுநல்வாடை நூலில் இடம்பெறுகிறது. இப்பாடலில் 'நிழலற்ற நாளில்' அக்கோட்டையின் அடிக்கல் நாட்டுவிழா நடைபெற்றதாகக் குறிப்பு உள்ளது.

"... ... ...மாதிரம்

விரிகதிர் பரப்பிய வியல்வாய் மண்டிலம்

இருகோல் குறிநிலை வழுக்காது, குடக்கேர்பு

ஒருதிறம் சாரா அரைநாள் அமையத்து" *(நெடுநல்வாடை, 72-75)*

"இரு கோல் குறிநிலை" என்ற சொற்றொடர் நிழலற்றநாளை அறியும் முறையைக் குறிக்கிறது

இப்பாடலுக்கு விளக்கம் கூறும் நச்சினார்க்கினியர்;

"திசைகளிலே விரிந்த கிரணங்களைப் பரப்பின அகன்ற

இடத்தை உடைய ஞாயிறு மேற்றிசைக்கட் சேறற்கெழுந்து

இரண்டிடத்து நாட்டின இரண்டு கோலிடத்துஞ் சாயா

நிழலால் தாரை போக ஓடுகின்ற நிலையைக் குறித்துக்

கொள்ளுந் தன்மை தப்பாதபடி தான் ஒரு பக்கத்தைச்

சாரப் போகாத சித்திரைத் திங்களின் நடுவிற்

பத்தினின்ற யாதோர் நாளிற் பதினைந்தா நாழிகையிலே

அங்குரார்ப்பணம் பண்ணி"

என்று விளக்கம் தருகிறார்.

சித்திரை மாதத்து இடைப்பத்து நாட்களில் (அதாவது சித்திரை 11 முதல் - சித்திரை 20 நாட்களுக்குள்) அப்பகுதியில் எது நிழலற்ற நாளோ அந்த ஒருநாளின் நண்பகலில் பதினைந்தாவது நாழிகையில் அடிக்கல் நாட்டுவிழா நடை பெற்றதாக இந்த விளக்கம் அமைந்துள்ளது.

"இரு கோல் குறிநிலை" என்ற சொற்றொடருக்கு விளக்கம் தரும் முனைவர் பாண்டியராஜா, இரு கோல் கொண்ட ஒரு வட்டவடிவமான கருவி காலம் காட்ட உதவியுள்ளது. இந்த வட்டமான கருவியின் விட்டத்தில், அதன் விளிம்புகளில் எதிர் எதிராக இரு கோல்கள் நடப்பட்டு, அக்கோல்கள் வடக்கு தெற்காக இருக்குமாறு தரையில் வைக்கப்படும். சூரியன் நகர்விற்கு ஏற்ப கோல்களின் நிழல் நகரும், உச்சி வெயில் நேரம் அவற்றின் நிழல்கள் ஒரு ஒழுங்கில் அமையும் நேரம் நண்பகல் என்று குறிப்பிடுகிறார். மேலும், இந்த வானியல் கருவி சிந்துவெளியில் கிடைத்த ஒரு நேரம் காட்டும் தொல்லியல் சான்று போன்ற அமைப்பில் இருந்திருக்கக் கூடும் என்று விளக்கமளிக்கிறார்.

ஒரு நாழிகை என்பது 24 நிமிடங்கள், 15 நாழிகை என்பது 15 X 24 = 360 நிமிடங்கள் அல்லது இன்றைய கணக்கில் 6 மணி நேரங்கள். எனவே பொழுது புலர்ந்ததில் இருந்து 15 ஆம் நாழிகை என்றால்; காலை 6 மணியில் இருந்து, 6 மணி நேரம் கடந்த பிறகு, அதாவது நண்பகல் 12 மணிக்கு சூரியனின் நிழல் தரையில் விழாத நிழலற்ற நாளின் நண்பகலில் அரண்மனைக்கு அடிக்கல் நாட்டப் பட்டுள்ளது.

இந்த விளக்க உரையில் கவனிக்கப்பட வேண்டிய முக்கியமான கருத்துகள்:

நிழலற்ற நாள் நிகழ்வது சூரியன் நகர்விற்கு ஏற்ப இடத்திற்கேற்றபடி மாறும். சூரியன் வடதிசைச் செலவு மற்றும் தென்திசைச் செலவில், என்று சூரியன் நம் தலை உச்சிக்கு நேர் மேலே வருகிறதோ, அந்த இடத்தில் அன்று நிழலற்றநாள் ஏற்படும். கடகரேகை, மகர ரேகைக்கு இடைப்பட்ட வெப்ப மண்டலப்பகுதியில் ஆண்டுக்கு இருமுறை நிழலற்றநாள் ஏற்படும்.

எனவே, நிழலற்ற நாள் ஆண்டின் இரு நாட்களில் தமிழகத்தின் பகுதிகளில் நிகழும். ஒன்று சூரியன் வடதிசைச் செலவாக கடக ரேகை நோக்கி நகரும் பொழுது சித்திரை மாதத்தில் ஒரு முறை (ஏப்ரல் 9 முதல் ஏப்ரல் 25 தேதி வரை; குமரி- திருவேங்கடம் எல்லைக்குள்).

மற்றொன்று, சூரியன் தென் திசைச் செலவாக மகர ரேகையை நோக்கி தமிழகத்தைக் கடக்கும் பொழுது ஆவணி மாதத்தில் ஒரு முறை (ஆகஸ்ட் 15 முதல் ஆகஸ்ட் 31 வரை; குமரி- திருவேங்கடம் எல்லைக்குள்).

நிழலற்ற நாள்

நெடுநல்வாடையில் குறிப்பிடப்படும் அந்த நிழலற்ற நாள் எந்த மாதத்தின் நாள், பாடல் குறிப்பிடுவது சித்திரையா அல்லது ஆவணியா எந்த மாதத்தின் நிழலற்ற நாள் என்று நக்கீரரால் குறிப்பிடவில்லை என்பது கவனிக்கப்பட வேண்டிய ஒன்று.

அது சித்திரை மாதத்து நிழலற்ற நாள் என்று இங்குக் குறிப்பிடுபவர் உரைகாரர் நச்சினார்க்கினியர். அவரது சித்திரை மாதம் என்ற அந்தத் தேர்வுக்குக் காரணம் வழக்கமாக கட்டுமானங்கள் தொடங்கப்படும் காலம் என்ற மரபாகக் கூட இருக்கலாம். மழையற்ற நாளில் கட்டுமானங்கள் தொடங்கப்பட வாய்ப்புண்டு. ஆவணியில் மழைக்காலம் தொடங்கிவிடும் என்பதால் தவிர்க்கப் பட்டிருக்கவும் வாய்ப்பு உண்டு. எப்படி இருப்பினும் சித்திரைத் திங்களின் நிழலற்ற நாள் என்பது நச்சினார்க்கினியர் கருத்து, நக்கீரர் கூற்று அல்ல.

அடுத்த கட்டமாக, நச்சினார்க்கினியர் "சித்திரைத் திங்களின் நடுவிற் பத்தினின்ற யாதோர் நாளில்" என்று குறிப்பிடுகிறார். அதன்படி கணக்கிட்டோம் என்றால், சித்திரையின் முதல் பத்து நாட்களையும், இறுதி பத்து நாட்களையும் தவிர்த்துவிட்டு, இடையில் உள்ள பத்து நாட்களை எடுத்துக் கொள்ள வேண்டும். அதாவது சித்திரை 11இல் இருந்து சித்திரை 20 நாட்களுக்குள் ஏதோ ஒரு நாள் பாண்டியன் நெடுஞ்செழியன் ஆண்ட மதுரையில் நிழலற்ற நாள் அமைய வேண்டும்.

நச்சினார்க்கினியர் விளக்கத்தின் அடிப்படையில் சித்திரை 15 இல் இருந்து 5 நாட்களில் தமிழகப் பகுதியில் நிழலற்ற நாள். இன்றைய தமிழக நிலப்பரப்பில், குமரி- திருவேங்கடம் எல்லைக்குள், ஏப்ரல் 9 முதல் ஏப்ரல் 25 தேதி வரை, 16 நாட்களுக்கு ஒவ்வொரு நாளாக ஒவ்வொரு இடத்திலும் நிழலற்ற நாள் ஏற்படும். இது நச்சினார்க்கினியர் கூறுவது போல 10 நாட்கள் நிழலற்ற நாள் என்பதில் இருந்து மாறுபடுகிறது, அரை மாதத்திற்கு, அல்லது சற்றொப்ப 15 நாட்கள் போல தமிழகத்தில் நிழலற்ற நாள்கள் ஏற்படுகின்றன.

மேலும், இன்றைய நாளில் ஏப்ரல் 9 முதல் ஏப்ரல் 25 தேதி வரை நிழலற்ற நாட்கள் என்பது வானியல் படி மிகத் துல்லியமான கணிப்பு. எனவே, நச்சினார்க்கினியர் கூறுவது போல சித்திரை 11 ஆம் நாள் நிழலற்ற நாள்

தொடங்குகிறது என்றால், இன்றைய கிரிகாரியன் நாட்காட்டிப்படி மார்ச் மாத இறுதியில் சித்திரை தொடங்கியிருக்க வேண்டும். அவ்வாறு தொடங்கியிருந்தால் தான் ஏப்ரல் 9 அன்று அது சித்திரை 11 என்று இருக்க முடியும். அதுவும் வேறுபடுகிறது. அவர் காலத்துடன் அல்லது அவர் சொல்லும் கணக்குடன் ஒப்பிட்டால் இன்றைய நாளில் சித்திரை தொடக்கம் சற்றொப்ப 14 நாட்கள் தள்ளிப் போய்விட்டது எனலாம்.

தமிழகத்தின் தெற்கு எல்லை குமரி முனையில் ஏப்ரல் 9 ஆம் தேதி நிழலற்ற நாள் தொடங்குகிறது. கொஞ்சம் கொஞ்சமாக இரண்டு வாரங்களுக்கு ஒவ்வொரு இடமாக நிழலற்ற நாள் ஏற்படுகிறது. ஆனால், ஏப்ரல் 9 என்ற தொடக்கம் பங்குனி மாதத்தின் 27 ஆம் நாள். அது நச்சினார்க்கினியர் கூறுவது போல சித்திரைத் திங்கள் 11 ஆம் நாள் அல்ல.

பருவகால முந்துநிலை (precession of the equinoxes) என்பதைக் கணக்கில் கொள்ளாத காரணத்தால் தமிழ் நாட்காட்டியில் கணக்கிடப்படும் நாட்கள் பருவகாலத்துடன் இணைந்து செல்லாமல் விலகிச் செல்கின்றன. அதற்கு நச்சினார்க்கினியர் உரையும் ஒரு சான்றாக அமைகிறது. அவர் உரை எழுதிய காலத்தில் இருந்து சித்திரை மாதத்தின் தொடக்கம் தோராயமாக 14 நாட்கள் விலகிவிட்டது.

சான்றாதாரம் :

1. நெடுநல்வாடை, நக்கீரர், வரிகள் 72-75
2. பத்துப்பாட்டு நெடுநல்வாடை, நச்சினார்க்கினியர் உரை, ப. 385.
3. இரு கோல் குறிநிலை, முனைவர் ப.பாண்டியராஜா, ஜூன் 8, 2013, தினமணி
4. மனையுறை புறாக்கள் (நெடுநல்வாடை - விளக்கவுரை), புலவர் கா. கோவிந்தன், எழிலகம், 1991
5. பழந்தமிழர் கட்டடக் கலையும் நகரமைப்பும், நா. பார்த்தசாரதி, தமிழ்ப் புத்தகாலயம், 1992

தொடரும்...

தமிழ் இலக்கிய இலக்கண நூல்களில் தமிழ் மாதங்கள்

முனைவர் தேமொழி
சான்பிரான்சிஸ்கோ

முன்னுரை:

தமிழ்ப் புத்தாண்டின் தொடக்கம் எது என்று ஒவ்வொரு ஆண்டும் தொடரும் சர்ச்சையில் தொல்தமிழ் இலக்கிய நூல்களிலிருந்து சான்று காட்டும் நோக்கில் தைப் புத்தாண்டு பிரிவினரும், சித்திரைப் புத்தாண்டு பிரிவினரும் தத்தம் பங்கிற்கு மேற்கோள்களைக் கொடுப்பது வழக்கம். உண்மையில் தமிழ் இலக்கிய இலக்கண நூல்களில் தமிழ் மாதங்கள் குறித்து எந்த அளவு செய்தி உள்ளது? அவற்றில் எந்த ஒரு செய்தியாவது இந்த மாதம்தான் தமிழர்களின் ஆண்டின் தொடக்கம் இதுவென்று என்று ஆணித்தரமாக அறுதியிட்டுக் கூறுகிறதா? அதாவது தமிழ் நிகண்டுகள் "ஆவணியே ஆதி" என்று தமிழ்ப் புத்தாண்டின் தொடக்கத்தை ஆவணித் திங்கள் என்று நேரடியாக எடுத்துரைப்பது போல இலக்கியங்களில் புத்தாண்டின் தொடக்கத்தைச் சுட்டும் தகவல் உள்ளதா என்று அறிய ஒரு விரிவான ஆய்வு தேவை என்பதில் மாற்றுக் கருத்து இருக்க வழியில்லை.

கணினி காலத்தில் அதன் உதவி கொண்டு ஆய்வு

செய்வது பெருமளவு தேடலை எளிமையாக்கி, நீண்ட ஆய்வுக் காலத்தைக் குறுக்கி விடுவது ஆய்வாளர்களுக்கு ஒரு நல்ல வாய்ப்பாக அமைகிறது. ஆய்விற்கான தரவுத் தளங்களும் தமிழ் ஆர்வலர்களால் உருவாக்கி இணையத்தில் வைக்கப்பட்டிருக்கும் தமிழ்க் கருவூலங்களும் இன்றைய நிலையில், உண்மை அறிவதில் ஆர்வமும், ஆய்வுத் தேவை உள்ளவர்களுக்கும் ஆய்வை எளிதாக்குகிறது.

ஆய்வு முறை:

மதுரை அமெரிக்கன் கல்லூரியின் மேனாள் பேராசிரியர் முனைவர்.ப.பாண்டியராஜா அவர்களின் தமிழ் இலக்கியத் தொடரடைவு தளம் (http://tamilconcordance.in/) தமிழிலக்கிய ஆய்வுத் தேவைகளுக்கு மிகுந்த உதவி செய்யும் வகையில் அமைந்துள்ளது. இத்தளத்தில் தமிழின் பண்டைய செவ்வியல் இலக்கியங்கள், இடைக்கால இலக்கியங்கள், பிற்கால இலக்கியங்கள், தற்கால இலக்கியங்கள் ஆகியனவற்றுக்கும் பல இலக்கண நூல்களுக்கும் தொடரடைவுகள் கிடைக்கின்றன.

இந்த ஆய்வுக்கு உதவிய தமிழிலக்கிய இலக்கண நூல்கள் 115; அவை கீழ்க்காணும் வகையில் அடங்குபவை. இந்த 115 நூல்களே இக்கட்டுரைக்கான ஆய்வெல்லை என அறிக.

இலக்கண நூல்கள் = 8

எட்டுத்தொகை நூல்கள் = 8

பத்துப்பாட்டு நூல்கள் = 10

பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் = 18

ஐம்பெருங்காப்பிய நூல்கள் = 5

ஐஞ்சிறுகாப்பிய நூல்கள் = 5

பக்தி இலக்கிய நூல்கள் = 15

சிற்றிலக்கிய நூல்கள் = 20

நீதி நூல்கள் = 21

பிற இலக்கிய நூல்கள் = 5

(குறிப்பு: மேற்காணும் 115 நூல்களின் பெயர்களைத் தாங்கி நிற்கும் விரிவான பட்டியலைப் பிற்சேர்க்கையாகக் காண்க)

பல தமிழ் நூல்களை ஓரிடத்தில் தொகுத்து, அவற்றுக்கான தொடரடைவுகளையும் தாங்கி நிற்கும் இத்தளத்தின் உதவியின்றி இந்த ஆய்வைச் செய்வதற்கு, தனி மனிதர் ஒருவர் ஆண்டுக்கணக்காக ஆய்வைச் செய்ய வேண்டிய நிலைமை ஏற்படும் என்று கூறினால் அது மிகைப்படுத்துதல் அல்ல.

தமிழ் இலக்கியத் தொடரடைவு தளத்தின் உதவி கொண்டு பட்டியலில் காணப்படும் 115 நூல்கள் யாவிலும் ஒவ்வொரு தமிழ் மாதம் குறித்தும் கிடைக்கும் தகவல்கள் சேகரிக்கப் பட்டன. அவை அட்டவணையாக இணைக்கப் படுகிறது. கார்த்திகை மகளிரைக் குறிக்கும் கார்த்திகை என்ற சொல்லோ, துன்பம் என்ற பொருளில் வரும் ஆனி என்ற சொல்லோ, கண்ணாடி, சிவன், நாட்டியம் போன்ற பொருளில் இடம் பெறும் ஆடி என்ற சொல்லோ தவிர்க்கப் பட்டன. இந்த ஆய்வின் மூலம் சில உறுதியான தகவல்கள் கிடைக்கப் பெறுகின்றன; அவை . . .

ஆய்வின் நோக்கமான, தமிழ்ப் புத்தாண்டு எது என்று நேரடியாகக் கூறும் தகவல் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட

எண்	இலக்கியம்	சித்திரை	வைகாசி	ஆனி	ஆடி	ஆவணி	புரட்டாசி	ஐப்பசி	கார்த்திகை	மார்கழி	தை	மாசி	பங்குனி
1	நற்றிணை										✓		✓
2	குறுந்தொகை										✓		
3	ஐங்குறுநூறு										✓		
4	பதிற்றுப்பத்து											✓	
5	பரிபாடல்										✓		
6	கலித்தொகை										✓		
7	அகநானூறு										✓		✓
8	புறநானூறு										✓		✓
9	கார்நாற்பது								✓				
10	களவழி நாற்பது								✓				
11	சிலப்பதிகாரம்	✓			✓								✓
12	சீவக சிந்தாமணி							✓	✓			✓	✓
13	சூளாமணி	✓											
14	யசோதர காவியம்							✓					
15	நாக குமார காவியம்								✓				✓
16	தேவாரம்							✓	✓		✓	✓	✓
17	திருவாசகம்									✓			
18	திருமந்திரம்									✓			
19	பெரியபுராணம்	✓											✓
20	நாலாயிரத் திவ்விய பிரபந்தம்									✓	✓	✓	✓
21	திருப்புகழ்	✓							✓			✓	
22	தேம்பாவணி									✓			✓
23	திருவருட்பா			✓	✓								
24	கொன்றைவேந்தன்										✓	✓	
25	இளையார் ஆத்திசூடி										✓		
26	குசேலோபாக்கியானம்					✓							
27	குமரேச சதகம்				✓		✓						
28	நந்திக் கலம்பகம்			✓	✓	✓							
29	முக்கூடற் பள்ளு				✓								✓
30	கம்பராமாயணம்												✓
31	வில்லி பாரதம்	✓											✓



நூல்களில் இடம் பெறவில்லை. இது வரலாறு இதழ் நடத்திய ஆய்வின் முடிவையே ஒத்திருக்கிறது. வைகாசி மாதம் பற்றி எந்தத் தகவலும் இல்லை எண்பதும் குறிப்பிடத்தக்கது.

தைத்திங்கள்:

சங்க இலக்கி நூல்களான பத்துப்பாட்டு, எட்டுத்தொகை நூல்களில் இன்று வழக்கில் இருக்கும் 12 மாதங்களின் பெயர்களில் தை, மாசி, பங்குனி ஆகிய மாதங்களின் பெயர்கள் மட்டுமே இடம் பெறுகின்றன. இவற்றில் தைத் திங்களின் பெயரே மிகுதியாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆதலினால் சங்க இலக்கியங்களில் தை மாதமே சிறப்பாகக் குறிக்கப்பட்டுள்ளது எனலாம். தைமாதத்தின் தைந்நீராடல்,

தைந்நீராடும் நோன்பு, குளிர்ந்த குளத்து நீர், குளிர்ந்த மழை ஆகியவற்றைக் குறிப்பிட நேர்கையில் தைத்திங்கள் குறிப்பிடப் பெறுகின்றன என்பதைக் கீழ்க்காணும் வரிகள் மூலம் அறியலாம்.

தைஇத் தண் கயம் போல - ஐங்குறுநூறு

தைஇத் திங்கள் தண் கயம் படியும் - நற்றிணை

தைஇத் திங்கள் தண் கயம் போல - புறநானூறு

தைஇ நின்ற தண் பெயல் கடை நாள் - அகநானூறு

பாரி பறம்பில் பனிச் சுனைத் தெண் நீர் தைஇத் திங்கள் தண்ணிய தரினும் - குறுந்தொகை

தையில் நீர் ஆடிய தவம் தலைப்படுவாயோ - கலித்தொகை

தாய் அருகா நின்று தவ தை நீராடுதல் - பரிபாடல் 11/91

நீ தக்காய் தை நீர் நிறம் தெளிந்தாய் என்மாரும் - பரிபாடல் 11/115

இன்ன பண்பின் நின் தை நீராடல் - பரிபாடல் 11/134

இது போன்றே, இரவுப்பொழுது நீண்டு உள்ள மாசி மாதம் என்றும், பங்குனி விழா குறித்தும் குறிப்பிடுகையில் சங்க இலக்கியங்களில் தை, மாசி, பங்குனி ஆகிய மாதங்களின் பெயர்கள் இடம் பெறுகின்றன. தை மாதம் குறித்து சங்க இலக்கியங்கள் சிறப்புறக் குறிப்பிட்டாலும் தை ஆண்டின் முதல் மாதம் என்றோ, மக்கள் புத்தாண்டு கொண்டாடினார்கள் என்ற குறிப்போ இல்லை. மாசி பங்குனி என்று குறிப்பது போல தை மாதம் குறித்தும் குறிப்பு இடம் பெற்றுள்ளது.

சித்திரைத் திங்கள்:

இது போன்றே சித்திரை ஆண்டின் முதல் மாதம் என்ற குறிப்பும் இந்த நூல்களில் எங்கும் இடம் பெறவில்லை. ஒப்பிடுகையில், தை மாதம் சிறப்புறக் குறிப்பிடப்பட்ட அளவிற்குச் சித்திரை மாதம் சிறப்பாகக் குறிப்பிடப்படவில்லை என்பதையே காண முடிகிறது. எடுத்துக்காட்டாக, சங்க காலத்திற்குப் பிற்பட்ட காலத்தில் உருவானதாகக் கருதப்படும் சிலப்பதிகாரத்தில் சித்திரை மாதத்து முழுநிலவு நாளன்று இந்திர விழா நடை பெற்றதைக் குறிக்கிறது. ஆண்டின் தொடக்கம் என்ற குறிப்பு அதில் இடம் பெறவில்லை.

தமிழர்கள் ஒவ்வொரு மாதத்தின் முழுநிலவு நாள்களையும் சிறப்பாகக் கொண்டாடி இருப்பதையும் அறிய முடிகிறது. சித்திரை மாதத்துச் சித்திரை நாள், பங்குனி உத்தரம், தைப்பூசம் போன்ற முழுநிலவு நாட்களின் நிலவொளியை மிக விரும்பிய தமிழர்கள் ஏதோ ஒரு காரணத்தை முன்னிறுத்தி விழா நாட்களாக அந்நாட்களை மாற்றிக் கொண்டுள்ளார்கள்.

எனவே, சித்திரை விழாவிற்கு முக்கியத்துவம் கொடுத்து ஆண்டின் தொடக்கம் எனக் கூற விரும்பினால் அந்தத் தகுதி பங்குனி விழாவிற்கும் இருக்கிறது. "பங்குனி விழவின் உறந்தையொடு" (நற்றிணை 234/7) சங்க கால நற்றிணை பாடலிலேயே பங்குனி விழா இடம் பெற்று விடுகிறது.

ஆவணித்திங்கள்:

நிகண்டுகளில் "ஆவணியே ஆதி" என்ற குறிப்பு போல ஆவணி ஆண்டின் தொடக்கம் என்று ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட இந்த நூல்களில் தகவல் இல்லை.

"ஆவணித் திங்கள் நள்ளிருள் பக்கத்து அட்டமி தனில் அரும் கற்பின் - (குசேலோபாக்கியானம்:3 676/2) என்று கண்ணன் பிறந்த நாளைக் குறிப்பிடும் முகமாக குசேலோபாக்கியானம் ஆவணியைக் குறிப்பிடுகிறது.

மேலும், "அன்னையரும் தோழியரும் அடர்ந்து பொரும் காலம் ஆனி போய் ஆடி வரை ஆவணியின் காலம்" (நந்திக் கலம்பகம்: 2 101/1) என்றவாறு ஆனி, ஆடி, ஆவணி என வரிசையாகக் குறிப்பிடும் முறை நந்திக் கலம்பகம் நூலில் இடம் பெறுவதைக் காண முடிகிறது.

"ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன்வியாழன் வெள்ளிசனிபாம்பு இரண்டும் உடனே

ஆசறு நல்ல நல்ல அவைநல்ல நல்ல அடியார் அவர்க்கு மிகவே. (சம்பந்தர் - கோளறு பதிகம்)

என்று சம்பந்தர் தேவாரத்தில் வார நாட்களை ஞாயிறு முதல் சனி வரை வரிசைப் படுத்திக் காட்டுவது போல தமிழ் மாதங்கள் வரிசைப்படுத்திக் காட்டுவதை இந்த இலக்கியங்களில் காண இயலவில்லை.

கல்வெட்டுச் செய்தி:

இலக்கியங்கள் போலவே கல்வெட்டுகளிலும் புத்தாண்டு குறித்த தகவல் இல்லை. சோழர் காலக் கல்வெட்டு உத்தராயணத் துவக்கம் தை முதல்நாள் என்று குறிப்பிடுகிறது என்பதை அறிய முடிகிறது

(திருவலஞ்சுழிக் கல்வெட்டுகள், முதலாம் இராஜராஜரின் 14ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு).

"ஆட்டைவட்டம் எனப்படும் ஓர் ஆண்டின் சுழற்சியை

- 360 பாகைகளை - 90 பாகைகள் கொண்ட நான்கு பிரிவுகளாகப் பிரித்து, சித்திரை விஷு, தக்ஷிண அயனம், ஐப்பசி விஷு, உத்தர அயனம் எனக் குறிப்பிடும் வழக்கம், கி.பி. 998ஆம் ஆண்டைச் சேர்ந்த தஞ்சை மாவட்டம் திருவலஞ்சுழி சேத்ரபால தேவர் கோயிற் கல்வெட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இருப்பினும் இந்நாள் புத்தாண்டுத் தொடக்கமாகவோ தமிழர்க்கு மட்டுமேயுரிய திருநாளாகவோ கருதப்படவில்லை." என்று தொல்லியல் ஆய்வாளர் எஸ். இராமச்சந்திரன் குறிப்பிடுகிறார்.

முடிவுரை:

ஆண்டின் தொடக்கம் எது என நிகண்டுகள் ஆவணப்படுத்தியது போல இலக்கியங்களில் காணப்படாத நிலை தமிழர்களிடம் புத்தாண்டு கொண்டாடும் வழக்கம் இருந்ததில்லை என்பதைத்தான் காட்டுகிறது.

சித்திரை ஆண்டின் புத்தாண்டு என்றும், வடமொழிப் பெயர்களுடைய 60 ஆண்டு காலக்கணக்கும் தமிழகத்தில் விஜய நகர ஆட்சிக் காலத்தில் ஏற்பட்டவை என்பதைக் காலக்கோட்டில் கல்வெட்டுகளை வரிசைப்படுத்தும் ஆய்வின் மூலம் அறிய முடிகிறது. ஆனால் இலக்கியத் தரவுகள் மூலம் தமிழர் எந்த மாதத்தை முதல் மாதமாகக் கணக்கில் கொண்டார்கள் என்பதையோ, புத்தாண்டு கொண்டாடும் வழக்கம் தமிழர்களிடம் இருந்தது என்பதையோ கூற இயலாது.

பிற்சேர்க்கை:

ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட தமிழிலக்கிய இலக்கண நூல்கள் பின்வருமாறு:

இலக்கண நூல்கள் : (இலக்கண நூல்கள் 8)

1. தொல்காப்பியம், 2. இறையனார் அகப்பொருள், 3. புறப்பொருள் வெண்பாமாலை, 4. நன்னூல், 5. நேமிநாதம், 6. நம்பி அகப்பொருள், 7. காக்கை பாடினியம், 8. மறைந்துபோன இலக்கண நூல்கள் - தொகுப்பு.

சங்க இலக்கியம் — எட்டுத்தொகை : (எட்டுத்தொகை நூல்கள் 8)

1. நற்றிணை, 2. குறுந்தொகை, 3. ஐங்குறுநூறு, 4. பதிற்றுப்பத்து, 5. பரிபாடல், 6. கலித்தொகை, 7. அகநானூறு, 8. புறநானூறு.

சங்க இலக்கியம் — பத்துப்பாட்டு : (பத்துப்பாட்டு நூல்கள் 10)

1. திருமுருகாற்றுப்படை, 2. பொருநராற்றுப்படை, 3. சிறுபாணாற்றுப்படை, 4. பெரும்பாணாற்றுப்படை, 5. முல்லைப்பாட்டு, 6. மதுரைக்காஞ்சி, 7. நெடுநல்வாடை, 8. குறிஞ்சிப்பாட்டு, 9. பட்டினப்பாலை, 10. மலைபடுகடாம்.

சங்கம் மருவிய காலம் — பதினெண்கீழ்க்கணக்கு : (பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் 18)

1. நாலடியார், 2. நான்மணிக்கடிகை, 3. இன்னா நாற்பது, 4. இனியவை நாற்பது, 5. கார்நாற்பது, 6. களவழி நாற்பது, 7. ஐந்திணை ஐம்பது, 8. ஐந்திணை எழுபது, 9. திணைமொழி ஐம்பது, 10. திணைமாலை நூற்றைம்பது, 11. திருக்குறள், 12. திரிகடுகம், 13. ஆசாரக்கோவை, 14. பழமொழி நானூறு, 15. சிறுபஞ்சமூலம், 16. முதுமொழிக் காஞ்சி, 17. ஏலாதி, 18. கைந்நிலை.

ஐம்பெருங்காப்பியங்கள் : (ஐம்பெருங்காப்பிய நூல்கள் 5)

1. சிலப்பதிகாரம், 2. மணிமேகலை, 3. சீவக சிந்தாமணி, 4. வளையாபதி, 5. குண்டலகேசி.

ஐஞ்சிறுகாப்பியங்கள் : (ஐஞ்சிறுகாப்பிய நூல்கள் 5)

1. உதயண குமார காவியம், 2. நாக குமார காவியம், 3. யசோதர காவியம், 4. சூளாமணி, 5. நீலகேசி.

பக்தி இலக்கியங்கள் : (பக்தி இலக்கிய நூல்கள் 15)

1. தேவாரம், 2. திருவாசகம், 3. திருக்கோவையார், 4. திருமுறை, 5. திருமந்திரம், 6. சைவப் பிரபந்த மாலை, 7. பெரியபுராணம், 8. நாலாயிரத் திவ்விய பிரபந்தம், 9. திருப்புகழ், 10. தேம்பாவணி, 11. சீறாப்புராணம், 12. திருவருட்பா, 13. தாயுமானவர் பாடல்கள், 14. இரட்சணிய யாத்திரிகம், 15. கல்லாடம்.

சிற்றிலக்கியங்கள் : (சிற்றிலக்கிய நூல்கள் 20)

1. அபிராமி அந்தாதி, 2. அழகர் கிள்ளைவிடு தூது, 3. கச்சிக் கலம்பகம், 4. கலிங்கத்துப்பரணி, 5. காசிக் கலம்பகம், 6. காவடிச் சிந்து, 7. குசேலோபாக்கியானம், 8. குமரேச சதகம், 9. தக்கயாகப்பரணி, 10. தஞ்சைவாணன் கோவை, 11. தமிழ்விடு தூது, 12. திருக்குற்றாலக் குறவஞ்சி, 13. நந்திக் கலம்பகம், 14.நளவெண்பா, 15. பாண்டிக்கோவை, 16. பெத்லகேம் குறவஞ்சி, 17. மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ், 18. மதுரைக் கலம்பகம், 19. முக்கூடற் பள்ளு, 20. மூவருலா.

நீதி நூல்கள் : (நீதி நூல்கள் 21)

1. ஆத்திசூடி, 2. கொன்றைவேந்தன், 3. மூதுரை, 4. நல்வழி,

5. வெற்றி வேற்கை, 6. உலக நீதி, 7. நீதிநெறி விளக்கம், 8. அறநெறிச்சாரம், 9. நீதி நூல், 10. நன்னெறி, 11. நீதி சூடாமணி, 12. சோமேசர் முதுமொழி வெண்பா, 13. விவேக சிந்தாமணி, 14. ஆத்திசூடி வெண்பா, 15. நீதி வெண்பா, 16. நன்மதி வெண்பா, 17. அருங்கலச்செப்பு, 18. முதுமொழிமேல் வைப்பு, 19. புதிய ஆத்திசூடி, 20. இளையார் ஆத்திசூடி, 21. திருக்குறள் குமரேச வெண்பா.

பிற இலக்கியங்கள் : (பிற இலக்கிய நூல்கள் 5)

1. கம்பராமாயணம், 2. முத்தொள்ளாயிரம், 3. பெருங்கதை, 4. வில்லி பாரதம், 5. பாரதியார் கவிதைகள்.

ஆய்வுக்கு உதவிய தளம்:

முனைவர்.ப.பாண்டியராஜா அவர்களின் தமிழ் இலக்கியத் தொடரடைவு தளம்

http://tamilconcordance.in/

சான்றாதாரங்கள்:

எதுதான் தமிழ்ப்புத்தாண்டு? ஆசிரியர் குழு, வரலாறு. இதழ் 86

[பிப்ரவரி 15 - மார்ச் 17, 2012]

http://www.varalaaru.com/design/article.aspx?ArticleID=1094

சித்திரையில்தான் புத்தாண்டு, எஸ். இராமச்சந்திரன். தினமணிi 24-1-2008 பக்கம் 8.

http://www.sishri.org/puthandu.html

2. தமிழ்ப் புத்தாண்டுப் புதிரை விடுவிக்கும் நச்சினார்க்கினியர்

முனைவர் தேமொழி
சான் ஃபிரான்சிஸ்கோ, யு.எஸ்.ஏ.

தை முதல்நாள்தான் தமிழ்ப் புத்தாண்டு என்று, ஆட்சியில் இருந்த திமுக அரசால் 2008ஆம் ஆண்டு தைத் திங்கள் 23ஆம் நாள் அரசாணை பிறப்பிக்கப் பட்டது. அடுத்து ஆட்சிக்கு வந்த அதிமுக அரசு, முந்தைய அரசு பிறப்பித்த ஆணையை நீக்கம் செய்து சித்திரை முதல் நாளே தமிழ்ப் புத்தாண்டு என்று அரசாணை பிறப்பித்தது. அதன் தொடக்கமாக, தமிழர்களின் ஆண்டின் தொடக்கம் சித்திரைப் புத்தாண்டுதான் என்றும், இல்லையில்லை தைப் புத்தாண்டுதான் என்றும் தமிழர்கள் அணி பிரிந்து சர்ச்சையில் ஈடுபட்டிருப்பது வழக்கமாகிவிட்டது.

பொ.ஆ. 9ஆம் நூற்றாண்டு காலத்திய சேந்தன் திவாகரம் என்னும் திவாகர நிகண்டு முதற்கொண்டு, பொ.ஆ.16ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மண்டல புருடர் என்பவரால் இயற்றப்பட்ட சூடாமணி நிகண்டு வரை 'ஆவணியே ஆதி' என்று நிகண்டுகள் நேரடியாக ஆண்டின் தொடக்கம் ஆவணி என்று மிகத் தெளிவாகக் கூறுகின்றன. இதனை எதிரொலிக்கும் வகையில் இலக்கியங்களிலும் கல்வெட்டு களிலும் தமிழரின் புத்தாண்டின் தொடக்கம் இதுதான் என்று நேரடியாகக் குறிப்பிடும் தகவல்கள் இல்லை என்ற கருத்தையும் ஆய்வாளர்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர். இந்தத் தமிழ்ப் புத்தாண்டுப் புதிரை விடுவிக்கும் வகையில் நச்சினார்க்கினியர் எழுதிய உரைகள் நமக்கு உதவுகின்றன.

நச்சினார்க்கினியர் ஓர் அறிமுகம்:

நச்சினார்க்கினியர் பழந்தமிழ் நூல்களின் உரையாசிரியர்களில் ஒருவர். அவர் உரை கூறும் திறனை மெச்சி "உச்சிமேற் புலவர் கொள் நச்சினார்க்கினியர்" என்றும் பாராட்டப் படுபவர். இவர் தொல்காப்பியம் முழுமைக்கும் உரை கண்டவர். பத்துப்பாட்டு, கலித்தொகை, சீவக சிந்தாமணி முதலியவற்றிற்கு உரை வகுத்துள்ளார். பேராசிரியரால் உரையெழுதாமல் விடுபட்டுப் போயிருந்த

குறுந்தொகை இருபது பாடல்களுக்கும் உரை எழுதியுள்ளார். இவர் உரை வகுத்ததைக் குறிப்பிட்டு;

பாரத் தொல்காப்பியமும் பத்துப் பாட்டுங் கலியும்
ஆரக் குறுந்தொகையுள் அயன் நான்கும் — சாரத்
திருத்தகு மாமுனிசெய் சிந்தா மணியும்
விருத்தி நச்சினார்க்கினியமே

என்று ஒரு வெண்பா உள்ளது.

நச்சினார்க்கினியர் பழந்தமிழ் இலக்கியங்களை மரபறிந்து, பொருள் தெளிவுடன் சுவையாக எடுத்து விளக்கியவர் என்று தமிழறிஞர்கள் கருதுகிறார்கள். இவர் குறித்த விரிவான ஆய்வுநூல் ஒன்றை எழுதிய மு. அண்ணாமலை அவர்கள் நச்சினார்க்கினியர் குறித்துக் கூறுகையில், "இலக்கணம் இலக்கியம் ஆகிய இரு துறையினும் வல்லவராயினும் அவரை ஓர் இலக்கிய உரைகாரராக வைத்துக் காண்பதே பொருந்தும். ஒரு விரிவான காவியத்திற்குச் சுருக்கமாகவும், அழகாகவும், திட்பமாகவும், உரை செய்வதெப்படி என்பதற்குச் சீவக சிந்தாமணி உரை முன் மாதிரியாக அமைந்திருக்கிறது" என்று கூறுவார்.

தொல்காப்பியத்தின் ஒவ்வோர் இயல் முடிவிலும் "மதுரை ஆசிரியர்

பாரத்துவாசி நச்சினார்க்கினியர் செய்த காண்டிகை உரை முற்றிற்று" எனக் காணப்படுகிறது. அவ்வாறே, "பாண்டியன் நெடுஞ்செழியனை மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் பாடிய நெடுநல்வாடைக்கு மதுரை ஆசிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினியர் செய்த உரை முற்றிற்று" எனக் காணப்படுகிறது. பத்துப்பாட்டு உரை முடிவிலும், உரைச் சிறப்புப்பாயிரங்களிலும் அவ்வாறே குறிப்பிடப்படுவதால், நச்சினார்க்கினியர் பாரத்துவாச கோத்திரத்தைச் சேர்ந்த ஸ்மார்த்த பிராமணப் பிரிவைச் சேர்ந்தவர் என்றும், மதுரையில் வாழ்ந்தவர் என்றும் அறியப்படுகிறது. இவர் சிவனை வழிபடும் வைதிகராக இருப்பினும் சமயக் காழ்ப்பின்றிச் சமண காவியமான சீவக சிந்தாமணிக்கு உரை எழுதிய பண்பாளர். 'அருளொடு புணர்ந்த அகற்சி' என்ற தொல்காப்பியத் தொடருக்கு துறவு என்று பொருள் எழுதி அத்துறவுக்குப் புத்தன் துறவையே எடுத்துக்காட்டாக விளக்கியவர்.

இறையனார் களவியல் உரைகாரர், உரையாசிரியர்களாகிய இளம்பூரணர், பேராசிரியர், சேனாவரையர் முதலிய உரையாசிரியர்களை இவர் தம் உரையில் ஆங்காங்கு குறித்தும் மறுத்தும் எழுதியுள்ளார். எனவே அவர்களுக்கெல்லாம் இவர் பிந்தியவராவார். சேனாவரையர் 'எம்மண்டலமும் கொண்டருளிய மாறவர்மன் குலசேகர பாண்டியன்' (கி.பி. 1268-1311) காலத்தில் வாழ்ந்தவர் என்று மு. இராகவையங்கார், சதாசிவப் பண்டாரத்தார் ஆகியோர் குறிப்பிடுகின்றனர். எனவே, நச்சினார்க்கினியர் பதினான்காம் நூற்றாண்டின் இறுதியிலாவது அல்லது பதினைந்தாம் நூற்றாண்டின் முற்பகுதியிலாவது (1350 - 1450 இடைப்பட்ட காலம்) வாழ்ந்திருக்கக் கூடும் எனக் கருதலாம்.

தமது உரைகளில் எண்பதுக்கும் மேற்பட்ட நூல்களை மேற்கோளாகக் காட்டும் நச்சினார்க்கினியர் மிகப்பரந்த நூற் புலமையுள்ளவர் என்று பாராட்டப்படுபவர். அதேவேளை, உரை கூறுகையில் இவர் கொண்டு கூட்டிப் பொருள் கொள்ளும் முறை இவரது உரை கூறும் முறையின் குறைபாடாகப் பல தமிழறிஞர்கள் குறிப்பிடப்படுவதையும் காண முடிகிறது. கொண்டு கூட்டிப் பொருள் கொள்ளுதல் என்னும் ஒரு புதிய உத்தியை அதிகம் கையாண்டது இவர்தான் என்று அறியப்படுகிறது.

"சொற்கிடந்தாங்கு பொருள் கொள்ளாது தாம் நினைத்தாங்குச் சொற்களைக் கொண்டு கூட்டிப் பொருள் கொண்டமையால் இவர் தம் உரை உரையறங் கடந்த உரை ஆயிற்று. பொருளறை செய்த இப்பெருங்குறை இவ்வுரையில் இல்லாதிருப்பின்நச்சினார்க்கினியர்உரைஞாயிறாகப்பெரும்புகழ்பெற்றிருப்பர்."

என்று தொல்காப்பியக் கடல் என்ற நூலை எழுதிய வ.சுப மாணிக்கம் அவர்கள் கருதுகிறார்.

நச்சினார்க்கினியர் உரைகள் தரும் விளக்கம்:

தொல்காப்பியம் அகத்திணையியல் நூற்பாவான

> "காரும் மாலையும் முல்லை குறிஞ்சி
> கூதிர் யாமம் என்மனார் புலவர்" *(அகத்திணையியல், நூற்பா 6)*

என்ற நூற்பாவிற்கு உரை எழுதும் நச்சினார்க்கினியர் ஆவணிதான் ஆண்டின் தொடக்கம் என்று விரிவாக விளக்கம் அளிக்கிறார்.

நக்கீரர் எழுதிய சங்க இலக்கியமான நெடுநல்வாடை பாடலுக்கும் உரை எழுதியுள்ளார் நச்சினார்க்கினியர். இப்பாடலில் இரு இடங்களில் சித்திரை குறித்து விளக்கம் தரக் கூடிய பகுதிகள் உள்ளன. நக்கீரர் எழுதிய பாடல் வரிகள் ஆண்டின் நாள் அல்லது மாதம் குறித்த குறிப்புகளைக் கூறவில்லை. இருப்பினும் விரிவாக உரை எழுதும் முறையைக் கடைப்பிடித்த நச்சினார்க்கினியர், ஆண்டின் தொடக்கம் சித்திரை என்பது தமிழர் மரபாக இருந்திருக்குமாயின், இந்த இரு இடங்களிலும் அதைக் குறிப்பிடாமல் உரை எழுதியிருக்கவும் மாட்டார்.

(1) தொல்காப்பிய உரையில் நச்சினார்க்கினியர் ஆவணித் திங்கள் ஆண்டின் தொடக்கம் என்றும் குறிப்பிட்டதையும்; (2) நெடுநல்வாடை உரையில் ஆண்டின் தொடக்கம் சித்திரைத் திங்கள் என்பதைக் குறிப்பிடாமையையும் கவனத்தில் கொண்டால் அவர் வாழ்ந்த காலம் வரை, 15ஆம் நூற்றாண்டுவரை தமிழர்களின் ஆண்டுக் கணக்கு ஆவணியில் தொடங்கியது என்று உறுதியாகக் கொள்ளலாம். அடுத்து தொல்காப்பிய நூற்பாவிற்கும் நெடுநல்வாடை பாடல்களுக்கும் நச்சினார்க்கினியர் வழங்கிய உரைகளைச் சற்று விரிவாகக் காணலாம்.

(1) தொல்காப்பிய உரை:

> "காரும் மாலையும் முல்லை குறிஞ்சி
> கூதிர் யாமம் என்மனார் புலவர்" – *(அகத்திணையியல், நூ. 6)*

என்ற நூற்பாவிற்கு உரை எழுதும் நச்சினார்க்கினியர் . . .

“இக்காலங்கட்கு விதந்து ஓர் பெயர் கூறாது வாளா கூறினார். அப்பெயர் உலக வழக்காய் அப்பொருள் உணர நிற்றலின். காலவுரிமை எய்திய ஞாயிற்றுக்கு உரிய சிங்கவோரை முதலாகத் தண்மதிக்கு உரிய கற்கடகவோரை யீறாக வந்து முடியுந்துணை ஓர் யாண்டாமாதலின் அதனை இம்முறையானே அறுவகைப்படுத்து இரண்டு திங்கள் ஒரு காலமாக்கினார்" என்று உரை எழுதியுள்ளார்.

இதன் பொருள்; உலக வழக்காக யாவரும் அறிந்த செய்தி என்பதால் தொல்காப்பியர் சிறப்பாகப் பொருள் கூற முற்படாமல் பொதுவான வழக்காற்றை அவ்வாறே நூற்பாவாகச் சொல்லிச் சென்றுள்ளார். இதன் விளக்கம் யாதெனில், ஞாயிற்றின் ஆட்சி வீடாகிய சிங்கவோரை முதல் (ஆவணித் திங்கள்), திங்களின் ஆட்சி வீடாகிய கற்கடகவோரையின் இறுதி (ஆடித்திங்கள்) வந்து முடியும்வரை ஓர் ஆண்டாகும். இதனை முறையாக ஆறு பருவங்களாகப் பகுத்து ஒவ்வொரு பருவத்திற்கும் இரண்டிரண்டு திங்கள் உரியதாக்கினார் என்று நச்சினார்க்கினியர் மிகத் தெளிவாக விளக்கம் உரைக்கிறார். அத்துடன் ஞாயிற்றைக் கொண்டே காலம் வரையறுக்கப்பட்டதால் ‘காலவுரிமை எய்திய ஞாயிறு’ என்றும் குறிப்பிடுகிறார்.

(2) நெடுநல்வாடை உரை:

2.1: பாண்டியன் கோட்டைக்கு அடிக்கல் நாட்டப்பட்ட சித்திரை நாள்:

தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனை பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு மதுரைக் கணக்காயனார் மகனார் ஆன நக்கீரனார் என்னும் புலவரால் இயற்றப்பட்டதே நெடுநல்வாடை என்னும் நூல். பாண்டியன் நெடுஞ்செழியன் இருந்து நாடாளும், அரண்மனையும் பெருங்கோட்டையும் எவ்வாறு கட்டப்பட்டது என்று விளக்கும் பாடல் வரிகள் நக்கீரர் எழுதிய நெடுநல்வாடை நூலில் இடம்பெறுகிறது. இப்பாடலில் 'நிழலற்ற நாளில்' அக்கோட்டையின் அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றதாகக் குறிப்பு உள்ளது.

"... ... ...மாதிரம்
விரிகதிர் பரப்பிய வியல்வாய் மண்டிலம்
இருகோல் குறிநிலை வழுக்காது, குடக்கேர்பு
ஒருதிறம் சாரா அரைநாள் அமையத்து"

(நெடுநல்வாடை, 72-75)

"இருகோல் குறிநிலை வழுக்காது, குடக்கேர்பு ஒருதிறம் சாரா அரைநாள் " என்ற சொற்றொடர் நிழலற்றநாளை அறியும் முறையைக் குறிக்கிறது.

இப்பாடலுக்கு விளக்கம் கூறும் நச்சினார்க்கினியர்;

> "திசைகளிலே விரிந்த கிரணங்களைப் பரப்பின அகன்ற
> இடத்தை உடைய ஞாயிறு மேற்றிசைக்கட் சேறற்கெழுந்து
> இரண்டிடத்து நாட்டின இரண்டு கோலிடத்துஞ் சாயா
> நிழலால் தாரை போக ஓடுகின்ற நிலையைக் குறித்துக்
> கொள்ளுந் தன்மை தப்பாதபடி தான் ஒரு பக்கத்தைச்
> சாரப் போகாத சித்திரைத் திங்களின் நடுவிற்
> பத்தினின்ற யாதோர் நாளிற் பதினைந்தா நாழிகையிலே
> அங்குரார்ப்பணம் பண்ணி"

என்று விளக்கம் தருகிறார்.

சித்திரை மாதத்து இடைப்பத்து நாட்களில் (அதாவது சித்திரை 11 முதல் - சித்திரை 20 நாட்களுக்குள்) அப்பகுதியில் எது நிழலற்ற நாளோ அந்த ஒருநாளின் நண்பகலில் பதினைந்தாவது நாழிகையில் அடிக்கல் நாட்டு விழா நடை பெற்றதாக இந்த விளக்கம் அமைந்துள்ளது. நெடுநல்வாடையில் குறிப்பிடப் படும் அந்த நிழலற்ற நாள் எந்த மாதத்தின் நாள்? பாடல் குறிப்பிடுவது ஆண்டில் இருமுறை நிகழக்கூடிய நிழலற்ற நாளைக் கொண்ட சித்திரையிலா அல்லது ஆவணியிலா, அது எந்த மாதத்தின் நிழலற்ற நாள் என்று நக்கீரரால் குறிப்பிடப் படவில்லை என்பது கவனிக்கப்பட வேண்டிய ஒன்று. அது சித்திரை மாதத்து நிழலற்ற நாள் என்று இங்குக் குறிப்பிடுபவர் உரைகாரர் நச்சினார்க்கினியர்.

நச்சினார்க்கினியர் இந்த இடத்தில் விரிவாகச் சித்திரைத் திங்கள் குறித்து விளக்கம் தர முற்பட்டும் கூட ஆண்டின் முதல் மாதம் அது என்று விளக்கமளிக்க முயலவில்லை என்பதைக் கவனிக்க வேண்டும்.

அவ்வாறே நெடுநல்வாடையில் தொடர்ந்து வரும் பின்பகுதியில் சித்திரை ஆண்டின் தொடக்கம் எனக் குறிப்பிட நச்சினார்க்கினியருக்கு மற்றும் ஒரு வாய்ப்பு கிடைக்கிறது. ஆனால் அப்பொழுதும் அவர் ஆண்டின் தொடக்கம் சித்திரை என்று குறிப்பிடவில்லை. இப்பகுதி பாண்டிமாதேவியின் அரண்மனையில் அவள் மன்னனைப் பிரிந்திருக்க நேர்ந்ததை எண்ணி வருந்தும் காட்சி.

2.1: பாண்டிமாதேவியின் பள்ளியறைக் காட்சி:

நெடுநல்வாடையில் நூலில், பாண்டிய மன்னன் போரின் காரணமாகப் போர்க்களம் சென்று விடுகிறான். மன்னன் வருவதாகக் கூறிய நாளும் கடந்து குளிர் காலமும் வந்துவிட்டது. மதுரையின் அரண்மனை அந்தப்புரத்தில் அவன் நினைவாக உறக்கம் வராது வாடுகிறாள் அரசி. பள்ளியறையின் அகன்ற பாண்டில் (வட்ட வடிவக் கட்டில்) மேல் மெல்லியதாக விரித்த ஒரு மஞ்சமும் அதன் மேலே மென்மையான அன்னத்தூவி தலையணைகளும் கொண்ட பஞ்சணை இருக்கிறது. பஞ்சணை மேல் முற்றுப்பெறாத கோட்டுச் சித்திரத்தை போல பாண்டிமாதேவி சாய்ந்திருக்கிறாள். மஞ்சத்தின் உறுதியான திரண்ட கட்டில் கால்களின் மேற்புறம், துணியால் கட்டிய மேல் விதானத்தில் வரையப்பட்டிருந்த திண்ணிய கொம்புகளையுடைய மேட இராசி முதலாகப் பன்னிரு இராசிகளின் படத்தில் ஞாயிற்றையும், திங்களையும்; திங்களோடு இணைந்து நின்ற ரோகிணி விண்மீனையும் பார்த்து நெடு மூச்சு விடுகிறாள் அரசி. ரோகிணியைப் போன்று தன் காதலனோடு பிரிவின்றி வாழும் பேறு தனக்குக் கிட்டவில்லையே. ரோகிணி தன் காதலனான நிலவுடன் இணைபிரியாது இருக்க நாம் மட்டும் மன்னனைப் பிரிந்து தனியே வாடுகிறோமே என்று ஏங்குகிறாள். தன்மேல் கொண்ட கழிவிரக்கத்தால் கண்களில் பொங்கிய கண்ணீரை, விரலால் சுண்டிவிட்டபடி வருந்துகிறாள்.

> "புதுவதுஇயன்ற மெழுகுசெய் படமிசைத்
> திண்நிலைமருப்பின் ஆடுதலை ஆக
> விண்ஊர்பு திரிதரும் வீங்குசெலன் மண்டிலத்து
> முரண்மிகு சிறப்பிற் செல்வனோடு நிலைஇய
> உரோகிணி நினைவள் நோக்கிநெடுதுயிரா
> மாயித ழேந்திய மலிந்துவீ ழரிப்பனி
> செவ்விரல் கடைக்கண் சேர்த்திச் சிலதெறியாப்
> புலம்பொடு வதியு நலங்கிள ரரிவை"

- (நெடுநல் வாடை, *159-66)*

இப்பாடலில் இடம் பெறும் "திண்ணிலை மருப்பின் ஆடுதலையாக விண்ணூர்பு திரிதரும் வீங்குசெலல் மண்டிலத்து" *(வரி 160-161)* என்ற வரியையே தமிழரின் ஆண்டுக் கணக்கு சித்திரையில் தொடங்குகிறது என்று கருதுவோர் மிக முக்கியமான சான்றாக முன்வைப்பர்.

திண்ணிய நிலையினையுடைய கொம்பினையுடைய மேடராசி முதலாக ஏனை இராசிகளிற் சென்று விண்ணில் திரியும், மிக்க செலவினையுடைய ஞாயிற்றோடே மாறுபாடு மிகுந்த தலைமையினையுடைய திங்களோடு திரியாமனின்ற உரோகிணியைப் போல யாமும் பிரிவின்றி யிருத்தலைப் பெற்றிலமேயென்று நினைத்து அவற்றைப் பார்த்து நெட்டுயிர்ப்புக் கொண்டு, தன்கடைக்கண்ணில் தளும்பிய கண்ணீரைத் தனது சிவந்த விரலால் சுண்டிவிட்டு, மன்னனைப் பிரிந்து தனிமையில் இருப்பதற்காக பாண்டிமாதேவி வருந்தினாள் என்பது நச்சினார்க்கினியர் தரும் உரையின் சாரம்.

தொன்று தொட்டு தமிழர்கள் பின்பற்றுவது கதிரவனின் நகர்வை அடிப்படையாக்கக் கொண்ட காலக் கணக்கீடு. அதனால்தான் ஆண்டு ஆறு பருவங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இன்றைய நாட்களில் தமிழரின் பயன்பாட்டில் உள்ளது சூரிய சித்தாந்த நாட்காட்டி. இது வான் வெளியை 12 ஓரைகளாக அல்லது வீடுகளாகப் பிரித்துக் கணக்கிடும் கனலி வட்டம் (அல்லது ஓரை வட்டம் அல்லது இராசிச் சக்கரம்) என்பதை அடிப்படையாகக் கொண்டது. இதில் மேஷ ஓரையில் சூரியன் தொடங்கும் காலம் ஆண்டின் தொடக்கமாக, இளவேனில் தொடங்கும் சித்திரைத் திங்களிலிருந்து ஆண்டுக் கணக்கு தொடங்குகிறது என்பதை அறிவோம். இந்த வரிகளுக்கு விளக்கம் அளிக்கையில் ஆண்டின் தொடக்கம் சித்திரை எனக் குறிப்பிட நச்சினார்க்கினியருக்கு மிக நல்ல வாய்ப்பு கிடைக்கிறது. ஆனால் இந்த மற்றொரு வாய்ப்பிலும் சித்திரை ஆண்டின் தொடக்கம் என்று அவர் குறிப்பிடவே இல்லை என்பது கவனிக்கத் தக்கது.

அவர் இராசிச் சக்கரத்தில் முதலில் இருக்கும் ஓரை மேஷம் என்பதை "திண்ணிய நிலையினையுடைய கொம்பினையுடைய மேடராசி முதலாக" எனத் தெளிவாகக் குறிப்பிடுகிறார். ஆனால் தமிழர்களுக்கு ஆண்டு அங்குத் தொடங்கவில்லை. அவர்களுக்குச் சிம்ம ஓரையில்தான், கார்காலத்தில்தான் தொடங்கியது என்பதால் அவர் ஆண்டின் தொடக்கம் குறித்து இப்பகுதியில் குறிப்பிடவில்லை. எல்லா ராசியிலும் சூரியன் பயணிக்கிறது. ஆனால் ரோகிணி விண்மீன் தன் காதலன் சந்திரனுடன் பிரியாமல் இணைந்தே இருக்கிறது, ரோகிணி போலத் தன் காதலனான பாண்டிய மன்னனுடன் பிரியாமல் இணைந்திருக்கத் தனக்கு வாய்க்கவில்லை என்பது மட்டுமே அரசியின் ஏக்கத்திற்குக் காரணம் என்பதை நக்கீரர் பாடலில் சொல்லியுள்ளார் என்று கூறி, அவ்வரிகளுக்கு உரை எழுதிக் கடந்து விடுகிறார் நச்சினார்க்கினியர் (இங்கு ரோகிணி சந்திரனின் 27 மனைவியருள் அவனுக்கு விருப்பமான மனைவி, மற்ற மனைவியரைவிட அதிக அன்புடன் அவன் ரோகிணியுடன் வாழ்ந்தான் என்ற புராணக் கதை இப்பாடலில் குறிப்பிடப்படுகிறது).

முடிவுரை:

தமிழ் இலக்கண இலக்கியங்களுக்கு உரை எழுதிய நச்சினார்க்கினியர் மிகப்பரந்த நூற் புலமையுள்ளவர் என்றும், பழந்தமிழ் இலக்கியங்களுக்கு மரபறிந்து, பொருள் தெளிவுடன் உரை எழுதியவர் என்றும் பாராட்டப் பாடுபவர். அவர் தொல்காப்பிய உரையில் தமிழர்களின் ஆண்டுக் கணக்கின் தொடக்கம் என்பதை விளக்குகிறார். அவரே நெடுநல்வாடை பாடலுக்கு உரை எழுதும் பொழுது இருமுறை சித்திரை குறித்து விளக்கம் அளிக்கக் கூடிய வாய்ப்பிருந்தும், சித்திரையை ஆண்டின் தொடக்கம் எனக் குறிப்பிடவில்லை என்பதையும் ஒருங்கே இணைத்துப் பார்த்தால், தமிழரின் ஆண்டின் தொடக்கம் எது என்ற புதிரை நச்சினார்க்கினியர் விடுவித்துள்ளார் என்று தெளியலாம். அவருடைய உரைகள் தமிழர் ஆண்டின் தொடக்கம் எது என்பதை 'உறுதிப்படுத்தும் சோதனை முடிவு' (confirmatory test result) போன்றது எனவும் கொள்ளலாம். இதன் மூலம் நச்சினார்க்கினியர் வாழ்ந்த காலமான 15ஆம் நூற்றாண்டு வரை தமிழர்களின் ஆண்டின் தொடக்கம் ஆவணியில் தொடங்குகிறது என்பதையும், இத்தகவலை பொ.ஆ.16ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட சூடாமணி நிகண்டும் உறுதி செய்கிறது என்பதையும் அறியலாம். நிகண்டுகள் ஏன் ஆவணியை ஆண்டின் தொடக்கம் என்று கூறுகிறது என்பதற்கு தைப்புத்தாண்டு அணியினரோ அல்லது சித்திரைப் புத்தாண்டு அணியினரோ என்றுமே அது குறித்துப் பேச விரும்பியதில்லை. அது ஏன் என்ற விளக்கம் நச்சினார்க்கினியர் மூலம்தான் நமக்குக் கிடைத்துள்ளது.

சான்றாதாரங்கள்:

நச்சினார்க்கினியர், மு. அண்ணாமலை, பழனி பிரசுரம், 1956

https://www.tamildigitallibrary.in/admin/assets/book/TVA_BOK_0033572/ACL-TNAL_01281_நச்சினார்க்கினியர்_1956.pdf

நெடுநல்வாடை - நச்சினார்க்கினியர் உரை

உ.வே. சாமிநாத அய்யர் (தொகுப்பு)

https://www.projectmadurai.org/pm_etexts/utf8/pmuni0484.html

ரிக் வேதம் கூறும் அகத்தியர்

தேமொழி
சான் பிரான்சிஸ்கோ

*"பொதியில் முனிவன் புரை வரை கீறி
மிதுனம் அடைய விரி கதிர் வேனில்
எதிர் வரவு மாரி இயைக"*
[பரிபாடல்: 11 - வையை; நல்லந்துவனார்]

'பொதிகை முனிவனின் பெயர்கொண்ட "அகத்தியன்" என்னும் விண்மீன் (star - Canopus) தன் உயர்ந்த இடத்தைக் கடந்து மிதுன ராசியைச் சேர, விரிந்த கதிர்களையுடைய வேனிற்காலம் எதிர்கொள்ளும் கார்காலத்தில் மழை பெய்க.. . ' என்று கூறும் பரிபாடல் வரி, அகத்தியன் என்ற விண்மீனைக் குறிப்பிடுவதாக உரையாசிரியர்கள் விளக்கம் தருகிறார்கள். பொதிகை மலையில் வாழ்ந்தாகக் குறிப்பிடப்படும் அகத்தியனையும், அகத்தியன் என்ற பெயர் கொண்ட விண்மீனையும் இணைத்துக் கூறும் தமிழின் தொல் இலக்கிய நூலான எட்டுத்தொகையின் பரிபாடலில் இடம் பெறும் குறிப்பு இது ஒன்றேயாகும். வடபால் வாழ்ந்த அகத்தியன் என்ற குறுமுனிவர் தென்வானில் விண்மீனாக இலங்குகிறார் என்பது, சிவனாரின் திருமணக் காலத்தில் உயர்ந்த தென்பகுதியைச் சமன் செய்ய அகத்தியன் தென்னகம் அனுப்பப் பட்டார் என்ற ஒரு தொன்மப் புனைவின் பின்னணி கொண்டது. இவ்வரிகள் இடம் பெறும் பரிபாடல் காலத்தால் பிற்பட்டது. வானியல் கணிதத்தின் அடிப்படையில் எல்.டி.சாமிக்கண்ணு இப்பாடலில் குறிப்பிடப்படும் நாள் கி. பி. 634 ஆண்டின் ஆடித்திங்கள் நாள் என்று குறிப்பிடுகிறார். 'பொதியில் முனிவன்' என்பதை 'அகத்தியன்' என்று உரைநூல்கள் விளக்கம் தந்தாலும், அகத்தியன் என்னும் பெயர் தொகை நூல் எதிலும் காணப் படாத ஒரு பெயர்.

*"அமர முனிவன் அகத்தியன்-தனாது
கரகம் கவிழ்த்த காவிரி பாவை"*
என்றும்;

"அமர முனிவன் அகத்தியன்-தான் அது"
[மணிமேகலை; சீத்தலைச் சாத்தனார்]

என முதன் முதலில் அகத்தியர் என்னும் பெயர் ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்றான மணிமேகலையில்தான் இடம் பெறுகிறது.

பொதியில் முனிவன் அகத்தியன் என்பதற்கு மாறாக; வீரசோழிய நூலாசிரியராகிய புத்தமித்திரனார்; புத்த சமயத்தவரால் வணங்கப்பெறும் தெய்வமான அவலோகிதர் என்பவர் போதலகிரியில் (பொதிகை மலையில்) தன் மனைவி தாரையுடன் வாழ்ந்தார். அவரிடம் அகத்தியன் தமிழ் பயின்று தமிழுக்கு இலக்கணம் எழுதினார் என்று குறிப்பிடுகிறார்.

"ஆயுங் குணத்தவ லோகிதன் பக்கல் அகத்தியன் கேட்
டேயும் புவனிக் கியம்பிய தண்டமிழ்''

ஆனால், அகத்தியனுக்குத் தமிழ் கற்பித்தவர் சிவபெருமான் என்றும், தமிழ்க் கடவுள் முருகன் என்ற கதைகளும் தமிழரிடம் பரவலாக வழக்கத்தில் உள்ளது.

தொல் சமஸ்கிருத இலக்கியமான ரிக் வேதத்தில் அகத்தியன் குறிப்பிடப்படுகிறார், அவர் வட இந்தியாவிற்கும் தென்னிந்தியாவிற்கும் பண்பாட்டுப் பாலமாக விளங்குகிறார். தமிழும் சமஸ்கிருதமும் சங்கமிக்கும் நிலைக்கு அவர் ஓர் அடையாளக் குறியீடு என்று தமிழர்களாலும் இதுநாள் வரை அகத்தியர் உயர்த்திப் பிடிக்கப்படுகிறார். அறிவியல் வளர்ந்த இக்காலத்தில், அகத்தியன் காவிரி ஆறும், தாமிரவருணி என்னும் பொருநை ஆறும் தமிழ்நாட்டுக்குக் கிடைக்கக் காரணமானவர், கடலையே குடித்தவர் என்ற இயற்கைக்கு முரணான புனைவுகளைப் புறம் தள்ளி விடலாம். அப்புனைவுகள்; அறிவியல் சாயம் பூசப்பட வேண்டியவையோ, அல்லது அவை மறைமுகக் குறியீடுகளா என்ற ஆய்வுகளுக்குக் கூடத் தகுதி பெற்றவையோ அல்ல.

அகத்தியன் என்னும் சித்தயோகி தமிழ் வளர்த்த சான்றோர்களில் முதன்மையானவர்; தமிழ் மொழிக்கு இலக்கணம் கண்டவர்; அகத்தியம் என்ற முதல் இலக்கண நூலின் ஆசிரியர், தமிழ்ச் சங்கத்தில் சிவபெருமானும் முருகப்பெருமானும் புலவர்களாக இலங்க, முதன்மைப் புலவராக இருந்து தமிழாய்ந்தவர்; அவருக்குத் தமிழின் முதல் நூலை யாத்த தொல்காப்பியர் உட்படப் பன்னிரு மாணவர்கள் இருந்தனர் என்று தமிழ் இலக்கியத்தில் கூறப்படும் கருத்துகள் விரிவான ஆய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டியவை. அவ்வாறு ஆராய்வது தமிழ் ஆய்வாளர்களின் கடமையும் கூட. தமிழறிஞர் கா. நமச்சிவாய முதலியார் போன்றோர் ஆய்வு செய்து, நூல் எழுதி, தமிழுக்கும் அகத்தியருக்கும் உள்ள தொடர்புகளாக மேற்கூறப்படும் கருத்துகளைக் குறித்து வினாக்கள் பல எழுப்பி, அவ்வாறாகக் காட்டப்படும் தொடர்புகளை மறுத்தும் உள்ளார்கள் (அகத்தியர் ஆராய்ச்சி, கா. நமச்சிவாய முதலியார், 1931).

தோன்றும்போதே ஞான ஒளியிலிருந்து வெளிப்பட்டதால், 'அகஸ்தி" என்னும் பெயர் சூட்டப்பெற்றாரென்று பெயர்க்காரணம் கூறப்படுகிறது. அகத்தியர் என்ற பெயரில் காலந்தோறும் பலர் வாழ்ந்திருக்கக் கூடும், சங்ககாலத்துத் தமிழ்

வளர்ச்சியில் அகத்தியரின் பங்களிப்பு என்பது ஏற்கக் கூடிய கருத்தல்ல, அவை பிற்காலப் புனைவுகள் என்று கா. நமச்சிவாயனார் சான்றுகளுடன் மறுத்துள்ளார். உயர்வு மானப்பான்மையால் சமஸ்கிருதத்தை உயர்த்திப் பிடிப்போரும்; தாழ்வு

மனப்பான்மையும், சமயச் சார்பும் கொண்ட தமிழர், தமிழ் சமஸ்கிருதத்திற்கு இணையானது என்று வலியுறுத்த விரும்பி புனையப்பட்ட கருத்துகள் தமிழின் வரலாறாக மாற்றப்பட்டுள்ளது என்பதை இந்நூல் மூலம் அறிய முடிகிறது. இத்தகைய ஆய்வுகளைத் தமிழ் இலக்கியங்களில் மேற்கொள்ளும் பொழுது, அகத்தியர் குறித்து ரிக் வேதத்தில் காணப்படும் கருத்துகள் குறித்தும் ஆய்வுகள் தேவை. வேதத்தில் அகத்தியருக்கும் தமிழுக்கும் தொடர்பு காட்டப்படுகிறதா? தொல்காப்பியர் (திரணதூமாக்கினி என்று வடமொழி ஆர்வலர்களால் புனைபெயர் கொடுக்கப்பட்டவர்) அகத்தியரின் மாணவர் என்ற குறிப்பு வேதத்தில் உள்ளதா? அகத்தியர் குறித்து வேதம் கூறுவது என்ன? என்ற ஆய்வுகள் ஒப்பாய்வு முறியில் தேவை என்பதை மறுக்க இயலாது.

வேதக் கல்வி அனைவருக்குமானது அல்ல என்ற வழக்கிருந்த முற்காலத்தில் குறிப்பிட்ட ஒருசில சிறுபான்மையினரே அதைக் கற்றனர். அவர்களும் சமயச்சார்புத் தன்மை கொண்டவர்களாக இருந்ததால், வேதத்தில் என்னவெல்லாம் இருக்கிறது என்று கூறப்பட்டப் புனைவுகளை மறுத்து உண்மை என்னவென்று மக்களிடம் கூற அக்கறை அற்றவர்களாக இருந்தார்கள். மாறாக, வேதம் அனைவருக்கும் பொதுவானது என்ற கொள்கை கொண்ட பன்மொழி அறிஞர் ம.ரா.ஜம்புநாதன் (மணக்கால் ராமசாமி ஜம்புநாதன், *1896-1974*) ரிக் வேதத்தை *30* ஆண்டுகளுக்கும் மேலாக ஆய்வு செய்து தமிழில் மொழிபெயர்த்தார். அவர் மறைவிற்குப் பின்னர், அவர் மொழிபெயர்த்த ரிக்வேதம் இரு தொகுதிகளாக (தொகுதி *1- 1978*; தொகுதி *2- 1980*) வெளியானது. இணையச் சேகரிப்பில் இந்நூல்களைப் படிக்கலாம் *(Volume -1: https://archive.org/details/1-1-6_20210721 & Volume -2: https://archive.org/details/2-7-10)*. ரிக் வேதம் ஆங்கிலத்திலும் மொழிபெயர்க்கப்பட்டப் பதிப்பாக *19*ஆம் நூற்றாண்டு முதற்கொண்டே உள்ளது *(Rig Veda [translation and commentary] by H. H. Wilson,1866).*

ரிக் வேதம் கூறும் அகத்தியர்

ரிக்வேதம்-தொகுப்பின் (சம்ஹிதை) 10 மண்டலங்களும், தேவர்களைத் துதிக்கும் சுமார் 10552 'ரிக்' மந்திரங்களைக் கொண்டவை. இந்த மந்திரங்கள் 'சூக்தங்கள்' என்று 1028 பிரிவுகளாகத் தொகுக்கப்பட்டவை. ரிக்வேதத்தின் முதலாம் மண்டலத்தில் 165 முதல் 191வரை உள்ள 27 சூக்தங்கள் அகத்தியரால் எழுதப்பட்ட 'அகஸ்திய சூக்தங்கள்' ஆகும். இவை பெரும்பாலும் இந்திரன், மருத்துக்கள், அசுவினிகள் ஆகியவர்களைப் போற்றுபவை. இவர்களைத் தவிர்த்து அக்கினி, ஆப்பிரி, சூரியன், பிரகஸ்பதி, விசுவே தேவர்கள் போன்றவர்களும் போற்றப்படுகிறார்கள்.

அகஸ்திய சூக்தங்களில்; கடவுளருக்கு சோமரசம் பிழிந்து கொடுத்து, யக்ஞம் செய்து அவி கொடுக்கப்படுகிறது. இந்திரனிடம் எங்களுடைய பகைவர்களை அழித்து, அவர்களுடைய செல்வத்தை எங்களுக்களிக்கவும், நாங்கள் உணவையும், பலத்தையும், நீண்ட ஆயுளையும் அடைய உதவுங்கள் என்று வேண்டுபவையாக அமைந்துள்ளன. மருத்துக்கள், அசுவினிகள், அக்னி போன்ற பிற கடவுளர்களும் தங்கள் குதிரைகள் பூட்டிய தேர்களுடன் சென்று, வஜ்ராயுதம் கொண்டு பகைவரை அழிக்கும் வீரனான இந்திரனுடன் நட்பிலிருந்து, அவன் போரில் பகைவர்களை அழிக்க உதவி செய்யுமாறு வேண்டப்பட்டு அவி அளிக்கப்படுகிறார்கள். உணவும், பலமும், நீண்ட ஆயுளும் தேவை என்று மீண்டும் மீண்டும் வேண்டப்படுகிறது. எதிரிகளின் கோட்டையை அழித்து தங்களுக்குச் சுகம், செல்வம் ஆகியவற்றைத் தருமாறும் வேண்டப்படுகிறது.

அகஸ்திய சூக்தங்களில்; 179 ஆவது சூக்தத்தில் அகத்தியரின் மனைவியான உலோபாமுத்திரை என்பவள் பற்றிய குறிப்பு வருகிறது. ஒரு மாணவன் பற்றிய குறிப்பு ஒன்றும் வருகிறது. அதனால் ரிக்வேத விளக்கம் எழுதியோர் அகஸ்தியர் ஒரு வேதப் பள்ளிக்கூடம் நடத்தியிருக்கலாம் என்று கருதுகிறார்கள். மனைவியிடமும், அவளின் இல்லற நாட்டம் குறித்தும் அக்கறை அற்றவராக இருக்கிறார் அகஸ்தியர். அவரிடம் அவள் நான் பல ஆண்டுகளாக அல்லும் பகலும் உங்கள் தேவை அறிந்து பணிவிடை செய்து வந்திருக்கிறேன், அதனால் களைத்துவிட்டேன். இப்பொழுது முதுமை நெருங்குவதால் என் அழகு பொலிவிழக்கிறது. ஆதலால், கணவர் தன் மனைவியோடும், மனைவி தன் கணவரோடும் இணையலாம் என்று அகஸ்தியரை அழைக்கிறாள். அகஸ்தியரும் நாம் நம்முடைய விருப்பங்களையெல்லாம் அனுபவிப்போம். நாம் இருவரும் இணைந்து இயங்கினால் வெற்றி அடையலாம். எனக்கும் காமம் தோன்றுகிறது. உலோபாமுத்திரையே என்னிடம் வருக, என்று அழைத்து அவளுடன் உறவு கொள்கிறார்.

அப்பொழுது அங்கிருந்த அகஸ்தியரின் மாணவன், இவர்கள் செயல்பாடுகளைக் கவனித்துக் கொண்டிருந்தவன், உண்மையாகவே மனிதன் பல காமங்களின் வசத்தில் இருக்கிறான் என்று சொல்லிக் கொள்கிறான். அகஸ்தியன் தனக்கு மக்கட் செல்வங்கள் விரும்பி மனையுடன் இணைகிறான் (உழுபடைகளால் உழுது, விதைத்து, விளைவித்து என்று பாடலில் அது குறிப்பிடப்படுகிறது), அதன் விளைவாக இரண்டு வர்ணங்களைப் பெறுகிறான். (மக்கட் செல்வத்தை? அடைந்தான் எனக் கொள்ளலாம்). அசுவினிகள் மீது பாடப்படும் 184ஆவது சூக்தத்தின் 6ஆம் மந்திரத்தில் அகஸ்தியருக்கு மக்கட்பேறு வரம் அளிக்குமாறு வேண்டப்படுகிறது. சூரியன் மீது பாடப்படும் 191ஆவது சூக்தத்தில் அகஸ்தியரை கொட்டிய தேளினால் உடலில் ஏறிய நஞ்சை நீக்குமாறு வேண்டப்படுகிறது.

மனிதர்களின் தலைவர்களில் தலைவனானவன் அகஸ்தியன் (இவ்வாறாக அகஸ்தியனே தன்னைக் குறித்துக் கூறிக்கொள்வது). இந்த அகஸ்திய சூக்தங்கள் பகுதி தவிர்த்து, ரிக்வேதத்தின் மேலும் பிற பகுதிகளிலும் அகஸ்தியர் பற்றிய குறிப்புகள் உள்ளன. அகஸ்தியரின் தாய் அஸமாதி என்பவர். மித்திரா வருணர்களின் புதல்வன் அகஸ்தியர். அகத்தியனும் வசிட்டனும் ஒரே விதமாகப் பிறந்த உடன் பிறப்புகள். மித்திரா, வருணர்கள் ஆகியோர் அவர்களின் ரேதஸை கும்பத்தினுள் பொழிந்தார்கள். அக்கும்பத்திலிருந்து 'மானன்' என்னும் அகஸ்தியனும் வசிட்டனும் தோன்றுகிறார்கள். அகஸ்தியன் குறித்து ரிக் வேதத்தில் கிடைக்கும் அதிகம் பேசப்படாத மற்ற தகவல்கள்; அகஸ்தியனின்

புதல்வன் திருளஹச்யுதன், அகஸ்தியனின் பேரன் இத்மவாஹன் (திருளஹச்யுதனுடைய புதல்வன்). அகஸ்தியருடைய சகோதரியும் அவளுக்குப் புதல்வர்களும் இருப்பதாகவும் குறிப்பு உள்ளது.

அகஸ்தியன் குறித்து ரிக் வேதத்தில் இவ்வளவு குறிப்புகள் இருப்பினும், தமிழகத்தில் புழக்கத்தில் இருக்கும் தொல்காப்பியக் கதைகள் பற்றிய குறிப்புகள் தென்படவில்லை. அகஸ்தியரின் மாணவர் என்று கூறப்படும் திரணதூமாக்கினி என்ற தொல்காப்பியர் பெயர் மட்டுமல்ல; அதங்கோட்டாசான், பனம்பாரன், காக்கைபாடினியார் என்று அகஸ்தியரின் மாணவர்களாகக் கூறப்படுபவர் எவர் பெயரும் ரிக் வேதத்து அகஸ்தியர் பற்றிய குறிப்புகளில் காணப்படவில்லை. மற்ற மாணவர்கள் பற்றியோ, அவர்களின் எண்ணிக்கை பற்றியோ, அவர்கள் யாவரும் அகஸ்தியரிடம் தமிழ் பயின்று இலக்கண இலக்கியங்கள் எழுதியதாகவோ எந்த ஒரு குறிப்பும் இல்லை. தமிழுக்கும் அகஸ்தியருக்கும் தொடர்பு காட்டப்படவில்லை. முருகனுக்கும் சிவனுக்கும் அகஸ்தியருக்கும் தொடர்பு காட்டப்படவில்லை.

ரிக்வேத அகஸ்திய முனிவர் என்பர், சப்த ரிஷி எனப்படும் ஏழு முனிவர்களுள் (விசுவாமித்திரர், ஜமதக்னி, கௌதமர், வசிட்டர், காசியபர், பாரத்துவாசர், அத்திரி) ஒருவர் அல்லர். ஆனால் அவ்வாறு தொடர்ந்து எழுவரில் ஒருவர் என்று மக்கள் பிழையாகக் கூறி வருகிறார்கள். வானத்து விண்மீன் கூட்டத்திலும் சப்த ரிஷி மண்டலமும், அகஸ்திய விண்மீனும் வெவ்வேறு இடங்களில் இருப்பவைதான் என்பது குறிப்பிடத்தக்கது.

அவர் தென்னகம் வந்து உலகைச் சமப்படுத்தியது, விந்திய மலையை அடக்கியது, பொதிகையில் வாழ்ந்தது, ராமருக்குப் போர் கருவிகள் அளித்தது, இராவணனை இசையில் வென்றது, அவரது இசைப்புலமை, அகத்தியர் தமிழ்நாட்டுக்குக் காவிரி, தாமிரபரணி என்ற பொருநை ஆறுகளை அளித்தது போன்ற பரவலாகப் பேசப்படும் புராணக் குறிப்புகள் எதுவும் இல்லை. இவை யாவும் நான்காம் அல்லது ஐந்தாம் நூற்றாண்டுகளில் உருவாக்கப் பட்டு தமிழ் மண்ணில் நுழைந்திருக்கக் கூடும்.

புராணக் கதைகளின் தேவை, அவற்றின் தோற்றம், ரிக் வேதக் கடவுளர் வழிபாடு கைவிடப்பட்டது, அல்லது கடவுளரின் தகுதி நீக்கப்படுவது போன்ற வற்றின் சமூகப் பின்னணி விரிவான ஆராய்ச்சிக்குரியது. இதனால், காலத்தால் முற்பட்ட சங்கப் பாடல்களில் இடம் பெறாதவரும், பண்டைய தமிழ் மக்கள் அறிந்திருந்திராத அகஸ்தியர் தொல்காப்பியருக்கும் ஆசிரியர், அவர் தலைமை வகித்த சங்கங்களின் தோற்றம் என்பவை எல்லாம் எப்படிப்பட்ட புனைவு என்பதைத் தரவுகளின் அடிப்படையில் எவரும் முடிவு செய்யலாம்.

தென்திசையின் அகத்தியன்

முனைவர் தேமொழி
சான் பிரான்சிஸ்கோ

நல்லந்துவனார் எழுதிய பரிபாடலில் ‘பொதிகை முனிவனின்’ பெயர்கொண்ட "அகத்தியன்" என்னும் விண்மீன் குறிப்பிடப்படுகிறது. அகத்திய விண்மீன் தன் உயர்ந்த இடத்தைக் கடந்து மிதுன ராசியைச் சேர, விரிந்த கதிர்களையுடைய வேனிற்காலம் எதிர்கொள்ளும் கார்காலத்தில் மழை பெய்க... ‘ என்று இப்பாடலுக்கு உரையாசிரியர்கள் விளக்கம் தருகிறார்கள்.

"பொதியில் முனிவன் புரை வரை கீறி
மிதுனம் அடைய விரி கதிர் வேனில்
எதிர் வரவு மாரி இயைக"
[பரிபாடல்: 11 - வையை; நல்லந்துவனார்]

அகத்தியன் (*star - Canopus*) என்ற விண்மீனை, பொதிகை மலையில் வாழ்ந்தாகக் குறிப்பிடப்படும் அகத்தியனுடன் தொடர்பு படுத்திக் கூறும் தமிழின் சங்க இலக்கியங்களில் இடம் பெறும் குறிப்பு இது ஒன்றேயாகும்.

கனோபஸ் (*Canopus*) என்னும் அகத்திய விண்மீன் புவியின் தென் திசையின் மிகத் தொலைவில் உள்ள விண்மீன் என்பதால் புவியின் தென்கோளத்தில் உள்ளவர்களால் காண இயலும். குறிப்பாக நிலநடுக்கோட்டிலிருந்து *37°18’* பாகைக்கும் வடக்கே உள்ள பகுதியில் (*Northern Hemisphere’s 37th parallel north*) வாழ்பவர்களால் அகத்திய விண்மீனைக் காண இயலாது. கிரேக்கத்திலும் ரோமிலும் உள்ளவர்களால் வானில் கனோபஸ் விண்மீனைக் காண இயலாது, ஆனால் அவர்களுக்கும் தெற்கே உள்ள எகிப்தியர்களால் காண இயலும். பண்டைய ரோம் நாட்டு எழுத்தாளர் மூத்த பிளினி ((*Pliny the Elder*)

இந்தியக் கடலின் தென்பகுதி மக்களுக்கு இரவில் கடல் பயணத்தில் வழிகாட்ட உதவும் விண்மீன் என கனோபஸ் விண்மீனைக் குறிப்பிடுகிறார்.



அகத்தியர் தென்பகுதிக்கு வந்த புராணக் கதைக்கும் இதற்கும் தொடர்பு இருக்கக் கூடும். ஆரிய ரிக் வேதத்தில் கூறப்படும் 7 முனிவர்களில் (சப்த ரிஷிகள்) அகத்தியர் ஒருவர் அல்ல. ஸ்டெப்பி புல்வெளி ஆரியர்கள் தென் பகுதி நோக்கி புலம் பெயர்ந்து வந்த பிறகே தென் திசையின் ஒளிமிக்க விண்மீனை அறிந்திருக்க வேண்டும், ரிக் வேதத்தில் பாடல்கள் எழுதிய மற்றொரு முனிவரான அகத்தியர் என்பவரைச் சிறப்பிக்க அந்த விண்மீனுக்கு அகத்தியர் பெயரைச் சூட்டி இருக்க வாய்ப்புண்டு. அகத்தியர் தென்திசைக்குரியவர் என்ற புராணப் புனைவுகளும் அதன் அடிப்படையில் தோன்றியிருக்க வேண்டும். ஒரு விண்மீன் தெளிவாக வானில் தெரியும் என்றால் அது குறித்த பண்டைய தொன்மக் கதைகளும் உருவாகி இருக்கும். சீனர்கள் கனோபஸ் விண்மீனை 'தென் துருவத்தின் முதிய மனிதன்' (Old Man of the South Pole) என்று குறிப்பிடுவார்கள். அறிவியல் படி அகத்தியருக்கும் தென்திசைக்கும் உள்ள தொடர்பு இதுவே.

குறிப்பு: நிலநடுக்கோட்டிலிருந்து 37°18' பாகைக்கும் வடக்கே உள்ள பகுதிக்கு மற்றொரு சிறப்பும் உண்டு. கோடைக்காலம் தவிர்த்து, இப்பகுதியிலும் அதற்கு வடக்கிலும் சூரியக் கதிர்கள் விழும் கோணமும் அளவும் மாறுபடும். இப்பகுதிகளில் ஓசோன் மண்டலத்தைக் கடந்து ஊடுருவி வரும் UVB புற ஊதாக் கதிர்களின் அளவும் மிகக் குறைவு. இதனால் வைட்டமின் D குறைபாடு ஏற்படும் என்பதால், அதை நிவர்த்தி செய்ய இப்பகுதியில் வாழ்பவர்கள் உடலில் இயற்கையாக மரபணு மாற்றங்கள் நிகழ்ந்து, 'மெலானின் நிறமி' (Melanin pigment) அளவில் மாற்றம் ஏற்பட்டுத் தோல் நிறம் வெளிரும் பரிணாம வளர்ச்சி நிகழ்ந்தது.

கனோபஸ் விண்மீன் சூரிய மண்டலத்திலிருந்து 310 ஒளியாண்டுகள் தொலைவில் உள்ளது. சூரியனை விடவும் ஒளி மிக்கது, அளவிலும் மிகப் பெரியது. நாம் காணும் வானில் இரண்டாவது ஒளிமிக்க விண்மீன் இதுவே (ஒளிர்வதில் முதல் இடத்தில் இருப்பது 'சிரியஸ்' எனப்படும் விண்மீன் (Sirius); சிரியஸ் புவிக்கு மிக அருகில், 8 ஒளியாண்டுகள் தொலைவில் இருப்பதால் கனோபஸ் விண்மீனைவிட ஒளிமிக்கதாகத் தெரிகிறது.)

மனிதத்தின் பன்முகம்

— முனைவர் தேமொழி
சான் ஃபிரான்சிஸ்கோ

அடுத்து ஆட்சியைப் பிடிக்க அரசியல்வாதிகள் போடுவர் திட்டம் இவரது குட்டை அவர் உடைக்க அவரது முகத்திரையை இவர் கிழிக்க குப்பையைக் கிளறிக் கிளறிதாங்கவியலாத முடை நாற்றம் நிரந்தரமாக என்றுமே பட்டை நாமம்

நொந்ததே என்று தளர்பவருக்கும் வந்திடும் ஒரு நாள் புது வாழ்வு கடந்ததை எண்ணிக் கலங்காது இழந்ததை எண்ணிப் புலம்பாது வருவதை எதிர்கொள்வோருக்கு வாழ்வில் என்றுமே தாழ்வில்லை

வாஞ்சையென்றே எண்ணி ஏமாறாதீர் கொஞ்சமேனும் கருணையற்ற பிள்ளை நெஞ்சமதில் அன்பின்றித் துரத்தியதால் பஞ்சைப் பராரியாய் அலையும் பெற்றோரே நஞ்சு தோய்த்து அவர் உதிர்க்கும் இன்மொழியை வாஞ்சையென்றே எண்ணி ஏமாறாதீர்

உயிர் குடிக்கும் துணிவு பெற்றது போலி மதவாதிகளின் கூட்டம் கடவுள் எமக்கே உடைமை என்றே கூசாது பொய்யுரைத்துப் போராட்டம் மாந்தர் யாவரும் சமம் என்றாலோ சகித்திடாது செய்வர் ஆர்ப்பாட்டம் உண்மையை மறைத்துப் பழியுரைத்து நன்றே நடத்திடுவர் பித்தலாட்டம்

எல்லாமே பணம் எல்லாமே பணம்பிச்சாண்டியை மதிப்பவருண்டோ பெருமைமிகு பெரியகோவிலில் சொக்கரிடமும் மீனாளிடமும் கருணை வேண்டி சிறப்புத் தரிசனம் செய்யச் சென்றால் சொக்கருக்கும் வேண்டுமந்தப் பணம்காசு பணம் துட்டு மணி மணி

எண்ணிக் குமைந்து மந்தராகியவரும் பண்பினில் சிறந்தால் மாந்தராகிவிடுவார் அன்பில் திளைத்துப் புனிதராகியே மன்பதை காத்திடும் தன் மனச்செல்வம்

பசிப்பிணியும் மாநிலத்தே ஒழிந்திடுக பல்லுயிரும் இன்புறவே நல்லறம் ஓங்கிடுக பாரெல்லாம் அன்புநெறி தழைத்திடுக பாங்குடனே சிறந்தென்றும் வாழ்ந்திடுக

சக்தி வடிவென்றே பாடலெழுதுவார் ஒரு சிலர் மறைப்போசைப் பாடலெழுதுவார் மறு சிலர் பெண்ணுக்குப் பரிந்து பாடலெழுதுவார் அவர் இது பொல்லாத உலகம் பெண்ணே இது புரியாதென்றால் வாழ்வில்லை கண்ணே

வாங்கிப் பயன் பெறவீர்!!! தொடர்புக்கு:

சம்சுல் ஹுதா பானு

99403 35306

தேமொழியின் அறிவியல் நூல்கள்







அட்சய திருதியை

முனைவர் தேமொழி
சான் பிரான்சிஸ்கோ

ஒவ்வொரு ஆண்டும் இளவேனில் காலத்தில் கொண்டாடப்படும் பண்டிகை அட்சய திருதியை, வட இந்தியாவில் இந்து மாதமான வைசாக வளர்பிறையில் அமாவாசை நாளை அடுத்த மூன்றாம் நாளில் அக்ஷய திருதியை (அல்லது அக்ஷய தீஜ்) பண்டிகை கொண்டாடப்படும். அதே நாளானது தமிழகப்பகுதிகளில் சித்திரை மாதத்து வளர்பிறையில் அமாவாசை நாளை அடுத்த மூன்றாம் நாளாக இருக்கும். எனவே தமிழகத்தில் சித்திரை வளர்பிறை மூன்றாம் நாள் அட்சய திருதியை கொண்டாடப்படுவது வழக்கம்.

அட்சய / அக்ஷய என்றால் குறைவற்ற என்ற பொருள்; அட்சய பாத்திரம் என்பது அதே பொருளின் அடிப்படையில் உருவான சொல்தான். திருதியை என்றால் 3 ம் நாள் என்பதாகும். இது நாட்காட்டியில் பழைய முறையில் வானியல் அடிப்படையில் நாட்களைக் கணக்கிடும் முறையில் அமைகிறது.

வளர்பிறை (சுக்கில பட்சம்/நிலவொளி அதிகரிக்கும் நாட்கள்) மற்றும் தேய்பிறையில் (கிருஷ்ண பட்சம்/நிலவொளி குறையும் நாட்கள்) நாட்கள் அமாவாசை (அல்லது) பௌர்ணமி அடுத்த நாள் முதலாகத் தொடக்கம் கொண்டு கணக்கிடப்படுவது வழக்கம்.

இவ்வாறு தொடங்கும் வரிசையில் மூன்றாவது நாள் திரிதியை எனக் குறிப்பிடப்படும்.

1. பிரதமை, 2. துவிதியை, 3. "திருதியை", 4. சதுர்த்தி, 5. பஞ்சமி, 6. சஷ்டி, 7. சப்தமி, 8. அஷ்டமி, 9. நவமி, 10. தசமி, 11. ஏகாதசி, 12. துவாதசி, 13. திரயோதசி, 14. சதுர்த்தசி, 15. பவுர்ணமி (அல்லது) அமாவாசை என்று மொத்தம் 15 திதிகள் உள்ளன.

அட்சய திருதியை நாளில் அசையும் அசையா சொத்துக்களில் பணம் முதலீடு செய்தால் செல்வம் கொழிக்கும் என்பது வணிகர்கள் தொடக்கி வைத்த வணிகத் தந்திரம். குறிப்பாக இது தங்க நகை வியாபாரிகளின் முன்னெடுப்பு. அட்சயதிருதியை நாளில் 'குன்றிமணி அளவு தங்கம் வாங்கினாலும் அது குன்று போலப் பெருகும்' என்று கூறும் வழக்காறு மக்களிடையே நிலவி வரும் காரணத்தால் கடன் வாங்கியாவது குன்றிமணி அளவு தங்கம் வாங்க வேண்டும் என்ற மனநிலையை இது மக்களிடம் வளர்த்துவிட்டது. சென்ற ஆண்டு வாங்கினோமே அதனால் செல்வம் கொழித்ததா என்பது ஆராயப்படுவதில்லை. அட்சய திருதியை கொண்டாட்டம் அண்மைய வழக்கம். கடந்த 50 ஆண்டுகளுக்கு முன்னர்

அட்சய திருதியை என்பதை ஆன்மீகத்தில் மூழ்கிய குடும்பத்தினர் கூட அறிந்திருக்க வாய்ப்பில்லை. குறிப்பாக 50 அல்லது 60 அகவை முதிர்ந்த பெரியோர்களைக் கேட்டாலோ, அக்காலத்து ஏப்ரல் மே மாதங்களில் வெளியான பத்திரிக்கை செய்திகள், கதைகள் போன்றவற்றை மீள்பார்வை செய்தாலோ இந்த உண்மை தெளிவாகும். இது மக்களின் ஆசைக்குத் தூபம் போட்டு வணிக நோக்கில் பெரிதாக்கப்பட்ட பண்டிகை.

ஹஸ்தினாபூர் சமணக் கோவில் சிற்பங்கள்
[Hastinapur-Digamber Jain Mandir - Jambu Dweep Rachna
Ak47Gamer Photo: Aug 2021]

தீபாவளியைப் போலவே சமணர்களிடம் இருந்து வைதீகச் சமயத்தார் உள்வாங்கிக் கொண்டது இந்த அட்சய திருதியை பண்டிகையாகும்.

சமணத்தில், அட்சய திருதியை நாள் என்பது, சமணத்தின் முதற் தீர்த்தங்கரரான ரிசபநாதர் தமது ஓராண்டு கடுந்துறவு வாழ்வை நிறைவுசெய்து தமது குவிந்த கைகளில் ஊற்றப்பட்ட கரும்புச் சாற்றைப் பருகிய நாளாகக் கருதப்படுகிறது.

‘வர்சி தப’ என்றும் சமணர்கள் இவ்விழாவைக் குறிப்பிடுவது வழக்கம். ஓராண்டு முழுவதும் ஒரு நாள் விட்டு ஒரு நாள் உண்ணா நோன்பு இருக்கும் வர்சி தப எனப்படும் நோன்பைக் கடைப்பிடிப்போர், இந்த நாளில் பாரணை செய்து (கரும்புச் சாற்றை அருந்தி) தமது தபசை நிறைவு செய்கின்றனர். இந்நாளில் சமணர்கள் உண்ணாநோன்பு இருப்பதும் வழக்கமே.

சமண பண்டிகையான தீபாவளியை எடுத்துக் கொண்டு அதற்கு ஒன்றுக்கும் மேற்பட்ட கதைகளாக நரகாசுரன் வதம்,ராமர் சீதை அயோத்தி திரும்பிய நாள், லக்ஷ்மி பூஜை நாள் என்று பற்பல காரணங்களைக் காட்டி இந்துக்கள் தீபாவளி கொண்டாடும் வழக்கம் போலவே; வைதீகச் சமயம் இந்நாளுக்கும் ஒன்றுக்கு மேற்பட்ட பல புராணக் கட்டுக் கதைகள் கொடுத்துள்ளது; அவை

1. *பகவான் பரசுராமர் அவதரித்த நாள்*
2. *ஆதிசங்கரர் கனகதாரா ஸ்தோத்திரம் இயற்றிய நாள்*
3. *திரேதாயுகம் ஆரம்பமான நாள்*
4. *பாண்டவர்கள் சூரியனிடமிருந்து அட்சய பாத்திரம் பெற்ற நாள்*
5. *அன்னபூரணி தேவி அவதரித்த நாள்*
6. *கங்கை நதி பூமியைத் தொட்ட நாள்*
7. *குபேரன் இழந்த செல்வங்களை மீட்ட நாள்*
8. *வியாசர் மகாபாரதம் எழுத ஆரம்பித்த நாள்*
9. *குசேலர் கிருஷ்ண பகவானைச் சந்தித்த நாள்*

இவற்றில் இழையோடி இருக்கும் கருத்து செல்வச் செழிப்பின் தொடக்கம் என்பதாக இருப்பதைக் காண முடிகிறது.

இந்துமதத்தினர் தங்கள் சமயத்தில் அட்சயதிருதியை இணைத்துக் கொண்டது போலவே புத்த சமயத்தினரும் பிழையாக அட்சயதிருதியை நாளை மணிமேகலைக்கு அமுதசுரபி என்னும் அட்சயபாத்திரம் கிடைத்த நாளாகக் கூறி வருகிறார்கள். மணிமேகலை காப்பியம் சொல்லும் தகவலுடன் இக்கருத்து முரண்படுகிறது. அட்சயதிருதியைக்கும் மணிமேகலை அமுதசுரபி என்ற அட்சய பாத்திரத்தைப் பெற்ற கதைக்கும் தொடர்பில்லை.

மணிபல்லவம்தீவில் (ஆபுத்திரன் பொய்கையில் எறிந்த) அமுதசுரபி மணிமேகலைக்குக் கிடைத்த நாள் வைகாசி விசாகம் முழு நிலவு நாளாகும். இந்த நாள் புத்த பூர்ணிமா நாள் என்று அழைக்கப்படும். புத்தர் இவ்வுலகில் அவதரித்த திருநாளாகவும், அவர் ஞானம் பெற்ற நாளாகவும் இந்தப் புத்த பூர்ணிமா கொண்டாடப்படுகிறது.

அதாவது, வரும் மே *12, 2025* வைகாசி விசாகம் / புத்த பூர்ணிமா என்ற முழுநிலவு நாள், இது வட இந்திய நாட்காட்டி கணக்கு முறை; பார்க்க:*https://www.drikpanchang.com/panchang/month-panchang.html?date=12/05/2025)*

மணிபல்லவத்தீவின் ‘கோமுகி’ என்னும் பொய்கையிலிருந்து ‘அமுத சுரபி’ என்னும் அட்சயபாத்திரம் ஒவ்வோர் ஆண்டும் வைகாசித் தூய நிறைமதி நாளில் தோன்றும்; அதில் இட்ட அமுதம் கொள்ளக் கொள்ளக் குறையாது வளர்ந்துகொண்டே இருக்கும் என அப்பகுதியைக் காத்து நிற்கும் தீவதிலகை என்பவள் மணிமேகலையிடம் கூறுகிறாள். இதுதான் மணிமேகலை காப்பியத்தில் உள்ள தகவல்.

(ref : https://www.tamildigitallibrary.in/admin/assets/book/TVA_BOK_0017366_மணிமேகலை.pdf)

எனவே, வைகாசி விசாகா நாள் என்பது வேறு, அட்சயதிருதியை நாள் என்பது வேறு.

ஒரு பண்பாட்டில் ஒரு குறிப்பிட்ட பண்டிகைக்கு, நம்ப முடியாத வகையில் பல்வேறு கதைகள் சொல்லப்பட்டால், அவை யாவும் அப்பண்டிகையைத் தங்கள் வழக்கத்தில் உள்வாங்கிக் கொள்ளப் புனையப்பட்ட புனைவுகள் என்பதையும், அப்பண்டிகை உண்மையில் வேறு ஒருவருக்குச் சொந்தம் என்பதற்கான அறிகுறி அது என்பதையும் புரிந்து கொள்ளலாம். பிறகு முறையான ஆய்வை முன்னெடுப்பதன் மூலம் அப்பண்டிகை எவருடைய வழக்கம் என்பதும் தெளிவாகும். இது போன்ற விழாக்களும் கொண்டாட்டங்களும் பண்பாட்டுக் கலப்பின் வெளிப்பாடு என்பதில் ஐயமில்லை.

Ranking Thirukkural by Web Popularity: Analyzing Google Search Results with Scholarly Rigor

Dr. Jothi S. Themozhi
San Francisco

The Digital Dilemma: Can Search Data Reflect Literary Fame?

In a bold attempt to map the popularity of all 1,330 Thirukkural couplets, one researcher turns to Google—an unconventional yet data-rich platform. The plan? Use Google search result counts to rank each couplet by popularity. But this method prompts a deeper, critical question:

What does the "number of results" from a Google search actually measure?

To design a methodologically sound study, researchers must first understand the limitations and nuances of using this digital data source.

Search Strategies: 'All Results' vs. 'Verbatim'

The first major decision is choosing the search method. Google offers two fundamentally different modes:

All Results (Default):

Finds synonyms

Corrects spelling

May omit words

Tailors results based on user history and location

Example result count: 4,500,000

Verbatim Mode:

Searches exact phrase as typed

No synonyms or auto-corrections

Offers consistent, reproducible results

Example result count: 120,000

Choosing 'Verbatim' mode and using exact phrases in quotes (e.g., "exact couplet text") is essential for data reliability.

The Myth of Precision: What Google Really Tells Us

Google's result count, often mistaken for a hard metric, is a broad estimate based on how many web pages it has indexed with the search terms. While appealing for its scale, this number comes with substantial caveats:

Advantages

Easily accessible

Reflects global web presence

Encourages scalable analysis

Limitations

Highly imprecise estimate

Affected by hidden algorithms

Varies by user and geography

Reflects web presence—not real-world popularity

Results fluctuate frequently



Six Hidden Pitfalls in Search-Based Literary Analysis

Estimated, Not Exact

Google clearly warns users that its result counts are only rough approximations—unsuitable as a stand-alone metric in serious research.

Algorithmic Influence

Over 200 unseen ranking factors affect search outcomes. A couplet could rank high due to SEO tricks rather than genuine popularity.(SEO stands for Search Engine Optimization)

Personalization Bias

Results vary depending on who searches, where, and when. This makes data replication incredibly difficult.

Web Presence ≠ Popularity

A widely duplicated couplet might dominate result counts—even if few people actually read or value it.

Volatile Data Landscape

Google updates its index continuously. A search at 9 AM may yield very different results than the same search at 4 PM.

The Ecological Fallacy

Inferring individual-level insights from aggregate web data can be misleading. Web frequency does not equal cultural significance.

Building a More Credible Research Framework

Despite its flaws, Google search data can still serve as a component of a larger analytical framework. A few strategic enhancements can boost its credibility:

1. Precision in Search Technique

Use 'Verbatim' mode exclusively. Enclose each couplet in double quotes for consistent phrasing and phrase order.

2. Standardize the Research Environment

Combat personalization by using:

Incognito browsing

VPN to standardize location (A VPN, or Virtual Private Network, creates a secure, encrypted connection over the internet.)

Consistent logging of search date and time

3. Embrace the Imperfections

Clearly state in the final paper that data reflects estimated web presence. Collect multiple data points to analyze consistency (average and standard deviation).

4. Triangulate Your Metrics

Combine Google data with:

Literary citation frequency (academic papers, news, blogs)

Surveys/interviews with Tamil scholars

Appearance in school curricula or anthologies

This multipronged strategy offers richer, more reliable conclusions about each couplet's cultural relevance.



Conclusion: Search Wisely, Analyze Deeply

Google is a powerful but slippery tool for literary analysis. Alone, it risks misrepresentation. With rigor and triangulation, however, it can help shine new light on ancient wisdom like the Thirukkural—revealing how digital footprints mirror enduring textual resonance.

எது நடந்ததோ அது நன்றாகவே நடந்ததா ??!!!

முனைவர் தேமொழி
சான் பிரான்சிஸ்கோ.

“எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது” என்று தொடங்கி பகவத்கீதையின் சாரம் என்ற குறிப்புடன் “கீதாசாரம் சுவரொட்டி"யில் இடம் பெறும் கருத்துகள் யாவும் ஓர் ஆன்மீகப் புனைவு அல்லது கட்டுக்கதை.

வேதங்களின் சாரம் உபநிஷத்துகள்; அந்த உபநிஷத்துகளின் சாரம் பகவத்கீதை. உபநிஷத்துகளின் சாரமான பகவத்கீதையை கண்ணன் மக்களுக்காக அருளிச் செய்தார் என்பது ஆன்மீக வாதிகள் கொண்டிருக்கும் ஒரு நம்பிக்கை. இவ்வாறாக பகவத்கீதை என்பதே எழுநூறு வசனங்களில் கொடுக்கப்பட்ட உபநிஷத்துகளின் சுருக்கமான சாரம் என்ற நிலை இருக்கையில், அந்த சாரத்திற்கும் சாரம் என்று கீழ்க்காணும்;

"எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது
எது நடக்க இருக்கிறதோ, அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையதை எதை இழந்தாய்,
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய் அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருந்தாய், அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடையதாகிறது
மற்றொருநாள், அது வேறொருவருடையதாகும்.
இதுவே உலக நியதியும் எனது படைப்பின் சாராம்சமாகும்."

பதினைந்து வரிகள் கொண்ட சொற்றொடர்கள் மிகப் பரவலாக அறியப்படுகின்றன.

அப்துல் கலாம் அவர்கள் குடியரசுத் தலைவராக வேட்புமனு தாக்கல் செய்ததும் ஊடகவியலாளர்களுக்கு அது குறித்து அவர் அளித்த செய்தியில்;

"எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது

எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கிறது"

என்று தமது சமயச்சார்பற்ற உள்ளத்தை வெளிப்படுத்தினார்.



கீதையின் சுருக்கமாக கீதையின் இறுதியில் இரண்டே வசனங்களில் கண்ணனே கூறும் சாரத்திற்கும், கீதாசாரம் என அறியப்படும் இந்த 15 வரி சொற்றொடர்களுக்கும் எந்த ஒரு தொடர்பும் இல்லை என்றும்; பகவத்கீதையை முழுமையாகப் படித்தவர்கள், கீதாசாரம் சுவரொட்டியில் இருக்கும் வரிகள், கீதையில் எங்கே உள்ளன என்று தேடிப் பார்த்தால், அவை அங்கு இல்லை என்பதை உணரலாம். கீதாசாரத்தில் உள்ள கருத்துகளைக் கீதையிலிருந்து மறைமுகமாகக் கொண்டு வரலாம்; ஆனால் அவை கீதையின் நேரடி வாக்கியங்கள் அல்ல, கீதையின் சாரமும் அல்ல. இந்த கீதாசாரத்தை எழுதியவர் யார் என்பது யாருக்கும் தெரியாது என்கிறார் ஸ்ரீ கிரிதாரி தாஸ் (https://www.facebook.com/profile.php?id=100005426808787). மேலும் அவர்,

கீதாசாரத்தின் இந்த அழகிய வரிகளை ஒரு நல்ல கவிதையாக ஏற்றுக்கொள்ளலாம்; ஆனால் கீதாசாரமாக ஏற்க முடியாது. இதிலுள்ள கருத்துகள் கீதையின் சாரமும் அல்ல, கீதையின் தத்துவத்திற்கு ஒத்துவரக்கூடியவையும் அல்ல, கீதாசாரம் சுவரொட்டியில் உள்ள முதல் கருத்து, கீதைக்கு முற்றிலும் முரணானது என்பதில் துளியும் சந்தேகமும் இல்லை. என்கிறார்.

அனைத்தும் நன்மைக்கே என்பதைக் கீதையில் காண இயலாது.

"இவ்வுலகம் துன்பம் நிறைந்தது, தற்காலிகமானது." (பகவத்கீதை: 8.15) என்கிறது கீதை.

இவை ஒன்றுக்கு ஒன்று முரண் படும் கருத்துகள்.

தொடர்ந்து வரும் மற்ற வரிகளும் கீதை சொல்லும் பூர்வ ஜன்ம கர்ம வினைப்பயன் கருத்துக்கு மாறான கருத்துகளாகவே அமைந்துள்ளன என்கிறார் ஸ்ரீ கிரிதாரி தாஸ். அதாவது, புண்ணியம் செய்தோர் நற்பலன்களையும், பாவம் செய்தோர் துன்பத்தையும் அனுபவிக்க வேண்டும், இவ்வுலகிலுள்ள அனைத்தும் ஒவ்வொருவரின் கர்ம வினைப்படியே நடக்கின்றது என்பது கண்ணன் கீதையில் கூறும் தத்துவம். இவ்வுலகில் வாழும் அனைத்து உயிர்களும் கண்ணனைச் சரணடைய வேண்டும் என்பதே உண்மையான கீதாசாரம். என்பது இவர் வைக்கும் கருத்தாகும்.

திருவண்ணாமலை முனிவர் பகவான் ரமண மகரிஷி அவர்கள் பகவத்கீதையின் 700 வசனங்களில் 42 வசனங்களைத் தேர்ந்தெடுத்து, முழு கீதையின் சாரத்தையும் கீதாசாரம் என்று வழங்கியுள்ளார்.

கண்ணனின் கூற்றாகக் கீதை சாரத்தைக் கவிஞர் கண்ணதாசன் அவர்களும் மிகச் சுருக்கமாக கர்ணன் திரைப்படப் பாடலில் தந்துள்ளார்:

"மரணத்தை எண்ணிக் கலங்கிடும் விஜயா, மரணத்தின் தன்மை சொல்வேன்

மானிடர் ஆன்மா மரணமெய்தாது மறுபடிப் பிறந்திருக்கும்

மேனியைக் கொல்வாய் மேனியைக் கொல்வாய் வீரத்தில் அதுவும் ஒன்று

நீ விட்டுவிட்டாலும் அவர்களின் மேனி வெந்துதான் தீரும் ஓர்நாள்

என்னை அறிந்தாய் எல்லா உயிரும் எனதென்றும் அறிந்து கொண்டாய்

கண்ணன் மனது கல்மனதென்றோ காண்டீபம் நழுவவிட்டாய், காண்டீபம் நழுவ விட்டாய்

மன்னரும் நானே மக்களும் நானே மரம் செடி கொடியும் நானே

சொன்னவன் கண்ணன் சொல்பவன் கண்ணன் துணிந்து நில் தர்மம் வாழ

புண்ணியம் இதுவென்றிவ் வுலகம் சொன்னால் அந்தப் புண்ணியம் கண்ணனுக்கே

போற்றுவார் போற்றலும் தூற்றுவார் தூற்றலும் போகட்டும் கண்ணனுக்கே

கண்ணனே காட்டினான் கண்ணனே சாற்றினான் கண்ணனே கொலை செய்கின்றான்

காண்டீபம் எழுக நின் கைவன்மை எழுக இக்களமெலாம் சிவக்க வாழ்க!

பரித்ராணாய சாதூனாம் விநாசாய சதுஷ்க்ருதாம்

தர்ம சம்ஸ்தாபனார்த்தாய சம்பவாமி யுகே

[நல்லவர்களைக் காக்கவும், தீயவர்களை அழிக்கவும்,

தர்மத்தை நிலைநாட்டவும் நான் யுகந்தோறும் அவதரிக்கிறேன்]

கண்ணதாசன் (கர்ணன் - 1964)

கீதாசார சுவரொட்டியில் உள்ளவை பாபர் மசூதி இடிப்புக்குப்பின் அதை நியாயப்படுத்த ஆர் எஸ் எஸ்ஸால் பரப்பப்பட்ட வரிகள். ஆர் எஸ் எஸ்ஸால் உருவாக்கப்பட்ட எல்லா கோவில்களிலும் இவ்வரிகள் கீதாசாரம் என்ற பெயரில் எழுதப்பட்டிருப்பதாகவும் கருத்தொன்று மக்களிடையே இருப்பது தெரிகிறது.

சான்றாதாரம்:

1. கீதாசாரம் போஸ்டரும் கீதாசாரமும். ஸ்ரீ கிரிதாரி தாஸ். ஞான வாள். டிசம்பர் , 2012. https://tamilbtg.com/whatever-happened-it-happened-well-is-this-gitacharam/

2. கீதாசாரம் போஸ்டரும் கீதாசாரமும். ஸ்ரீ கிரிதாரி தாஸ். ஞான வாள். ஜனவரி 3, 2013

https://tamilbtg.com/what-is-real-gita-charam/

3. கீதாச்சாரம் யாரால் உருவானது?

https://ta.quora.com/கீதாச்சாரம்-யாரால்

4. ரமண மகரிஷி வழங்கிய பகவத் கீதை சாரம் - 42 வசனங்கள்

https://www.facebook.com/watch/?v=4881951441837476

இனிய
தீபாவளி
நல்வாழ்த்துக்கள்

சமணர்களுக்குரிய தீபாவளி

முனைவர் தேமொழி
சான் பிரான்சிஸ்கோ

"தீமையை அழித்து நன்மை வெற்றி கொண்ட நாளை இந்தியர்கள் தீபாவளி பண்டிகையாக விளக்கேற்றிக் கொண்டாடுவார்கள்" என்ற ஒரு புரிதல் பன்னாட்டு அரங்கில், பரவலாக உள்ளது. உண்மையில் தீபாவளி சமணர்களின் பண்டிகை. தீபாவளி என்பது வாழ்ந்து மறைந்த சமண தீர்த்தங்கரர் மகாவீரரின் மறைவு நாளையொட்டி அவர் அளித்த அறிவொளியைப் பரப்பும் நாளாகச் சமணர்கள் தொன்று தொட்டுக் கொண்டாடுகின்றனர் என்ற 'வரலாற்று அடிப்படை' உள்ளதாக வரலாற்று ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். சரவிளக்குகளும், கார்கால மாதமும், முன்னோர் வழிபாடு ஆகிய மூன்றையும் அடிப்படையாகக் கொண்டது இந்த விளக்கேற்றும் பண்டிகை.

வாழ்வாங்கு வாழ்ந்து, மக்களின் நலனுக்காக அவர்களை நல்வழிப்படுத்தத் தனது இறுதிநாள் வரை அறிவுரைகள் கூறிய சமண சமயத்தின் 24ஆவது மற்றும் கடைசி தீர்த்தங்கரரான வர்த்தமான மகாவீரர் வீடுபேறு பெற்ற தினத்தை விளக்கேற்றி வைத்து, அவரது அறிவுரையின் ஒளி தொடர்ந்து மக்களின் அறியாமை இருளை நீக்கி அவர்களை வழிப்படுத்த வேண்டும் என்ற நோக்கில் சமணர்கள் வழிபடு நாளாகக் கருதிய நாள்தான் தீபாவளி நன்னாள் என்பது இவர்கள் முடிவு (சமணமும் தமிழும், பக்கம்: 79-80, கல்வெட்டாராய்ச்சி அறிஞர் மயிலை சீனி. வேங்கடசாமி).

முற்றும் துறந்த துறவியான தீர்த்தங்கரர் மகாவீரர் அறவுரை ஆற்றிட பல இடங்களுக்கு எழுந்தருளுவார். இதை 'ஶ்ரீ விஹாரம்' என்பர். சமண தீர்த்தங்கரர்கள் முற்றுமுணர்ந்த நிலையை அடைந்த பிறகு அவர்கள் எல்லாவுயிர்களுக்கும் அற வாழ்க்கையைப் பற்றிப் போதிக்கும் இடம் சமவசரணம் எனப்படும். 'சமவசரணம்' என்ற அறவுரை நிலையங்களில் மகாவீரர் எழுந்தருளி அறவுரை ஆற்றி மக்களை வழி நடத்துவார். அதன் மையப்பகுதியில் அரியணை, முக்குடை முதலான சிறப்புகளோடு கூடிய இடத்தில் இருந்து அறவுரை வழங்குவார். மகாவீரர் தன் இறுதி நாளில் (அக்டோபர் 15, 527 பொ.ஆ.மு) பாவாபுரி நகரின் சமவசரணமத்தில் அறவுரை ஆற்றினார்.

தனது ஆயுள் விரைவில் முடியும் என்று அறிந்து அறவுரை நிலையத்தை விட்டு அகன்றார். பாவாபுரியில் மிகவும் அழகான பெரிய தாமரைக் குளம் ஒன்று இருக்கின்றது (அத் தாமரைக் குளம் இன்றும் உள்ளது). அக்குளத்தின் நடுவில் உள்ள அகன்ற கற்பாறையின் மீது நின்ற நிலையில் மகாவீரர் இரு நாட்கள் ஆழ்ந்த தியானத்தில் இருந்தார் (தற்போது அப் பாறையின் மீது ஆலயத்தை

உருவாக்கி மகாவீரரின் திருவடிகளை வைத்து வழிபாடு நடை பெறுகிறது). மன்னன் மற்றும் மக்கள் பகற்பொழுதில் வந்து வணங்கி வழிபட்டுச் சென்றனர். மகாவீரர் வாழ்க்கையின் இறுதிநாள் பின்னிரவில் அவருடைய ஆயுள் முடிவுற்ற இடம் பாவாபுரி தாமரைக்குளக் கற்பாறை. அவர் அன்று ஆன்ம விடுதலை பெற்று 'பரிநிர்வாணம்' என்ற பிறவாநிலையை எய்தினார் என்பது சமண நூல்கள் தரும் செய்தி. மறுநாள் காலையில் மக்கள் வழக்கமாக மகாவீரரை வழிபட வந்தபோது அவர் பரிநிர்வாணம் அடைந்துவிட்டதை அறிந்த மக்கள் எளிதில் பெற இயலா ஆன்ம விடுதலை என்னும் பிறவாநிலையை எய்திய மகாவீரர் உலக உயிர்களுக்கு அறிவொளியை வழங்கியதை எண்ணி அவர் நினைவாக அனைவருடைய இல்லங்களிலும் வரிசையாகப் பல விளக்குகளை ஏற்றி மகாவீரரை தம் மனதில் இருத்தி வழிபட்டனர். இதுவே நாடெங்கும் தீபாவளி விழாவாக இந்நாள்வரை ஒளிர்கிறது. மகாவீரர் மறைந்தாலும், அவரது ஆன்மிக ஞானம் உலகின் இருளை நீக்கி ஒளியேற்றுகிறது என்பதை விளக்குவதற்காகத் தீபங்கள் ஏற்றப்படுகின்றன. மகாவீரர் மறைந்தது அதிகாலை என்பதால் அந்நேரத்தில் வழிபடுதல் மரபு என்பது சமணம் கூறும் வரலாறு. ஆகவே தீபாவளி வழக்கில் வந்தது மகாவீரர் மறைந்த பொ. ஆ. மு. 600 இல்.

மகாவீரர் பரிநிர்வாணம் அடைந்த ஆண்டிலிருந்தே சமணர்களிடம் தீபாவளிப் பண்டிகை ஓர் அறிவொளி நாளாக விளக்கேற்றும் முறை வழக்கத்தில் இருப்பதாகக் கூறப்பட்டாலும், 'தீபாவளி' என்ற சொல் முதன் முதலில் எழுத்து வடிவில் கிடைப்பது சமண நூலான ஹரிவம்ச புராணத்தில்தான். சற்றொப்ப 12 நூற்றாண்டுகளுக்கு முன்னர், கிபி 783-இல் சமஸ்கிருத மொழியில் சமண சமய திகம்பர ஆச்சாரியர் ஜினசேனர் (*Acharya Jinasena*) இயற்றிய நூல் 'ஹரிவம்ச புராணம்'(*Harivamsa Purana*) ஆகும்.

ததஸ்துஹ் லோகஹ் ப்ரதிவர்ஷம்-ஆதரத்
ப்ரஸித்த-தீபலிகய-ஆத்ர பரதே .
ஸமுத்யதஹ் பூஜயிதும் ஜினேஷ்வரம்
ஜினேந்த்ர-நிர்வாண விபுதி-பக்திபக்

என்ற வரிகளில் மகாவீரர் மறைந்த நாளில் பாவாபுரியில் 'திபாலிகாயா' (dipalikaya) என விளக்குகள் ஏற்றப்பட்டதாக ஆச்சாரியர் ஜினசேனர் என்பவர் தான் எழுதிய ஹரிவம்ச புராணம் நூலில் குறிப்பிடுகிறார். இந்த நூலில்தான் சமணர்கள் தீபாவளி கொண்டாடியதாக 'தீவாளி' அல்லது 'தீபாவளி' என்ற சொல் முதன் முதலாக இடம் பெறுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. தீபாவளி என்ற குறிப்பு முதல் இலக்கியத் தடயமாகச் சமண சமயத்திற்கு எட்டாம் நூற்றாண்டிலேயே கிடைக்கிறது. தீபம் = விளக்கு; ஆவலி = வரிசை; தீப + ஆவலி = தீபாவலி; வரிசையாக ஒளிவிளக்கேற்றும் தீபாவலி விழா பின்னர் தீபாவளி என்று திரிந்தது என்று விளக்கப்படுகிறது. வைதீகர் கொண்டாடும் தீபாவளி பண்டிகைக்குக் கிடைக்கும் சான்றுகள் மிகப் பிற்காலத்தவை. அதன் தீபாவளி கொண்டாடப் படுவதற்கான புரணக்கதைகளும் இயற்கைக்கு மாறான புனையப்பட்ட கதைகள்.

சமண நாட்காட்டியின்படி, தீபாவளி அந்த ஆண்டின் கடைசி நாளாகக் கருதப்படுகிறது. இதற்கு அடுத்த நாள், சமணப் புத்தாண்டு தொடங்குகிறது. (மகாவீரர் ஆண்டு) மகாவீரர் நிர்வாணம் அடைந்த நாளில், அவரது தலைமை சீடரான கணாதர் கௌதம சுவாமிக்கு, முழு ஞானம் (கேவலஞானம்) கிடைத்ததும் தீபாவளியின்போது நினைவுகூரப்படுகிறது.

பொதுவாக சமணர் எனும் சொல் தமிழ்ச் சமணர்களைக் குறிக்கும். ஜைனம், ஆருகத மதம், அனேகாந்த மதம், ஸ்யாத்வாத மதம், நிகண்ட மதம் எனப் பலவாறாகச் சமணம் குறிப்பிடப் படுகிறது (சமணமும் தமிழும், பக்கம்: 1- , கல்வெட்டாராய்ச்சி அறிஞர் மயிலை சீனி. வேங்கடசாமி) தமிழகத்தில் வாழும் மார்வாரிகள், குஜராத்திகள் இன்றைய நாளிலும் தீபாவளி கொண்டாடுவதும், அந்நாளைப் புதுக்கணக்கு துவக்கும் நாளாகக் கடைப்பிடிப்பதும் தீபாவளியின் சமண சமயப் பின்னணியைக் காட்டி நிற்கின்றது. சமண சமயத்தார் பலவிதக் காரணங்களால் (விரும்பியோ/விரும்பாமலோ) இந்து மதத்தைத் தழுவ நேர்ந்த பொழுது, தங்களது மகாவீரர் மறைந்த நாளின் நினைவைப் போற்றும் வகையில் விளக்குகளை ஏற்றிக் கொண்டாடும் தீபாவளி பழக்கத்தைக் கைவிடாது தொடர்ந்தனர் (தமிழர் நாகரிகமும் பண்பாடும், பக்கம்: 33-34, டாக்டர் மா.இராசமாணிக்கனார்). பொதுவாக தமிழ்ச் சமணர் அனைவரும் திகம்பர சமணத்தைப் பின்பற்றுபவர்.

சமணர்களின் தீபாவளி கடைப்பிடிக்கப்படும் முறைகள் வைதீகர் கொண்டாடும் தீபாவளி நடைமுறை வழக்கத்திலிருந்து மாறுபட்டது. சமணர்களின் மிக முக்கியமான கொள்கையாக உயிர்களைத் துன்புறுத்தாமை (அகிம்சை) என்பதைக் கடைப்பிடிப்பதன் காரணமாக, பட்டாசுகள் வெடிப்பதால் பல உயிரினங்கள் துன்பத்திற்கு உள்ளாகும் என்பதால் தீபாவளியன்று அவர்கள் பட்டாசுகளை வெடிப்பதில்லை. மகாவீரரின் துறவற வாழ்க்கையை நினைவுகூரும் விதமாக சமணர்களில் சிலர் தீபாவளியன்று நோன்பு மேற்கொள்வதுண்டு.

பல சமணர்களில் சிலர் மகாவீரர் முக்தி பெற்ற பீகார் மாநிலத்திலுள்ள பாவாபுரிக்கு புனிதப்பயணம் மேற்கொண்டு அங்கு வழிபாடுகளில் பங்கேற்கின்றனர். அடிப்படை நோக்கமாக, மகாவீரரின் ஆன்மிக வெற்றியைக் கொண்டாடும் ஒரு புனிதமான, அமைதியான பண்டிகையாக ஆரவாரமின்றித் தீபாவளியைச் சமணர்கள் கொண்டாடுவர். வெவ்வேறு பகுதியில் வாழும் சமணர்களிடமும், சமண சமயப் பிரிவுகளிடையேயும், பண்டிகை வழக்கங்களில் வெவ்வேறு பாரம்பரிய முறைகளின் காரணமாகச் சிற்சில வேறுபாடுகளும் உண்டு.

சமணக் கோவில்களில் மகாவீரருக்கு, நிர்வாண லட்டு எனப்படும் ஓர் இனிப்பு வகை பிரசாதமாகப் படைக்கப்படுகிறது. இது தமிழ்ச் சமணர்களுக்கு வடக்கிலிருந்து இங்கு வந்தவர்களிடமிருந்து வந்த புது வரவு. மகாவீரர் முக்தியடைந்த நாளில் சமணர்கள் ஆலயத்தில் (ஜினாலயம்) மாவிளக்கேற்றி வழிபாடு இயற்றுவர். இதற்கென சிறப்பாகப் பச்சரிசியைக் கழுவி பதமாக உலர்த்தி இடித்து அந்த மாவைக்கொண்டு அகல்போன்ற விளக்கைச் செய்து, இதற்கென தனியே நெய்யைச் சேகரித்து வைக்கப்பட்ட தூய நெய்விட்டு விளக்கேற்றுவார். தற்போது மாவிளக்கு மற்றும் நிர்வாண லட்டு ஆகிய இரண்டும் வழிபாட்டில் இடம் பெறுகிறது.

மகாவீரரின் அறிவுரைகளை நினைவுகொள்ளும் விதமாக, வழிபாடுகளிலும், சிறப்புச் சொற்பொழிவுகளிலும் நிகழ்த்தப்படும்.

தமிழ்ச் சமணர்கள் தமிழகத்தின் ஜினாலயங்களில் (ஜினர் ஆலயம்) விடியற்காலையில் வரிசையாக அகல் விளக்குகளை ஏற்றி வழிபடுவர். மகாவீரர் வரலாற்றைப் படிப்பார்கள் (இருபத்து நான்கு தீர்த்தங்கரர்கள் வரலாற்றைக் கூறும் 'ஸ்ரீபுராணம்' எனும் நூலில் உள்ள மகாவீரர் வரலாறு படிக்கப் பெறும்). இதுமட்டுமின்றி சித்தபக்தி, பரிநிர்வாண பக்தி எனும் போற்றிப் பாடல்கள் (தோத்திரங்கள்) ஓதப்படும். பாவாபுரியில் உள்ள தாமரைக் குளம் போன்ற அமைப்பைச் சிறிய அளவில் அமைத்து அதில் மகாவீரர் திருவடிகளை வைத்து சில இடங்களில் வழிபடுவர். தமிழ்ச் சமணர்களும் ஆடவரும் மகளிரும் விரதம் ஏற்பர்.

மகாவீரர் முக்தி பெற்ற நிகழ்வு முதன்மையானது என்றாலும், மற்றும் சில சமண சமூகத்தினர் அவருடைய தலைமைச் சீடரான கௌதம சுவாமி, மகாவீரரின் மறைவுக்குப் பின் ஞானம் பெற்றதையும் முக்கியமாகக் கருதுகின்றனர். சுவேதாம்பர பிரிவு சமணர்கள், மகாவீரரின் இறுதித் தவத்தை நினைவுகூரும் வகையில், தீபாவளிக்கு முந்தைய மூன்று நாட்கள் நோன்பு இருப்பதுண்டு.

சுவேதாம்பர சமணர் ஆலயங்களில் "உத்தரத்யாயன சூத்திரம்" போன்ற புனித நூல்களிலிருந்து சில பகுதிகளைப் படிக்கின்றனர். சுவேதாம்பர பிரிவு ஜைனர்களால் மகாவீரரின் பிறப்பு வரலாற்றைச் சொல்லும் கல்பசூத்திரம் என்ற புனித நூல் இந்த நாட்களில் வாசிக்கப்படுகிறது. மேலும், தீபாவளிக்குப் பிறகு ஐந்தாவது நாளில், ஞானபஞ்சமி ("அறிவின் ஐந்தாவது") என்ற விழாவைக் கொண்டாடி, கோவில்களில் வழிபாடு நடத்துகின்றனர்.

குஜராத் மற்றும் இராஜஸ்தான் போன்ற மாநிலங்களில் உள்ள பல ஜைன (சமண) வணிகர்களுக்கு, தீபாவளி நிதி ஆண்டின் தொடக்கத்தைக் குறிக்கிறது. இவர்கள் புதிய கணக்குப் புத்தகங்களை வாங்கி, சோப்தா பூஜை எனப்படும்

சடங்குடன் தங்கள் வணிக நடவடிக்கைகளைத் தொடங்குவார்கள். சிலர் சதர்மிக் வாத்சல்யா போன்ற சமூக சமையல் நிகழ்வுகளை நடத்தி, அனைவரும் ஒன்றுகூடி உணவைப் பகிர்ந்துகொள்கிறார்கள்.

கொடை அளிப்பது, பரிவு ஆகியனவற்றுக்குத் தீபாவளி நாளில் முக்கியத்துவம் அளிக்கப் படுவதால் சமூக சேவையாக உள்ளூர் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து செயல்படுவது, ஆதரவற்ற முதி யவர்களுக்கு உணவளிப்பது (ஆகார தானம்), குழந்தைகளுக்கான கல்விக்கு உதவுவது (ஞான தானம்), நோயுற்றவர்களுக்கும், உடல் ஊனமுற்றவர்களுக்கும் இலவச மருந்துகள் அளிப்பது (ஔஷத தானம்), உயிர் வாழும் உயிரினங்களைக் காப்பது மற்றும் ஆபத்தில் உள்ளவர்களுக்குப் பாதுகாப்பு வழங்குவது (அபய தானம்) போன்ற சமூக சேவைகளில் ஈடுபடுவதும் உண்டு. உறுப்பு தானத்தின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கும் கலைப் போட்டிகள் மற்றும் நிகழ்ச்சிகளில் சமண சமூகத்தினர் பங்கேற்று, உயிர்களைக் காப்பதற்கான உறுப்பு தானத்தின் தேவையை வலியுறுத்துகிறார்கள். தன்னலமற்ற தொண்டு செய்வதற்காகவும், சமூக மேம்பாட்டிற்காகவும் நேரத்தையும், திறன்களையும் தானாக முன்வந்து செலவிடுவது ஒரு சிறந்த அறச் செயலாகக் கருதப்படுகிறது. இறுதியாக, சமணர்களுக்குத் தீபாவளி என்பது வெளிச்சத்தின் திருவிழா மட்டுமல்ல, ஆன்மாவின் விடுதலைக்கான பாதையை ஒளிரச் செய்யும் ஆன்மிகப் பயணத்தின் ஒரு குறியீடு ஆகும்.

இந்தியத் துணைக்கண்டத்தின் சமண சமயத்தில் துவங்கி, இன்று அப்பகுதியில் வாழும் சமணர், இந்துமதத்தின் பல உட்பிரிவினரும், பௌத்தரும், சீக்கியரும் என்று பற்பல சமயப்பின்னணி கொண்டவரும் குளிர் காலத் துவக்கத்தில் விளக்கேற்றிக் கொண்டாட விரும்பும் ஒரு பண்டிகையாகத் தீபாவளி சமய எல்லைகளைக் கடந்த விழாவாக மாறிவிட்டிருக்கிறது. உலகில் பல்வேறு நாடுகளில் குடிபெயர்ந்து வாழும் இந்தியர்களின் பலதலைமுறையினரும் கொண்டாட, இன்று உலகில் பலநாடுகளில் கொண்டாடும் நிலையை எட்டி 'இந்தியப் பண்டிகை என்றால் அது தீபாவளி' என்ற பொதுத்தன்மையையும் அடைந்துவிட்டது.

வள்ளுவர் குறள் - ஆத்திசூடி முறையில்

தேமொழி - நூல(றி)வுமுகம்

முனைவர் மு. முத்துவேலு

முதல் பதிவாளர்
செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
சென்னை

தமிழ் மரபு அறக்கட்டளை என்னும் பன்னாட்டு அமைப்பின் வெள்ளிவிழா சிறப்பு வெளியீடுகளில் ஒன்றாக வெளிவந்துள்ளது "வள்ளுவர் குறள் ஆத்திசூடி முறையில்" என்னும் நூலாகும்.

நூலைத் தொகுத்தவர் பைந்தமிழ் ஆய்வறிஞர் தேமொழி அவர்கள்.

ஆத்திசூடி என்பது தமிழ் அற நூல்கள் மரபில் ஒரு புதிய யாப்பு வடிவத்தில் அமைந்திருப்பதாகும்.

இது, அறக்கருத்துக்களைக் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரது உள்ளத்திலும் ஆழமாகப் பதிவு செய்வதற்கு ஏற்ற வடிவமாக அமைந்துள்ளது.

எனவே ஆத்திசூடி வடிவத்தை ஔவைக்குப் பின் பாரதியும் அதற்குப் பின்னர் பாரதிதாசனும் இன்னும் தமிழ் இலக்கிய வரலாற்றில் பல புலவர் மக்களும் தாங்கள் கூற வந்த கருத்துக்களை அழுத்தமாக சொல்ல வேண்டும் என்பதற்கு ஏற்ற வடிவமான ஆத்திசூடியைப் பயன்படுத்தி வருகிறார்கள்.

அந்த வகையில் ஆய்வறிஞர் தேன்மொழி அவர்கள் திருக்குறளை ஆத்திசூடி முறையில் தொகுத்துள்ளார்.

தமிழின் நெடுங்கணக்கு அகர வரிசைப்படிச் செய்திகளை வரிசைப்படுத்திக் கூறுகிற ஆத்திசூடி முறையினுக்கு ஏற்ப

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றே உலகு"

எனத் தொடங்கும் முதல் குறளில் இவரும் தொடங்கியுள்ளார்.

"வேண்டாமை அன்ன விழுச்செல்வம் ஈண்டில்லை
ஆண்டும் அஃதொப்பது இல்"

என்னும் அவா அறுத்தல் அதிகாரத்தில் வரும் 363-ஆம் குறளோடு இதனை நிறைவு செய்துள்ளார்.

முனைவர் தேமொழி

சான் பிரான்சிஸ்கோ.

எழுவது திருக்குறள்களைக் தேர்ந்தெடுத்துக் கொண்டு அமைத்துள்ளார். இந்த நூலில் கடவுள் வாழ்த்து, கல்வி, காலம் அறிதல்,அவாஅறுத்தல், புகழ், பெருமை, வாய்மை முதலிய அதிகாரங்களில் இருந்து இரண்டு குறட்பாக்களைத் தேர்ந்தெடுத்துள்ளார். ஏனைய 54 அதிகாரங்களில் இருந்து ஒரு குறள் என்ற விதத்தில் தேர்ந்தெடுத்து மொத்தம் எழுவது குறட்பாக்கள் இடம்பெற்றுள்ளன.

குறள் குறித்தும் வள்ளுவர் குறித்தும் சில சிறப்புச் செய்திகள் இடம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

திருக்குறள் பற்றிச் சில ஆராய்ச்சிச் செய்திகளை ஆய்வறிஞர் தொகுத்து வழங்கியிருப்பது மிகுந்த பயன்பாட்டுக்கு உரியதாகும்.

நூலில் ஆத்திசூடி என்பதற்கான இலக்கணத்தை அருமையாக எடுத்துரைப்பதும் மாணவர்களின் நலன் கருதி அமைந்தது எனலாம்.அறிவுரைகளை எடுத்துச் சொல்லுகிற பொழுது உடன்பாடாகவும் எதிர்மறையாகவும் அமைத்துச் சொல்லுகிறார். ஔவையின் ஆத்திசூடியில் இருந்து சில எடுத்துக்காட்டுகளையும் சுட்டிக்காட்டி இருக்கிறார்.

திருக்குறளில் இருந்து ஆத்திச்சூடி முறையில் செய்திகளைத் தொகுத்து தந்தவர்களைப் பட்டியலிடும்போது முனைவர் சேயோன் அவர்கள் 2001 இல் தொகுத்தளித்த திருவள்ளுவர் ஆத்திசூடியையும் குறிப்பிட்டு இருப்பது ஆய்வாளரின் ஆழ்ந்த புலமையையும் நேர்மையையும் உண்மைத் தன்மையையும் வெளிப்படுத்துகிறது.

அகரவரிசையில் திருக்குறளைத் தேர்ந்தெடுத்து அடுக்கித் தருகிற பணியை மட்டும் செய்யாமல்,

அந்தக் குறள்களுக்கு எளிய முறையில் உரையையும் வழங்கி உள்ளார்.

ஆய்வறிஞர் தேமொழி அவர்களின் எளிய உரைக்கு இரண்டு எடுத்துக்காட்டுகளைக் காணலாம்.

முயற்சித் திருவினை யாக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்

ஆல்வினை உடைமை குறள் 616

இந்தக் குறளுக்கு ஆசிரியரின் உரை பின்வருமாறு அமைகிறது.

"முயற்சி செய்தால் ஒருவர்க்குச் செல்வம் பெருகும். முயற்சி இல்லாவிட்டால் அவருக்கு வறுமையை வந்து சேரும் "

இரண்டாவதாக

பொய்மையும் வாய்மை இடத்த புரை தீர்ந்த
நன்மை பயக்கும் எனின்

வாய்மை அதிகாரம் குறள் 292

இதற்கான தேமொழியாரின் உரை :

பொய்யினால் நல்ல நன்மை ஏற்படக்கூடுமானால் அப்பொய்யையும் மெய்யாக ஏற்கலாம்.

இந்த வகையில் ஒவ்வொரு குறளுக்கும் எளிய எளிய உரை அமைத்திருப்பது சிறப்பாகும்.

இந்த உரைகளைக் காணும் பொழுது தேமொழியார் திருக்குறள் முழுவதற்கும் இது போன்ற எளியதோர் உரையை எழுத வேண்டும் என்பது என்னுடைய வேண்டுகோள் ஆகும்.

முனைவர் க.சுபாஷினி அவர்கள் தம் பதிப்புரையில், " பள்ளி மாணவர்களுக்கும் பொதுமக்களுக்கும் எளிய முறையில் சில குறட்பாக்களைப் பிழையின்றிக் கற்றுக் கொள்வதற்கு இது சிறந்த முறை மட்டுமல்ல எளிமையானதும் கூட" என்று கூறியிருப்பது முற்றிலும் பொருத்தம் உடையதாகும்.

ஆய்வறிஞர் தேமொழியார் தம் எளிய உரையின்மூலம் படிப்பவர்களை திருக்குறளுக்குள் கைப்பிடித்து அழைத்துச் செல்கிறார்.எல்லோரும் திருக்குறளைக் கற்க இந்நூல் கைவிளக்காகத் துணை செய்யும் என்று நம்புகிறேன்.

சிலப்பதிகாரம்
மணிமேகலை
வளையாபதி

சித்தன்னவாசல் குகைக்கோயில் "அரசன் அரசி ஓவியம்"

முனைவர் தேமொழி
சான் ஃபிரான்சிஸ்கோ

சிம்மவிஷ்ணுவின் மகனான முதலாம் மகேந்திரவர்மன் புதுக்கோட்டைச் சீமையில் உள்ள சித்தன்னவாசலில் குகைக் கோயில் அமைத்துள்ளான். அவன் தமிழ்நாட்டின் எப்பகுதியை யாயவது பிடித்தான் என்பதற்குச் சான்றில்லை. அவன் காலத்தில் தென்னாட்டில் போரே இல்லை. ஆதலின் புதுக்கோட்டை வரையுள்ள சோழநாட்டைச் சிம்ம விஷ்ணுவே வென்று அடிப் படுத்தினவன் ஆவான். மகேந்திரவர்மன் காலத்துச் சித்தன்னவாசல் ஓவியங்கள் இரண்டிலிருந்து கி.பி. 7ஆம் நூற்றாண்டில் பல்லவ நாட்டில் இருந்த நடனக்கலையை நன்குணரலாம். சித்தன்னவாசல் குகைக்கோயிலின் முகமண்டபமான ஒரு சிறிய தாழ்வாரத்தையும் அதன்பின் சதுரவடிவில் அமைந்துள்ள உள்ளறையையும் கொண்டதே இக் கோவில். இங்குக் காணத்தக்கவை நான்கு ஆகும். அவை: (1) உருவச்சிலைகள். (2) நடனமாதர் ஓவியங்கள், (3) அரசன் அரசி ஓவியங்கள், (4) கூரையிலும் தூண்களிலும் உள்ள ஓவியங்கள் என்பன. வலப்புறத் தூணின் உட்புறத்தில் ஓர் அரசன் தலையும் அவன் மனைவி தலையும் தீட்டப்பட்டுள்ளன. அரசன் கழுத்தில் மணிமாலைகள் காணப்படுகின்றன. காதுகளில் குண்டலங்கள் இலங்குகின்றன. தலையில் மணி மகுடம் காணப்படுகிறது. பெருந்தன்மையும் பெருந்தோற்றமும் கொண்ட அந்த முகம் ஆதிவராகர் கோவிலில் உள்ள மகேந்திரவர்மன் முகத்தையே பெரிதும் ஒத்துள்ளது. ஆதலின், அவ்வுருவம் மகேந்திரவர்மனதே என்று அறிஞர் முடிவு கொண்டனர். அவனுக்கு அண்மையில் உள்ளது அரசியின் முகம் ஆகும். அந்த அரசியின் கூந்தலும் தலைமீதுதான் அழகுடன் முடியப்பட்டுள்ளது; என்று இவ்வாறாகத் தமிழ் அறிஞரும் வரலாற்று ஆய்வாளரும் ஆன டாக்டர். மா. இராசமாணிக்கனார் அவர் எழுதிய "பல்லவர் வரலாறு" நூலில் குறிப்பிடுகிறார்.

ஆய்வுப் பேரறிஞர் மயிலை சீனி வேங்கடசாமி அவர்கள் எழுதிய "மகேந்திரவர்மன்" (1955) என்ற நூலில் இடம் பெற்றுள்ள "ஓவியங்கள்" என்ற கட்டுரையில் சித்தன்னவாசல் குகைக் கோயிலின் "அரசன் அரசி" ஓவியம் குறித்து கீழ் வருமாறு குறிப்பிடுகிறார்: *மகேந்திரவர்ம பல்லவன் காலத்துச் சித்திரங்கள்*

பெரும்பாலும் மறைந்துவிட்டன. நற்காலமாக இப்போது கிடைத்திருப்பவை, காலப்பழமையினால் வண்ணங்கள் மங்கிப்போய் அரைகுறையாக அழிந்துபட்ட நிலையில் சித்தன்னவாசல் குகைக்கோயிலில் காணப்படுகிற ஓவியங்களே. சித்தன்னவாசல் குகைக் கோயிலில், மகேந்திரவர்மன் காலத்தில் அமைக்கப்பட்ட சமணக்கோயில் ஆகும். அங்குக் காணப்படுகிற சுவர் ஓவியங்கள் முக்கியமாக நான்கு. அவற்றில் முதலாவது, அரசன் அரசி ஆகிய இருவரின் ஓவியங்கள். இவை மார்பளவு வரையில் காணப்படுகின்றன. கிரீடங்களுடன் காணப்படும் இவை ஓர் அரசன் அரசியின் ஓவியங்களைக் குறிக்கின்றன. உண்மையில் இந்த ஓவியம் மகேந்திரவர்மனையும் அவனுடைய பட்டத்தரசியையும் குறிக்கிறது என்பதில் ஐயமில்லை; என்கிறார் மயிலை சீனி வேங்கடசாமி.

செய்யறிவு உதவியுடன் உருவாக்கப்பட்ட சித்தன்னவாசல் குகைக்கோயில்

"அரசன் அரசி ஓவியம்"

சித்தன்னவாசல் குடைவரைக்கோயிலின் ஓவியங்கள் :

சித்தன்னவாசல் குடைவரைக்கோயிலின் ஓவியங்கள் பல்லவர் காலத்து ஓவியம் என்று இதன் கலைப் பண்பின் செழுமையையும் இதில் காணும் பல்லவர் பாணியின் தாக்கத்தினையும் கண்டு அக்கால வரலாற்று ஆய்வாளர் பலரும் எண்ணி இருந்தனர். மகேந்திர பல்லவன் கல்வெட்டுகள் திருச்சி மாவட்டத்தில் காவிரிக் கரையோடு நின்றுவிடுகின்றன என்பதாலும், மகேந்திர வர்மனின் கல்வெட்டு என்று உறுதியாகக் கூறும் கல்வெட்டுகள் காவிரிக்குத் தெற்கே இல்லை என்பதாலும் மகேந்திர வர்மன் ஆட்சியில் இல்லாத புதுக்கோட்டை மாவட்டத்துச் சித்தன்னவாசல் குடைவரைக் கோயிலை மகேந்திர வர்மன் காலத்தது என்று கருதுவது பொருத்தம் அற்றது என்பது இக்காலத்து வரலாற்று ஆய்வாளர்கள் கருத்து.

மேலும்; பாண்டிய மன்னன் ஸ்ரீமாற ஸ்ரீவல்லபன் ஆதரவுடன் மதுரை ஆசிரியரான இளங்கௌதமன் என்ற சமண முனிவர் சித்தன்னவாசல் அறிவர்

கோயிலின் அகமண்டபத்தைப் புதுப்பித்து முகமண்டபத்தை எடுத்ததாகக் குடைவரையில் பொறிக்கப் பட்ட பாடல் வடிவில் உள்ள கல்வெட்டு கூறுகிறது.

"திருத்திய பெரும்புகழ்த் தைவ தரிசனத்
தருந்தவ முனிவனைப் பொருட்செல்வன்
அறங்கிளர் நிலைமை இளங்கௌ தமனெனும்
வளங்கெழு திருநகர் மதிரை ஆசிரியன்
அவனேய் பார்முழுதாண்ட பஞ்சவர் குலமுத
லார்கெழு வைவேல் அவநீப சேகரன்
சீர்கெழு செங்கோல் சிரீவல்லவன்
என்றிப் பலவுங் குறிகொள் இனிதவை ....
பண்ணவர் கோயில் பாங்குறச் செய்வித்து
அண்ணல்வாஇ லறிவர் கோஇன்
முன்னால் மண்டகம் கல்லால் இயற்றி ....
அழியா வகையாற் கண்டனனே ....
சீர்மதிரை ஆசிரியனண்ண லகமண்டகம்
புதுக்கி ஆங்கறிவர்கோயில் முகமண்டக
மெடுத்தான் முன்"

இக்கல்வெட்டுச் செய்தியின் அடிப்படையில், சித்தன்னவாசலிலுள்ள ஓவியங்கள் கி.பி.ஒன்பதாம் நூற்றாண்டு மன்னரான அவனி சேகரன் என்ற பாண்டியன் ஸ்ரீமாற ஸ்ரீவல்லபன் (கி.பி.815 - கி.பி.860) காலத்தவை என்று கருதப்படுகிறது. இவை வெண்சுதையின் மீது பொருத்தமான மூலிகை வண்ணங்கள் கொண்டு வரையப் பட்ட பாண்டியர் காலத்து ஓவியங்களாகும். முகமண்டபத்துத் தூணில் எட்டுப் பட்டைக் கொண்ட இடைப்பகுதியில் உட்புறத்தில் கிரீட மகுடத்துடன் அரசனினும் அவனது அரசியும் சமணத் துறவி ஒருவருடன் காட்சியளிக்கின்றனர். இவர்களில் சமணத் துறவி இவ்வோவியங்கள் உருவாவதற்கும் குடைவரை புதுப்பிக்கப் படுவதற்கும் காரணமாக இருந்த இளங்கௌதமனாக இருக்க வேண்டும் என்றும், அரசன் அரசியின் உருவங்கள் சமண முனிவர்க்கு ஆதரவளித்த பாண்டியன் ஸ்ரீமாற ஸ்ரீவல்லபன் மற்றும் அவனது தேவியின் உருவங்களாக இருக்க வேண்டும் என்றும் கருதப்படுகிறது.

அடிக்குறிப்புகள்:

https://www.tamilvu.org/courses/diploma/d061/d0612/html/d0612663.htm

https://tamildigitallibrary.in/Articles/வரலாற்றுச்%20சின்னம்-86-சித்தன்னவாசல்%20குடைவரை-சித்தன்னவாசல்%20மலை

தமிழணங்கு பன்மொழி ஆய்விதழ்

தமிழணங்கு இலக்கிய விருதுகள் 2025

19–08–2025

முனைவர் தேமொழி

அவர்களுக்கு

தமிழணங்கு இயற்றமிழறிஞர் விருது

வழங்கிச் சிறப்பிக்கின்றோம்.

வழக்கறிஞர் இ. சதீஷ் ராஜ்குமார்
இதழ் வெளியீட்டாளர்

பொறிஞர் கவிஞர் முத்தமிழ் விரும்பி
சிறப்பாசிரியர்

முனைவர் திருமதி செ. ராஜேஸ்வரி
நிறுவனர் & ஆசிரியர்

தமிழணங்கு இயற்றமிழறிஞர் விருதுகள்

விருதாளர் பட்டியல்

1.முனைவர் தேமொழி - 25 கட்டுரை

இவர் திருச்சியை சேர்ந்தவர்.

ஹோலிகிராஸ் மாணவியாக விலங்கியல் பாடத்தில் பி.எஸ்.சி., எம்.எஸ்.சி., எம்.ஃபில். பட்டங்கள் பெற்று கடந்த 38 ஆண்டுகளாக அமெரிக்காவில் வாழ்கிறார்.

அமெரிக்காவில் பொது நிர்வாகத்தில் (Public Administration & Public Policy)

முனைவர் பட்டம் பெற்று மாநில அரசு நிறுவனம் ஒன்றில் திட்ட ஆய்வாளராகப் பணிபுரிந்துள்ளார்.

தற்பொழுது ஆய்வாளராகவும் எழுத்தாளராகவும் இதழாளராகவும் செயலாற்றிக் கொண்டிருக்கின்றார். அறிவியல் தமிழ் மன்றம் ஆலோசகர் குழு உறுப்பினராகவும், தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பின் செயலாளராகப் பதவி வகிக்கின்றார்.

இதுவரை இவரது 22 நூல் படைப்புகள் வெளிவந்துள்ளன. கடந்த 15 ஆண்டுகளாகத் தொடர்ந்து சிறகு, கீற்று, திண்ணை, சொல்வனம், வல்லமை, திணை, தமிழணங்கு, சக்தி, உலகத்தமிழ் இதழ் போன்ற இணைய இதழ்களில் சிறுகதைகள், கவிதைகள், கட்டுரைகள், ஆய்வுக் கட்டுரைகள், நூல் மதிப்புரைகள், தமிழ் இலக்கியம், அறிவியல், பெரியாரியம், பெண்ணியம் பொருண்மைகளில் எழுதி வருகின்றார். இவருக்கு இணையத் தமிழ்ச்சுடர் என்ற பட்டம் அளிக்கப்பட்டுள்ளது.

சிறந்த கட்டுரை, சிறந்த நூல் மதிப்புரை, சிறந்த சிறுகதை போன்ற பரிசுகளைத் தமது படைப்புகளுக்காகப் பெற்றவர். 2024ஆம் ஆண்டு தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்கள் கலைஞர்கள் சங்கம் இவரது இலக்கிய மீளாய்வு என்ற நூலுக்கு மொழிவளர்ச்சிக்கு உதவும் நூல் பிரிவில் சிறந்த நூல் பரிசை வழங்கிப் பெருமை படுத்தியது.

தமிழணங்கில் வெளியான இவரது கட்டுரைகள்

- 18 ஆம் நூற்றாண்டின் இந்திய வரலாற்றுப் பதிவுகள்
- செய்க பொருளை
- ஆய்ச்சியர் குரவை
- தீபாவளி என்ற சொல் எப்பொழுது தோன்றியது?
- இந்தியாவின் முதலை இனங்கள்
- பெண்ணடிமை நிலை குறித்து பெரியாரின் பார்வை
- அண்ணல் அம்பேத்கர் எழுத்தும் பேச்சும்
- சிறு நல் வாழ்க்கை
- நிழலற்ற நாள்தான் ஆண்டின் தொடக்கமா?
- அறிஞர் அண்ணா எழுதிய “செவ்வாழை” - சிறுகதைத் திறனாய்வு
- ஆரை வேய்ந்த அறைவாய்ச் சகடம்
- என்றென்றும் பெரியார்!
- உணக்குதல்
- நெஞ்சில் இட்ட கோலங்களின் தொகுப்பு
- அடிமைப்படுத்தும் தளைகளை உடைத்தெறிய பெண்கள் உறுதி பூண வேண்டும்
- தொடராண்டு சுழற்சியாண்டுக் கணக்குகளின் நிறை குறைகள்

- இளங்கோவடிகளின் பார்வையில் பருவங்கள் தோறும் மதுரை மாநகர்.
- சுழற்சி ஆண்டு தொடர் ஆண்டு கணக்குகளில் நிறை குறை.
- இளங்கோவடிகளின் பார்வையில் பருவங்கள் தோறும் மதுரை மாநகர்.
- நச்சினிக்கிணியார் குறிப்பிடும் நிழலற்ற நாள்.
- தமிழ் இலக்கிய இலக்கண .நூல்களில் தமிழ் மாதங்கள்.
- ரிக் வேதம் கூறும் அகத்தியர்
- தென் திசையின் அகத்தியன்
- மனிதத்தின் பன்முகம்
- அக்ஷய திரிதியை

2 முனைவர் மு. முத்துவேலு

பிறந்த தேத 10-03-1961.

சென்னை இலயோலா கல்லூயில் தமிழ் இலக்கியத்தில் இளங்கலைப் பட்டம். இளங்கலையில் மூன்றாண்டுகளிலும் கல்லூரி முதல் மாணவர்; இளங்கலை. இளம் அறிவியல் பொதுத் தமிழில் கல்லூரி முதல் மாணவர். மங்களம் இலட்சுமி ரத்தினம் அம்மாள் பரிசு பெற்றவர்.

சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் தமிழ் இலக்கியத்தில் முதுகலைப் பட்டம், சென்னைப் பல்கலைக்கழத்தில் இரண்டாம் இடம் என்னும் சிறப்பு நிலை.

சென்னைச் சட்டக்கல்லூரியில் சட்டத்தில் இளங்கலைப் பட்டம்.

இதழியல் ஆட்சித்தமிழ் ஆகியவற்றில் சான்றிதழ்கள் பெற்றவர்.

‘சட்டத்தமிழ்’ என்னும் தலைப்பில் ஆய்வு செய்து சென்னைப் பல்கலைகழத்தில் முனைவர் பட்டம் பெற்ற முதல் ஆய்வாளர்.

வகித்த பதவிகள்:

தமிழ்நாடு மாநிலச் சட்ட ஆட்சி மொழியத்தில் பகுதி நேர உறுப்பினர்: (2019 முதல் 2023 சூன் வரை)

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவத்தின் முதல் பதிவாளர் (2011-ம் சூன் முதல் 2015 நவம்பர் வரை).

வேலூர், முத்துரங்கம் அரசு கலைக்கல்லூரி, சென்னை நந்தனம் அரசு ஆடவர் கலைக்கல்லூரி, சென்னை மாநிலக் கல்லூரிகள் தமிழ்ப் பேராசிரியர் பணி. (2019 மே முதல் ஓய்வு]

தமிழணங்கு பன்மொழி ஆய்விதழ்

தமிழணங்கு இலக்கிய விருதுகள் 2025

19–08–2025

முனைவர் தேமொழி

அவர்களுக்கு

தமிழணங்கு இயற்றமிழறிஞர் விருது

வழங்கிச் சிறப்பிக்கின்றோம்.

வழக்கறிஞர் இ. சதீஷ் ராஜ்குமார்
இதழ் வெளியீட்டாளர்

பொறிஞர் கவிஞர் முத்தமிழ் விரும்பி
சிறப்பாசிரியர்

முனைவர் திருமதி செ. ராஜேஸ்வரி
நிறுவனர் & ஆசிரியர்